

கழக வெளியீடு: அளஅ

நீதிநூல் விளக்கக் கொத்து

முதற் புத்தகம்

ஆசிரியர் :
கழகப் புலவர்,
திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை
(இளவழகனார்)

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Feb., 1957.

NEETHINOOL VILAKKAK KOTHTHU. I

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 500.

பதிப்புரை

தமிழ்மொழியில் நீதி நூல்கள் தகுதியாக அமைந்திருக்கின்றன. தமிழ்நாடு தொன்மை யான நாகரிக வாழ்க்கையுடையதாகலின் தக்க நீதிநூல்கள் தமிழ்மொழியில் தோன்றியுள்ளன.

ஆத்திசூடி முதலாகத் தொல்காப்பியம் ஈறாக உள்ள நீதிநூல்கள் யாவற்றிற்கும் ஆய்வு நூல் கள் வெளியிடின் மக்களின் பண்பாடும், நாகரிக மும் உயரும் என்ற கருத்துடன் கழகவழி ஒரு சில ஆய்வு நூல்கள் முன்னரே வெளியிட்டோம். இவ் வகையில் வெளிவந்தனவே ஔவையார் திரு வுள்ளம், அதிவீரராமர் அறநெறி, சிவப்பிரகாசர் செந்நெறி முதலிய நூல்களாகும்.

தற்போது இம் மூன்று நூல்களையும் ஒன்றாகத் தொகுத்து நீதிநூல் விளக்கக் கொத்து-முதற் புத்தகம் என்ற பெயரமைத்து நூல் நிலையங்கட் கேற்றவாறு அழகிய கட்டடம் செய்து வெளியிடுகின்றோம். தமிழகப் பெரு மக்களும், நூல்நிலையக் காப்பாளரும், பிறரும் இத்தகு நூல்களை வாங்கியும், வாங்குவித்தும் நுண்பொருள் நுகர்ந்து இன்புற்றுப் பயன்பெறு வார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

ஔவையார்

திருவுள்ளம்

ஆராய்ச்சி நீதி நூல்கள்

அதிவீரராமர் அறநெறி	0	10
சிவப்பிரகாசர் செந்நெறி	1	0
குமரகுருபரர் காட்டிய வழி	1	4
நாலடி இன்பம்	3	0
திருவள்ளுவர் நூல் நயம்	1	4

கழக வெளியீடு: ௫௱௪௬

ஔவையார் திருவுள்ளம்

கழகப் புலவர்,

திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்

(இளவழகனர்)

எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: April, 1943.
Reprints: April, 1945; May, 1950; Nov., 1955.

AUVVAIYAR THIRUVULLAM

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1100.

பதிப்புரை

தமிழ் மொழியில் நீதி நூல்கள் தகுதியாக அமைந்திருக்கின்றன. ஊழி ஊழியாக வாழ்ந்து, வாழ்க்கை நுகர்வினைச் சிறப்பாக எய்திய நாட்டிலேதான் நீதிகள் நன்றாக உருப்பெறும். தமிழ்நாடு அத்தகைய தொன்மையான நாகரிக வாழ்க்கையுடையதாகலின், தக்க நீதி நூல்கள் தமிழ் மொழியில் தோன்றியுள்ளன. நீதிகள் ஒவ்வொன்றும் நம் முன்னோரது நல்வாழ்க்கையின் தீம் பிழிவே எனலாம்.

ஔவைச் செல்வியார் இவ்வகையில் 'ஆத்திசூடி' 'கொன்றைவேந்தன்' 'மூதுரை' 'நல்வழி' என்னும் நான்கு அழகிய நீதி நூல்களை நமக்கு இயற்றிக் கொடுத்திருக்கின்றார். கருத்தில் இந் நான்கும் ஒத்த முடிபுடையவையாயினும், நூல் நெறியில் வேறு வேறு போக்கும் அமைப்பும் உடையனவே. வாழ்க்கைக்கு இன்றியமையாத நிறைந்த பொருள் நுட்பங்களும், பயிற்சிக்கு இன்றியமையாத உயர்ந்த புலமை நுட்பங்களும், உலகிற் செயல்வன்மைக்கு ஏதுவான சிறந்த கலைத் திட்பங்களும், வாழ்க்கையை முடிவில் அருள் நிலைக்கு ஏற்றி உய்விக்கும் விரிந்த ஞான ஒட்பங்களும் இவை உடையன.

மேலும், 'ஆத்திசூடி' முதலிய நான்கு நூல்களும், இளம் பருவத்தோர் முதல் எல்லாப் பருவத்தோராலும், கற்றார் முதல் கல்லாதார் ஈறாக எல்லா நிலையினராலும் விரும்பி இனிதாகப் படித்துப் பயிலும் வகையில் அமைந்திருக்கின்றன. ஔவையார் இவற்றை அதற்கேற்றபடி அழகிளம் நூல்களாக எளிய செந்தமிழ் நடையில் இயற்றி வழங்கியிருக்கின்றனர். இதனால், ஔவையார் என்னும் பெயரையும், அவர் நூல்களுள் ஏதேனும் ஒன்றையுமாயினும் அறியாதவர்கள் இத் தமிழ் நாட்டில் எவரும் இரார் என்று துணிந்து கூறலாம்.

அத்தகைய நிலைத்த புகழ்படைத்த நல்லிசைப் புலமை மெல்லியலாரான இவ் ஔவையார் பெரும்பாலும் சோழ நாட்டின்கண் இருந்தவரென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. இவர், சங்ககாலத்து ஔவையார் அல்லர். ஆயினும், புலமையும், துணிவும் தொண்டியற்கையும், அருள் நிலைமையும் ஒருங்கு வாய்ந்தவராகவே இவருங் காணப்படுகின்றார். ஆதலால், இவர் அறிவுறுத்துங் கருத்து முடிபுகள் எல்லோராலும் விரும்பி ஏற்று, நாளுங் கடைப்பிடித்து ஒழுகுதற்குரியனவாய், நிலையாக விளங்கிவருகின்றன. இவர் காலத்தில் இவர் தெய்வத் தன்மையுடன் மிக்க புகழோடு விளங்கியவராவர். தொல்காப்பிய உரையில் கொன்றை வேந்தனின் கடவுள் வாழ்த்துத் தொடர்களும், "அட்டாலும் பால் சுவையின்" என்னும் மூதுரைச் செய்யுளும் பேராசிரியர் முதலிய உரையாசிரியர்களால் மேற்கோள்களாக எடுத்து ஆளப்பட்டிருப்பதிலிருந்தும் இவர் திருமொழிகளின் பெருமை விளக்கமாகின்றது. இதனாலும், நல்வழியின் இறுதியில் இவர் 'மூவர் தமிழ்' என்று தேவாரத்தை எடுத்துச் சுட்டியிருப்பதனாலும், சுந்தரமூர்த்தி நாயனார் காலமாகிய கூ-வது நூற்றாண்டுக்குப் பின்னும், பேராசிரியர் காலமாகிய கஉ-வது நூற்றாண்டுக்கு முன்னும், அதாவது இற்றைக்கு ஏறக்குறைய அ00 - ஆண்டுகட்குமுன் இவ் ஔவையார் விளங்கியவர் என்று அறியலாம்.

தமிழ் மொழியில் நூல்களின்மேல் தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் மிகுதியாக வெளிவரவேண்டும். கழகப் புலவர் இளவழகனாரவர்களால் இந்நூல் ஒரு புதிய வகையாக எழுதப்பெற்றிருக்கின்றது. 'ஆத்தி சூடி' முதலிய நீதி நூல்கள் மேல் இதுவரையில் இத்தகைய ஆராய்ச்சி நூல் வெளிவந்ததில்லை. தமிழ்மக்கள் அனைவரும், ஆசிரியர்களும், சிறப்பாகக் கலைப்புலமை பயிலும் மாணவர்களும், இதனை ஊன்றிக் கற்று நுண்பொருள்கள் அறிந்து இன்புறுகவென விரும்புகின்றோம். தமிழ் விளங்குக !

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

உள்ளுறை

கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

—ஆத்தி சூடி

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

—கொன்றை வேந்தன்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

—மூதுரை

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

—நல்வழி

ஔவையார் திருவுள்ளம்

க. ஆத்தி சூடி

குழந்தை மலர் :

தமிழ்நூல்களில் 'ஆத்தி சூடி' தொடக்க நூல். குழந்தைகள் மனப்பாடஞ் செய்துகொள்ளும் பொருட்டுச் சிறுசிறு தொடர்களால் அது செய்யப்பட்டிருக்கின்றது. சிறிய குழந்தைகள் மனப்பாடஞ் செய்துகொள்வதற்குப், பழுத்து மூத்த ஔவையார் நூல் செய்வதுதான் நல்லது. மேலும், அவர் ஒரு பெண்பாலா யிருப்பது இன்னும் நல்லது. குழந்தைகளுளத்தை அவர் நன்ருய் அறிவார்.

குழந்தையுள்ளம் பெற்றவர்களே, குழந்தைகளுக்கு நூல் செய்வதற்குரியவர்கள். அறிவிலும் உலகியலிலும் மெய்யுணர்விலும் நன்ருய்ப் பழுத்த முதியோர்க்கு அந்த உள்ளம், இயல்பாகவே உண்டாகின்றது. அந் நிலை கை வந்த பின்பே, ஔவையார் இந் நூலை இயற்றியிருக்கின்ருர்.

'ஆத்தி சூடி' இயற்றியருளியவர் சங்க காலத்து ஔவையார் அல்லர்; பிற்காலத்தவர்; 'கொன்றை வேந்தன்' 'மூதுரை' 'நல்வழி' என்பனவும் இவர் இயற்றியனவே. 'நல்வழி'யின் முகப்பில், "சங்கத்தமிழ் மூன்றுந் தா" என்று இவர் பாடியிருப்பதனல், இவர் சங்க காலத்தவர் அல்லர் என்பதை அறியலாம்.

என்னவோ, ஔவையார் என்னும் பெயருடையோரெல்லாரும் அருமைப்பாடு உடையவராகவே விளங்குகின்றனர். சங்க காலத்து ஔவையாரும் அப்படியே; இவரும் அப்படியே. பெண்பாலாரில், வயது மூத்தவராய்ப் புலமையும் மெய்யுணர்வும் உடையவரா யிருந்தால், அவர் 'ஔவையார்' என்று அழைக்கப்பட்டிருத்தலைக் காண்கின்ருேம்.

ஔவையார் என்போர், அவர் எவராயிருந்தாலும், தமிழ்க்கும் தமிழ் மக்கட்கும் நல்ல தொண்டு செய்திருக்கின்றனர். அவர், பொருள் கருதித் தமது வாழ்க்கையைச் செலுத்தினவரல்லர். 'அகசிசு' என்னும் மேனாட்டுச் சான்றோர் ஒருகால், நிறைந்த பொருளுதவியுடன், சில விரிவுரைகள் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்கு அவர், 'பொருள் தேடுவதில் எனது காலத்தை நான் வீணுகச் செலவழிக்க விரும்பவில்லை' என்று சொல்லி மறுத்துவிட்டாராம். இதனை அவருடன் நெருங்கிப் பழகியிருந்த 'எமர்சன்' என்னும் அறிஞர், அருமையாகப் புலப்படுத்தியிருக்கின்றார். ஔவையார் அத்தகையோரே யாவர். நாட்டில் உணர்வுநலங்கள் வளர்வதற்குப் பாடுபடுவதே அவர் முழு நோக்கம். நினைத்த இடங்களில் உண்டு, நினைத்த இடங்களில் உறங்கி, நினைத்த இடங்களிற் சென்று, தமிழையும் உணர்வையும் வளர்த்த பெரியோர் அவராவர்.

அத்தகைய பழுத்த அருளுள்ளம் உடையோர்க்கே ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பவை போன்ற குழந்தை மலர்களை எழுதியுதவும் அரிய எண்ணம் உண்டாகும்.

இக்காலத்திற் குழந்தைகட்காக நூல் எழுதுவோர்க்குச் சிறிது தொகை கிடைக்கக்கூடும். அந்தக் காலம் அங்ஙனமன்று; இரக்கங் காரணமாகவே ஔவையார் இந்நூல்களை இயற்றியிருக்கின்றார்.

இந் நற்செயலால் ஔவையாருக்கு ஒரு தனித்த பெருமை தமிழகத்தில் நிலைபெற்றிருக்கின்றது. முன்னோர் நூல்களில், இவரொருவர் எழுதிய இந் நூல்களே, குழந்தை மலர்களாயிருக்கின்றன. குழந்தைகள் விரைவில் நினைவு கொள்ளவேண்டுமென்னுங் கனிவினால், ஆத்தி சூடி கொன்றை வேந்தன் என்னும் நூல்கள் அகர வரிசையில் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

குழந்தைகளின் பருவத்துக்கேற்பப் பயன்படவேண்டுமே என்னும் இரக்க குணம் மேலும் உந்த, ஆத்தி

சூடியை மிகச் சிறிய தொடராகவும் கொன்றைவேந்தனை அதனினுஞ் சற்றுப் பெரிய தொடராகவும் இவர் இயற்ற நேர்ந்தது.

குழந்தைகளின் கல்விவகையில் ஔவைப் பெருமாட்டியார் காட்டியருளிய ஊக்கத்தைத் தமிழ்நாடு என்றும் மறப்பதற்கில்லை; எப்படி மறக்கும்! தமிழ் நாட்டுக் குழந்தைகளின் உள்ளங்களிலெல்லாந்தாம் ஔவைத் தாய் அருமையாய் விளங்குகின்றாரே! தமிழர்களின் உள்ளங்களை இப்படிக் குழந்தைப் பருவத்திலிருந்தே கவர்ந்து கொண்டு, இறுதி வரையிலுஞ் சிறப்பாக நிலவும் அருமைப் பாடு இவர்க்கன்றி வேறு யாருக்கு உண்டு!

அணுக்க காலத்திலேதான் இவர் நூல்களைப் பின்பற்றிப் பிறரும் நூல் செய்யத் தொடங்கினர்.

சின்ன வேதம் :

'ஆத்தி சூடி' அமைந்திருக்கும் நிலைமையைப் பார்த்தால், அதனை ஒரு சின்ன 'வேதம்' என்று சொல்லலாம் போலத் தோற்றுகின்றது. ஔவையாருடைய பெரிய உள்ளமே, அச் 'சிறுமுது நூல்' இங்ஙனம் அமைவதற்குக் காரணம்.

இம்மையிற் செவ்வையாய் வாழ்ந்து மறுமையிலும் நன்னிலைமையை அடைவதற்கான வழி வகைகள், ஆத்தி சூடியில் நன்றாய் எளிமையாய் இனிமையாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

இம்மை நலம் :

இம்மை நலங்களில், விளையாடுவது குளிப்பதுமுதல் உயர்ந்த அரசியல் நுணுக்கங்கள் காதல் ஒட்பங்கள் வரையிற் கருத்துக்கள் திறமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

"சனிநீ ராடு"
"நீர்விளை யாடேல்"

எனவும்,

"புகழ்ந்தாரைப் போற்றிவாழ்"

"மெல்லினல்லாள் தோள்சேர்"

எனவுமெல்லாம் வருவன மேல் உண்மையை அறிவிக்கக் கூடும். "புகழ்ந்தாரைப் போற்றிவாழ்" என்றார், தன்னிடம் மதிப்புடையோரை விரைந்து தெரிந்து அரசன் தன்னவராக்கிக் கொள்ளுதல் இன்றியமையாதது என்றற்கு. அயலோராயிருப்பவரை இங்ஙனம் நண்பராக்கிக் கொண்டே போதல் பகைவர் அஞ்சுதற்குரியதோர் ஆண்மைச் செயலாகும். "வழிபடுவோரை வல்அறிதீயே" என்று புறநானூற்றில் (௰) வரும் அரச முறைமையும் இது.

மறுமை நலம் :

மறுமை நலங்களில், நல்வினைநிலைகள் முதல் வினையற்ற வீடுபேற்றுநிலைமை வரையில் ஔவையார் அருமையாக அறிவுறுத்தியிருக்கின்றார். பல பெரிய அருள் நூல்களிற், பாலினுள் வெண்ணெய்போல மறைபொருளாயிருக்குங் கருத்துக்கள் சிலவும், இக் குறுகிய சிறு நூலில், மோர்மேல் வெண்ணெயெனத் தெளிவாகத் திரட்டித் தரப்படுகின்றன.

"வேண்டி, வினைசெயேல்"

"வீடுபெற நில்"

என்பவை போன்ற திருமொழிகள் அத்தகைய வெண்ணெய்த் திரள்களேயாம். 'வேண்டி வினைசெயேல்' என்பதற்குப் 'பயன் விரும்பிச் செயல் புரியாதே' என்பதும், 'வீடுபெற நில்' என்பதற்குப் 'பற்றில்லாமல் இரு' என்பதும் பொருள். இவை எவ்வளவு நுட்பமும் முத்தழகும் உள்ளவை !

இனி, இவ்விம்மை மறுமை நலங்களைப் பெறும் முறைமைகளும், ஆத்தி சூடியில் எவ்வளவோ நன்றாக அறிவுறுத்தப்படுகின்றன.

உலக நடை :

இம்மை நலங்களை அடைவதற்கும் அதனை ஆளுவதற்கும் தகுந்த உலகியலொழுக்கம் இன்றியமையாதது. ஔவையாரின் பழுத்த உலகியல் நுகர்வுகள், ஆத்தி சூடியில் அவர் அவ்வொழுக்கம்பற்றிக் கூறும் தொடர்களிற் சிறந்த காட்சியளிக்கின்றன!

"கிழமைப் பட்வாழ்'
'கைவினை கரவேல்'
'சான்றோ ரினத்திரு'
'செய்வன திருந்தச்செய்'
'சொற்சோர்வு படேல்'
'தொன்மை மறவேல்'
'நிலையிற் பிரியேல்'
'நேர்பட வொழுகு"

முதலிய எத்தனையோ தொடர்கள், உலகியலொழுக்கங்களின் பிழிசாறே என்னும்படி அழகழகாக விளங்குகின்றன. 'கிழமைப்பட வாழ்' என்பதற்குப் 'பிறர் உன்னிடம் உரிமையாக நடந்துகொள்ளும்படி அவ்வளவு கலந்த மனப்பான்மையுடன் வாழ்' என்பது கருத்து. 'சொற்சோர்வு படேல்' என்பதற்குச், சொன்ன சொல்லின்படி பின் நடந்துகொள்வதில் தளர்வு கொள்ளலாகாது' என்பது கருத்து. உலகியல் வெற்றிக்கு இவை எவ்வளவோ தேவை. பிறவும் இங்ஙனமே.

தொழில் முறை :

தொழில் முறை, கலைநுட்பம் முதலியனவெல்லாமும்,

"பருவத்தே பயிர் செய்'
'இலவம்பஞ்சில் துயில்"

என்பவைபோன்ற தொடர்களால் எடுத்துக்காட்டப்படுகின்றன.

உடம்பையும் உணர்வையும் ஓம்பும் வகைகள், இயல்பான எளிய முறைகளால் வகுத்தோதுதலும்,

" மீதூண் விரும்பேல் '
' மிகைபடச் சொல்லேல் "

என வருவனவற்றிற் காண்கின்றோம்.

முறை வைப்பு :

இனி, " எண்ணெழுத் திகழேல் '
' வித்தை விரும்பு '
' இளமையிற் கல் '
' ஓதுவ தொழியேல் "

என்னுந் தொடர்கள்போல்வன. கல்வி என்னும் ஒரு பொருளின் தொடர்பாகவே வரினும், அவை கூறியன கூறலாகமாட்டா. எண்ணெழுத்து என்பவை, பொருளும் மொழியும்; 'வித்தை' யாவது கலை; இளமையிற் கற்றற்கு 'இளமையில்' எனவும், இடைவிடாமற் பயிலுதற்கு 'ஒழியேல்' எனவுங் கூறினர். ஒவ்வொரு தொடரால் ஒவ்வொரு கருத்தை விளக்கினபடியாம்.

" அரவ மாட்டேல் '
' பாம்பொடு பழகேல் "

என்பனவும் அத்தகையனவே. முன்னது சிறியோர் விளையாட்டையும், பின்னது பெரியோரானபின் பழகும் பழக்கத்தையுங் குறித்தன.

ஆத்தி சூடியைக் குழந்தைப் பருவத்தில் மனப்பாடஞ் செய்துகொண்டால், பின் வயதேற ஏற மக்கள் அதன் கருத்துக்களை விளங்கிக்கொள்ளக்கூடும் என்று ஔவையார் கருதியிருக்கின்றார். குழந்தைப் பருவத்திலேயே பயன்படுத்திக்கொள்ளும்படி,

" இளமையிற் கல் '
' கண்டொன்று சொல்லேல் "

எனவெல்லாம் அருளிச்செய்தவர், இனிப் பெரியவர்களான பின் ஒழுகுவதற்குரிய,

" இடம்பட வீடெடேல்'
' தையல்சொற் கேளேல் "

என்பவைபோன்ற பல முறைமைகளையும் விளக்கிச் செல்வதனால், ஔவையாரது கருத்து நன்கு விளங்குகின்றது. ஆகவே, மக்கட்கு எந்நிலையிலும் பயன்படவேண்டுமென்று கருதியே ஆத்தி சூடியை அருளிச்செய்திருக்கின்றார் என்பதில் ஐயமில்லை.

சொல் நுட்பம் :

ஆராய ஆராய, மேலுமேலும் ஆழ்ந்து தோன்றும் படியான சொற்பொருள்களும் இவற்றில் இல்லாமலில்லை.

பெரியாரைத் துணையாகக் கொள்ளவேண்டும் என்னுங் கருத்தில்,

" பெரியாரைத் துணைக்கொள் "

என்றருளிச்செய்த ஔவையார், சிறியாரோடு இணங்காதே என்னும் பொருளில்,

" பையலோடு இணங்கேல் "

எனவும் அருளிச்செய்திருக்கின்றார். பெரியோராயிருப்பவர் சிறியரோடு இணங்காவிட்டால், சிறியோர், பெரியோரது துணையை எப்படி அடைவது என்று சிலர்க்கு ஐயம் நேரக்கூடும். ஔவையார் வரம்புபடவே இயற்றியிருக்கின்றார். 'துணைக்கொள்' 'இணங்கேல்' என்னுந்திறமான சொற்களில் அவ் வரம்பு ஆழங்காட்டி மிளிர்கின்றது.

துணை செய்பவர் எப்போதும் ஆற்றலில் பெரியோராகவே இருத்தல்கூடும். இடுக்கண்நேரங்களில் அவர் துணையே பெரிது உதவும். அதனைத் தவறாமற் கொள்ள வேண்டுவது மற்றவர் கடமை.

ஔவையார் அருளிச்செய்த மற்ருெரு நூலான மூதுரையில், 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்னும் முதற் குறிப்புடைய செய்யுள் ஒன்று வருகின்றது. அச் செய்யுளில், 'நல்லாரைக் காண்பதுவும் நன்று; அவர் சொல் கேட்பதுவும் நன்று; அவர் குணங்கள் உரைப்பதுவும் நன்று; அவரோடு இணங்கியிருப்பதுவும் நன்று' என்னுஞ் சொற்பொருள்கள் வருகின்றன. காண்பது கேட்பது உரைப்பது என்னுஞ் செயல்களுக்கு வேருக, இணங்குவது என்னுஞ்செயல் ஒன்றும் அதன்கண் வருதலைக் காணலாம். இதனுல் ஒருவரைக் காண்பதும் கேட்பதும் உரைப்பதும் செய்த அளவிலேயே, அவரோடு இணங்கிவிட்டதாகக் கருதலாகாது என்பது தெரிகின்றது. ஒருவர் கொள்கைப் படி ஒருவர் நடந்துகொள்ளுதலே இணங்கிய செயலாகும். ஒருவருக்குத் துணைசெய்வதற்கு அவரோடு அங்ஙனம் இணங்கவேண்டுமென்பதில்லை; அவரைப் பார்ப்பதும், அவர் சொல்வதைக் கேட்பதும் போல்வன போதும்.

இச்சொற் பொருளின் அழுத்தம் இங்ஙனமெல்லாம் இருத்தலின், ஔவையார், 'பையலைப் பாராதே, கேளாதே' என்னுங் கருத்திலெல்லாம் பேசாமல், 'பையலோடு இணங்காதே' என்னுங் கருத்திற் பொருளாழந் தோன்ற அருளிச்செய்வாராயினர்.

இத்தகைய சொற்பொருளழுத்தங்கள் 'ஆத்தி சூடி'யிலும் அவர் நூல்கள் பிறவற்றிலும் பலப்பல இடங்களில் வருகின்றன.

எதற்கும் ஔவையார் கருத்துப்படி, அவர் நூல்களைக் குழந்தைகள் இளமையிலேயே மனப்பாடஞ் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்துகொள்வது நல்லது.

௨. கொன்றை வேந்தன்

எளிய நடை :

'எளிய சிறு சிறு தொடர்களே குழந்தைகளின் தேவையைக் குறித்துணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவை' என்று *வால்டர் பேட்டர் என்னும் ஆசிரியருங் கருதினார். ஔவையாருக்கு இவ்வாற்றல் நன்றாய்க் கைவந்திருக்கின்றது. அவ்வகையில் இப்பெருமாட்டியாருக்கு இணையானவர் தமிழாசிரியரிற் பிறரெவரும் இல்லை என்று துணிந்து சொல்லலாம்.

மேலும், இவர் இயற்றியிருக்கும் அறிவுத்தொடர்கள் எவ்வளவு எளிமையாயிருக்கின்றன ! சிறுவர்கள் நயமாக வழங்குவதற்கு ஏற்றபடி இத்துணை எளிமையாக இயற்றியுதவிய ஆசிரியர் பிறர் எவர் உளர்? நல்ல தமிழ்ச் சுவையும், இயல்பான சொற்பொருளொழுக்கமும், உண்மையும், நுண்மையும், திருத்தமும், பொருத்தமும் வாய்ந்து இனிமை கனிந்து இயலுவதோடு, நடை இவ்வளவு எளிமையாகவுந் திகழவேண்டுமானால், அந்த ஆற்றல் ஆ! ஔவையாரைப் போன்ற கனிந்த பெரிய தாய்மையுள்ளம் வாய்ந்த அருட் சான்றோர்க்கேயல்லாமல் மற்றவர்க்குக் கிட்டுதல் அரிதம்ம, அரிது ! பெரிதரிது, அரிது !

வாழ்க்கையில் எளிமையுடையோரே இந் நடை வெற்றியினையும் எய்துதற்குரியர். உள்ளம் எவ்வளவுக்குப் பண்பட்டுப் பிறவுயிர்கண்மேல் இரக்க வடிவாய்த் தள தளவென்று உருகித் திகழ்கின்றதோ, அவ்வளவுக்கு அவ்வுள்ளத்திலிருந்து புறம் வரும் சொல்லும் பண்பு இரக்கம் முதலியன வாய்ந்து எளிமையாயிருக்கும். உள்ளந் தெளிவாயிருந்தால் நடையும் தெளிவாயிருக்கும். உள்ளங் குளிர்ந்தாற் சொல்லுங் குளிரும்.

"உள்ளங் குளிர என் கண் குளிர்ந்தனவே'

என்னுந் திருவிசைப்பாத் திருமொழி இக் கருத்தை எவ்வளவு உண்மையாய் எடுத்துக் காட்டுகின்றது !

---

* Walter Pater.

இங்ஙனம் அகமானது பண்பட்டுப் புறம் நோக்கும் போதுதான் புறமுயற்சிகளெல்லாம், அவை எவையா யிருப்பினும், அங்ஙனம் நோக்குவார்க்கும் பிறர்க்கும் எளிமையாயிருக்கும்

இளமையிலேயே கற்கவேண்டும் என்னும் அறிவு மொழி, உள்ளத்திருத்தத்தை முதலிற் பெறவேண்டுமென் னும் இப் பெருநோக்கத்தையும் உட்கொண்டிருக்கின்றது. இங்ஙனம் நற்கலைகளை ஓதி உள்ளத்திருத்தம் அடைந் தோர்க்குப், புறத்தே உண்மை உணர்வும் அதற்கேற்ற ஒழுக்கமும் நன்கமைந்து நடைபெறுமாதலின்,

“ நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு ”
“ ஓதாதார்க் கில்லை உணர்வோடு ஒழுக்கம் ”

என்னுங் கொன்றைவேந்தன் தொடர்களிலும், மேல் உண் மைகள் பெறக்கூடியனவா யிருக்கின்றன.

ஔவையார் சிறந்த புலமையும் திருந்திய உள்ளமும் எளிய வாழ்க்கை நலமும் உடையவர். உலகமக்கள் எஞ் ஞான்றும் நலமா யிருக்கவேண்டு மென்னுங் குழைந்த கனிவும் உடையவர். அதனால் அவர்க்கு இவ்வளவு எளிய இனிய நடையில் எழுதும் இயல்பான வல்லமை சிறப்பாகப் பொருந்துவதாயிற்று.

‘ உலக நீதி ’ என்னும் நீதிநூல் எளிய நடையில் அமைந்திருந்தாலும், அதனினுங், ‘ கொன்றை வேந்தன் ’ முதலிய ஔவையார் நூல்களில் தமிழ்ச்சுவை முதலியன நன்கமைந்திருக்கின்றன. அதிவீரராம பாண்டியர் இயற்றிய ‘வெற்றிவேற்கை’ என்னும் நூலில் தமிழ்ச்சுவை முதலியன சில நன்றாகவே பொருந்தியிருந்தாலும், அதனினும் இக் கொன்றை வேந்தன் என்னும் நூலே அழகிய எளிமை யுடன் திகழ்கின்றது. மேலும், ‘ உலகநீதி ’ ‘ வெற்றி வேற்கை ’ என்னும் இரு நூல்களினும் பார்க்கக், கொன்றைவேந்தனில், இயல்பான சொற்பொருளொழுக் கம் முதலியன சிறந்து காணப்படுதல் பெரிதுங் கருத் திருத்துதற்குரியது.

ஔவையாரது நாவின் நுனியில், சொற்களின் எளிமை யழகும் சுவைத்திறம் முதலியனவும் இயல்பாகவே திரண்டு தேங்கி நிற்கின்றன. இது பெரிதும் வியத்தற் குரியது. ஔவையார், கொன்றைவேந்தனிற், பேச்சு நடையின் இயல்பினை நன்றாகப் பின்பற்றி யிருக்கின்றார். 'இரு' 'செய்' 'அழிவு' 'தேடு' 'இல்லை' 'உதவி' 'அழகு' 'முடியும்' 'வரம்பு' 'கொள்' என்பவைபோன்ற சொல் முடிவுகளும், 'வெட்டென மற' 'தாழ உரை' 'காற் றுடன் நெருப்பு' 'வேதனை செய்யும்' 'கோயிலு மில்லை' 'போரா முடியும்' 'கேடொன்று மில்லை' 'சீராகாது' 'புண்ணியந் தெரியும்' 'காரியமில்லை' 'பின்னுக்கு மழை' என்பவை போன்ற தொடர்முடிவுகளும் இயல்பான பேச்சு நடையில் அமைந்திருப்பது, வழங்குவதற்கு எவ்வளவு எளிமை தருகின்றது! இம் முடிவுகளை அவை வருந் தொடர்களிலேயே வைத்துக் காணும்போது, இவ் வெளிமையழகு பளிச்சிட்டுத் தோன்றும்.

ஊன்றி நோக்கினால், ஆத்தி சூடியினும் பார்க்கக், கொன்றைவேந்தனே மிகவும் எளிமையாயிருப்பது காண லாம். ஆத்தி சூடி மிகச் சிறிய தொடர்களால் ஆனதாக லின், அது சற்றுச் செறிவாயிருக்கின்றது. 'கொன்றை வேந்தன்' அப்படி இல்லை. இயல்பான பேச்சு முறைமை யில் அமைந்திருக்கின்றது. செறிவும் இல்லை; தளர்வும் இல்லை.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"கீழோ ராயினும் தாழ உரை"

"பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்"

"ஒத்த விடத்து நித்திரை கொள்"

என்னுந் தொடர்களை உற்றுநோக்கி இவ்வுண்மையை அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம், 'இயல்பாக இருத்தல்' என்பதுதான் உண்மை நிலை; உண்மை நடையுமாகும். ஔவையார்

அந் நிலையில் நின்றவர். கொன்றை வேந்தன் அந்நிலையில் அருளிச் செய்யப்பட்டதேயாகும்.

இயல்பாயிருத்தலுக்கு எல்லாக் கவர்ச்சியும் உண்டு. முயற்சியில்லாத எளிமையின் அழகு அவ் வியல்பான நிலைமையின் சீர்மையேயாம். ஆற்றலும் அதற்கே. முடிவிற், பெரும் பயன் விளைதலும் அந் நிலைமைக்கேயாகும்.

புதிய ஆற்றல் :

அந்நிலைமையில் நிற்கும் ஆசிரியன்மாரால் மொழிக்கே ஒரு புதிய ஆற்றல் பிறக்கின்றது! பழைய சொற்களெல்லாம் வேறு வேறு கருத்துணர்த்தும் புதிய புதிய செஞ்சொற்களாய் மின்னி மின்னிப் பிறக்கின்றன; பொலிகின்றன! பொருளுணர்த்தும் முறைகள் பற்பலவாகக் கிளைத்துப் பயன் தருகின்றன. மலர்கள் தோன்றும்போதும் அவற்றிற்கு அழகும் உருவும் மணமும் உடன் தோன்றுவது போலச், சான்றோர் வழியாகச் சொற்கள் தோன்றும் போது அவற்றிற்கு ஒரு தனித்த அழகும் வடிவும் ஆற்றலும் உடன் உண்டாகின்றன. சொற்கள், தம்மைப் பயன்படுத்துஞ் சான்றோர்களின் இசைவுக்குத் தக்கபடி பற்பல அழகும், பற்பல வடிவும், பற்பல ஆற்றலும் பெற்று மேலும் பற்பல சொற்களாய்ப் பல்கி நிறைய நிறைய, அவ்வாற்றால் ஒரு மொழியானது இறவாத வன்மையையும் செழித்த தன்மையையும் நிலையாக அடைகின்றது. சொல் வளமும், பொருளாழமும், வழங்கு முறைமையும் இங்ஙனம் பெருகிவருதலின், நாளடைவில் 'நிகண்டு' முதலியனவும் 'இலக்கணம்' முதலியனவும் பெருகி, மொழியும் உணர்வும் பரவுவதற்கும் நிலைப்பதற்கும் இடமுண்டாகின்றது. சிறந்த தன்மையில் வளரும் 'மொழி வளர்ச்சி' யென்பது இதுவன்றோ!

சான்றோர்களால் நாட்டுக்கு உண்டாகும் அளவிறந்த நன்மைகளுள் மொழிக்கு உண்டாகும் இந் நன்மையும் சிறந்த தொன்றாகும். மொழிக்குத் திருந்திய வளர்ச்சியை

யுண்டாக்குவோர் சான்றோரேயாவர். இவ் வகையில் ஔவைப் பிராட்டியாருந் தமிழுக்குப் பேருதவி புரிந்திருக்கின்றார். தமிழ்மொழிக்கே ஒரு புதிய ஆற்றலை உண்டாக்கியிருக்கின்றாரென்று திட்டமாகச் சொல்லலாம்.

சங்ககாலச் சான்றோர்களால் தமிழ்நங்கை நல்ல அரண்மனை வாழ்க்கையில் அரசர்க்கரசியாய்ப் பெருமிதமாய் வாழ்ந்து திகழ்ந்தனள். அவளை அதே அரச நிலைமையில்—ஆனால் எளிய வாழ்க்கை முறைமையில்—எல்லாரோடுங் கலந்து அளவளாவுதலான மனப்பான்மையில்—தாராளமாய் வாழக் கற்றுக் கொடுத்து, அந்நிலையில் நன்கு பழக்கியும் வைத்திருக்கின்றார் ஔவையார். சங்ககாலங்களிற் கன்னிமை எழிலுடன் இளமை வீறு தோன்ற நிலவிய தமிழ்நங்கை, இப்போது ஔவைப் பிராட்டியாரால் அவ் விரண்டின் நிறைவோடு தாய்மைக் கனிவுந் திகழுமாறு கண்ணியமாய் விளங்குகின்றனள்! பெண்பால் என்னும் இனத்தில் எவ்வளவு இசைவு ஔவையார்க்கு! 'ஔவை' என்னுஞ் சொல்லுக்குத் 'தாய்' என்றும் பொருள் உண்டு. இளநங்கைக்குத் தாய்மையுள்ளம் வருவிக்கும் வகைமையை ஔவையார் நன்கறிவார்!

இங்ஙனம் ஒரு புதிய முறையில் தமிழ்நங்கையை இயங்கச் செய்தமையால், ஒரு நிலையான உயிர்ப்பாற்றலை நாட்டில் ஔவையார் உண்டாக்கியவராகின்றார்.

'கொன்றை வேந்த'னில் மேலும் அவர் செய்திருக்கும் இயக்க முறைகளும் பற்பலவாம். 'சீரைத் தேடின்' 'துடியாப் பெண்டிர்' 'நாடெங்கும் வாழ' 'நிற்கக் கற்றல்' 'நீரகம் பொருந்திய' 'நொய்ய உரையேல்' 'பண்ணிய பயிர்' 'பெற்றோர்க் கில்லை' 'பின்னுக்கு மழை' 'பொருந்திய ஒழுக்கம்' என்பவற்றிற் 'சீர்' முதலிய சொற்கள் ஔவையாரது பெரிய உள்ளத்தினின்றுந் தோய்ந்தெழுந்து, மின்னும் வகையில் ஒரு புதிய அழகும் ஒளியும் பொருளும் ஏற்றுக் கதிர்விட்டு விளங்குதல் கண்டுகொள்ளப்படும். 'சீர்' என்பது பொதுவாக இங்கே 'நலம்' என்னும் பொருளில்

வருகின்றது. 'வாழ' என்பது 'வளமாயிருக்க' என்னுங் கருத்துடையது. 'நீரகம்' என்பது 'நீர்நிலை' என்று உணர்த்தும் ஒரு சொல்லமைப்பாகும். 'பெற்றோர்' என்பது பொதுவாகத் தாய் தந்தையரையே உணர்த்துமேனும், இங்கே மெய்யுணர்வு பெற்றோரைக் குறியாநின்றது. பிற வும் இங்ஙனமே தனியான ஒரு புதிய ஒளியுடன் மின்னித் திகழ்தல் காணலாம். இவையெல்லாம் ஔவைப் பிராட்டி யாரது உள்ளச் சீரின் நறுஞ்சாயலே யல்லாமல் வேறில்லை.

தமிழ்மொழி 'இயற்கைமொழி' என்பதற்கு ஈதும் ஒரு காரணமாம். சான்றோர்களின் இயல்பான உள்ளங் களில் தோய்ந்து எழாத மொழிகள் எங்ஙனம் 'இயற்கை மொழி' என்னும் மாட்சிமைக்கு உரியவை யாகும்?

உள்ளச் சாயல் :

இனி, ஔவைப் பெருமாட்டியின் உள்ளச் சாயலை இக் கொன்றை வேந்தன் வழியாக நன்றாய்க் காணலாம். உயிரும் உடலும்போல அச் சாயல் நிழலாடுகின்றது. அங்ஙனம் நிழலாடும் நூல்களே உண்மையில் 'நூல்' எனத் தக்கவை; அத்தகைய நூல்களிலேதாம் அச் சாயலையும் நன்றாய்த் தெரிந்துகொள்ள முடியும்.

கொன்றைவேந்தன் தொடர், ஒவ்வொன்றும் ஔவை யின் ஒவ்வோர் எண்ணச் சுடரேயாம். ஔவையின் ஒளி யுருவை அவை நன்கு விளக்குகின்றன.

ஔவையார் 'ஆத்தி சூடி'யை இயற்றிய பின்பே, 'கொன்றை வேந்தனை' இயற்றியிருக்கின்றார். ஏனென்றால், ஆத்தி சூடியிற் பொதுவாகச் சொன்ன சில கருத்துகட்குக் கொன்றை வேந்தனிற் காரண காரியங்களுடன் விளக்கங் கள் வருகின்றன.

"அறனை மறவேல்"

என்று ஓர் அறிவுமொழி பொதுவாக ஆத்தி சூடியிற் சொல்லியிருக்கின்றது. அதைப் படிக்கும்போது, 'அறம்' என்பது எது என்று ஓர் ஐயம் எழும். அதற்கு விடை,

"பிறன்மனை புகாமை அறமெனத் தகும்"

என்று கொன்றை வேந்தனில் வருகின்றது. ஔவையாருக்குச் சிறப்பாகத் தோன்றிய அறக் கருத்து இது. இதனால் ஔவையார் உள்ளம் எத்தகையதென்பது நமக்குத் தெரிகின்றது.

திருவள்ளுவர் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்றால், ஔவையார் 'ஒன்றாக நல்லது பிறன்மனை புகாமை' என்னுங் கருத்திற் பேசுகின்றார். இதனால், இருவருள்ளச் சாயலும் வேறு வேறு என்பது தெரிந்துகொள்ளலாம். ஆடவர் பிறன் மனை புகுதலால், பெண்கட்கு உண்டாகும் இடர்கள் இன்ன வென்பதைப் பெண்பாலாரான ஔவையார் நன்கறிவார். பொதுவாகத் திருவள்ளுவரும், ஔவையாரும் ஒத்த கருத்தினரேயாயினும், மிக நுண்ணிய நிலைகளில் அவரவர் உயிரியற்கைகள் வேறுபட்டே நிற்குமாகலின், அவைபோல்வன எவையென்பது அவரவர் நூல்களால் கூர்ந்தறியக் கூடியதேயாம். "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன்" என்று திருவள்ளுவருங் கூறினாரேனும், அவரதற்கு முதன்மை தந்திலர்.

இங்ஙனமே, 'இல்லறம்' 'துறவறம்' என்னும் இருவகை அறங்களைப்பற்றிச் சொல்லும்போதும் திருவள்ளுவர் ஔவையாரைப் போல இல்லறத்துக்குத் துணிவாக ஒரு முதன்மை கொடுத்தாரல்லர். "இல்வாழ்க்கை வாழ்பவன்....முயல்வாருள் எல்லாந் தலை" "இல்வாழ்க்கை....நோற்பாரின் நோன்மையுடைத்து" "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்று திருவள்ளுவர் இல்வாழ்க்கையைச் சிறப்பித்தாராயினும், துறவறத்தினும் முதன்மை தோன்றாதவாறு "முயல்வாருள்" "நோன்மை" "அஃதும் (துறவறம்) பிறன் பழிப்பதில்லாயின் நன்று" என்று அங்கங்கும் சில சொற்களை அவர் இட்டுச் சென்றிருக்கின்றார். அவர் கருத்தறிந்து உரையாசிரியர் பரிமேலழகரும் அவ்வவற்றிற்கேற்றவாறு உரைவிளக்கிச் செல்லுதல் பெரிதும் வியத்தற்

குரியதாகவே யிருக்கின்றது. ஆனால் ஔவையாரோ, ஒரே தீர்மானமாக,

"இல்லற மல்லது நல்லறம் அன்று"

என்று இயற்றி, 'இல்லறமே நல்லறம்; அதுவல்லாத துறவறம் நல்லற மாகாது' எனத் துணிந்து கூறினர்.

எதொன்றிலுந் துணிவு தேற்றும் இயல்பு, ஆடவரினும் பெண்பாலார்க்கு இயல்பாகவே மிகுந்திருக்கின்றது. மேலும், மகளிரைத் தனியே விடுத்து ஆடவர் புறஞ் செல்லுவதான துறவு நிலைக்கு ஔவையார் சிறிதேனும் ஒருப்படுவரோ! பெண்டிரின் இடர்ப்பாடான நிலைமைகள் அவருக்கு நன்றாகத் தெரியுமன்றோ!

திருவள்ளுவருக்கும் ஔவையாருக்கும் இவ் வேறுபாடு இங்ஙனம் மிக நுண்ணிய நிலையிலேனும் இருத்தலாலன்றோ, துறவற நோன்புகளிற் சிறந்ததான 'கொல்லாமை' யையே சிறந்த அறமாகத் திருவள்ளுவர் கொள்ளவும், இல்வாழ்க்கை யறங்களிற் சிறந்ததான 'பிறனில் விழையாமை' யையே சிறந்த அறமாக ஔவையார் கொள்ளவும் இடமுண்டாயிற்று! இங்ஙனம் ஔவையாரின் உள்ளச் சாயல்கள் பலப் பலவாகக் கொன்றை வேந்தனில் விளங்குகின்றன.

இனி, ஆத்தி சூடியில்,

ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஊக்கமது கைவிடேல்
ஔவியம் பேசேல்
சக்கர நெறிநில்
சொற்சோர்வு படேல்
இணக்கமறிந் திணங்கு
தெய்வ மிகழேல்
பூமி திருத்தியுண்
ஊருடன் கூடிவாழ்

என்று வருந் தொடர்களுக்குக் கொன்றை வேந்தனில் ஏற்ற விளக்கங்கள் முறையே,

தீராக் கோபம் போரா முடியும்
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை
நிற்கக் கற்றல் சொல்திறம் பாமை
நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்
தெய்வஞ் சீறின் கைதவம் ஆளும்
மேழிச் செல்வம் கோழை படாது
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

என்று வருதலும் நினைவுகூர்தல் வேண்டும். ஆத்தி சூடி இருசீர் இயைந்த அடிகள்; அவற்றோடு பின்னும் இரண்டு சீர்கள் கூட்டிக் கொன்றை வேந்தன் தொடர்களை ஔவை யார் இயற்ற நினைந்தபோது, அவ்விரண்டு சீர்களையும் வீணாகக் கூட்டிவிடாமல், ஒருவகையில் இங்ஙனங் காரண காரிய விளக்கங்கட்காகப் பயன்படுத்திக்கொண்டமை பெரியதொரு விரகேயாம்.

பொருள் இயைபு:

பொருள் முடிபுகளில் மாறுபாடில்லாமல் சொற்களை எவ்வளவு பொருத்தமாகவும் விழிப்பாகவும் இவர் பயன் படுத்துகின்றாரென்பதற்கு, மற்றும் ஓர் அரிய திறத்தை இங்கெடுத்துக் காட்டலாம். ஆசிரியர் திருவள்ளுவரது அறத்துப்பாலில் துறவறவியலில் 'விரதப் பகுதி' என்று ஒரு பிரிவு காணப்படுகின்றது. அதன்கண், எட்டுவகை 'விரதங்'கள் கூறப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக ஒவ்வோரதிகாரம் உண்டு 'விரதம்' என்பதற்கு 'நோன்பு' என்பது பொருள். திருவள்ளுவர், தொடக்க நோன்பாகப் 'புலால் மறுத்தல்' என்பதை அறிவுறுத்தி யருளினார். முடிந்தநோன்பாகக் 'கொல்லாமை' என்ப

தைக் கூறிக் கடைசியில் நிறுத்தினர். இடையில் தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை என்னும் ஆறு வகையான நோன்புகளை இயைத்து விளக்கியிருக்கின்றார். இவற்றுள், புலான் மறுத்தல் அதிகாரமும் கொல்லாமை அதிகாரமும் ஒன்றற்கொன்று காரண காரியமாயிருத்தலின், அவை யிரண்டும் ஒன்றன்பக்கத்தே ஒன்று அமைத்தற்குரியன. அப்படியிருந்தும் திருவள்ளுவர், அவையிரண்டையும் வெவ்வேறாகப் பிரித்து முதலிலுங் கடைசியிலுமாக நிறுத்தி அவற்றிற்கிடையில் வேறு நோன்புகள் சிலவற்றை அமைத்தடக்கி அவ் 'விரதப்' பகுதியை முடித்திருக்கின்றார். இதனால், இடையே நிறுத்தப்பட்ட தவம் முதலான ஆறுவகை 'விரதங்களையுந் தம்முள் அடக்கிக்கொண்டு, 'விரதம்' என்னும் பெயருக்கு முதன்மை வாய்ந்தனவாய் விளங்கி நிற்பவை, 'புலால் மறுத்தல்' 'கொல்லாமை' என்னும் இரண்டுமேயாம் என்பது தெற்றென விளங்காநிற்கும். திருவள்ளுவர் இங்ஙனம் விரித்துக் கூறிய 'விரதப்' பகுதியுண்மைகளை ஔவையார்,

"நோன்பென் பதுவே கொன்று தின்னாமை"

என்று நான்கே சொற்கள் கொண்ட ஒரே அடியில் மிகப் பொருத்தமாக விளக்கியருளிய அருள் வல்லமையை என்னென்பது! இதன்கண் புலால் மறுத்தலும் வருகின்றது; கொல்லாமையும் வருகின்றது.

நூற் கருத்து:

கொன்றைவேந்தனில் வரும் ஔவையார் திறங்கள் பலப்பலவாய் மிகுவல்லமையுள்ளனவாயிருக்கின்றன. எல்லாம் எடுத்துக் காட்டப் புகுந்தால் இது மிகவும் விரியும். ஆயினும், பின்வருஞ் சில குறிப்புக்களேனுங் கொடுத்து இதனை முடிப்பது நல்லதென்று தோன்றுகின்றது.

ஔவையார் கொள்கைகள் இன்னவை என்பதும், அவர் விரும்பிய சீர்திருத்தங்கள் இன்னவை யென்பது

மெல்லாம் இக்கொன்றை வேந்தனிலும் பெறக்கூடியனவா யிருக்கின்றன.

ஔவையார் உருவ வணக்கத்தைச் சிறப்பிப்பவர், திருப்பதிதோறுஞ் சென்று வழிபடுதலிலுங் கருத்துடைய வர். இன்றேல்,

> "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
> "வையந் தோறுந் தெய்வந் தொழு"

என்று அருளிச்செய்திரார்: முதலடியில் வருகின்ற 'சால வும்' என்னுஞ் சொல் மிகவும் பொருட்பேறுடையது. ஆலயந்தொழுதலால் உயிர்கள் எங்ஙனமெல்லாந் தெய்வத் தன்மையை அடையக்கூடும் என்னும் முறைமைகளை அது குறிக்கொண்டிருக்கின்றது. தொடரின் முதற்கருத்தையும் அது நன்றாய் வற்புறுத்துகின்றது.

ஔவையார் உள்ளொளியில் நின்று எழுதுவோர். அகக்கண் அருள் இருப்பவர்க்கு அவர் எழுத்து நன்கு விளங்கக்கூடும். இப்பொருண்மொழி நிழல்களை அம் முறைமையில் ஆழ்ந்து நோக்கி இன்பங் காண்பதே உயர்ந்த இன்பம். 'கச்தேவ் பிளாபார்டு'* என்னும் இலக்கியச் சுவையாளர், இங்ஙனமே இச்சொற்பொருட் பேறுகளை நன்குணர்ந்து மகிழ்பவர். ஒருவர் வாய்மொழியை ஆர நுகர்ந்து இன்புறவேண்டுமானால், இங்ஙனம் பொருள்கள் தேங்கி நிற்குஞ் சொல்லூற்றுகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவர் கருத்து. அப்போதுதானே அப்பொருள் நீர்மைகளிற் குளிர நீராடி இன்புறலாம்!

ஔவையார் சிறந்த பெண்மைநலம் உடையவர்; அத னாலேதான்,

> "வீரன் கேண்மை கூரம் பாகும்"

என்று வீரத்தன்மையை இவ்வளவு சுவைத்துக் கூற நேர்ந் தது. ஆயினும், அப்பெண்மை என்னும் மென்மையிலேயே உள் உரமும் உடையவர்.

---

* Gustave Flaubert.

"உரவோ ரென்கை இரவா திருத்தல்"

என்பது அவர் வீரவுரையன்றோ!

ஔவையார் எளிய வாழ்க்கை நிலையை உடையவராயினும், தன்மதிப்பு மிகுதியுமுடையவர்.

"தோழ னோடும் ஏழைமை பேசேல்"

என்று எத்துணைக் கண்ணியமாய் ஒரு தொடர் அவர் திருவுள்ளத்தினின்றும் எழுகின்றது!

இங்ஙனமே, உரிமை வாழ்விலும் அவர் கருத்துள்ளவராயிருக்கின்றார்.

"தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது"

என்பதனால் அது தெளியப்படுகின்றது.

இனி,

"நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை"

என்று இவர் ஒரு சிறந்த அறிவுத் தொடரையும் அருளிச் செய்திருக்கிறார். இது பொதுவுடைமைக் கருத்துப்போன்றது. பரந்த நோக்கமுடையது. எல்லார்க்கும் வாழ்வு உண்டாக்க ஆணையிடுகின்றது.

இந் நோக்கத்துக்கு, நாட்டின் மக்கள் தொகை எவ்வளவாயினும் ஊனமில்லை. கருத் தடைக்காக மலடு செய்து கொள்ளுங் கருத்துக்களில் ஔவையாருக்கு உடன்பாடில்லை.

"சந்ததிக் கழகு வந்திசெய் யாமை"

என்று அவர் கருதுகின்றார்.

மக்கள் தொகை எவ்வளவாயினும் அவரவரும் உழைத்தே உண்பது என்று வைத்துக்கொண்டால், தொகைப் பெருக்கத்தால் இடருண்டாகாது.

"போனக மென்பது தானுழந் துண்டல்"

என்பதனால், உழைப்பை அவர் நன்கு வற்புறுத்துகின்றார்.

உழைப்புகளிற் சில, பொது உழைப்புகளாய் நிகழ்ந்து அரசறிய விளங்கவேண்டுமென்பதும் அவர் எண்ணம்.

"கொற்றவ னறிதல் உற்றிடத் துதவி"

என்பது அவர் திருமொழி. 'நல்வழி' யென்னும் மற்றொரு நூலிலும், 'அரசறிய வீற்றிருக்கும் வாழ்வை' இவர் எடுத்தோதுவர்.

மறுவுலக வாழ்வுக்காக இவ்வுலக வாழ்வை வருத்திக் கொள்ள வேண்டுமென்பது ஔவையாரின் கருத்தன்று; இழந்துவிட வேண்டுமென்பதுமன்று; வாழுமுறையில் நன்றாய் வாழவேண்டுமென்பதுதான் அவர் கருத்து.

'அஃகமும் காசும் சிக்கெனத் தேடு'
'திரைகட லோடியும் திரவியம் தேடு'
'நீரகம் பொருந்திய ஊரகத் திரு'
'பாலோ டாயினும் கால மறிந்துண்'
'மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு"

என்னுந் தொடர்கள் அக் கருத்தை நினைவுகூர்விக்கும். 'பொருள் தேடவேண்டும்; நீர் வசதியுள்ள ஊராகப் பார்த்துக் குடியிருந்துகொள்ளவேண்டும்; பாற்சோறும் காலத்தில் உண்ணவேண்டும்; மெத்தையிற் படுத்துக் கொள்ளவேண்டும்,' எனவெல்லாம் ஔவையார் அருளிச் செய்வதைப் பார்த்தால், அவரையே இவ்வுலக இயக்கங் களுக்குத் தலைவராகத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாமோ எனவுந் தோன்றும்.

ஆனால், அவர் இவ்வுலகவாழ்வை ஒரு சுமையாக ஆக்கிக்கொள்ளவும் இடந்தரவில்லை யென்பதைக் கருத்திருத்தவேண்டும். மக்கள் இனிதாகவும் எளிதாகவும் நல்வாழ்வில் வாழவேண்டுமென்றே அவர் விரும்புகின்றார். அதற்கு நல்ல உள்ளப் பண்புகள் வேண்டும்.

"செய்தவம் மறந்தால், கைதவம் ஆளும்"

என்பர். 'செய் தவம்' என்பது இங்கே நற்பண்புகள் என்று ஓர் அளவுக்குப் பொதுவாக வைத்துக்கொள்ள

லாம். நல்ல உள்ளப் பண்புகள் தாமே உண்டாகமாட்டா. அதற்கு, அவ்வியற்கையையுடைய திருவுருவத்தோடு உள்ளத்தை அடிக்கடி இயைத்துக்கொள்ளவேண்டும். செம்மையானவனோடு உள்ளம் படரும்போதுதான் உள்ளமும் செம்மையடையும், 'செம்மை' என்றாலும் 'சிவம்' என்றாலும் ஒன்றுதான்.

'சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு'

என்று பல சிறந்த பொருள்நுட்பங்கள் பொதுள ஔவையார் அருளிச்செய்ததும் இதன் பொருட்டாகும்.

அப்போது, உண்மையான அறிவுநிலை கைகூடும்; அந்நிலையிற் செயலடக்கம், சொல்லடக்கம், மன அடக்கம், என்னும் மோனநிலை மேலிட்டு, அச்செயலும் சொல்லும் நினைவுமெல்லாம் நடைபெறவேண்டிய அளவுக்குத், தக்க காலங்களில் தக்க இடங்களில் தக்க முறைகளில் நடைபெறும். இம் மோன நிலைமையே ஞான எல்லையை அடைந்ததற்கு அடையாளம்.

"மோன மென்பது ஞான வரம்பு"

என்று ஔவையார் எத்தனையோ ஆழமாக அருளிச் செய்திருக்கின்றார்.

இந் நிலை கைவரும்போதுதான் இவ்வுலகவாழ்வு ஒரு சுமையாகத் தோன்றாமல், இனிதாகவும் எளிதாகவும் நடைபெற்று உண்மை இன்பம் தருவதாயிருக்கும். கொன்றை வேந்தனில் வரும் நுட்பதிட்பங்கள் இங்ஙனமெல்லாம் எவ்வளவோ அருமையாயிருக்கின்றன.

"ஐயம் புகினும் செய்வன செய்'
'கிட்டா தாயின் வெட்டென மற'
'கெடுவது செய்யின் விடுவது கருமம்'
'கேட்டில் உறுதி கூட்டும் உடைமை'
'கோடா தழிக்கின் பாடாய் முடியும்'
'நுன்னிய கருமமும் எண்ணித் துணி'

'பையச் சென்றால் வையந் தாங்கும்'
'மொழிவது மறுக்கின் அழிவது கருமம்"

என்பவை போல்வனவெல்லாம், வாழ்வைத் திறமையாக வும் இன்பமாகவும் நடத்திச் செல்வதற்கான நன்முறைமை களைத் திருத்தமாகவும் ஆணித்தரமாகவும் வெளியிடுகின் றனவாயிருக்கின்றன. ஒவ்வொன்றும் "மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்த"மேயாம். இவற்றைக் கடைப் பிடித்தொழுகினால் வாழ்க்கை திறமானதாயிருக்கும்; கவலையிராது.

கொன்றை வேந்தன் ஒரு சிறிய நூலாயிருந்தாலும் வாழ்வின் பல்வகை நுணுக்கங்களும் அதன்கண் எடுத்து ஆராயப்பட்டிருக்கின்றன. திட்டமாகவும் உறுதியாகவும் ஐயுறவின்றித் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. எல்லாம் பொருந்திய சிறந்த வரையறுத்த முடிபுகள்; முடிந்த நிலை யில் முடிக்கப்பட்ட முடிபுகள்.

ஔவை துணிவு :

திருவள்ளுவர் நூலுக்கும் ஔவையார் நூலுக்கும் ஒரு முதன்மையான வேறுபாடு உண்டு. கூர்ந்து நோக்கு வார்க்குத் திருவள்ளுவர் கருத்துக்கள் இன்னவை யென் பது திட்டமாகவே வெளிப்படுமாயினும், சில இடங்களில், பொதுமைக்குரிய சொற்களைப் பெய்து அக்கருத்துக்களை அவர் எளிதிற் புலப்படவொட்டாதபடி ஆழத்தில் இருத்தி விடுவர்; எல்லார்க்கும் பொதுவாக உரைக்கும் பொறுப் புடையவராதலின் அவர் திருக்குறள் மொழிகள் அங்ஙனம் அமைந்திருக்கின்றன. ஔவையார் அப்பொறுப்பினை மேற் கொள்ளாதவர். தமதுள்ளத்தில் முடிக்கப்பட்ட கருத்துக் களை அவற்றிற்கேற்ற திட்டமான சொற்கள் கொண்டு திறப்பாக வெளியிடுதலையே அவர் விரும்பினர். அவர் யார் பொருட்டும் மயங்கவில்லை. அதனால் அவர் வாய்மொழி கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாயிருக்கின்றன. அன் றேல்,

"இல்லற மல்லது நல்லறம் அன்று"

என்று திருவள்ளுவரினுந் துணிவாக இல்லறமே சிறந்த தென்று திட்டமாக வெளியிடுவரோ !

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

என்று திருவள்ளுவர் சிறைக்காப்புக்கும் பைய இடங் கொடுத்துச் சென்றாராக, ஔவையார்,

"காவல் தானே பாவையர்க் கழகு"

என்று அதனைத் திறப்பாகவும் உறுதியாகவும் வலியுறுத்திச் சொல்ல முன்வருவரோ? தம் கருத்துக்களை இவர், தாராளமாக வெளியிடுகின்றவரா யிருக்கின்றார்.

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு'
'கற்பெனப் படுவது சொல்திறம் பாமை'
'காவல் தானே பாவையர்க்கு அழகு"

என்று பெண்கள் வாழ்க்கை முறையைப் பற்றி மிகவுந் திட்டமான கருத்துக்களை இவ்வளவு துணிவாக ஆடவர் வெளியிடுதல் சிறக்குமோ? 'உண்டி' என்பதற்குப் பொதுவாக 'நுகர்ச்சி' என்பது பொருள்.

ஔவையார் மிகவுங் கண்டிப்பானவர்; தெளிவும், யாரையும் எதிர்பாராத எளிய வாழ்க்கை நிலையுமே அதற்குக் காரணம். ஆ, அவர் போன்றார், உலகுக்கு எத்துணை இன்றியமையாதவர் !

இனி,

"வளவ னாயினும் அளவறிந்து அழித்து உண்"

எனவும் ஒரு தொடர் கொன்றை வேந்தனில் வருகின்றது. இதிலிருந்து, ஔவையார் சோழநாட்டிலேயே மிகுதியாய் இருந்தவர் என்பதும், இவர் காலத்தில் சேர பாண்டிய அரசரினுஞ் சோழ மன்னனே வளம் மிகுந்து சிறந்திருந்தான் என்பதும் உன்னியறிதல் கூடும்.

---

௩. மூதுரை

ஔவையார் இயற்றிய அருந்தமிழ்த் தேன்களுள் மூதுரை என்பதும் ஒன்று. 'மூதுரை' என்பதற்கு 'அறிவுரை' என்று பொருள் கொள்ளலாம். தமிழில் உள்ள முழு முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் உரையில், இந்நூல் 'மூதுரை' என்னும் பெயரினாலேயே வழங்கும். பிற்காலத்தில் 'வாக்குண்டாம்' என்னும் பெயராலும் இது வழங்குகின்றது. "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது," என்று இந்நூலின் முதலில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் தொடங்குவதனால், முதலில் வரும் 'வாக்குண்டாம்' என்னும் சொல்லே நூலின் பெயராக வழங்க நேர்ந்தது. இது போலக் கொள்ளப்படுவதை 'முதற் குறிப்பாற் பெற்ற பெயர்' என்று இலக்கண ஆசிரியர்கள் சொல்லுவார்கள். பாட்டுக்களை மனப்பாடம் பண்ணும் பழக்கம் இருந்ததனால், நினைவுக்காக இங்ஙனம் முதற் குறிப்பினாற் பெயர் கொள்வது வழக்கமாயிற்று.

கடவுள் வாழ்த்து :

இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் சில நுட்பங்கள் மின்னிக்கொண் டிருக்கின்றன. அவ்வளவும் ஔவைப் பெருமாட்டியினது பேருள்ளத்தின் அடையாளமேயாம். 'இறைவன் திருவடியைத் தப்பாமல் சார்கின்றவர்களுக்கு, வாக்கு உண்டாகும்; நல்ல மனம் உண்டாகும்; திருமகள் நோக்கு உண்டாகும்; உடம்பும் வாட்டமுறாது,' என்று ஔவையார் அருளிச்செய்கின்றார். மக்கள் பெற வேண்டிய நலங்கள் இவையென்பது இதனால் நன்கு தெரிகின்றது.

'வாக்கு' என்பது பொதுவாகக் கல்வியைக் குறிக்கும்; 'நல்ல மனம்' என்பது நற்குண நற்செய்கைகளை உணர்த்தும்; 'மாமலராள் நோக்கு' என்பது செல்வாக்கை அறிவிக்கும். 'மேனி நுடங்காது' என்பது உடம்பின் நலத்தை விளக்கும். கல்வியும் நற்குணமும் செல்வாக்கும் உடம்பு

நலமும் ஒருவன் உடையவனுனல், இன்னும் அவன் அடையவேண்டியது என்ன இருக்கின்றது!

கல்வியும் குணமும் வளமும் இருந்தால் இருக்கும் வரையில் உடம்பும் வாடாமல் நலமாயிருக்கக்கூடும். இதனுல், உயிரும் நலமாயிருக்கும். கல்வி, கலைமகள் நோக்கு; மனநலம் மலைமகள் நோக்கு; செல்வம் அலைமகள் நோக்கு. இறைவனைச் சார்ந்திருப்பவர்களுக்கு அவன் இப்படி மூவகை நோக்குகளாய் விரிந்து அருள்கின்றனன்.

'கல்வி நலம் உள்ளவர்களுக்கும் கடவுள் வழிபாடு உள்ளவர்களுக்கும் பெரும்பாலும் செல்வ நலம் உண்டாவதில்லை; உடம்பு நலமும் உண்டாவதில்லை' என்ற ஒரு கருத்து, எப்படியோ தவறுதலாய் உலகத்தில் உலவுகின்றது. ஔவையார் இந்த எண்ணம் உடையவராகத் தெரியவில்லை. அதற்கு மாறுகக், 'கடவுள் வழிபாடு உள்ளவர்களுக்குக் கல்வியும் உண்டாகும்; கல்வி நலம் வாய்த்த அவர்களுக்கே செல்வ நலமும் உண்டாகும்; உடம்பு நலமும் உண்டாகும்,' என்று தமது கருத்தை இச் செய்யுள் வாயிலாக விளக்கமாகவே புலப்படுத்துகின்ருர். உடம்பில் ஒரு மேனியும் அவர்களுக்கு ஒளி விடும் என்பது, 'மேனி நுடங்காது' என்று அவர் கூறுவதனுல் தெளியப்படும். மின்னுவது மேனி; மெருகிட்டதுபோலப் பளப்பளப்பான ஒளியுடன் மின்னிக் கொண்டிருக்கும் உடம்புகளுக்கே 'மேனி' என்னும் பெயர் பொருந்தும். அப் பளப்பளப்புத்தானும் கலக்கமடைந்து மங்காது என்பதற்கு 'நுடங்காது' எனப்பட்டது. நுடங்குதலாவது, சாயல் சுருங்குதல்.

யாராவது கல்விநலமும் கடவுள்வழிபாடும் உடையவர்கள், மேனி நலமும் செல்வ நலமும் இல்லாதவர்களாயிருந்தால், அவர்களுடைய கல்விமுறையிலும் கடவுள் வழிபாட்டு முறையிலும் ஏதோ தவறு இருக்கவேண்டும். கற்றபடி ஒழுகாமை, முன் தவமில்லாமை முதலியனவும் காரணங்களாம். ஆகவே. நல்ல மனம் இருக்கவேண்டுவ

தும் இன்றியமையாததென்று கருதியே 'நல்ல மனமுண்டாம்' எனவும் இப்பாட்டில் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது.

மக்கள் இம்மை மறுமைக்குரிய எல்லா நலங்களோடும் வாழ்வாங்கு வாழவேண்டுமென்பதே ஔவைப் பிராட்டியாரின் திருவுள்ளமாதலால், தமது கருத்தை அவர் இங்ஙனம் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலேயே விளங்க நிலைநிறுத்திக் கொண்டார். இவ் வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக மூதுரையில் முப்பதுசெய்யுள் உள்ளன. மக்கள், கல்வியும் குணமும் செல்வமும் என்னும் இம் மூன்றும் உடையவராய் இனிது வாழ்வதற்கான முறைமைகளே அப் பாட்டுக்கள் முழுமையும் விளக்கப்படுகின்றன.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று தாம் வகுத்துக்கொண்ட இக் கருத்துக்கள் மூன்றையும் ஒருங்கு தொகுத்துத் தொகுத்து, ஔவையார், நூலுள்ளும் இரண்டிடங்களில் நினைவு கூட்டுகின்றார். ஒரு பாட்டு உடன்பாட்டு முகமாகவும், மற்றொரு பாட்டு எதிர்மறை முகமாகவும் வருகின்றன.

"நீரளவே யாகுமாம் நீராம்பல், தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு ;—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம் ;
குலத்தளவே யாகும் குணம்."

என்பது உடன்பாட்டு முகத்தால் வந்தது. இதில் 'நீரளவே யாகுமாம் நீராம்பல்' என்பது உவமை. நுண்ணறிவு, செல்வம், குணம் என்பவை, அவ்வுவமை கொண்டு விளக்கப்பட்ட பொருள்கள். 'நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்றமையால் அது கல்வியை உணர்த்திற்று. வாழ்த்துச் செய்யுளில் வந்த கருத்துக்கள் இதன்கண்ணும் வந்தன. இக் கருத்துக்களையே தொகுத்துக்கொண்டு மற்றொரு பாட்டு,

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம் ;
அல்லாத மாந்தர்க் கறம்கூற்றம் ;—மெல்லிய
வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம் ; கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்."

என்று எதிர்மறை முகத்தால் வருகின்றது. இதில் வந்த உவமை 'மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்பது. மற்ற மூன்றும் முறையே கல்வியில்லாதவரையும் நற்குணமில்லாதவரையும் செல்வமில்லாதவரையும் விளக்கிக்கொண்டு நின்றன.

இல்லாளும் இல்லமும் செல்வப்பேற்றுக்கு அடையாளம் ஒளவையார் இங்ஙனங் கருதுபவர் என்பது, "இல்லாள் அகத்திருக்க இல்லாதவொன்றில்லை" என்று இந்நூலிலேயே அவர் மற்றோரிடத்திற் கூறியது கொண்டு தினைத்தனையும் ஐயுறவின்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மனைவிக்குக் கணவனும் கணவனுக்கு மனைவியும் இருவர்க்கும் மக்களும் மற்றுமுள்ள சுற்றங்களுமெல்லாம் செல்வங்களேயாம். செல்வம் என்பது, மனைவி மக்கள் வீடு வாசல் நிலம் நீர் பேர் புகழ் களஞ்சியம் காவல் வாழ்வு வரவு முதலிய வாழ்க்கைப்பேற்றுக்குரிய அனைத்தும் ஆம். மக்கள் இங்ஙனம் வசதியான வாழ்க்கைப்பேற்றைத் திருமகள் அருளால் அடைந்து இன்புறவேண்டுமென்பதே அம்மையின எண்ணம். வற்றிய வாழ்க்கைக்கு அவர் நூல்களிற் சிறிதுமே இடமில்லை. இவையெல்லாந் திருமகள் நோக்கேயாம் என்பது,

"மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமு மெல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்."

என்று இந்நூலில் வேறோரிடத்திலும்,

"நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான்."

என்று இவர் இயற்றிய மற்றொரு நூலான 'நல்வழி'யில் ஓரிடத்திலும் வருவனவற்றால் தெளிந்துகொள்ளப்படும். ஆதலால், இல்லாளும் இல்லமும் முதலியன செல்வப்பேற்

றின் அறிகுறிகளேயாம் என்பது நன்கு வலியுறும். வலியுறவே, முன், 'இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்' என வந்தது, செல்வப்பேறில்லாதவரது இரங்கத்தகுந்த எளிய நிலையைக் காட்டுவதேயாமென்பது மயக்கமின்றித் துணிந்து கொள்ளப்படும். ஆகவே, ஔவையார், மூதுரையிற் கூற நினைந்த கருத்துக்களை வாழ்த்துச்செய்யுளில் பிழிவாக நிறுத்திக் கூறிக்கொள்ளும் உண்மை, ஏரியனைய நீர்போல விளக்கமாகவே தேங்கித் தெரிகின்றது.

இங்ஙனம், நூலுள் வருகின்ற கருத்துக்கள் முதலியன வாழ்த்துச் செய்யுளிலும் சுருக்கமாக வருமாறு செய்வது, தொன்றுதொட்டு வருகின்ற நூன்மரபேயாகும். ஆசிரியர் மாதவச் சிவஞானமுனிவரர், தமது அரிய சிவஞானபாடியத்தில் சிவஞான போதத்தின் முதலில் வரும் வாழ்த்துச் செய்யுளுக்கு விளக்கங் கூறுகின்றபோது, நூலுள் வரும் பொருட் கூறுகள் அச் செய்யுளிற் குறிப்பாக அடங்கிக் கிடக்கும் முறைமையை எடுத்து விளக்கி அதன் இறுதியில், "இங்ஙனம் நூல்நுதல் பொருளெல்லாம் குறிப்பால் தன்னகத்தடக்கி நிற்றல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென்றுணர்க," என்று மரபும் உரைத்து முடித்தமை இங்கு நினைவுகூர்தற்குரியது.

இனி, நன்னூல் இயற்றிய பவணந்தியார் "பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த நான்முகன் தொழுது நன்கியம்புவன் எழுத்தே," என்று கூறினாற்போலச், சிலர், தாம் விளக்கப்போகும் நூற்கருத்தை வாழ்த்துச் செய்யுளில், தெளிவாகவே இணைத்துக் கூறுதலும் உண்டு.

மூதுரை வாழ்த்துச் செய்யுள், சிவஞானபோத வாழ்த்துச் செய்யுள் போன்றது.

கல்வி :

கல்வியைப் பற்றி ஔவையார் கருதுங் கருத்துக்கள் மிகவும் ஊக்கந் தருவனவாயிருக்கின்றன ; கல்வியாவது என்ன என்பதை முதலில் அவர் வரையறுக்கின்றார் ; ஒரே பாட்டில் இதைப்பற்றிய பல கருத்துக்களையும் பொருந்தச்

செறித்துக் காட்சிக்கழகாய் அமைத்திருக்கின்றார். வழக்கப்படி அவருடைய எளிமையும் இனிமையும் நுட்பதிட்பங்களும் இதன்கண்ணும் ஒளிவிடுகின்றன. நகைச்சுவையையும், அதே நேரத்தில் மிக்க கண்டிப்பையும் இது தருவதாயிருக்கின்றது.

'கல்வி' யென்பது பிறர்க்குப் பயன்படுகின்ற திறமையும், பிறர் குறிப்பை அறிந்துகொள்கின்ற திறமையுமாகும் என்பது அவர் கருத்து.

நூல்களைப் படித்துவிடுவதுமட்டுங் கல்வியாகாது; பிறர் வாழ்க்கையைச் செப்பஞ் செய்யத்தக்க திறமையைப் பெறுகின்றபோதுதான், கல்வி நிறைவடைகின்றது. பலரெதிரிற் 'கல்வி' பயன்படவில்லையானால் அது கல்வியே ஆகாது. பிறர் குறிப்பை அறிந்துகொள்ளுந் திறமையும் ஒருவனுக்கு இல்லையானால், அவன் எப்படி அவர்களுக்குப் பயன்படக்கூடும்? ஆகவே இவ்விரண்டு கருத்துக்களும் ஒருவன் கல்விக்கு உயிர் நாடிகளாயிருக்கின்றன. ஔவையார் இக்கருத்துக்களை அமைத்து அருளிச்செய்த மூதுரைச் செய்யுள்,

> "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
> அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
> நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
> மாட்டா தவன்நல் மரம்."

என்பது. 'கிளைகளும் வளார்களுமாகத் தழைத்துக் காடுகளில் இடம் பரவி நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள்; சவை நடுவில் நீட்டிய ஏட்டை வாசிக்கத் தெரியாமல் நின்றவனும், பிறர் குறிப்பை அறியமாட்டாமல் நின்றவனுமே நல்ல மரங்களாவர்' என்று அவர் அறிவிக்கின்றார்.

பலர் முன்னிலையில் பணியாற்ற இயலாதவன் என்னுங் கருத்தில், அவ்வகையிற் கடைசித்தரமானவனை, எழுதிய ஓலை யொன்றைத்தானும் வாசிக்கமாட்டாதவனை இங்கே சுட்டிச் சொன்னார்.

பிறர்க்குப் பயன்படும்படி அவையில் ஒன்றைப் பேசும் வல்லமையில்லாமல் ஒன்றைப் படிக்கவுங்கூடத் தெரியாத

நிலைமையில் ஒருவன் உயரமாய் நிற்பதை நோக்க, உடனே அவருக்கு மரத்தின் நினைவு எழுந்தது. ஒப்பிட்டுப் பார்த்தார்; கப்புங் கிளையுமாக இருக்கும் காட்டுமரங்கள் அவருக்கு நல்ல மரங்களாகத் தோன்றவில்லை. சிறிதுங் கோணலில்லாமல் நேராய் நெட்டையாய் நிற்கும் இவன் போன்றாரே அவருக்கு நல்ல மரங்களாகத் தோன்றினர். இப்படி நகைச்சுவை தோன்ற, இச் செய்யுளை ஔவையார் அருளிச் செய்திருக்கின்றார்.

ஆசிரியர் திருவள்ளுவர் முதலியோர் கல்வியில்லாதவரை விலங்குகளோடு ஒப்பிட்டுக் கூறினால், அம்மையார் அவர் எல்லாரினுங் கண்டிப்பாக, அக் கல்லாதவரை 'நல்ல மரங்கள்' என்றே துணிந்து கூறுகின்றார்.

இங்ஙனம் இச் செய்யுளிற் கல்வி யென்பது இன்னது என்று பிழிசாறாக வடித்துக் கூறி, அதனைக் கல்லாதவர்களைக் கண்டிப்பாக இழித்துக் கூறுமுகத்தால், கல்வி கற்றுக்கொள்ள வேண்டியதன் கட்டாயத்தை நனகு வலியுறுத்துவாராயினர்.

இனி, அத்தகைய கல்வித்திறமையும் ஒருவருக்குச் சொந்தத் திறமையாக அமையவேண்டுமென்றும் அவர் கருதுகின்றார். ஒருவரைப் பார்த்து மற்றொருவர் நடிக்க முயலுதல், வழியில்லாத வழியிற் செல்லுதல்போல ஆகும். அதனால், அவரவர்க்கே உரிமையாக அவரவருள் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் வீறுடன் வெளிவந்து விளங்குதற்கு இடமில்லாமற் போகின்றது. பிறர்பால் அவர்க்கே உரிமையாக விளங்கிநிற்குந் திறமைகள் மேலுமேலும் ஓங்கிப் பயன்படுவதற்கும் தடையாகின்றது. உலகத்தாரும், கற்றார் பலருடைய பலவேறு திறமைகளையும், அவற்றால் உண்டாகும் பலவேறு பயன்களையும் இழந்துவிடும்படி நேர்கின்றது. ஆதலால், கல்விகளை அவரவரும் முறையாகப் பயின்று அவரவர்க்கே உரியவாய் அவரவர் உயிரறிவினுள் மறைந்து கிடக்குந் தனித்திறமைகளை மேலெழுப்பி உலகுக்குப் பயன்படும்படி ஒளிரவைக்க வேண்டும். கல்விப்பயிற்சிகள் இங்ஙனம் நடைபெறுவது

நன்றாயிருக்கும். அப்படிச் செய்யாமல், தாம் முறையாகக் கல்லாமலே கற்றாரைப்போல் ஒருவர் நடக்க முயல்வது, மேலே காட்டியபடி கல்வியில் உயர்ந்து வரும் சான்றோரையுந் தடைசெய்து தாமுந் தோல்வியுறுதற்கே ஏதுவாகும். இயற்கையே அழகாக இருக்கும் நீலமயில், அதற்கேற்ற பசுமையான இடமாகிய ஒரு கானகத்தில் மேகங்கள் தவழ்ந்து வருகின்ற குளிர்ந்த நேரத்தில் இயல்பாகத் தனக்குள் தோன்றிய உள்ளமகிழ்ச்சியினால் நிறமான தனது தோகையை மலர விரித்துக் கண்ணியமாகவும் கவர்ச்சியாகவும் அடிபெயர்த்து நடம் ஆடுகின்ற இன்பக் காட்சியைக் கண்டு, எல்லாப் படியாலும் அதனோடு ஒப்புமையில்லாத ஒரு வான்கோழி தன்னையும் அம் மயில்போலப் போலியாகக் கருதிக்கொண்டு வறண்ட பாலைவனத்தில் வெயிலில் தனக்குள் எழுந்த செயற்கை யெழுச்சியினால் தானும் தனது பொல்லாத சிறகை விரித்து ஆடினால் எப்படியிருக்கும்! இயல்பான கல்வித் திறமையில்லாதவர், கற்றாரைப்போல நடிக்க முயல்வது இவ் வான்கோழியின் செயல் போன்றதேயாம். ஒளவையார் இவ்வழகிய உவமையை மிகவும் அமைவாகப் பொருத்திக்,

> "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
> தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
> பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
> கல்லாதான் கற்ற கவி."

என்று ஓர் எளிய இனிய மூதுரையை அருளிச்செய்வது, எவ்வளவு நன்றாயிருக்கின்றது!

கல்வி இங்ஙனம் பயிற்சியினால் மாட்சிமைப்படுதலோடு குணத்தினாலும் மாட்சிமைப்படுதல்வேண்டும். குணத்தினால் மாட்சிமைப்படும்போதுதான் கல்வி பெருமையடைகின்றது. அதற்கு, அம் மாட்சிமை வாய்ந்த கற்றாரோடு மேலுமேலும் மனங்கலந்து பழகுதல் இன்றியமையாததாகும். நல்ல தோற்றமும் மணமும் வாய்ந்த தாமரை மலர்கள் நிறைய மலர்ந்துள்ள தெளிநீர்க்குளங்களில் நல்ல அன்னங்கள் சேர்ந்து வாழ்வதுபோலத், திறமையுங் குணமும்

மிக்க பெருங்கல்வியாளரோடு, ஏனையோர் நெருங்கிக் கலந்துகொள்ளவேண்டும். குணமாட்சிமை யில்லாதவர்களோடு கலந்துகொள்ளலாகாது. அது மூர்க்கரது செயல். இங்ஙனம் அறிவுரை கூற விரும்பும் ஔவையார்,

> "நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
> கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
> மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
> காக்கை உகக்கும் பிணம்"

என்று தெளிவுபடுத்தி விளக்குகின்றார். பின் இரண்டடிகளில் மூர்க்கரைப்பற்றிய குறிப்பு வருவதனால் முன் இரண்டடிகளிற் கூறிய, 'கற்றார்' என்பவர், திறமையோடு குணமாட்சிமையுமுடையவராவர் எனக் கொள்ளுதல் வேண்டும். மலர்ந்து மணக்கும் நீர்ப்பொய்கைக்கும் கரிந்து நாறும் இடுகாட்டுக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது! அப்படியே, அழகிய வெண்ணிறமான மலருகக்கும் அன்னமெங்கே! இருண்ட கருநிறமான பிணமுகக்கும் காக்கையெங்கே! அணுவுக்கும் மலைக்கும் உள்ள வேறுபாடன்றோ இவற்றிலுந்தெரிகின்றது! ஆகவே, கற்றார், நிறைவடைந்த பெருங்கல்வியாளரோடு சேர்ந்து விளங்குவது எவ்வளவு இனிமையும் பெருமையுமுடையதா யிருக்கின்றது!

இங்ஙனம் மாசறக் கற்று நிறைவடைந்தால், அக் கற்றோருக்கு இணையானவர்கள் இவ்வுலகத்தில் யார் இருக்கிறார்கள்? அவர்களுக்கு இங்கே குறையென்பதுதான் என்ன இருக்கின்றது? எல்லா வளங்களும் ஒருங்கு நிரம்பிய மன்னனும் அவருக்கு நிகராகமாட்டான். 'மன்னனையும் மாசறக் கற்றோரையும் சீர்தூக்கிப்' பார்த்தால், மன்னனைவிடக் கற்றோரே சிறப்புடையவராவர். ஏனென்றால், மன்னனுக்குத் தன் தேசமல்லாமல் சிறப்பில்லை; கற்றவர்க்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு, (௨௬); காரணம் களங்கமற்ற, உயர்ந்த பொதுமை மனப்பான்மை, கற்றவர்களுக்கு உண்டு; அவர்களுக்கு யாதும் ஊர்; யாவருங் கேளிர். ஆதலால், நிறைவடைந்த பெருங்கல்வியாளருக்கு இவ்வுலகத்தில் ஒரு குறையுமில்லையென்றே தீர்மானிக்கவேண்டும்.

பிறர்க்குப் பயன்படுந் திறமையும், பிறர் குறிப்பை அறிந்துகொள்ளுந் திறமையும், தனக்கே உரிய உயிர்த் திறமையும், குணமும் யாதும் ஊரே யாவருங் கேளிர் என்று பொதுமையாகக் கருதும் மனப்பான்மையும் என்னும் இத் திறமைகளே ஒருவனுக்குக் 'கல்வி' எனப்படுமென்பது இம் மூதுரைச் செய்யுட்களால் திட்டமாக விளங்குகின்றது. "வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்னும் ஔவையாரது தனிப்பாடலொன்றும் இங்கு நினைவு கூர்தற்குரியது. ஆகவே, இச் சிறந்த மனப்பழக்கங்களாகிய மக்கட் பண்புகளை ஒருவன், கல்வியெனக் கருதிப் பயிலாமல், சில நூல்களை ஏட்டளவாகக் கற்றுக்கொண்டு அதனையே கல்விப் பயிற்சியெனக் கருதிக் கொள்வனாயின், அவனது நிலை எவ்வளவு ஏழைமையானதாயிருக்கின்றது! கல்வியின் உண்மை நிலையை ஔவையார் இம் முறைமையில் நுட்பமாக உணர்த்துவது, அவர்க்கே உரியதான ஒரு பெருந் தனித்திறமையாகும்.

கல்வியை இம் முறைமையிற் பயின்று மாட்சிமைப் பட்டவர்களுக்கு உலகத்தில் என குறைவு வரும்? வெறும் ஏட்டறிவையே கல்வியறிவாகக் கருதிக்கொண்டு, எவரையும் உலக முறைமையையும் பொருள் செய்யாமல் முறை தவறிச் செல்வோர்க்கு, எங்ஙனம் எல்லா நலங்களும் உண்டாகும்? நலங்களுக்குரிய காரணங்கள் அவர்கள் பால் இல்லையே! அத்தகையோர் கற்றோருமாகார்; திருவள்ளுவரும் இவர்போன்றாரைக் "கல்லார் அறிவிலாதார்" என்று தெளிவாகவே கூறுகின்றார்; ஆகவே அத்தகைய கல்லாதாரைக் கற்றாராக நினைத்துக்கொண்டு, அவர்க்குச் செல்வம் முதலிய நலங்கள் உண்டாகாமையைக் கருதிக், 'கல்விச்செல்வம் உடையவர்களுக்குப பொருட்செல்வம் உண்டாவதில்லை' என்று ஒரு தவறான எண்ணத்தைப் படைத்துக் கூறுவது எப்படிப் பொருந்தும்? உண்மையான கல்வியாளர்க்கு உலகத்தில் எல்லாச் செல்வங்களும் உரியவாகவே இருக்கின்றன. கூர்ந்து நோக்கினால், உண்மையான கல்வியறிவு உடையவர்களை உலகத்தில்

நல்ல செல்வமுடையவர்களாக இருக்கக் காண்கிறோம். மேலைத் தவமுடையவர்கள் இப் பிறவியில் ஏற்ற கல்வி நலம் உடையவராய், அக் கல்வியறிவின் வாயிலாக நிரம்பப் பொருள் நலம் படைபபவரா யிருக்கின்றனர். இதனை லன்றோ ஆசிரியர் திருவள்ளுவர், கல்வியறிவினாலேயே ஒருவன் உலகிற் பொருள் படைப்பது கூடும் என்னுங் கருத்தால், கல்வி, கேள்வி, அறிவு முதலான அதிகாரங் களைத் தமது திருக்குறளிற் பொருட்பாலின்கண் நிறுத்தி அறிவுறுத்துவாராயினர்.

"இருவே றுலகத் தியற்கை: திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்னுந் திருக்குறளில், 'பொருளே நோக்கமாக வாழும் உலக வாழ்க்கை ஒன்று, தெளிவே நோக்கமாக வாழும் அருள் வாழ்க்கை ஒன்று; இங்ஙனம் இருவேறு நோக்க மாக உலகம் நடைபெற்றுச் செல்கின்றது' என்று அறி வுறுத்துப்பட் டிருக்கிறதேயல்லாமல், 'கல்வியைப்பற்றி இங்கே குறிப்பது ஏதுமில்லை. 'கல்வி' இவ்விருவகை வாழ்க்கைக்கும் பொது. கல்வியறிவுகொண்டு பொருளே நோக்கமாகவும் உயிர் வாழலாம்: தெளிவே நோக்கமாக வும் உயிர் வாழலாம். உண்மை இங்ஙனம் இருப்பதனாலே தான், ஔவையார் இம் மூதுரையின் வாழ்த்துச் செய்யு ளில், 'வாக்குண்டாம்,' என்பதனாற் கல்வியறிவைக் குறிப் பித்து, 'நல்ல' மனமுண்டாம்' என்பதனாலும் "மாமலராள் நோக்குண்டாம்" என்பதனாலும் முறையே 'அக்கல்வி யறிவுகொண்டு தெளிவையும் பெறலாம். திருமகள் நலத் தையும் பெறலாம்' என்று தெளிவுற அருளிச்செய்திருக் கின்றார். கல்வி இவ் விரண்டுக்கும் பொது என்பது இதி லிருந்தும் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். ஏதாவது ஒரு நோக்கமாக வாழ்க்கை செலுத்துகிறவர்களுக்கு மற்றொரு நலம் குறைவதுபோலத் தோன்றலாம்; ஆனால் கல்வியாளர் கள் முயன்றால் அவர்கட்கு உண்டாகாத நலங்கள் எவையு மில்லை; இரண்டும் ஒருங்கே பெற முயன்றாலும் அந் நோக் கத்துக்கேற்ற அளவில் அவ்விரண்டும் அவர்கட்கு ஒருங்கே உண்டாவதிலுந் தடையில்லை.

கல்வியின் மெய்ந்நிலைமையைப் பயன்படும் முறையில் ஔவையார் இம்மூதுரைச் செய்யுட்களில் எவ்வளவு நுட்ப திட்பமாக நன்றாக அருளிச்செய்திருக்கின்றார்! உலகத்தார் மாட்டு வைத்த அவரது பேரருளுக்கு எல்லையே இல்லை. தெளிவடைந்த நிலையிலுள்ள சான்றோர்கள் இங்ஙனமெல்லாம் மெய்ப்பொருள்களைத் தாமே உளங்குழைந்து அருளிச்செய்யாவிட்டால், உலகத்தில் ஏனையோர் உய்வதற்கு, வேறு முறையில் வழியுண்டோ?

சேல்வம் :

இனி, ஔவைப்பிராட்டியார், மக்கள் அனைவரும் வளத்தோடு வாழவேண்டுமென்னும் அருளுள்ளங்கொண்டு அறிவுறுத்துந் தெளிவான நல்லுரைகள் சிலவுங் கருத்திருத்துதல் வேண்டும்.

முதலில் வளம் என்பதே யாதென்று அறியவேண்டுமாகலின், பழகுதற்கு இனியரான சுற்றத்தவரும், மேன்மை வாய்ந்த மசம்பொற்றிரளும், அழகு, வடிவம் முதலிய நல்ல தோற்றமும், சிறந்த நண்பர்களுமெல்லாம் செழுமையின் கூறுகளேயாம் என்று "மருவினிய சுற்றமும்" (செ. ௨௬) என்னுந் திருப்பாடலின் முகமாக அருளிச்செய்தார்.

இனி, அவ் வளங்களெல்லாம், அமையவேண்டுங் காலங்களிலேயே அமையவேண்டுமென்பதும் ஔவையின் கருத்து. இளமையில் வறுமை நேர்ந்தபின் முதுமையில் இனிய நுகர் பொருள்கள் அமைவதனால் என்ன பயன்? சூடிக்கொள்ளக்கூடாத காலத்தில் மலரும் நறுமலர்களைப் போலவும், கணவனில்லாத காலத்தில் விளங்கும் ஒரு மங்கையின் பேரழிலைப் போலவும் துய்ப்பதற்கு வழியின்றி வீணே கழிந்தொழிதலால் நன்மை என்ன உண்டு? (௩). ஆதலால், உரிய காலங்களில் வளங்கள் அமைவது இன்றியமையாததாயிருக்கின்றது.

அங்ஙனம் அமைவதற்குத் திருமகள் நோக்கம் முதன்மையானது. ஏனென்றால், அவை திருமடந்தை

ஆம்போது அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து போம் போது அவளோடும் போகும் (உ௬). திருமகள் நோக்கத்தைப் பெறுவதற்கு முன்னைத் தவம் அமைந்திருக்க வேண்டுவதோடு, இப்போது முயற்சியும் சிறிதுவேண்டும்; எடுக்கும் முயற்சியை எப்போதும் திருத்தமாகச் செய்து கொண்டிருக்கவேண்டும். பயன் தானே விளையும். எப்பொழுதும் முயற்சி முன்னும் பயன் பின்னுமாகத்தான் நடைபெறும். பயன் உண்டாகும் நேரம் வாய்த்துவிட்டால் அது தானே உண்டாய்விடும். அது வாயாமுன் நாம் அடுத்தடுத்து முயன்றாலும் செயல் நிறைவேறிடாது. நாம் நமது தோட்டத்திற் சில பழ மரங்களை வைத்துப் பயிரிட்டால், அவை மிக நீண்டு உயர்ந்த மரங்களான பின்னும் பழுக்கும் பருவம் வந்தால்மட்டுமே பழுக்கின்றன. அன்றிப் பழா. அதுபோலத்தான் நம் முயற்சிகளும் பயன்றரும் நேரம் வந்தால், தாமே பயனுண்டாக்கும். ஆகவே, பயன்களில் முனைபபுக்கொள்ளாமல் முயற்சிகளில் திருந்திய எண்ணம் வைத்து ஒழுகுதலே, உரிய நேரங்களில் நல்ல வளங்கள் மிகுவதற்கு ஏற்றதாகும்.

"அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா;—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா."

என்று ஔவைப்பெருமாட்டியார் அருளிச்செய்த திருப்பாடலில் இவ்வுண்மைகள விளங்குதல் காணலாம்.

இனி, முயற்சிசெய்யும் நல்லோர் இங்ஙனம் திண்ணிய திருந்திய உள்ளம் உள்ளவராய்த், தாம் செய்யும் வேலைத் துறையிற் பேராற்றலுடையவராயிருந்தாலும், தக்க துணை வலியோடு அக் காரியங்களைச் செய்வது பின்னும் உறுதியுடையதாயிருக்கும். தட்டாமல் நற்பயன் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் நெல்லிலுள்ள அரிசியிலேயே ஆற்றலோடு கூடிய முளை அமைந்திருந்தாலும், அவ்வரிசியைச் சூழ அமைந்துள்ள உமி விண்டுபோனல் முளைத்தல் என்னும் செயல் நிகழாமற்போகின்றது; ஆதலால் நமது முயற்

சிக்கு உறுதுணையாயிருக்கக்கூடிய தக்க துணைவர்களையும் உடன் அமைத்துக்கொண்டு, எம் முயற்சியையும் வலிமை பெறச் செய்ய மனங்கொள்ளவேண்டும்; (௧௧) அப்போது செல்வம் தக்கவாறு செழிப்பதற்கு இடமாகும்.

இனி, அங்ஙனந் துணைவலியாக அமைத்துக்கொள்ளத் தக்கவரைப்பற்றியும் ஔவையார் சில குறிப்புக்கள் தருகின்றார். துணைவலியாய் அமைவோர், காரியத் தகுதியுடையவரா? நேரத்தில் நன்மை இழுக்காயினும் செயலை நிறைவேற்றவோரா? காவில்லாதவரா? என்பதுபற்றி ஆராயவேண்டுவது கட்டாயமாகும்.

உடன்பிறந்தார் முதலிய உறவினராய் அமைந்தார் சிலரைத் தாம் துவங்கிய பொருள் முயற்சியில் தமக்குத் துணைவராக அமைத்துக்கொள்ளலாமென்று சிலர்க்கு நினைவு தோன்றும். காரிய வெற்றிக்கு உறவு என்பது முதன்மையன்று. உண்மையோடு கூடிய திறமையே முதன்மையானது. இத்திறமையோடு உறவும் அமைந்திருந்தால் அமைந்திருக்கட்டும். அப்படியில்லாவிட்டால், அவர்போன்றாரைத் துணைவராகக் கொள்ளுதலிற் பயனில்லாமையோடு, அதனால் தீமை நேரினும் நேரும்; ஏனென்றால், உடம்பை மாய்க்கும் நோய் என்பது உடம்போடு உடன் பிறந்ததாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும் உடம்பை அது மாய்த்துவிடக் காண்கின்றோம்; ஆனால், அவ்வுடம்பை மாயவிடாமல் அதன் நோயைத் தீர்த்துப் பிழைப்பிக்கும் பச்சிலை முதலிய மருந்து வகைகளோ, அவ்வுடம்போடு உடன்பிறவாமல் எங்கோ தொலைவிலுள்ள மலைகளில் இருக்கக் காண்கின்றோம் அங்ஙனமே, உறவினரல்லாதவர்களிலும், உண்மைத் திறமையாளராயிருந்து பயன்படக்கூடியவர்கள் உலகத்தில் இல்லாமலில்லை. ஆதலால், உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிராமல், காரிய வெற்றியையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குரிய திறமையாளர் எவரோ அவரையே துணைவராகத் தழுவி முயற்சியைப் பலமுகமாக நடத்திப் பொருளீட்டுதல் வேண்டும் (௨௦).

இனி, அத்துணைவலிக்குரியோர் ஒருகால் தக்கதோற்ற மில்லாதவராகவும் இருக்கலாம்; ஆடம்பர மில்லாதவராகவு மிருக்கலாம்; காரியத்திறமைக்குமுன் இவையெல்லாம் அவ்வளவு பொருளல்ல; காரியத்திறமையோடு இவையுமிருப்பின் நன்றேயாம். திறமையையே முதன்மையாகக் கருத வேண்டும்: தாழம்பூ இதழ் பெரியதுதான்; மகிழம்பூ இதழ் சிறியதுதான். ஆனால், மகிழம்பூவின் மணம் தாழம்பூவுக்கு இல்லையே! பெரிய தோற்றத்தோடு இருந்துமட்டும் என்ன பயன்? அகலமாகப் பரந்து தோன்றும் ஒரு பெரிய கடலையும் அதனருகே குறுகலாகக் குழிந்து தோன்றும் ஒரு சிறிய நீரூற்றையும் நினைக்குமிடத்தும் இவ்வுண்மை விளங்குகின்றது; கடல் நீரோ உடம்பைக் கழுவுவதற்கும் ஆகாததாயிருக்கின்றது; (கஉ). ஆதலால், உடல் சிறியரென்று கருதி அதனாலேயே காரியத்திறமையைப் போற்றிக் கொள்ளாமலிருப்பது ஆகாது. இங்ஙனமே ஆரவாரமில்லாமல் அடங்கியிருப்போரையும் உடனே எளியரென்று கருதி அவராலாந்திறமையை இழந்துவிடுதலுமாகாது. ஏனென்றால், நீர்க்காலில் ஓடு மீன் ஓடத், தனக்கு இரையாவதற்குரிய தகுதியான மீன் வருமளவும், கொக்கு அதன் மடைத்தலையில் மிக்க அடக்கமுடையதுபோல வாடியிருப்பது கண்டு, அதனைத் திறமையில்லாதென்று கருதிவிடுதலாகாதன்றோ? (கசு). ஆதலால், துணைவலிக்குத் தெரிந்தெடுப்போரிடம் திறமையைக் கருதுதலொன்றே முதல் நோக்கமாக இருக்கவேண்டுமென்பது இக்குறிப்புக்களினின்றெல்லாந் தெரிகின்றது.

இனி, நேரத்தில் தன்னை இழந்தாயினுஞ் செயலை நிறைவேற்றுவோரா என்பதுங் கருதுதல்வேண்டும்; ஏனென்றால், செயலைத் துறைபோக நிறைவேற்றுதற்கு, எற்ற நேரங்களில் அவ்வியல்பு இன்றியமையாததா யிருக்கின்றது. செயல் நன்கு நிறைவேறி அதனால் பலர்க்கும் நன்மை வருமாயின், ஒருவர், தன்னுடைய சிறு நலங்கள் சிலவற்றை இழந்துவிடுவதனாற் குறையில்லை. ஒருகால் உயிரையே

இழக்க நேரினும், கடமையை நிறைவேற்றும்பொருட்டு அது செய்யத்தக்கது. நன்மையில் உள்உரம் உடையோர், கடமைகட்கு நேரும் எதிர்ப்புகட்கு அஞ்சார்; தளரவுந் தளரார். ஒரு கல்தூணின்மேல் பளுவு மிக ஏறித் தாக்குமாயின் அத்தூண் பிளந்து முறியுமேயல்லாமல் தளர்ந்து வளையாதன்றோ! (சு). முழுத் தன்னலஇழப்பை இங்கே ஔவையார் எடுத்துக்காட்டினாராயினும், பொதுவில் அத்தகைய அன்புள்ளம் காரியஞ்செய்வோர்க்கு வேண்டும் என்பதே இங்குக் கருத்தாவதாம்.

துணைவலிக்கு உரியாரை இவ்வாறு தேர்ந்துகொள்ளுங்கால், இவர் கரவில்லாதவரா என்பதும் ஆராய்ந்துகொள்ளுதல் வேண்டும். அதனைக் கண்டுகொள்ளும் வழி, அவரும் அவர் செய்கைகள் முதலானவையும் ஒளிவுமறைவு இன்றி நிகழ்கின்றனவா என்று ஆராய்தலாகும். நாகப்பாம்பு தன்பால் நஞ்சு இருப்பதனால், மறைந்து உறைகின்றது; நீர்ப்பாம்பு அஃதில்லாமையால் அஞ்சாமல் வெளியே கிடக்கின்றது. ஆகலின், கரவு உடையோர் எப்போதும் மறைந்து மறைந்தே உறைவர். இங்கே கரவு என்பது உட்பகை; இத்தகைய உட்பகையுடையோரைத் துணைவராகக் கொண்டால், காரியங் கெடுவதோடு அனைவர்க்கும் பொல்லாங்குகள் நேரும்; (உ௫). ஆதலின், துணைவர்களைத் தெரிந்தெடுத்தலில், இன்னனமெல்லாம் பலவகைகளுங் கருதிக்கொள்ளுதல் இன்றியமையாததாயிருக்கின்றது.

இங்கெடுத்துக்காட்டிய கருத்துக்களைப் பொருள் முயற்சிகள் செய்யுங்காலங்களில் எங்கெங்கு எவ்வெவ்வாறு பயன்படுத்திக்கொள்ளவேண்டுமோ அவ்வவ்வாறு கொண்டு ஏற்றபடி நடந்துகொள்ளுதல் வேண்டும்.

முன்னைத் தவமுடையோர்க்கு இவைபோல்வன வெல்லாம் எளிதின் இனிமையாக நடைபெற்றுச் செல்லும்; முயற்சி மிகுதியாக இராது.

செவ்விதின் செல்வம் பெற்று அனைவருந் தக்காங்கு இல்வாழ்வில் வாழ்ந்து இம்மை மறுமை நலங்களை அடைய

வேண்டுமென்பதே ஔவைத் தாயின் கருத்து. இல்லாள் அகத்திருந்தால் தேடிய செல்வங்களும் வளம்பெறும்; அப்போது, இல்லாததென்பதே ஒன்றுமில்லை; எல்லாம் இருக்கும். இல்லாளும் துணைவருள் ஒருத்தியாவாள்; அவளை 'வாழ்க்கைத்துணை' என்றன்றோ தெய்வப்புலவர் அழைத்தார்! இல்லாள் எப்போதும் பொருள்போற்றி இன்புறுத்தும் செந்தாமரையாள் ஆவள். அவள் தக்க நிலையில் இல்லாவிட்டால், இவ்வளவெல்லாங் கருதிப் பொருளீட்டியும், அப்பொருள் குவிந்த வீடு ஒரு புலி கிடந்த தூறுதானே! அவள் தக்க நிலையில் இருந்தால், அவ்வில்லம் ஆ! ஓர் ஒளிவிளங்குந் திருக்கோயிலாய் மிளிரும்!

பொருள் முயற்சியின் தொடர்பாக ஔவைப் பெருமாட்டியார் பின்னும் அருளிச்செய்யும் சில அறிவுரைகள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத பொருள்மொழிகளாயிருக்கின்றன.

உலகத்தில் மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பின்றி வாழ்வது, என்றும் இயலாது. ஆதலின், எவ்வகை முயற்சிக்கும் 'நட்பு' இன்றியமையாததா யிருக்கின்றது. தக்கவர்பால், நட்பென்னும் அரும்பேறு ஒருவர்க்குக் கிட்டுமாயின், அதனடியாக அவருக்கு ஏனையெல்லா நலங்களும் படிப்படியாக வந்தெய்தும். நலங்கள் எய்துதற்கு நட்பியல்பே சிறந்த அடிப்படையா யிருக்கின்றது.

கருத்துக்களை அவ்வவற்றின் அளவோடு மதித்து வரம்புகோலி விளக்குதலில் மிகச் சிறந்த உலகப் பெரும் புலவரான ஆசிரியர் திருவள்ளுவனார், உலகத்தில் அறவொழுக்கங்கட்கும் பொருள் முயற்சிகட்கும் இன்ப வாழ்க்கைகட்கும் நட்பியல்பே பேரடிப்படையாய் அமைந்துகிடக்கும் இயற்கையுண்மையை நன்கறிந்துகொண்டு, தமது விழுமிய முப்பால் நூல் முழுமையும் அவ்வியல்பு தெற்றென விளங்குமாறு மிகத் திறமாக இயற்றியிருக்கும் பெற்றிமை, சாலவும் அறிந்து உணர்ந்து கனிந்து மகிழ்தற்குரியதா யிருக்கின்றது.

அறத்துப் பாலில் வருகின்ற இல்லறவியல் துறவறவியல் என்னும் இரண்டும் முறையே அன்பையும் அருளையும் அடிப்படையாகக்கொண்டு விளங்குகின்றன. அன்பென்பது மனைவி மக்கள் சுற்றம் விருந்து முதலிய தொடர்புடையோரனைவரையும் நேசிக்க இடந்தரும், அருளென்பது அத்தொடர்பு கருதாது மன்னுயிர் அனைத்தையும் நேசிக்க இடந்தரும் அறவாழ்வை விளங்கச்செய்கின்றன. அருளென்பதோ அன்பின் குழவி. ஆதலின், அறவாழ்வு என்பது முழுவதும் அன்பின் அடிப்படையிலேயே அடங்கிக் கிடக்கின்றமை பெறப்படும். அத்தகைய அன்பு இருப்பின், அஃது ஆர்வமாய் வயங்கி நண்பினைத் தந்து அறவாழ்வுகளை நன்கு நடைபெறச் செய்வது முறைமையாயிருக்கின்றது. இவ்வியல்பினை நாயனார்,

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

என்று விளங்க அருளிச் செய்து, அறவொழுக்கங்கள் முடிவாக நண்பின் விளைவிலிருந்து நடைபெறுகின்ற உண்மையினை இனிது புலப்படுத்துவாராயினர்.

இனி, இன்ப வாழ்க்கைகட்கு நட்பியல்பு எத்துணை இன்றியமையாததென்பது, கூறுமேலே அமைவதொன்றும். அன்பிற் சிறந்த தலைவனொருவனுந் தலைவியொருத்தியுந் தம்முட்கொள்ளுங் கெழுதகை நட்பன்றோ அவர் தமக்குள் என்றும் மாறாத இன்ப நல்வாழ்வை எந்நிலையிலும் இனிதமைத்து நிறுவுகின்றது. காதலின்ப வாழ்வை நட்பு வாழ்வென்றே சொல்லலாம்.

"உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு"

என்று திருவள்ளுவப்பெருமானே அவ்வியல்பினை, 'நட்பு' என்று குறிப்பிடுவாராயினர். அன்றியும், பண்டைக் காலத்துச் செந்தமிழ் அகப்பொருள் நூல்கள பலவற்றிலும் இக்காதற்பெருங்கிழமையினை ஆசிரியன்மார் பலரும் ஆங்காங்கு நட்பென்னுங் குறியீட்டால் உணர்த்துதலும் இங்கு நினைவுகூர்தற் குரியதாகும். மேலே நாயனார் கூறிய உடம்புயிர் உவமையே கொண்டு,

"யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாதலன்ன பிரிவரி யோளே"

என ஓரிடத்தும், இன்னும் இந் நட்பியல்பினை நன்கு விளக்கி,

"யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே"

என மற்றோரிடத்தும் வருகின்ற அகநானூற்றுச் செழுந் தமிழ்ச் செய்யுட்களும்,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூககொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

என விளங்குகின்ற குறுந்தொகையின் நறுந்தமிழ்ச் செய்யுளும் இங்கே கருத்திருத்தி மகிழ்தற்குரியனவா யிருக்கின்றன. குறிஞ்சித்திணை யென்பதே நட்பொழுக்கமாகும். ஆதலின், உலகத்தில் இன்ப வாழ்க்கைதானும நட்பின் கெழுதகைமையில் நின்றே சுவைத்து இன்புறுதற்குரியதா யிருக்கின்றமை ஐயுறவின்றித் தெளியப்படுகின்றது.

இனி, இவ்வறவொழுக்கங்களையும் இன்ப வாழ்க்கைகளையும் ஈனும் பொருண் முயற்சிகளோவெனின், அவை முற்றும் நட்பின் அடிப்படையினின்றே இயங்கிப் பயன் றருதற்குரியனவா யிருக்கின்றனவென்க. மேல் அறத்துப் பாலில் நாயனார் அருளிச்செய்ததெனக் காட்டிய, "நண் பென்னும் நாடாச்சிறப்பு" என்னுந் தொடருக்குப் பரிமேலழகர் உரை கூறுமிடத்து, "பகையும் நொதுமலு மில்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்; யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற்கேதுவாகலின், அதனை 'நாடாச் சிறப்' பென்றார்" என்று விளக்கமுங் கூறுதலின், பொருட்செல்வம் பிறரோடு நட்புக்கொண்டு அளவளாவி ஒழுகுந் திறத்தினாலேயே வளமாக அடைவதற்குரியதென்பது

தெற்றென விளங்காநிற்கும். நாயனார் இக்கருத்தில் மிக்க உரமுடையவரென்பது, அவர் பொருட்பாலதிகாரங்களை நட்பின் அடிப்படைகொண்டே அமைத்திருக்கும் அமைப்பு முறை முதலிய பலவற்றானும் நன்கு விளங்குகின்றது.

நாயனாரது பொருட்பாலில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று இயல்கள் உள்ளன. இவற்றில் முதன்மையானவை அரசியல் அங்கவியல் என்னும் இரண்டுமேயாம் இவ்விருவகை இயல்களினும் அடங்காது நின்றனவே, ஒழிபியலில் பெரும்பாலும் ஒவ்வோரதிகாரத்தின் மட்டும் வைத்துப் பதின்மூன்று அதிகாரங்களால் உரைக்கப்படுகின்றன. ஆதலின் பொருட்பாலுக்குரிய முதன்மையானது அதன் முதலிரண்டு இயல்களிலேயே அமைந்திருக்கும் உண்மைகண்டு கொள்ளப்படும்.

இனி, அரசியல் இருபத்தைந்து அதிகாரங்கள் உடையது. அங்கவியல் முப்பத்திரண்டு அதிகாரங்கள் வாய்ந்தது. ஆக மொத்தம் பொருட்பால் எழுபது அதிகாரங்களாகும்.

பொருட்பாலில், அரசியலில், முதல் அதிகாரம், 'இறைமாட்சி' என்பது; அதன் முதற் குறளே,

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்று அரசனது மாட்சிமை கூறப்புகுந்து, பொருள் முயற்சிகள் செய்தற்குரிய ஒருவன் இங்ஙனம் ஆறு அங்கங்களும் உடையனவாயிருப்பின் சிறக்கும் என்று அங்கங்களின் வகையினை வகுத்துத் தந்தது; இத் திருக்குறளின் உரையில் உரையாசிரியர், "அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள்நோக்கிப் பிறழவைத்தார்" என்று அவற்றின் வரிசையை ஒரு முறைப்படுத்தி நினைவூட்டினார். ஏனென்றால், மேல் அங்கவியலில் இவ்வரிசைப்படியே ஆறங்கங்களையும் அமைத்து, அவற்றின் இயல்புகளை நாயனார் விளக்கிச் செல்கின்றார். இங்ஙனம் இவ்வரிசை அமைந்த

முறைமை, ஓர் அரசன், அமைச்சும் நாடும் அரசனும் பொருளும் படையுங் கொண்டு, அனைவரோடும் நட்புக் கருவியாக அளவளாவிப் பொருளீட்டுதல் வேண்டுமென்னும் உலகியல்பினை உட்கொண்டிருக்கின்றது. ஆதலின் அரசியலில் முதலிலேயே தோற்றுவாய் செய்து கொள்ளப்பட்ட 'நட்பு' என்பது, அதனை விளக்குதற்குரிய இடமாகிய அங்கவியலில் அதன் முதன்மை கருதி மிகவும் விரிவாகவே வைத்து இனிது விளக்கப்படுகிறது.

அங்கவியலில் 'அமைச்சு' என்னும் அங்கம் முதலிற் பத்து அதிகாரங்களால் விளக்கப்படுகின்றது. பின்பு 'குடி' என்னும் அங்கம் 'நாடு' என்னும் ஓரதிகாரத்தாலும், 'அரண்' என்னும் அங்கம் அப்பெயரையே உடைய ஓரதிகாரத்தாலும், 'கூழ்' என்னும் அங்கம் 'பொருள் செயல் வகை' என்னும் ஓரதிகாரத்தாலும், 'படை' என்னும் அங்கம் 'படைமாட்சி' 'படைச்செருக்கு' என்னும் இரண்டு அதிகாரங்களாலும் விளக்கப்பட்ட பின், 'நட்பு' என்னும் அங்கமோ ஏனைப் பதினேழு அதிகாரங்களாற் பற்பல வகையாக விளக்கி அறிவுறுத்தப்பட்டு, அங்கவியல் முடிக்கப்படுகின்றது. 'நட்பு' என்னும் அதிகாரத்தின் தலைப்பில் உரையாசிரியர் பரிமேலழகர் "வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்ததிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறை முகத்தானுங் கூறுவான்றொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார்" என்று உரைத்திருத்தல் இங்குப் பெரிதும் நினைவுகூர்ந்து தெளிதற்குரியது.

இனி, விதிமுகமாகக் கூறப்பட்ட அவ்வதிகாரங்கள் ஐந்துங்கூட 'நட்பு' 'நட்பாராய்தல்' 'பழமை' 'தீ நட்பு' 'கூடா நட்பு' என நட்பின் பெயராலேயே அமைந்திருக்கின்றன.

நட்பியல்பு ஒன்றுக்கன்றி திருக்குறள் முழுவதிலுமே ஏனை எவ்வியல்புக்கும் இத்தனை மிகுதியான அதிகாரங்கள் அமைக்கப்படவில்லை. ஆதலாற், பொருள் முயற்சிகட்கு நட்பியல்பே மிகவும் முதன்மையாக வேண்டற்பால தென்

பதில் நாயனுர் மிக்க கருத்துறுதியுடையவரா யிருக்கின்றுரென்பது, இவ்வகைகளாலெல்லாம் நன்கு விளங்கக் கூடியதேயாகும்.

அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள்கள் மூன்றிற்கே யன்றி, வீடுபேற்றிற்குங்கூட இந் நேய நெறியே இன்றியமையாததா யிருக்கின்றதென்பது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை'
'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்"

என்னும் பெருநாவலரது திருமொழியானும்,

"மூத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்"

என்னும் மணிவாசகரது திருவாசகத்தானும்,

"முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத்தெழுபெரு வேட்கை யோடு"

என்னும் அருண்மொழித் தேவரது பொருண்மொழியானும் தெறறென விளங்காநிற்கும்.

எல்லா வாழ்வுகட்கும் நட்பியல்பு இத்துணை அடிப்படையான பெருங்காரணமா யிருத்தலினலன்றே,

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும்—ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ"

என அருணையப் பெருஞ்செல்வரான பட்டினத்தடிகளும் அதனை முதன்மையாக நிறுத்தி அருளிச்செய்வாராயினர்!

இதுவொன்றே! மன்பதைகட்கு மிக்க ஆதரவொடு மூதுரையை அருளிச்செய்த ஔவைப் பிராட்டியாரே, ஒரு தனிப் பாடலில்,

"நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்."

என்று நட்பியல்பையே முதலில் நினைந்து இயற்கையுண்மை தோன்ற இயற்றியருளுவாராயின், நட்பின் முதன்மைக்கு இன்னும் வேறு சான்றுகளும் வேண்டுங்கொல்?

பண்டைக் காலத்துச் செந்தமிழ்ப் புலவர்க்கும் புரவலர்க்கு மிடையில் மிக வியக்கத்தக்க வகையில் இந் நட்பியல்பு யாண்டுங் கொழுந்தோடி வளர்ந்து நின்று தமிழகத்தைப் பெரிதும் மாட்சிமைப்படுத்தியது; பிசிராந்தையார் கோப் பெருஞ் சோழற்கும், பாரி கபிலர்க்கும், அதியமான் ஔவையார்க்கும் இடையே விளங்கிய நட்புத்தான் எத் தகையது! அதனால் இத் தமிழகத்துக்கு உண்டான பெருமை சிறிதேயோ!

இனி, இங்ஙனமெல்லாம் இந்நட்பியல்பு அறம்பொருள் இன்பம் வீடு என்னும் எவ்வகை வாழ்வுகட்கும் வெவ் வேறு நிலைகளில் இன்றியமையாததொன்றா யிருப்பினும், நாயனார் அதனைப் பொருட்பாலின்கண் வைத்து விளக்கி யிருத்தலால் ஏனை எல்லா வாழ்வுகளையும் ஈனும் அப் பொருள் முயற்சிக்கண் வைத்து அதனை ஆராய்தலே அதன் மாட்சி நன்கு விளங்குதற்கு இடனாகுமென்பதுந் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். ஆதலால், உலகியலிற் சிறக்க வேண்டுவோர் அனைவரும் அதனிலுஞ் செல்வப்பேற்றில் திளைக்கவேண்டுவோர் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் இந்நட்பியல்பினைத் தக்கவாறு போற்றிக்கொண்டு ஒழுகுதல் மிகவும் இன்றியமையாததொன்றாயிருக்கின்றது. பிராட்டி யார் தமது அழகிய மூதுரையில் அவ்வியல்பினை ஓர் அரு மையான திருப்பாடலில் நன்கு அருளிச்செய்திருக்கின்றார். அதன் வடிவம்,

> "அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
> உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
> கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
> ஒட்டி யுறுவார் உறவு."

என்பது. குளத்தில் நீர் நிறைந்திருக்கும்போது நீர்ப் பறவைகள் குளத்தோடு உறவுகொண்டிருந்து அதன் நீரி னால் நலமடைந்து வாழ்கின்றன; அவற்றைப்போலவே அக் குளத்தில் கொட்டி ஆம்பல் நெய்தல் முதலிய பூடு களும் உறவுகொணடிருந்து அந்நீரினால் நலமடைந்து உயிர் வாழ்கின்றன. ஆனால், நீர் அற்றபோது, இவற்றின் செயலகள் வேறுபடுகின்றன. நீர்ப் பறவைகள், வற்றிய

அக்குளத்தினின்றும் நீங்கி நீருள்ள வேறிடங்களை நாடிச் செல்கின்றன. ஆனாற், கொட்டி முதலிய பூடுகளோ அக் குளத்தில் நீரற்றபோதும் அதனோடு ஒட்டியிருந்தே தாமும் வாடி நிற்கின்றன.

இச் செயல்வேறுபாட்டுக்குக் காரணம் ஒன்று உண்டு. நீர்ப் பறவைகள் குளத்தோடு உறவு கொள்ளாமல் அக் குளத்தின் நீரோடு மட்டும் உறவு கொள்கின்றன. ஆனாற் கொட்டி முதலிய பூடுகளோ, தத்தம் கிழங்குகள் குளத்தின் மண்ணிலும் பதிந்து வேர் வீழ்த்து நின்று அக் குளத்தோடு உறவு கொள்கின்றன. குளத்தில் நீரிருந்தால் அக் கொட்டி முதலியவை தழைக்கும்; நீர் வரண்டால் தாமும் வறளும்; அங்ஙனம் வறளுமாயினும், அவற்றின் கிழங்கு முதலியவை என்றுங் குளத்தோடு உறவுகொண்டிருந்து பின்பு நீர் ஊறுகின்றபோது தாமும் கிளர்ச்சியுற்று விளங்காநிற்கின்றன; இங்ஙனங் கிழங்கு முதலியவற்றின் அளவாகவேனும் உயிரை வைத்துக்கொண்டு அவை உறவு கொள்வது எவ்வளவு வியத்தற்குரியதாயிருக்கின்றது! ஈதன்றோ உயிர் நேயம் என்பது! குளத்தில் நீர் வறண்ட காலத்தில், பூடுகளின் மேனி முதலியன வாடினும், கிழங்கு முதலியவற்றின் அளவாகவேனும் அவற்றின் உயிர்கள் தங்கி யிருக்குமல்லது அவ்வுயிர்கள் தாமும் நீங்கிவிடுமென்பது பெரும்பாலுமில்லை. "யானை படுத்தால் குதிரை மட்டமேனுந் தேறு" மென்னும் முதுமொழிப்படி குளத்தின் நீர் வறண்டாலும் அதன் ஈரம் முதலியனவேனும் அடியில் தங்கியிருந்து அக்கிழங்கு முதலியவற்றி னளவாகவேனும் அவற்றின் உயிர்களைப் பாதுகாத்து நிற்பது குளத்தின் இயல்பாகும். உயிரிருந்தாற் போதும்; பின் வளங்காணும்போது தழைக்கலாம். இனிக், குளம் என்றும் வற்றியபடியே இருப்பதென்பதும் இயல்பாகாது; நீர் கட்டாயம் மீண்டும் நிறைதலும், கொட்டி முதலியன மீண்டும் தழைத்தலும் ஒருதலை. நட்புச் செய்வார் இவ் வியற்கை உண்மைகளிலெல்லாம் கருத்தூன்றுவாராயின், தமது வாழ்க்கையைத் தழைக்கச் செய்

வதற்காக அவர் எவரும் தம் நட்பினைக் கெடுத்துக் கொண்டு யாண்டும் நீங்கிச் செல்வாரல்லர். ஒன்றியிருந்தே ஏற்ற முயற்சிகளைச் செய்து உரிய காலம் வரும்போது நலமுறுவர். குளம் என்பது நண்பர்க்கும், நீர் என்பது அவரது செல்வத்துக்கும், நீர்ப்பறவையும் கொட்டி முதலியவையும் அந் நண்பரோடு தொடர்பு கொள்வோர்க்கும் உவமை.

தீ நட்பை விடுக வென ஆன்றோர் யாண்டும் பணித்தனரல்லது, வளமிலோரை விடுக வென உரைத்தனரல்லர். ஆனால், அதற்கு மாறாக எத்தனை இடர் வரினும் நட்பினை விடற்க எனவே அவர் அறிவுறுப்பாராயினர்.

"நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும்...
கேடு எவன் உடைத்தோ? தோழி !...
ஓங்குமலை நாடனொடு அமைந்தநம் தொடர்பே."
—குறுந்தொகை, ௩௭௩.

"சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது;
ஒழிந்தவ ரெல்லாரும் உண்ணுதுஞ் செல்லார்...
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றாடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை."
—பாலைக்கலி, ௧௮.

"எந்தை வாழி ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நின்காண் குவரே;
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென்."
—புறநானூறு, ௧௭௫.

என்னும் பழந்தமிழ்ப் பொருளுரைகள் போல்வன இங்கு நினைவுகூரற்பாலனவாகும்.

நட்புக் கழன்றபின் முன்போற் கூடுதலென்பதோ அரிது.

"நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினும் திண்மைநிலை போம்."

என்னும் நன்னெறி இன்னுரையில் இவ்வியல்பு நன்கு விளக்கப்படுகின்றது. உண்மைகளெல்லாம் இவ்வாறு இருத்தலாலன்றோ,

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை,"

என்று கலித்தொகைச் செம்மொழி துணிபாகக் கட்டளையிடுவதாயிற்று.

இனி, இடருறு நேரத்தும் ஒட்டியுறுவாரை ஆசிரியர் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் என முத்திறப்படுத்துதலும் உன்னற்பாலது. கொட்டி முதலிய பூடுகள் மூன்றும் குளத்து நிலத்தில் வேர் வீழ்த்து நிற்பனவாயினும், கொட்டிப்பூடு நீருற்றபோதும் பெரும்பாலும் நிலத்தினளவாகவே நின்று வளமுறுவதாகும். நெய்தல் பெரும்பாலுங் கரையோரங்களில் ஓரளவு வளர்ந்து வளமுறும். ஆனல், ஆம்பற் பூடுகளோவெனின் "நீரளவே யாகுமாம் நீராம்பல்," என்றபடி நீரினளவுக்கு ஏற்றபடி உயர்ந்து வளர்ந்து செழுமையுறுவதா யிருக்கின்றது. கொட்டியும் ஆம்பலும் நெய்தலு மென இம்மூன்றும் முறையே மனைவியும் மக்களும் சுற்றமும் போன்று விளங்குகின்றன. குடும்பத்திற் செழுமை எவ்வளவிருப்பினும் பக்கள் ஒக்கல் முதலியோர் நன்கு நுகர இடஞ் செய்து, மனைவி ஓரளவுக்கே வளமுற்றுத் திகழ்கின்றனள். மக்கள், செழுமையின் அளவுக்கேற்பத் தாமும் உயர்ந்து வளமுற்றுத் தழைத்து மலர்ந்து மணங்கமழ்ந்து விளங்குகின்றனர். ஒக்கல், சுற்றிலுமிருந்து ஓரளவு நலமுறுகின்றனர். இவரனைவரும் ஒருவர்க்கு நீங்கா உறவினரேயாவர்; இனி, ஏனை நண்பர்களிலும் இவரனையர் உளர்; பொருண் முயற்சியிற் சிலர் ஓரளவே செல்வம் பெறுதலும், சிலர் சிறிது கூடப் பெறுதலும், மற்றுஞ் சிலர் மிகப் பெறுதலும், அவ்வவற்றிற்கேற்ப அவரவர் தழைத்தலும் நேரலாம்.

ஆயினும், மனைவிக்கு உரிய உறவின் அழுத்தம், மக்கள் ஒக்கல் முதலியோர்க்கு முறையே இல்லாமை போல, உற வென்பதைப் பொருள் பெற்றுத் தழைக்கும் அளவாகவே கொள்ளுதல் ஒவ்வாது; இங்ஙனமெல்லாமுள்ள இயற்கை நிலைகளை உன்னி ஆராய்ந்து, யாண்டும் எந் நிலையிலும் நட்புக் கெடாமல் நின்று 'உறுதிச் சுற்ற'மாய் ஒழுகுதலே பொருண் முயற்சி செய்வாரது முதற்கடமையாகும் என்பது.

குணம் :

ஔவைப் பிராட்டியார், மூதுரையின் கடவுள் வாழ்த்துச் செய்யுளில், 'நல்ல மனமுண்டாம்' எனக் குறித்தருளிய நற்குண நற்செயல்கள்பற்றியும் இனி ஆராய்ந்து தெளிதல் நமது கடமையாகும்.

ஊன்றி நோக்கினால், மக்கட்கு நற்குண நற்செயல்களே இயல்பானவை என்பது திட்டமாகத் தெரிகின்றது. "நல்லவை செய்யின் இயல்பாகும்," என்று நாலடியார்ச் செய்யுளும் ஒன்று உண்டு. மக்கள் இவ்வியல்பினைத் தாமே செயற்கையாக மாற்றிக்கொண்டு அவாக் காரணமாகத் தீயராய் ஒழிதல் மிகவும் இரங்குதற்குரியதாகும். உலகியற்கையில் தக்க தெளிவின்மையே இதற்குக் காரணம் என்று தெரிகின்றது. ஔவையார் எதனையுங் காரணங் கண்டு அறிவுரை பகரும் நுண்ணறிவினராதலின், உரிய அடிப்படையின்மேல் இரண்டு செய்யுட்கள் மூதுரையின்கண் அருளிச்செய்திருக்கின்றார். அவை :

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்"

என ஒன்றும்,

"எழுதியவா றேகாண், இரங்குமட நெஞ்சே!
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை."

என மற்றொன்றுமாம்.

நீரின்வழியே தெப்பம் செல்வதுபோல மக்கள் வாழ்க்கை ஊழின் வழியே நடைபெறு தற்குரியது. உலகத்திற் பேறுகள், நிலைக்குமேற் கிடைக்கமாட்டா என்பதும்; பேறுகள் கிடைத்தாலும் மக்கள், நிலைக்குமேல் அவற்றின் நுகர்ச்சியினை எய்தப்பெறார் என்பதும் முதற் பாட்டின் முற்பகுதி பிற்பகுதிகளில் முறையே அறிவுறுத்தப்பட்டிருககின்றன. ஆதலாற், கருதியவாறெல்லாம் கருமம் கைகூடுவது அரிதாதலுடன், ஊழ் மக்கட்கு அவரது நன்முயற்சியின் வாயிலாகவே தீமை பயப்பித்தலும் உண்டு என்னும் அறிவிப்பும் இரண்டாம் பாட்டின் முற்பகுதி பிற்பகுதிகளில் நன்கு தரப்பட்டிருக்கின்றது.

இங்ஙனம், முற்பிறவியிற் செய்த வினையே எல்லாவற்றிற்கும் காரணம் என்னும் அடிப்படையான உண்மையை மக்கள் தெளிவாக அறிந்துகொண்டார்களானல், இப்பிறவியில் எதன்பொருட்டும் அவர், தமக்கு இயற்கையே உரிய நற்குண நற்செயல்களினின்றும் மாறித் தீயன செய்ய முற்படார்.

இதனை நன்கு வரையறுத்துக்கொண்டபின், மக்களிற் பொரும்பாலார் இந் நிலையில் நில்லாமல் உலக வேட்கை ஏதுவாக வழீஇச் செல்லுதலால், அவர்பொருட்டு இரக்கம் மிக உடையராய் ஔவையார், அவரை நல்லாரொடு கூட்டுதற்கு விழைந்து, நல்லாரிணக்கத்தின் மேன்மையும், அவரியல்பும், அவர்க்கு உதவுதலும், அவரால் உலகுக்கு உண்டாகும் ஆக்கமும் எனப் பலவும் விளக்கி யருளுகின்றார்.

நல்லாரைக் காண்டலளவானும் நன்மையுண்டு என்னும் மேதக்க உண்மையை "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்னுந் திருமொழியினாற், பெருமாட்டியார் அறிவுறுத்துதலும் சாலப் பொருளாழ முடையதாகும். நல்லாருடம்பிலிருந்து நாலாபக்கமும் ஊற்றுருவி விளங்கும் அருளொளியானது, கண்ணுக்கெட்டிய தொலைவில் நின்று காண்பார்தம் உடம்பின் கண்ணும் சுவறி நலம் பயக்குமாதலின், வாளாக் காண்டலளவானும் நன்மை யுண்டு என்பது

மிக்க உரனுடைய அறிவுரையாகவே மிளிர்கின்றது. காண்டலின் நன்மையே இங்ஙனமாதலின், அவர் சொற் கேட்டலும், அவர் குணங்கள் உரைத்தலும், அவரோடு இணங்கியிருத்தலும் எத்துணையோ நலம் பயக்குமென் பதை அதிலிருந்தே எளிதின் விளங்குமாறு முறை முறையே நிறுத்தி அவர் அறிவுறுப்பாராயினர். தீயாரைக் காண்பது முதலாயின இதற்கு நேர்மாருய்த் தீமை பயப்ப தாகும் என்பதும் அவரால், "தீயாரைக் காண்பதுவும் தீதே," என்னுஞ் செய்யுள் வாயிலாக உடன் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. இவ் விருவரையும்பற்றி நுவலு மிடத்துப் பிராட்டியார், 'நலமிக்க நல்லார்' எனவும் 'திரு வற்ற தீயார்' எனவும் முறையே அருளிச்செய்து, நல முடைமையும் திருவுடைமையும் நல்லாரிடமே உரிமை யோடு விளங்குவன என்னும் உண்மையை நன்கினிது விளங்கச் செய்திருக்குந் திறமும் பெரிதும் நினைவுகூர்ந்து கருத்திருத்தி இன்புறுதற் குரியதாகும்.

இனி, இங்ஙனந் தீயோரை விலக்கி, நல்லவர்பால் இணக்கங் கொள்ள வேண்டும் என்றதற் கேற்ப, நல்லார் இயல்புகள் இத்தகைய வென்பது, 'அட்டாலும் பால் சுவையில்' 'சீரியர் கெட்டாலும்' 'சந்தன மென்குறடு' 'கற்பிளவோ டொப்பர்' 'சார்ந்தனையும் தீயனவே' என்னும் ஐந்து செய்யுட்களிற் பற்பல வகையில் வைத்து மிக அருமையாக அருளிச் செய்யப் படுகின்றது.

நல்லோரியல்புகளை முதன்மையாக மூவகைப்படுத்தி ஔவைச் செல்வியார் விளக்கி யருளுவர். தம்மைப் பிறர் பகைத்து நெருக்கினுலும், கெடுத்தாலும், தாம் வறுமை யுற்றாலும், நிலைகுலைந்து உயிர் துறக்கும்படி நேர்ந்தாலும் நல்லோர் தமது பெருந்தன்மையாகிய குணமாட்சிமையிற் சிறிதுங் குறையாதிருத்தல் ஒருவகை இயல்பு. தம்மைச் சூழ்ந்திருப்பவரான உலகமக்களின் அறியாமையினுல் ஒரோவொருகால் தமக்குச் சிறிது சினம் எழுவதாயினும், அது பகைமைக்குச் சிறிதும் இடனின்றி அருள்காரண மாக அந்நொடியே முழுதும் மறைந்து மாறிவிடுதல்

மற்ருெருவகை நல்லியல்பு. இனி, உலகத்திற் சிலர் தந்நலக் கருத்தால் நேருக்குநேராகவே தமக்குத் தீங்குசெய்தாலும், அதனை அவர் தாம் இறக்குந்தனையுஞ் செய்தாலும், தமது உயிர்க்கே ஊறுசெய்தாலும் தாம் திருப்பி ஊறு செய்யாமையோடு, தாம் உயிர் விடுந்தனையும் அவர்க்கு ஆதரவும் உதவியுமாயிருந்து நலமே புரிந்துவருதல் இன்ருெரு வகையான நனிசிறந்த நல்லியல்பாகும்.

குணம் குறையாமை, செற்றம் நிகழாமை, ஆதரவு கெடாமை என மேற்காட்டிய இம் மூவகை நல்லியல்புகளுள் முதல் வகையினை ஔவைச் செல்வியார்,

"அட்டாலும் பால்சுவையில் குன்ருது; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்."

"சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது; ஆதலால்,—தம்தம்
தனம்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறிய ராவரோ மற்று."

"சீரியர் கெட்டாலும் சீரியரே: சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால்அங்கு என்னகும்?—சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னகும்; என்னகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால்."

என்னும் இன்சுவைப் பாக்களால் இனிதெடுத்து ஓதுவர்.

இரண்டாம் வகையினைக்,

"கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்ருேர் சினம்."

என்னும் பொருண்மொழிச் செய்யுளாலும்,

மூன்ரும் வகையினைச்,

"சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்."

என்னும் அருஞ்செயற் செய்யுளாலும் விளக்கி அறிவுறுப்பர்.

முதல் வகையாகிய நல்லியல்புக்குப் பிராட்டியார் மூன்று திருப்பாட்டுகள் அருளிச் செய்தது அதன் முதன்மையினை நன்கு வற்புறுத்திக் காட்டுவதா யிருக்கின்றது.

பாலைக் காய்ச்சுதலாவது, அது தனது துணையாகிய நீரைப் பிரிந்து கொதிப்புக்கொள்ளும்படி அதன் பகையாகிய தீயினால் நெருக்கப்படுதலாகும். நல்லோரைப் பிறர் பகைத்து நெருக்குதற்கு இஃது எடுத்துக்காட்டாயிற்று. நட்புக்கு உரியரல்லாதார் அளவளாய் மனங்கலந்து பழகினாலும் நண்பராகார்; ஆனால், பகைத்து நெருக்கினாலும் நல்லோர் தமது இனிமையிற் குறையார் என்று விளக்கிய படியாகும்.

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்றவிடத்தும், 'சீரியர் கெட்டாலும்' என்றவிடத்தும் கெடுதல் உயிரை இழத்தல் என்னும் பொருட்டாகும். அவற்றிற்கு இப் பொருட்பேறு, அவற்றை அடுத்துவரும் உவமங்களாலும் இனிது விளங்குகின்றது; இவை, பிறர் பகைத்துக் கெடுத்தாலும், அல்லது தாம் நிலைகுலைந்து உயிர் துறக்கும்படி நேர்ந்தாலும், நல்லோர், தம்மாட்சி குறையாமைக்கும் பயன் குறையாமைக்கும் காட்டாயின.

'சந்தன மென்குறடு' என்னுஞ் செய்யுளால், அளவு தேயினும் இயல்பு தேயாத வறுமையிற் செம்மை இனிது விளக்கப்பட்டிருக்கின்றது.

இனி, இரண்டாம் வகையினை விளக்குவதாகிய 'கற்பிளவோ டொப்பர்' என்னுஞ் செய்யுள் பொதுவாக மக்களைத் தலைமக்கள் இடைமக்கள் கடைமக்கள் என மூவகையிற் பாகுபடுத்திக்கொண்டு, அவருள், கடைமக்களாவார் கடுஞ்சினங் கொள்ளுமிடத்து, ஒரு கல் இரண்டாகப் பிளந்து மீண்டும் கூடாமைபோலப் பகைத்து வேறு வேறுவர் எனவும், இடைமக்கள் அங்ஙனங் கடுஞ்சினங்

கொண்டனராயினும், ஒரு பொன் துண்டு இரண்டாகப் பிளந்து பின் உருக்கிக் கூட்டுமிடத்துக் கூடிவிடுதல் ஒப்பச் சினம் மறந்து திரும்பவுங் கூடும் இயல்பினர் எனவும், தலைமக்களாவார் ஒரோவொருகாற் சிறிது சினம் எழப் பெறுவராயினும், ஒரு வில்லைக் கையிற் பிடித்து நீரைக் கிழிக்க உடனே அதன் வடுத் தெரியாது மாறிவிடுதல் போல உடனே அச் சினம் மாறி அமைதியும் அருளுங் கொள்ளு நிலையினர் எனவும் அவரவரியல்பினை விளக்கிச், செற்றம் சிறிதும் நிகழாத நல்லோர் மாட்சியினை இணையற்ற நிலையின் வைத்துத் தெளிவாக அறிவுறுத்திற்று.

'சாந்தனையும்' என்னுஞ் செய்யுளில், 'ஆந்தனையும்' 'குளிர் நிழல்' 'மறைக்கும்' என்னுஞ் சொற்கள் பொருளுற்றுடையவை. 'மறைக்கும்' என்னுஞ் சொற்குறிப்பினால் தமக்குப் பிறர் செய்யுந் தீமைக்கு வருந்தாது பொறுத்து அவர்க்கு ஆந்தனையும் சாந்தனையு நன்மை புரிந்து காத்தலோடு, அவருடைய தீச் செயல்களைப் புறத்தார்க்குப் புலப்படுத்தாது மறைத்து மறந்துவிடுதலாகிய இணையற்ற பெரும்போக்கும் பைய வெளிப்படுகின்றது.

ஔவைப் பெருமாட்டியார் நல்லோரியல்புகளை விளக்கும் இச் செய்யுட்களில், அந்நல்லோரை 'மேன்மக்கள்' 'தார்வேந்தர்' 'சீரியர்' 'சான்றோர்' 'அறிவுடையோர்' எனப் பலவகையாகப் பொருட்குறியீடு தந்து பாராட்டி அவர் அறிவும், அமைதியும், ஒழுக்கும், வளமும், பெருந்தன்மையும் உடையாரென்னும் உண்மையை இனிது விளக்கி, அம் மேன்மைப் பண்புகளே அவர் இங்ஙனமெல்லாம் நன்முறையில் ஒழுகுதற்கு ஏது எனப புலப்பட வைத்தருளிய திறனும் கண்டு பெரிதும் அறிந்து இன்புறுதற்குரியது ஆம்.

இனி, அத்தகைய மேலோர்க்கு ஒன்று உதவுதல்பற்றியும் மூதுரையில் இனிய விளக்கங்கள் தரப்படுகின்றன. ஔவையார் தருங் கருத்துக்கள் பின்வருமாறு:

பொதுவாக நன்மை செய்தல் என்பது எஞ்ஞான்றும் வீண் போகாது. செய்தநன்மை, பயன்றருதற்குரிய காலத்

தில் மிக்க தகுதியோடும் பின்னும் மாட்சிமையோடும் வந்தெய்துதலே இயல்பானது. தென்னங் கன்றின் தாளில் விட்ட நீர் சிலகாலத்தில் தூய இன் நீராய் அதன் தலையிலிருந்து கிடைத்துவிடுகின்றது. இதனை இயற்கையில் யாவரும் அறிவர்; ஆதலால், நன்றியொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் எனக் கவலை கொள்ளுதலே வேண்டாம்; கிடைத்தல் திண்ணம்.

அதுவும், நல்லாரொருவர்க்குச் செய்த நன்றியாயின் கன்மேல் எழுத்துப்போல் என்ஞான்றும் அழியாமல் விளங்கிக் கருக்கொண்டிருந்து தக்க காலத்தில் தக்க பயனைக் கட்டாயம் தருமென்று இன்னும் உறுதியாக நம்பலாம்.

உலகத்திலுள்ள மக்களை, நல்லோர் என்றும், தீயோர் என்றும், பொதுமக்களென்றும் மூன்று வகையாகப் பகுத்தறியலாம். நண்பர், பகைவர், அயலார் என்னும் பாகுபாடும் இம் மூன்று வகையிலும் முறையே அடங்கும். பொதுவாக நல்லோரும் தீயோருமல்லாத பொதுமக்களுக்கே ஒருதவி செய்யினும், அதுமட்டும் நற்செயலாயிருக்குமானால், அது தன் பயனை என்றேனும் மாட்சிமையோடு தருதல் உறுதி. இவ்வுண்மையே முதற்கண் விளக்கிக்கொள்ளப்பட்டது. அந்நன்றி, நல்லோர்க்குச் செய்வதாயிருந்தால் அஃது இன்னும் உறுதியாய்க் கன்மேல் எழுத்துப்போற் காணும் என அடுத்து அறிவுறுத்தப்பட்டது. ஆனால், தீயோர்க்குத் தீமையன்றி நன்மையே செய்யினும், அது நீர்மேல் எழுத்துக்கு நேராய் வீணாய் விடுகின்றது; வீணாதல் மட்டுமன்றி, அந்நன்மையே தீமையுருவாய்த் திரும்பி, வேங்கை வரிப்புலியின் நோய்தீர்த்த நச்சு மருத்துவன் அவ் வரிப்புலிக்கே இரையானாற் போலவும், கல்லின் மேல் இட்ட மட்கலம் உடைந்து உருக்குலைந்து போனாற் போலவும் உயிர்க்கே ஊறுதருவதாய் முடிந்துவிடுகின்றது. (கரு). ஆதலால், ஏதானும் நன்றி செய்வதாயின் அந்நன்றியினை நல்லாராயினாரைத் தெரிந்து அவர்க்குச் செய்தலே உலகுக்கும் தமக்கும் நலம் பயப்பதாயிருக்கும் என்பது.

ஔவைச் செல்வியார், முடிந்த பொருளாக உலகவர்க்கு நல்லோரைப்பற்றி அறிவுறுக்கும் மெய்ப்பேருண்மை, என்ஞான்றும் நினைந்து நினைந்து காத்துப் போற்றுதற்குரிய பெருமைப்பாடுடையது. நல்லோர் இங்ஙனமெல்லாம் இணக்கத்திற்கு உரியவராய் ஏற்ற மேன்மைப் பண்புகள் வாய்ந்து ஏனையோராற் போற்றி நன்றி செயப்பெறுதற்குரிய தகுதியிற் றிகழ்தலின், அத்தகைய நல்லோரே எல்லா உலக மக்களின் நல்வாழ்வுக்குங் காரணராயிருக்கின்றனர் என்பது.

> "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
> புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
> நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
> எல்லார்க்கும் பெய்யும் மழை."

உண்மை இங்ஙனமிருத்தலின், கல்வியும் பொருளும் உலகில் நற்குண நற்செய்கைகள் பெருகித் தழைத்தற்குக் கருவியாதலின், அவ்வாற்றால் நல்லுணர்வுகளை யாண்டும் விளைத்து நிலைபெறச் செய்யுஞ் சான்றோர்களை, நாட்டில் அங்கங்கும் இருத்திப் போற்றிக்கொண்டு உலகவர் நலம் பெறல் வேண்டுமென்பது இனிது விளங்குகின்றது.

௪. நல்வழி

தமிழ்நாட்டின் இயற்கை அறிவு நலம், அதன் தமிழ் மொழியினாலும் அம்மொழியின்கண் இயற்றப்பட்டுள்ள பலவேறு வகையான அறிவு நூல்களாலும், பழக்க வழக்கங்களாலும் இனிது புலனாகின்றது. மொழியின் இயல்பினையும் பழக்கவழக்கங்களையும் நூல்கள் ஏற்று விளங்குதலால் அவையொன்றேயும் நாட்டின் நலத்தினைப் புலப்படுத்துதற்குப் போதியவாய், இறவாத அடையாளங்களாய்த் திகழ்ந்து வருகின்றன. அவ்வகைப்பட்ட இறவாத அடையாளங்களுள், ஔவைச்செல்வியின் அழகிளம் நூல்கள், துவக்கத்திலேயே காட்சியளித்து மிளிர்தல் சாலவும் அறிந்து இன்புறுதற்குரியதாகும்.

'ஆத்திசூடி' 'கொன்றைவேந்தன்' என்னும் இரு நூல்களும் சிறிய சிறிய தொடர்களாலானவை; 'மூதுரை'யும் 'நல்வழி'யும் வெண்பா என்னும் செய்யுட்களாலானவை 'ஆத்திசூடி'யிற் குறித்த அறிவுரைகளைக் 'கொன்றைவேந்தனி'ற் காரணங்களுடன் விளக்கி அம்மையார் பின்னும் மாட்சிமைப்படுத்தியிருக்கின்றனர். 'மூதுரை'யிற் குறித்த பொருண்மொழிகளை 'நல்வழி'யில் அருட்போக்குடன் விளக்கி மிகவும் நுட்பதிட்பமாக்கி யிருக்கின்றனர். ஆதலின், இந்நான்கு நூல்களுள், முன்னிரண்டும் ஓரினமும் பின்னிரண்டும் வேறோரினமுமாகக் காணப்படும்.

இவை தம்மில் மற்றோருண்மையும் அறிந்துகொள்ளல் வேண்டும். அது; ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் அமிழ்த நூல்கள் நான்கும் முறையே குழந்தைப் பருவம், இளந்தைப் பருவம், காளைப் பருவம், மூப்புப்பருவம் என்னும் நால்வகைப் பருவங்களின் சிறப்பியல்களை உட்கொண்டு அவ்வவற்றிற்கேற்ப எழுந்துள்ளன என்பது.

முறைமுறையே உயர்ந்த வகுப்புக்களிற் பயிலும் பள்ளிப்பிள்ளைகளின் தகுதிக்கேற்ப அவர்கள் மனப்பாடஞ்செய்து பயிலும் வகையில், முறையே சிறுமையும்

பெருமையும் பருமையும் நுட்பமுமான தொடர்களாலும் செய்யுட்களாலும் இவற்றை ஔவையார் அருளிச்செய் திருக்கும் வகையிலேயே, மேற்காட்டியபடி, பருவத்திற் கேற்ற சிறப்பமைப்புக்களும பொருந்தி நிறறல் ஓர் அருந் திறன் ஆகும்.

'நல்வழி' என்பது முற்றிலும் அருளியல் தழீஇய உண்மை மறைநூல். அருள்நெறி, திருநெறி, பெருநெறி, ஒருநெறி, மறைநெறி, சிவநெறி முதலிய குறியீடுகளாலும், 'சன்மார்க்கம், நன்மார்க்கம்' முதலிய பிற குறியீடுகளா லும் உணர்த்தப்படும் உண்மை வழியையே 'நல்வழி' என்னுந் திருப்பெயரால், தெய்வப்புலமை ஔவையார் இச்சிறு முதுநூலாக அருளிச்செய்திருக்கின்றனர். 'சன் மார்க்கம்' அல்லது 'உண்மை நெறி' என்னும் அரும்பெயர் அருணெறியை 'நல்வழி' என்னும் விளங்கிய குறியீட்டி னுற் பிராட்டியார் அருளிச்செய்கின்ற இத்தெய்வத் திரு நூலின் முகப்பினில்,

> "பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
> நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலம்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
> சங்கத் தமிழ்மூன்றும் தா."

என்னும் அழகிய கடவுள் வாழ்த்துச் செய்யுள் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அருணெறியை விளக்கிச் செல்லும் இந்நூலின் முகத்தில், "சங்கத் தமிழ் மூன்றும் தா," என் னும் வேண்டுகோளினை அம்மையார் விரும்பி நிறுத்துத லால், அருணெறிக்கும் சங்கத் தமிழ்க்கும் நிரம்ப இயை புண்டென்பது நன்கு விளங்குகின்றது. மேலும், உடம்பு உயிர் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய மிக்க இனிப்பும் உய்வுறைக்கருக்களும் நிரம்பிய பாலையும் தேனையும் பாகை யும் பருப்பையுங் கலந்து கொடுத்துவிட்டு, அதற்கு ஈடா கச் சங்கத்தமிழினைப்பெற ஔவையார் விரும்புவதி லிருந்தே, அந்தத் தமிழ், ஞானவாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய மிக்க இனிமையும் உறுதிப்பொருள்களும் உடைய தென்பது பெறப்படும். சங்கத் தமிழ் நூல்கள் என்பன,

இதனால், நமது செந்தமிழ்த் திருநாட்டின் மறை ஞான முதல் நூல்கள் என்பதும் விளக்கமாம். அத்தெய்வச் சங்க நூல்களை அடிப்படையாகக்கொண்டு, அவற்றின் மெய்க் கருத்துக்களைப் பிழிசாறாகப் பிழிந்தெடுத்து அம்மையார், 'நல்வழி' என்னும் நாற்பதே செய்யுட்களுடைய இவ் வரு நூலினை நமக்கு வழங்கியிருக்கின்றனர்.

சங்க நூல்கள் மிகப் பெரிய தமிழ்க்கடல். அதனி லிருந்து பிற்காலப் புலனெறி வழக்குகளாகிய பற்பல கரு முகில்கள் மேலெழுந்து, காலந்தோறும் இனிய உலகியல் வழக்குகளாகிய இன்னீர் பெய்து, பற்பல நறு நூல்களாகிய நீர்நிலைகளாய் ஒழுகி, இத் தென்னாட்டு நன்மக்களின் வாழ்க் கைப் பைங்கூழை வளர்த்துவந்திருக்கின்றன. நல்வழியும் அவ்வகையினில் அமைந்த ஓரினிய சிற்றாறலாகும்.

ஔவைப் பிராட்டியார்க்கு இங்ஙனங் கருத்துண்மை, அவர் இந் நூலின் இறுதிச் செய்யுளிலும்,

> "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகம்என்று உணர்"

எனச் சங்கத் தமிழ் முதற் பிற்காலத் தமிழ்கள் பலவும் ஒரியையுடையனவே எனக் கட்டளையிட்டு அருளிச்செய் திருத்தலினின்று தெற்றெனப் புலனாகின்றது. இங்ஙனம் 'நல்வழி' என்னும் இந் நூலின் முதலிலும் முடிவிலும் பிராட்டியார் சங்கத்தமிழ்க்கு ஒரு முதன்மைதந்து அமைத் துக்கொள்ளுதலாலும், தேவார திருவாசக முதலிய திரு நெறித் தமிழ்களோடு அதனை இயைத்து மொழிதலாலும், 'நல்வழி'யின் இடைப்பகுதியில் அவர் விளக்கி அறி வுறுத்துதற்கு எடுத்துக்கொண்ட பொருளும் சங்கத் தமி ழின் வழியாவன ஞான உண்மைகளேயாதல் ஐயுறவின்றி இனிது தெளிந்துகொள்ளப்படும்.

தமிழ்நாட்டின் அமிழ்த உள்ளம், தக்க தமிழ் நூல் களிலெல்லாம் நன்கு விளங்கித் தெரிகின்றமைபோலவே,

அம்மையார் நூல்களிலும் அது மிக அழகாக நிழலாடித் தெரிகின்றது. தமிழ்மக்கள் மிகப் பழமையதான நாகரிக நலம் உடையவர்கள். காலந்தோறும் வளமுடையராய் வாழ்ந்து உலகியலினை நன்கறிந்தவர்கள். பல தலையான கடலூழிகள், அரசு வேறுபாடுகள், நாட்டின் பெருக்க சுருக்கங்கள், பன்னாட்டு மக்களின் இணைவு பிரிவுகள், அவ் வந்நிலைக்கேற்ற பழக்க வழக்க வாழ்க்கை மாறுபாடுகள் முதலிய இயற்கை செயற்கை நிலையாமைகளையும், அதனால் வளர்ந்துவந்த திருவருட் பேறுகளாகிய ஞான உண்மைகளையும் நிலையிட்டுக் கண்ட மெய்புணர்வுடையோர். ஆதலால் அவர்கள் திருவுள்ளம், உலகவர்க்கே மெய்வாழ்க்கை பயப்பிக்கும் அருட்பேரமிழ்தமாம் என்க. அஃது ஔவை நல்வழியிற் பின்வருமாறு ஒளிமெருகு பெற்று மிளிரா நிற்கின்றது.

உலகியலும் அருளியலும் :

மக்கள் முதல் எல்லா உயிரினங்களும், உலகத்திற் பிறந்து அதன் இயற்கை நிகழ்ச்சிகளிற் படிந்தே தத்தம் வாழ்க்கை முன்னேற்றங்களை அடைந்துவரக் காண்கின்றனம். ஆதலால், உலகியற்கை என்பது, உயிர்களின் முன்னேற்றத்திற்குரிய நெறியாகவே தோற்றுகின்றது. தோன்றவே, உலகியலும் அருளியலும் தம்முள் ஒற்றுமையும் தொடர்பும் உடையனவென்பதும் இதுகொண்டு துணியப்படும். அருளியலின் மறுவடிவமே உலகியலும் உலகாட்சியும் என்க.

உலகியற்போக்கின் மறைபொருளுண்மை இங்ஙனமாதலின், இந் நுண்பொருளுணர்ந்தோர் அருளியல் முறையாகவே உலகியலையுங் கண்டு ஒழுகிப் பயனுறுவர். அல்லாதார் உலகியலின் அருளியல் தேறாது வெற்று உலகியலாளராய் வீண்படுவர்.

உலகத்தில், உயிர்களின் அறியாமை தேய்ந்து அறிவு துலங்குதற்குப் பசி, காமம் என்னும் இருவகை உந்துதல் இயற்கையில் உள்ளன. இவ் விருவகை உந்துதலாகிய

இயற்கைச் சூழலில் உயிர்கள் அலைக்கப்பட்டுப் பலவேறு வகையாக உலகில் உயிர்வாழ்ந்து வருகின்றன. அப்போது அவ்வுயிர்களின் அறிவும், அவ்வுயிர்களை இயற்கையே பற்றிய அறியாமையும், இறைவன் அருளும் ஒருங்கே கிளர்ந்தெழுந்து தத்தம் ஆற்றல் தோன்ற ஒன்றோடொன்று உரைசி நிற்கின்றன. அந்நிலையில், உயிர்களின் அறிவு மிகுதியாக விளங்காதிருக்குமாயின் அறியாமையிற் சிக்கி உழலும்: மிகுதியாக விளங்கிவிட்டதாயின் அருளிற் றொடர்ந்து மிளிரும். அறியாமையிற் சிக்கியுழலும் நெறியே வெற்று உலகியல் எனவும், அருளிற் றொடர்ந்து மிளிரும் நெறியே அருள் உலகியல் எனவும் நுவலப்படும். உயிர்களின் அறிவு நன்கு விளக்கமுற்று அருளிற் பிறங்குந் திருநெறியே 'அருளியல்' என்னும் பெயர்க்கு முற்றும் உரித்தாகும். ஒளவையார் இங்ஙனம் உலகியலை அருளியலாகக் காணும் நன்னெறியையே 'நல்வழி' எனக் குறியீடு தந்து இச் சிறுபெரு நூலில் நன்கு விளக்கியருளுவர்.

உலகியலின் அடிப்படை யுந்துதல் பசியுங் காமமுமாதலின், அவ் விரண்டையும்பற்றி அம்மையார் தக்க கருத்துக்களையும் நெறிமுறைமைகளையும் இதன்கண் திறமாக வழங்குகின்றனர். காமம் பசிவந்திடப் பறந்துபோம் இயல்பினதாகலின், அதைப்பற்றி இரண்டொரு குறிப்புகளே அவர் தந்து செல்லுதலின், அதனை முதற்கண் விளக்கிக்கொண்டு மேற்செல்லுவோம்.

காமம் என்பது காதல்காமம் எனவும் காமக்காமம் எனவும் இருவகைப்படும். காதற்காமமாவது, ஆண்மை பெண்மையையும் பெண்மை ஆண்மையையும் ஒத்த உள்ளத்துடன் விரும்பி அன்பினால் இன்பமுறுவதாகும். அங்ஙனம் இன்பமுறுவோரோ கணவனும் மனைவியும் எனப்படுவர். இவ் வின்பமுறை முதன்மையாக உயிர்த் தொடர்புடையதாகலின், இது, கணவன் மனைவி என்னும் இருவரது உயிர்வாழ்க்கை வளர்ச்சிக்கும், அவ்விருவர் வழியாகத் தோன்றும் அரும்பெறன் மதலைகளின் உயிர்

வாழ்க்கை வளர்ச்சிக்கும் பெரிதும் ஆக்கமுடையதாய்ப் பயன்படும். ஔவையார் இதனை,

"மடக்கொடி இல்லா மனை பாழ்" (௨௬)

என்று விளக்கியருளினர். இங்ஙனமாகிய காதற்காமத்தின் முதன்மையெல்லாம், கணவன் மனைவியரின் ஒற்றுமைக் கற்பொழுக்க அன்பினில் நிலைபெற்றிருத்தலாலும்; பெண்டிர் மென்னீரராதலின் அவரே தற்காத்துத் தற்கொண்டாரையும் பேணுந் தகையுடையராதலாலும்,

"பெண்ணீர்மை கற்பழியாவாற்றல்
வையகத்துள் அற்புதம்ஆம்" (௧௬)

என உடன்பாட்டால் ஒரு செய்யுளும்,

"பழிக்கஞ்சாத் தாரத்தின் நன்று தனி" (௬௧)

என எதிர்மறையால் ஒரு செய்யுளும் நல்வழியில் வந்து இக் கருத்தைப் பெரிதும் வற்புறுத்தா நின்றன.

இங்ஙனம் உயிர்நேயம் அமையாத நிலையே, காமக் காமம் எனப்பட்டு அவா மிக்கு, வெற்றுடம்பு வாழ்க்கையில் மக்களை நிறுத்திவிடுகின்றது. நாளடைவில், இக் காமக்காமம், 'அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு' ஒத்துப் பரத்தையர் நடமாட்டமாகி, வெறுமைக்கு வித்தாக்கி விடுகின்றது. அம்மையார் இவ் விரங்கத் தகுந்த நிலைமையை, (௨௦)

"இம்மை மறுமைக்கு நன்றன்று"

என இரங்கி அறிவுறுத்தருளுவர். காமக் காமத்துக்கு இடமாகிய நிலை இவ்வளவின் நில்லாது, அயல் மாதர்மேல் மனம் வைத்தலாகிய மிகக் கொடிய தீவினைக்குஞ் சிலரை ஏவுதல் வல்லது. அந்நிலைக்கு ஒருவன் வருகுவானாயின் அவன்,

"நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்"

அடியோடு கெடுதலே நேரும் (௩௬). ஆதலாற், காமத்தின் இயற்கை உந்துதலைக் காதற் காமமாகிய அன்பின் நேயத் தூக்கு இடமாக்கிக்கொண்டு, வாழ்க்கை மாட்சியும் இன்ப

மும் உற்று, அதன் கடைக்கோட் காலே அறம் உணரும் அருளியல் முகமாகச் செல்லுதல், மக்கட்கு இன்றியமை யாததாகும்.

இனிப், பசி என்னும் இயற்கை உந்துதலால் அமை யும் உலகியல் அருளியல் வகைகளைப்பற்றி ஔவையார் கூறுவன அறிந்து இன்புறற்பாலன.

பசிக்குமுன் எவ்வகையான தகுதியும் நிலைக்காது என்பது ஔவைப் பிராட்டியின் கருத்து. மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காமுறுதல் ஆகிய பத்தும் பசிவந்திடப் பறந்துபோம் (உசு) என்று, தகுதிகளைப் பல முகமாக அவர் விளக்கிப், 'பறந்துபோம்' என்னும் ஆற்றல் மிகுந்த மொழியினாலும் முடித்துக் கூறுவதிலிருந்து அது தெரி கின்றது. இந்தப் பசிக்குத் தேவையானது, மிகுதியான தொன்றுமில்லை; ஒரு நாளைக்கு நாழி அரிசி இருந்தால் வெள்ளம். உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் (உஅ). ஆனால், இதற்கு மக்கள் எண்ணுவனவோ கோடி கோடி; சாந்துணையும் சஞ்சலம், இவ்வளவு கவலைக்குங் காரணம், வயிற்றின் ஒத்துழையாமையே என்று பிராட்டியார் சற்று நகைச்சுவையோடு ஒரு செய்யுள் அருளிச்செய்கின்றனர்.

> "ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்;
> இருநாளைக்கு ஏல்என்றால் ஏலாய்;—ஒருநாளும்
> என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே
> உன்னோடு வாழ்தல் அரிது."

என்பது அச் செய்யுள்.

வயிற்றின் கொடுமை இங்ஙனம் இருப்பதனால், மக்கள், உணவின்பொருட்டுப் பலதலையாக முயற்சிகள் செய்கின்றனர். கைப்பொருள் இன்றியமையாததா யிருக் கின்றது. கல்லானே யானாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் (ருச). முயற்சியின் வெற்றி, மென்மை ஆற்றலில் அடங் கிக்கிடப்பது உலகியற்கையாய் இருக்கின்றது. வெட்

டெனவை மெத்தெனவை வெல்லா; வேழத்தில் பட்டு உருவும் கோல், பஞ்சில் பாயாது; நெடிய கடப்பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் (௩௩). இவ் வியல்பறிந்து முயற்சிகளைச் செய்யவேண்டும்.

முயற்சிகளிற் சில, மக்கள் நினைத்த நேரத்திலேயே பயன்படாமற் போதலும் உலகியற்கையாகும். அடியோடு அழிந்தே போதலும் உண்டு. அல்லது முயற்சிகள் தொடங்கின உடனே பயன்கள் எதிர்ந்து பெருகி வருதலும் உண்டு. உலகத்திற் காரணங்கள் பலதலையாக இருத்தலும் இவற்றிற்கு ஏதுவாகும். . முயற்சி செய்வோர் தகுதியாக இருந்தாலும், சூழ உள்ள மக்கள் தகுதியற்றவராக இருத்தலும் நேர்கின்றது. பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு (௩௫). மேலும், இவ் வெல்லாவற்றிற்கும் மேல், மக்களை ஊழின் வழியே நடத்தி உய்விக்கும் இறைவன் திருவுளமும் ஒன்றிருக்கின்றது.

> "ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட்டு ஒன்றாகும்;
> அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
> நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
> எனையாளும் ஈசன் செயல்."

இறைவன் அருளுணர்வோடு முயற்சிகளைச் செய்யின் ஊழின் வலி மெலிந்து, மக்கட்கு நன்மை உண்டாகும். மக்கள் தகுதி என்று ஒன்றை நினைத்துச் செய்வர்; உண்மையில் அது தகுதியற்றதாய் அவர்க்கும் பிறர்க்கும் ஊறு விளைத்தற்குரியதாய் இருத்தலுங் கூடும். அதனால், இறைவன் அருளுணர்வு உடையார்க்கு அவ் வருள் அதனை ஒழித்திட்டு வேறொரு முகமாக அவர் முயற்சிகளைத் திருப்புதல் நேரும். ஆதலால், ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு வேறொன்றாதலை உலகியற்கையிற் காண்கின்றோம்.

இக் காரணங்களெல்லாம் ஒருங்குணர்ந்து, அருளியல் முனைப்புடன் இவ்வுலகியன் முயற்சிகளைச் செய்து வருவார்க்கு எவ்வகையாலேனும் நலமே உண்டாகும் என்பது

ஒருதலையேயாம். அங்ஙனம் அருளியல் முனைப்பிருப்பின், முயற்சிகளின் பயன்மேல் நிரம்பக் கருத்து அழுந்தாமல் முயற்சிகளைத் திருந்தச் செய்வதிலேயே எண்ணம் நிலை பெறும். முயற்சிகள் செய்யும்போதே உலக நுகர்ச்சி களிலும் எண்ணம் மிக அழுந்தாமல், முயற்சிகளிலேயே அது முனைப்புக்கொள்ளும். இதனால், பொருளின் செலவும் வரவும் ஒழுங்குபடும். இன்றேல், மேற்குறித்த இருவகைப் பட்ட மிக்க அவாவினால், தொழிலுக்குத் துவக்கமான முதலிலேயே மிகுதியாகச் செலவாகி, அதனால் மானம் அழிந்து மதிகெட்டு எல்லார்க்கும் கள்ளனாய்த் தீயனாய் நல்லார்க்கும் பொல்லன் ஆகும் மிக இரங்கத்தக்க நிலை வந்துவிடும் (உரு).

உலகியலில் இங்ஙனம் செய்யும் முயற்சிகளில் தலை சிறந்த முயற்சியாக ஔவைப் பிராட்டியார் மதித்து உரைப்பது உழவுதொழின் முயற்சியேயாகும். நமது நாட்டின் இயற்கைக்கும் இது பெரிதும் ஒத்திருக்கின்றது. உழவுதொழின் முயற்சி சிறந்ததென்பதற்கு அவர் கூறுங் காரணம், அஃது என்றும் நிலையான உரிமையுடையது என்பது. வேறு அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் என்கின்றார் ஆதலால்,

> "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு."

என அவர் அருளோடு தெரிந்தெடுத்து அறிவுறுத்தருளுவா ராயினர். இங்ஙனம் 'உழுது வரும் பொருள்களே பொருள்; அதனாற் கொடுக்குங் கொடையே கொடை; அதனாற் பெருகும் பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும் திருவும் வாழ்நாளுமே உயிர் வாழ்க்கை; அதுவே தாமும் பிறரும் பசி தணிந்து விளங்கும் நல்வாழ்வு,' என அம்மை யார் கருதியிருக்கின்றனரென்பது,

> "நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
> பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
> வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கு என்றும்
> தரும்சிவந்த தாமரையாள் தான்."

என விளக்கமாக இயைபுபடுத்தி அவர் அருளிச் செய்வதினின்றுந் தெரிகின்றது.

உலகியலின் அருளியல் இங்ஙனமாக, அவ்வருளியலுக்கு மாறான வெற்று உலகியலாக, மக்கள் ஒரு நாழி அரிசிக்காகச் சேவித்தலும் சென்றிரத்தலுமான முறையல்லா முயற்சிகளைச் செய்து நிலைகுலைந்து நிற்கின்றனர் என்பர்,

"சேவித்தும் சென்றிரந்தும் தெள்நீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டுஇசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்."

என்று ஔவையார் மிக்க உருக்கத்துடன் எடுத்துக்காட்டுகின்றனர். பார் ஆளுதலும் தெள்நீர்க் கடல்கடந்து பொருளீட்டுதலும் உலகப் பொதுநன்மைக்காக வன்றித், தமது வயிற்று வாழ்க்கைக்காக மக்கள் செய்வராயின், அது தவறுடையதென்னும் அரும்பெருங்கருத்தும் இச்செய்யுளாற்பைய வெளிப்படுதல் பெரிதுங் கருத்திருத்தற்பாலதாகும். இங்ஙனம் முறையல்லா முயற்சிகளே பொருந்தாவாயின், சென்றிரந்து பிச்சையெடுத்தலையும், அப் பிச்சைக்கும் மூத்த குடிவாழ்க்கையாகிய இச்சகம் பேசி உயிர் பிழைத்தலையும், மன்றில் ஓரஞ் சொல்லி உயிர்வாழ்தலையும் ஔவையார் எங்ஙனம் ஒப்புக்கொள்வர்? அதனால் அவர்,

"சிச்சீ! வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும்."

என வருந்தியும்,

"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றுஓரம் சொன்னார் மனை."

என வெறுத்தும் உரைப்பாராயினர்.

ஆதலால், உயிர்களின் அறிவு அன்பு முதலியவற்றின் விளக்கத்துக்கு ஏதுவாக இயற்கையில் அமைந்த பசி காமம்

என்னும் உலகியல் உந்துதலை, அவ்வுயிர்களில் உயர்ந்தோரெனப்படுவோரான மக்களேனும் தக்காங்கு பயன்படுத்திக்கொண்டு அருளியல் நெறியினராய் வாழ்வு ஓங்கிச் சிறத்தல்வேண்டும் என்பது, இவ்வாற்றால் இனிது விளங்காநிற்கின்றதென்க.

திருநெறி :

அருளியல் நெறிக்கு மாறுகாது இங்ஙனம் உலகியல் வாழ்க்கை நடத்த, நடத்த,மேன்மேலும் வாழ்க்கை எளிமையுடையதாய்ப் பேரின்ப ஊறலுடையதாய் உலக நிலையாமை அறிந்து, பற்றற்றுத், தெளிந்து, அவா நீங்கிப், பேராவியற்கையில் மிளிரும். ஆசிரியர் திருவள்ளுவர், தாம் வகுத்த அறத்துப் பாலில் 'ஞானம்' என்னும் பகுதியில் நிலையாமையும் துறவும் மெய்யுணர்வும் அவாவறுத்தலும் பற்றி முறையே அறிவுறுத்தி யிருத்தலைப்போல, ஔவைப் பிராட்டியாரும், நிலையாமை உணர்ந்து துறவு கொள்ளுதலை,

"எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினால் ஆங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு."

என்னும் அருமைத் திருச்செய்யுளிலும், மெய்யுணர்வு நிலையினை,

"நன்றென்றும் தீதென்றும் நான்என்றும் தான்என்றும்
அன்றென்றும் ஆம்என்றும் ஆகாதே—நின்றநிலை
தான்அதுஆம் தத்துவமாம்; சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்."

என்னும் மிக நுட்பமான திருச்செய்யுளிலும் அவாவறுத்தலை,

"முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒருபொருளைத்
தப்பாமே தன்னுட் பெறானாயின்—செப்பும்
கலையளவே யாகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமாம் மூப்பு."

என்னும் அரும் பெறற் றிருச்செய்யுளிலும் நன்கமைத்து விளக்கியிருக்கின்றனர்.

இச் செய்யுட்களில் அமைந்துள்ள கருத்தழகுகள் வாழ்க்கைக்கே வற்றாத் திருப் பெருகும் ஞான ஊற்றுக்களாகும். உலகம், அருளும் பொருளுங் கலந்து உயிர்களின் உயிர் வாழ்க்கைக்கு ஏற்ற கருவியாய் இருந்து வருகின்றது. உடம்பும் ஒரு சிறிய உலகமே என்பது பொருந்தும். ஊனுடம்பும் மண்ணுலகும் என்னும் இவ்வுலகப் பகுதிகளெல்லாம், அருள் பொருள் என்னும் இருவகைப் பகுப்பிற் பிரிவுண்டு இயங்கிச் செல்லுதலை மக்கள் தெளிவாக அறிந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ளுதல் இன்றியமையாததா யிருக்கின்றது. பொருள் என்பது பண்டங்கள்; அருள் என்பது அப் பண்டங்கள் உயிர்களின் வாழ்க்கைக்காக இயங்கி மேற்கொள்ளும் இயலுண்மை அறிவின்பத் தகுதிகள்.

பண்டமென்பது கருவி; அதன்கண் விளங்குந் தகுதியென்பது, பயன் விளைக்குங் காரணம். உலகத்தின் ஒவ்வொரு கூறிலும் இக் கருவிப் பொருளும் தகுதிப்பாடும் அமைந்துள்ளன. பொருளையும் அருளையும் இங்ஙனம் பகுத்தறிந்து, பொருளியல்புகளில் உள்ளம் அழுந்தாமல், அவற்றின் அருளியல்புகளில் உள்ளம் அழுந்தி நிற்றல் வாய்க்குமாயின், அந்நிலை உயர்ந்த நிலையாய்ப், பேரின்பம் பயப்பதற்கு ஏதுவாயிருக்கும்.

பொருள்கள் நிலையாயிருப்பன அல்ல; அருள் அங்ஙனமன்று; பொருள் அழியினும், அதனில் அமைந்த தகுதிப்பாடு என்னும் அருள் என்றும் அழியாதிருப்பதொன்றாகும்.

ஆசிரியர் திருவள்ளுவர், திருக்குறள் என்னும் ஓர் அரிய நூலினை இயற்றியிருக்கின்றார். நூல் என்னும் அத்தகுதிப்பாடு, அஃதாவது அவ் வாசிரியரது அருட்டிறம், அழியாதது; ஆனால், அத் தகுதியினைத் தன்கட் கொண்டு எல்லாரும் எடுக்கவும் பிடிக்கவும் பயன்படுத்தவும் உதவும். ஏட்டுப்படிகளோ அவ்வப்போதும் அழிந்துபோம் இயல்பினவாயிருக்கின்றன. ஏட்டுப்படிகள் என்பது பண்டம். அவற்றில் அமைந்த நூல் என்பது இயலுண்மைஅறிவின்பத்

தகுதியாகும். பண்டம் என்பது பொருள்; அதாவது கருவி, தகுதி என்பது அருள்; அதாவது இன்பப் பயன் நல்கும் காரணம். ஆதலால், திருக்குறள் நூலைக் கையிலெடுத்தால், அதில் ஏடு என்னும் பொருளும், நூல் என்னும் அருளும் ஒருங்கு கலந்து, நமது வாழ்க்கைக்கு உற்ற கருவியாய், அது விளங்குதலைக் காணலாம். அங்ஙனமே இவ்வுலகமும், பொருளும் அருளும் கலந்துள்ள கருவியாக, நுணுகி நோக்கி உணர்ந்துகொள்ளப்படும்.

மண் நீர் முதலிய பொருள்களும் திண்மை, சுவை முதலிய அவற்றின் இயல்புகளும் முறையே பொருளும் பொருளியல்புகளும் எனப்படும். அவை அழிந்து நிலை மாறுவன. அவற்றிற் படிந்திருக்கும் இறைவனுடைய ஆற்றலும், அந்த ஆற்றலால் அவற்றின்கண் உண்டாகும் ஒழுங்கான அமைப்பியல்புகள், இயக்கமுறைமைகள், கவர்ச்சித் திறங்கள் முதலியனவும் முறையே அருளும் அருளியல்புகளும் எனப்படும். இவை அழியாது நிலை பெற்றிருப்பனவாகும்.

பொருளிலும், பொருளியல்புகளிலும் எண்ணம் வைத்து ஒழுகுவது 'பற்று' எனப்படும். அதனைத் தீயது என்று ஆன்றோர் ஒதுக்குவர். இனி, அப் பொருளும் பொருளியல்புகளும் நிலையாதன என்று அவற்றின் நிலையாமை யுணர்ந்து, அப்பொருள் பொருளியல்புகளூடு விளங்குகின்ற அருள் அருளியல்புகளில் நாட்டம் வைத்து, அப்பொருள் பொருளியல்புகளிற் பற்றுவிடுதலே துறவு எனப்படும். அருள் அருளியல்புகளில் நாட்டமில்லாத போது, பொருள் பொருளியல்புகளிற் பற்று நீங்காது.

இவ்வுண்மையை விளக்குதற்கே நாயனார்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

எனத் தெளிவாக ஒரு திருக்குறள் அருளிச்செய்திருக்கின்றனர். இதன்கண், அப் பெருநாவலர், 'ஆண்டவனது பற்றைப் பற்றுக; பொருள்களின் பற்றை விடுவதற்கு'

என்று அருளிச்செய்திருக்கின்றனரே யல்லாமல் 'ஆண்டவனையே பற்றிக்கொள்க' என்றாவது, 'பொருள்களையே விட்டுவிடுக' என்றாவது கட்டளையிடவில்லை. 'பற்றற்றான் பற்றினை' என்னும்போது 'பற்றினை' என்றது, அவன் அருளை என்னும் பொருட்டு. 'அப் பற்றினைப் பற்றுக' என்னும்போது, 'அப் பற்றினை' என்றது அந்த அருள், உலகத்திற் கலந்து தாக்கற்று இயங்குகின்ற முறைமையினை என்னும்பொருட்டு. 'இறைவன் உலகுயிர்களோடு கலந்திருந்தும், அவற்றாற் சிறிதுந் தாக்குதலின்றி எங்ஙனம் விடுதலையாய் விளங்குகின்றானோ அம் முறைமையைப் பற்றுக பற்று விடற்கு' என்பது பொருள்.

பொருள்களையே துறந்துவிட்டால் பொருள்களிலிருந்து அருட்பயன் கொள்ளல் இயலாது; துறவென்பது அஃதன்று. பொருள்களைத் துறவாமல் அருட்பயன் கருதி அவற்றை நன்முகமாக இயக்கிக்கொண்டு, ஆனால், அப் பொருள்களின் நிலையாமையும் தீதுங் கருதி அவற்றிற் பற்று நீங்கியொழுகுதலே துறவு என்பதாகும். உண்மை இங்ஙனமெல்லாம் இருத்தலால், இதனை விளக்கும்பொருட்டு 'உள்ளத் துறவு' எனவும், மெய்த்துறவு எனவும், 'உள்ளந் துறந்தோன் சதகோடி மடங்கு உயர்ந்தோன்' எனவும் ஆன்றோர் அங்கங்கும் பேசுவாராயினர். ஔவைச் செல்வியார் இவ்வியல்புகளையெல்லாம் நன்கு தேற்றி நிலையாமையையுந் துறவையுந் தெளிய அறிவுறுத்தும்பொருட்டே, 'எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு, பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை, நல்லார், அறிந்திருப்பாராதலினால் ஆங்கமல நீர் போல், பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு' என்னுந் திருவெண்பாவினை அருளிச் செய்தனர். 'புன்குரம்பை' என்றதனால் நிலையாமையும், 'பொல்லாப் புழுமலிநோய்க் குரம்பை' என்றதனால், அங்ஙனம் நிலையாமை உண்டாவதற்குரிய தீய இயல்பும் புலப்படுத்தினார். உடம்பு முதலிய உலகியற் பொருள்கள் இங்ஙனம் நிலையாமை யுடையவாதலை நல்லோர் அறிந்திருப்பாராதலினால், அவர் அவற்றின்

அருட்பயன் கருதித் தொடர்புகொண்டிருந்தனராயினும், அவற்றிற் பற்று நீங்கித் துறவொழுக்க முடையவராகவே இருப்பர் என்பதற்கு, நீர் தாமரை யிலையோடு கூடியிருப்பினும் இலையோடு ஒட்டாமல் அது பிறிதுபட்டிருப்பது போலவே இவரும் பிறிதுபட்டிருப்பர் என்னும் பொருள் தோன்றக் 'கமலநீர்போற் பிறிந்திருப்பர்' எனவும், பொருளைத் துறவாது அவற்றின் பற்றைத் துறத்தல் என்னும் இவ் உள்ளொழுக்கம் புறத்தே விளக்கித் தெரிவதன்று, தெரியவேண்டுவதும் அன்றாதலின், இத்தகைய உள்ளத் துறவின் மேன்மை புலப்படும்படி, 'பேசார் பிறர்க்கு' எனவும் அருளிச்செய்து துறவியல்பினையும் அவர் நன்கு தெருட்டினார்.

இனிப், பொருள்களினும் பொருளியல்புகளினும் உள்ளத் துறவு நேர்ந்தது, ஆண்டவன்றன் அருளின் நாட்டத்தாலாதலின், அவ்வருளின் இயல்பைத் தெளிய உணர்ந்து நிற்றல் மெய்யுணர்வு எனப்படும். இதனியல்பினைப் பிராட்டியார் 'நன்றென்றும் தீதென்றும் நான் என்றும், தான் என்றும் அன்றென்றும் ஆம் என்றும் ஆகாதே நின்றநிலைதான் அது ஆம் தத்துவம்' என்று மிகவும் நுட்பதிட்பமாக அருளிச்செய்திருக்கின்றார். கடைந்தெடுத்துக் காட்டுவதுபோல, இச்செய்யுட் கருத்து விழுப்பந்தோன்ற அமைந்துள்ளது.

இறைவன் திருவருள் என்பது, உடம்பு உலகம் என்னும் அறியாமைப் பொருள்களில் மட்டுங் கலந்திருப்பதென்பதில்லை. சிறிது அறிவு உடைய உயிர்ப்பொருள்களிலுங் கலந்து தனது அருளியல்பைப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது. திருவருள் யாண்டுங் கலந்து விளங்குவதேயாயினும், உயிர்களிடத்திற் பின்னும் முனைப்புடன் விளங்கித் தெரிகின்றது. அறியாமையும் அழுக்கும் மிக்க உயிரில்லாப் பொருள்களைவிடச், சிற்றளவேனும் அறிவும் அன்பும் உடைய உயிர்ப்பொருள்களில் ஆண்டவன் முனைந்து விளங்குவன் என்பதே பொருத்தமாகவும் இருக்கின்றது. ஆதலால், ஆண்டவனைக் காண விரும்பு

வோர் மெய்யன்பு மிக்க அடியார்களின் வாயிலாகக் கண்டு வழிபடுவதே எளிய வழியென்று அறிதல்வேண்டும்.

இவ்வுண்மையினைத் தெளிய விளக்க விரும்பிய திருவெண்காடர் என்னும் பட்டினத்தடிகள்,

"சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற ஆகாயந் தன்னிலும் ஆய்ந்து விட்டோர்
இல்லிலும் அன்ப ரிடத்திலும் ஈசன் இருக்குமிடம்;
கல்லிலும் செம்பிலு மோஇருப்பான் எங்கள் கண்ணுதலே."

என்று அருளிச்செய்தனர். இந்த அருளுரையில், 'விட்டோர் இல்லிலும்' என்றது, 'பற்றுவிட்ட ஞானிகளின் இதயத்திலும்' என்னும் பொருட்டு.

ஆதலால், மெய்யன்பர்களான ஞானிகள் தம் உள்ளத்திலேயே இறைவன் அறிவு அன்பு வடிவமாக முனைத்து விளங்குதல் கண்டு, அவன் வழியராய் ஒழுகி, ஆற்றலுற்றும் இன்பமுற்றும் நிற்பர். இறைவனுடைய பேரறிவு பேரன்பு பேருளே, தம்முடைய சிற்றறிவு சிற்றன்பு முதலியவற்றை விழுங்கி, அதாவது அச்சிற்றறிவு முதலியவற்றின் முனைப்பை அடக்கிக்கொண்டு விளங்குதலை ஞானிகள் உணர்வர்.

தமக்கு அகத்தில் இங்ஙனம் இறைவனது அருள் தோன்றுதலைப்போலவே, தமக்குப் புறத்திலுள்ள உயிரில்லாப் பொருள்களிலும் அவ்வருள் யாண்டுங் கலந்து தோன்றுதலையும், அவ் வருளுக்குமுன் ஏனை எவ்வியல்பும் நிலையற்று அடங்கி ஒன்றிப்போக அவ்வருள் ஒன்றே நன்கு விளங்கி இயங்குதலையும் அவர் கண்டு இன்புறுவர். இந் நிலையினை அருட்பெருஞ் செல்வராகிய தாயுமான அடிகள்,

"பார்க்குமிடம் எங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண னந்தமே."

என்று தெளிவாக விளக்கியருளினர்.

உலகத்தில் இங்ஙனம் உயிரில்லாத பொருள்களெல்லாம் நிலையில்லாதனவாய், உயிர்களெல்லாம் தம் முனைப்பு

அடங்கினவாய்த் தாம் இருக்குமிடம் தெரியாமல் ஆற்றல் மடங்கி ஒன்றிப்போக, இறைவன் திருவருள் ஒன்றே எப் பொருள்களிலும் எவ்வுயிர்களிலும் அவற்றின் உள்ளும் புறம்பும் கலந்து, தான் ஒன்றேயாய் முனைத்து, உள்ள பொருளாக விளங்கித் தோன்றி, எஞ்ஞான்றும் அறிவும் இன்பமும் விளைத்து உதவிபுரிந்து வருதலை நாம் காண் கின்றோம். பிற்காலத்துச் சான்றோரான இராமலிங்க அடிகள், யாண்டும் முனைத்து விளங்கித் தானொன்றே உள்ளதாய், அறிவின்ப வடிவமாய்த் தோன்றும் இவ் வருளியல்பினை,

> "எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
> இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
> மெய்ப்பொருளாம் சிவம்"

என்று தெள்ளிய நல்ல தமிழில் விளக்கமாக எடுத்துக் காட்டியருளுவர்.

ஆதலால், 'உள்ளது' 'இருந்த இருப்பு' 'நின்ற நிலை' என்று, இயல்பாக முனைத்து விளங்கித் தெரியுந் தன்மை யினைப் பாராட்டிப், பற்பல வகையாகக் கூறப்படுவதெல் லாம், அம் மெய்ப்பொருளாகிய சிவத்திருவருள் ஒன் றையே என்க.

இறைவன் இங்ஙனம் உலகத்தில் அகத்தும் புறத்தும் யாண்டும் முனைத்து விளங்கிநிற்றலால், அவனைத் தேடிக் கொண்டு யாரும் எங்குஞ் செல்ல வேண்டுவதில்லை. பொரு ளியல்பாகிய உலகியல்பை மறந்து தம்முள்ளும் புறத்தும் விளங்கும் அருளியல்பாகிய இறைவன் விளக்கத்தில் இருந்தபடியே படிந்திருத்தலே, உள்ளதாகிய அவ் வறி வின்பப் பொருளை உணரும் முறையாகும். 'நின்ற நிலையி லேயேதான் அது ஆகும் தத்துவம்' இது. சங்க காலத்து மெய்ஞ்ஞானப் பெருஞ்செல்வராகிய திருவள்ளுவப் பெருந்தகையார், 'மெய்யுணர்வு' என்னும் அதிகாரத்தில்,

> "ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
> பேர்த்து உள்ள வேண்டா பிறப்பு"

என்று மிகச் சிறப்பாக இதனைத் திருவாய்மலர்ந்தருளுவா ராயினர்.

பரிமேலழகர் இத் திருக்குறளின் உரையில் 'உள்ளது' என்பதற்கு 'முதற்பொருள்' என்று உரைத்து, 'முதற் பொருளாகிய அவ்விறைவனை ஒருவன் உள்ளம் உணருமாயின் அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா,' என விளக்கிச் செல்லுவர். உரையாசிரியர் இறைவனை முதற்பொருள் என்று விதந்து விளக்குதலால், ஏனை உயிர் களும் உலகும் உள்ள பொருள்களேயாயினும் அவை இரண்டாம் படியாகக் கருதப்படுமே யல்லது முதற்பொரு ளென்று முதற்படியாகக் கருதப்படா என்பதும் அறியப் படும். ஆதலால், உள்ளது என்று சிறந்தெடுத்துப் பேசு வதற்கும், உணர்வதற்கும் சிறப்பாக உள்ளது, சிவத் திரு வருள் ஒன்றேயாகும். நாயனர் இதன் அடுத்த குறளிலும் இவ் வுண்மையினைச்,

"சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு"

எனக் கிளந்தோதி விளக்கிச் செல்வர். இங்ஙனம் உள்ள தெனப்படும் முதற்பொருளாகிய இறைவனது திருவருள் விளக்கத்தில் உயிர்கள் அன்பினல் தம் முனைப்பு முற்றும் அடங்கி யொன்றி அதுவாகும் இயல்பினைப், பெருநாவலர் இவ் வதிகாரம் முழுமையும், 'பொருளுணர்வு' 'மாசறு காட்சி' 'தெளிவு' 'மெய்யுணர்வு' 'மெய்ப்பொருள் காண் பது' 'கற்றுணர்வது' 'உள்ளதுணர்வது', 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பது' 'சார்புணர்ந்து ஒழுகுவது' எனப் பற்பல வகையாகத் தெளித்துரைத்து, மேலுமேலுந் தெளிவு உண்டாக விளக்கிச் செல்வர்.

இங்ஙனம், நின்ற நிலையே தான் அதுவாகி நிற்கும் உணர்விறந்த மெய்ந்நிலையில், தான் என்னும் நினைவும் அது என்னும் நினைவும், உலகு என்னும் நினைவும், அது நீது என்னும் நினைவும், பிறவும் உண்டாக இடமேது? சுட் டிறந்து இயல்பாக நிற்கும் அருளின்ப நிலையன்றோ அது!

பேராவியற்கையாகிய இப் பெரு நிலையில், ஆண்டு விளங்கும் அருளின்பப் பெருக்கினை வடலூர் வள்ளலார்,

“ தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந்து ஓங்கியெலாம் தானே யாகிச்
சிற்போதத்து அகம்புறமுங் கோத்து நின்ற
சிவாநந்தப் பெருக்கேஎன் செல்வத் தேவே”

எனவும் தாயுமானர்,

“காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பி
ஏக வுருவாய்க் கிடக்கு தந்தோ”

எனவும் எவ்வளவு நிறைவாக, எவ்வளவு தெள்ளத் தெளிவாகத், திரட்டியெடுத்து வழங்கி யிருக்கின்றனர் ! இங்ஙனம் ‘ஏக வுருவாய்த்’ தேக்குற்றிருக்கும் பெருநிலையில், ‘நன்றென்றும் தீதென்றும் நானென்றும் தானென்றும் அன்றென்றும் ஆம் என்றும்’ சுட்டி நிற்கின்ற வேறுபாட்டு நிலை சிறிதேனுந் தலையெடுக்குமா ? ஆகாதன்றே ! அங்ஙனம் ஆகாதே நின்றநிலை, தான் அது ஆகும் தத்துவம் ஆகின்றது.

மெய்ஞ்ஞானப் பெருஞ் செல்வியாரான ஒளவைப் பிராட்டியார் இங்ஙனம், மெய்யுணர்வு நுவலும் முற்செய்யுளில், ‘தான் அது ஆம் தத்துவப்’ என்னும் ஒருமொழியுண்மையினை நன்கு விளக்கி, இரண்டறக் கலந்து நிற்றலாகிய, ‘அத்துவித முத்தி’நிலை தேற்றியிருப்பதும், தன்னுள்ளேயே இறைவனைக் கண்டு கலந்திருத்தலாகிய இயற்கைக் காட்சியினைச் ‘சம்பறுத்தார் யாக்கைக்குப் போனவா தேடும் பொருள்,’ என்னும் உவமை முகத்தால் விளக்கித் துணிவுறுத்தியிருப்பதும் பெரிதும் ஆழ்ந்தறிந்து உண்மை தெளிதற்குரியனவாகும். சம்பு என்பது ஒருவகைப் புல்; தனக்கு வேருகக் கடவுளைத் தேடுவதென்பது, அப் புல்லை அறுத்தவர்கள் அதனைக் கட்டுதற்கு அதனையே கயிருகப் பயன்படுத்திக் கொள்ளமாட்டாது வேறு கயிறு தேடிப் போனதுபோலும் என்பது அவ்வுவமையின் பொருளாகும்.

"தேடிக் கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்"

என்று அப்பரடிகள் அருளிச் செய்திருத்தலும் இங்கு நினைவு கூரற்குரியது.

விதியும் மதியும் :

திருநெறி உண்மையை மேற்காட்டியவாறு நன்கு விளக்கித் தெளிவுறுத்திய ஔவையார், வாழ்க்கையில் அங்ஙனம் உறுதிகொண்டு ஒழுகுமிடத்து மக்கட்கு இயல்பாக உண்டாதற்குரிய ஓர் அரிய ஐயத்தினையும் அறத் தீர்த்துவைத்துப் பேருதவி புரிந்திருக்கின்றனர்.

வாழ்க்கை ஊழின்வழியே நடைபெறும் இயல்பினதென்பதை ஔவையார், 'புண்ணியமாம் பாவம்போம்' 'எண்ணியொரு கருமம்' 'வருந்தி யழைத்தாலும்' 'உள்ள தொழிய' 'ஈட்டும் பொருண்முயற்சி' 'ஆவாரை யாரே' 'தாந்தாம் முன் செய்தவினை' 'வினைப்பயனை வெல்வதற்கு' என்னும் முதற் குறிப்புடைய செய்யுட்கள் பலவற்றால் தெளிய அறிவுறுத்தியருளுவர். இங்ஙனம் அருளியவர் இந்த ஊழை நல்லூழாக அமைத்துக்கொள்ளுதற்கேற்ற ஓர் இனிய வழியையும் 'சாதி இரண்டொழிய' 'இடும்பைக் கிடும்பை' 'ஆற்றுப் பெருக்கற்று' 'ஆண்டாண்டுதோறும்' 'செய்தீவினை யிருக்க' 'பெற்றார் பிறந்தார்' 'பாடு பட்டுத் தேடி' 'மரம் பழுத்தால் வௌவாலை' 'ஆறிடுமேடு மடுவும் போல்' என்னும் முதற் றலைப்புடைய செய்யுட்களாற் பற்பல வகையாக நன்கு வலியுறுத்திக் காட்டுகின்றனர். அவ் வழியாவது, இயன்ற உதவியைப் பிறர்க்கு அவ்வப் போதுஞ் செய்துவருதலே யாகும், இங்ஙனஞ் செய்து வந்தால் ஊழ் நல்லூழ் ஆகும்.

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ இருநிதியம்—வையத்து
அறம்பாவம் என்ன அறிந்து அன்றிடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்"

என்னும் உண்மைச் செய்யுளில் ஆசிரியர் இக்கருத்தை ஓர் எளிய உவமையின் வாயிலாக வெளிப்படுத்தி யிருக்கின்றனர். கொடையைப்பற்றி நுவன்ற மேற் செய்யுட்கள் பலவற்றிலும், 'உண்மை நூலில் உள்ளபடி, உலகத்தில் ஒருவர்க்கு ஒன்று உதவினவரே உயர்குலத்தார்;' 'நல்கூர்ந்தாராலும் இல்லையென மாட்டாராதலின், அவரே நல்ல குடிப் பிறந்தார்;' 'அவர்க்கே உலகத்தார் உற்றார்' 'இத்தகைய கொடைப் பண்பின் காரணமாகவே உள்ளத்தில் தூய தன்மை ஓங்கி விளங்கும்;' 'இம் முறைமையால் வீடுபேறும் கிடைக்கும்;' எனக் காரணகாரிய முறைமையுடன் சிறந்த கருத்துக்களையெல்லாம் பிராட்டியார் அருளிச் செய்திருக்கின்றனர். தூய தன்மை ஓங்கி விளங்குதலும், வீடுபேறு கிடைத்தலுமாகிய உண்மைகள்,

> "......................சோறுஇடும்
> தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
> உள்நீரும் வீறும் உயர்ந்து

எனவும்,

> "......................இடும் கடுக
> உண்டாயின் உண்டாகும் ஊழிற்பெருவலிநோய்
> விண்டாரைக் கொண்டாடும் வீடு"

எனவும் அவர் அருளிச்செய்துள்ளவாற்றால் உணர்ந்து கொள்ளப்படும்.

இங்ஙனம் விதியைத் தம் மதிவலத்தால் நன்முகமாகத் திருப்பிக்கொண்டு வெற்றியுடன் வாழும் உரிமை, மக்கட்குத் திண்ணமாக உண்டு. அருளியல் உணர்வுடையோர்க்கு அஃது எளிது என்னும் பெருந்துணிபினை ஒளவைப் பெருமாட்டியார்,

> "வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
> அனைத்தாய நூலகத்தும் இல்லை :—நினைப்பதெனக்
> கண்ணுறுவ தல்லால் கவலைபடேல் நெஞ்சேமெய்
> விண்ணுறுவார்க்கு இல்லை விதி"

என ஓர் அரிய செய்யுளில் தெளிவாக விளக்கியருளுகின்றமை பெரிதுங் கருத்திருத்தற்பாலதாகும். அருளியல்

உணர்வுடையோர்க்கு அஃதிங்ஙனம் எளிதாதலின், அதற் கேற்ற நெறிமுறைமையில் நிற்றற்குரிய முடிந்த வாயிலினை யும் வகுத்துரைக்க விரும்பிய அம்மையார்,

> "சிவாயநம என்று சிந்தித் திருப்பார்க்கு
> அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
> இதுவே மதியாதும் . அல்லாத வெல்லாம்
> விதியே மதியாய் விடும்"

என இறுதியாக ஓர் அரும்பெறல் அருட்செய்யுளினையும் வழங்கியருளி, மக்களினத்தை உரிய தெளிவின்கண் நிறுத்தி உய்விக்கின்றனர். இதன்கண், 'இதுவே மதி யாகும்;' இன்றேல், 'விதியே மதியாய் விடும்' எனத் தீர்ந்த அறிவிப்பினை முன்னறிந்து அறிவித்திருக்கும் மாட்சி உலகுக்கு ஓர் அரும்பெரும் உய்வொளிச் செல்வமாகும் என்க.

கழக வெளியீடு - ௬௫௬

அதிவீரராமர்

அறநெறி

*

கழகப் புலவர்
திரு தி. சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள்
(இளவழகனார்)
எழுதியது

*

: திருநெல்வேலி, தென்னிந்திய :
: சைவசித்தாந்த :
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

First Edition :: 1941
Second Edition :: 1946

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TIRUNELVELI & MADRAS

Paper Issue Card No. MS. 95-B (1100—12-11-46)

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS

பதிப்புரை

நூல்களோடு பழகுதல் நாகரிகத்தின் ஒரு தனிப் பண்பு. ஆசிரியர்களின் திருந்திய அறிவு நலமே நூல்களின் உருவம். ஆதலால், ஆசிரியர்களோடு பழகுதலினும் அவர்கள் இயற்றிய அழகு நூல்களோடு பழகுதல் சுவை விஞ்சிய இன்பம் நுகர்வதற்கு ஏதுவாகும். நூல்களோடு பழகுவதற்கு இவ்வுயர்வு இருப்பதனால், உயர்ந்ததை உவமமாகக் கூறும் மரபுபற்றி ஆசிரியர் திருவள்ளுவரும், பண்புடையாளரோடு பழகுவதற்கு நூற்பழக்கத்தை உவமை கூறினார். "நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்பது அப்பெரு நாவலர் அருளிய பொய்யாத தனிமொழி.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் ஔவையார் நீதி நூல்களை ஓரளவு ஆழ்ந்து ஆராய்ந்து 'ஔவையார் திருவுள்ளம்' என ஓர் ஆய்வு நூலைக் கழகம் சின்னாட்களுக்கு முன்பு வெளியிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அவ் வரிசையின் அடுத்த மலராக 'அதிவீரராமர் அறநெறி' என்னும் இவ் விளக்க நூலையும் தமிழ் மக்கள்முன் பேரன்புடன் இப்போது வெளியிட்டுத் தருகின்றது. கழகப் புலவர் இளவழகனாரவர்களே இதனையுங் கூர்ந்து கருதி எழுதியிருக்கின்றார்கள்.

கல்லூரி ஆசிரியர்களும் நாட்டு நன்மக்களும் இந்நூல் வரிசையினையும் வாங்கிப் போற்றுவதோடு நெடுகப் பரவச்செய்தும் மேன்மேல் தமிழ்த் தொண்டுகட்கு ஆக்கமளித்து வருவார்களென்று மிகவும் நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

அதிவீரராம பாண்டியர்

இயற்றிய

நறுந்தொகை

கடவுள் வணக்கம்

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

குரு வணக்கம்

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

நூற்பயன்

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னாற்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

வாழ்த்து

வாழிய நலனே வாழிய நலனே.

"பிரணவப் பொருளாம் - 'ஓம்' என்னும் மூல ஒலியின் பொருளாகிய. சரண - திருவடியாகிய. அற்புத - வியப்புமிக்க.

கொற்கை யாளி - கொற்கை நகரை ஆளுவோனாகிய. புகல் - சொல்லிய. நற்றமிழ் தெரிந்த - நல்ல தமிழில் விளக்கமுற்ற. நறுந் தொகைதன்னால் - நறுந்தொகை என்னும் இந்நூலினால்.

நூல்

க. அழகியல்பு

க கல்விக் கழகு கசடற மொழிதல்.

உ செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

ங வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.

ச மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.

ரு வணிகர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்.

சா உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.

எ மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.

அ தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.

கூ உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.

க0 பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.

கக குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.

கஉ விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.

கங அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.

கச வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

உ. பயனியல்பு

கரு தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.

க. கசடு அற - கேட்பவர்க்கு ஐயம் நீங்கும்படி.

உ. செழுங் கிளை - மிக்க சுற்றங்களை.

ரு. வளர்பொருள்-மேன்மேற் பெருகுதற்குரியசெல்வங்கள்.

அ. தந்திரி - படைத்தலைவன். தறுகண் ஆண்மை - பிறர் அஞ்சுதற்குரிய தன்மைவாய்ந்த ஆண்மையுடைமையாகும்.

கரு. தேம்படு - இனிமை பொருந்திய. திரள் - திரண்ட.

கசு தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

கஎ பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.

கஅ சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

கசு பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.

உ0 உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.

உக கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

௩. நல்லிணக்கம்

உஉ அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.

உ௩ சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது.

உச அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது.

உரு புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.

உசு கலக்கினுந் தண்கடல் சேறா காது.

உஎ அடினும்பால் பெய்துகைப் பறாதுபேய்ச் சுரைக்காய்.

உஅ ஊட்டினும் பல்விரை உள்ளிகம ழாதே.

உசு பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே.

கசு. பெற்றோர் என்றது, பெற்றெடுத்த பிள்ளைகளை.

உக. கொண்டோர்-மணஞ்செய்துகொள்ளப்பட்ட மனைவியர்.

உஉ. அடினும் - காய்ச்சினாலும்.

உரு. கார் அகில் - கரிய அகிற்கட்டை.

உஎ. கைப்பு அறாது - கசப்பு நீங்காது.

உஅ. ஊட்டினும் பல்விரை - பலநறுமணங்களைக் கலந்தாலும்.

௩௰ சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.

௩௧ சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியார் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

௩௨ நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

௩௩ ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

௪. கல்விநலன்

௩௪ கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

௩௫ கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

௩௬ நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.

௩௭ எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்.

௩௮ அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

௩௯ அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.

---

௩௯. உள் அடக்கி - உள்ளத்திற்கொண்டு. கொச்சை - வெற்றுப் பேச்சுக்களையுடைய. எச்சம் அற்று - குழந்தைகள் இல்லாமல். ஏமாந்து இருக்கை - பிற இன்பங்களிற் களித்திருத்தல்.

ரு. இயற்கை நிலை

சo யானைக் கில்லை தானமும் தருமமும்.
சக பூனைக் கில்லை தவமும் தயையும்.
சஉ ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
சங சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
சச முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.
சரு அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
சசா நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
சஎ கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

சா. செல்வ நிலையாமை

சஅ உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

சகூ குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.

ருo சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.

ருக அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.

ருஉ குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

சச. நீத்தும் - வெள்ளமும். நிலையும் - நிலைகொள்ளும் மேல் நீரும்.

ருo. சிறப்பும் - தலைமைப்பாடும். அறக் கூழ்ச் சாலை - அறத்திற்கு உணவு இடும் இடம்.

ருஉ. இரு நிதியை - பெருஞ் செல்வத்தை.

௫௩ எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாயினும் ஆகும்.

௫௪ பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருங் கூடி
நெற்பொலி நெடுநக ராயினும் ஆகும்.

௫௫ மணவணி யணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி யணிந்துதன் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

௫௬ இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.

௫௭ இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

௫௮ நல்ல ஞாலமும் வானமும் பெரினும்
எல்லாம் இல்லை இல்லில் லோர்க்கே.

௭. வீர வுணர்வு

௫௯ தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

---

௫௩. கால் சாய்ந்து உக்கு - அடிசாய்ந்து சிதறி.

௫௪. பெற்றமும் - மாடுகளும். அப் பாழ் - அப் பாழ் இடம். பொற்றொடி - பொன்னால் ஆகிய வளையலையுடைய. நெல் பொலி - நெற்களஞ்சியம் விளங்கும்.

௫௫. மணவணி - மணக்கோலம். ஆங்கே - அப்பொழுதே. தழீஇ - தழுவி. கோடி - இங்கே, பிணக்கோலத்தில் அணியும் புத்தாடை.

௫௮. இல் இல்லோர்க்கு - மனைவியை இல்லாதவர்க்கு.

௫௯. சிறு கண் - சிறிய கணுக்களையுடைய.

சுO குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.

சுக ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரைபாம் பிற்கு மிகவஞ் சும்மே.

சுஉ கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.

சுஙு சான்றோ ரில்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

அ. பதர்த் தன்மை

சுச காலையும் மாலையும் நான்மறை ஓதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே.

சுரு குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை இறைவனும் மூர்க்கனும் பதரே.

சுசு முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

சுஎ வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

சுO. புன்தலைப் புல்வாய் - சிறிய தலையினையுடைய மான்.

சுக. ஆரை ஆம் - ஆரைப்பூடு மூடிய.

சுஙு. தொல் பதி - பழைமையான நகரத்தில். தேன் தேர் - தேனைத் தேடித் திரியும். தேயம் - இடம்.

சுரு. அலைத்து - வருத்தி. வெங்கோலொடு நின்ற - கொடிய ஆட்சியோடு பொருந்திய.

சுஎ. எய்த்து - இளைத்து. ஏழையும் - அறிவில்லாதவனும்.

சூஅ தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவட் பாராப் பேதையும் பதரே.

சூகூ தன்மனை யாளைத் தனிமனை இருத்திப்
பிறர்மனைக் கேகும் பேதையும் பதரே.

எ0 தன்ஆ யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

கூ. முடிப்புரை

எக வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

எஉ பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

எங மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

எச இருவர்தம் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே.

எரு பழியா வருவது மொழியா தொழிவது.

எக. வாய் - வாயினையே. நா கடிப்பு ஆகவும் - நாவையே குறுந்தடியாகவுங் கொண்டு..

எச. பொருந்த - ஒத்துக்கொள்ளும்படி. உரையாராயின் - தீர்ப்புக் கூறாரானால். நெறியின் - நெறியினால்; நெறிப்படி. உற மறுகி - மிகக் கலங்கி. ஈர்வது - அறுப்பதாகிய.

எசு கழியா வருபுனல் இழியா தொழிவது.

எஎ துணையோ டல்லது நெடுவழி போகேல்.

எஅ புணைமீ தல்லது நெடும்புனல் ஏகேல்.

எகூ எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே.

அ௦ வழியே ஏகுக வழியே மீளுக.

அக இவைகாண் உலகிற் கியலா மாறே.

எகூ. எழில் - அழகு. ஆர் - நிறைந்த. வரி விழியார் - வரிகள் பொருந்திய விழிகளையுடைய மாதரின். தந்திரம் - கருத்துக்களில். இயலாதன கொடு - காரியவெற்றிக்குப் பொருந்தாதன கொண்டு. முயல்வு - முயலுதல்.

அ௦. இயல் ஆம் ஆறு - நடத்தற்குரிய நன்னெறிகளாகும்.

அதிவீரராமர் அறநெறி

க. தோற்றுவாய்

நீதி நூல்கள் :

தமிழ் மொழியில் நீதிநூல்களுக்கு ஒன்றுங் குறைவில்லை. சங்ககாலம் எனப்படும் பழையகாலத்திலிருந்தே இவை மேலுமேலும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சங்ககாலத்தில் தோன்றி உலகமெங்கும் புகழ் விரித்து வரும் திருக்குறள் என்பது, இதுவரையில் அறிந்த நீதி நூல்களில் மிகவும் பழமையானதாய், தலைமைவாய்ந்ததாய் விளங்குகின்றது. அது சங்க நூல்களின் ஒரு வகைப் பிரிவாகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகும். இப்பிரிவில் உள்ள மற்ற நூல்களுள்ளும், பெரும்பாலன நீதிநூல்களேயாம்.

சங்க காலத்துக்குப் பின்னும் தமிழில் நீதி நூல்கள் மிகுதியாக எழுந்துள்ளன. திருக்குறளின் சார்பாக எழுந்துள்ள 'சிவசிவ வெண்பா' 'சோமேசர் முதுமொழி வெண்பா' முதலிய நீதிநூல்களே பலவாகும். அன்றியும், நீதிநெறி விளக்கம், நன்னெறி, வெற்றி வேற்கை என்னும் இந் நறுந்தொகை, நல்வழி, ஆத்தி சூடி முதலிய நூல்களும் ஏராளமாயிருக்கின்றன.

இதனுல், தமிழ் நாட்டில் விளங்கிய தமிழ் மக்கள், 'தாமும் தமக்குப் பின்வருவோரும் திருந்திய நல்லொழுக்கத்தில் வாழ்ந்து பெருமையடைய வேண்டும்' என்று பழைய காலந்தொட்டே அளவுபடாதவேட்கை யுடையவர்களாக இருந்துவந்திருக்கிருர்கள் என்று

தெரிகின்றது. மேலும், வாழ்க்கையாகிய நடைமுறையில், நல்லதுங் கெட்டதும் எதிரிட்டு, முடிவான பழக்கத்தினால் தக்க திருத்தம் பெற்றிருந்தாலல்லாமல், பிறர்க்கு நீதியுரைப்பது என்பது அரிதாகும். அதோடு, வாழ்க்கையை நல்ல வகையாக நடத்திக்கொண்டு போகவேண்டும் என்னும் அழகான நோக்கமும் இதற்கு முதன்மையாகும்.

பிற நூல்கள் :

இங்ஙனமெல்லாம் திருந்திய வாழ்க்கையிலும் உள்ளச்செவ்வியிலுமிருந்தே முடிவாக உயர்ந்த நீதிகளெல்லாம் தோன்றுதலின், பெரும்பாலும் காப்பியங்கள் இலக்கியங்கள்கூட நீதிகளையே தமக்கு முடிமணியாகக் கொண்டு சிறப்புறுகின்றன. சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம், பாரதம் முதலிய பல காப்பியங்களையும், கலித்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, தேவாரம் முதலிய பல இலக்கியங்களையும் உற்று நோக்கினால், அவற்றில் இவ்வுண்மை தெளிந்து தோன்றுதல் காணலாம்.

சிலப்பதிகாரம் என்னும் பழைய பெருங்காப்பியத்தை இங்கே சிறிது நினைத்துப் பார்ப்பினும் இவ்வுண்மை நன்கு விளங்கும். இத் தமிழகத்தில், ஏறக்குறைய க௮௦௦ - ஆண்டுகளுக்குமுன், இத் தமிழகமேயன்றி, இந்தியா என்னும் நாவலந்தீவு முழுதும் நிலைகலங்கும்படி பேராற்றலாய் நிகழ்ந்ததாகிய கண்ணகியின் தெய்விக வாழ்க்கை நிகழ்ச்சியே சிலப்பதிகாரத்தில் ஆசிரியர் இளங்கோவடிகளால் அழகாக விரித்துரைக்கப்படுகின்றது. செவ்வி பெற்ற அவ்வாழ்க்கை நிகழ்ச்சியில் மூன்று நீதிகள் முதன்மையாக

உருக்கொண்டு விளங்கலாயின. அவைகளை அடிகள் அங்ஙனமே ஏற்று, அவைகளை உலகுக்கு விளங்கச் செய்யும்பொருட்டே சிலப்பதிகாரம் என்னுஞ் செந் தமிழ்ப் பெருங் காப்பியத்தை இயற்றியிருக்கின்றனர். விளங்கிய அம் மூன்று நீதிகள் இன்னவென்பதும், அவை காரணமாகச் சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட உண்மையும்,

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றுவதூஉம்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்று ஆசிரியர், நூலின் முகப்பிற் காரணங் கூறி அந் நூலைத் துவங்கிச்செல்லுவதிலிருந்து தெரிகின்றன. இத ஞல், சிறந்த நீதிகளை, நிகழ்ச்சிகள் வாயிலாக விளக்கிக் காட்டி, மக்கள்வாழ்க்கையைச் செவ்வி செய்யுங்காரண மாகவே இச் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டதென்பது இதிலிருந்து தெளிவாகப் புலப்படுகின்றது. ஆசிரியர், நூல் முழுமையும் இதற்கான முறைமைகளில் நன்கு விரித்து விளக்கியபின், நூலின் முடிவிலும், 'இக் கண் ணகியின் நிகழ்ச்சியைக் கேட்ட உலகோரே' என்று உலகமக்களை விளித்து,

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் ;
தெய்வம் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின் ;
பொய்யுரை அஞ்சுமின் ; புறஞ்சொற் போற்றுமின் ;
ஊனூண் துறமின் ; உயிர்க்கொலை நீங்குமின் ;
தானஞ் செய்ம்மின் ; தவம்பல தாங்குமின் ;

... ...

இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின் "

என்று சிறந்த நீதிகளையே பிழிவாக இறுத்து அருளிச் செய்து தமது காப்பியத்தை முடித்திருக்கின்றார். ஆதலால் நீதிநூல்களேயன்றிப், பிற காப்பியம் முதலிய நூல்களும் நீதிகளையே தமக்கு முடிமணியாகக்கொண்டு இலங்குகின்றன என்பது தெளிந்து தோன்றுதல் அறியலாம். அறியவே, நீதிநூல்களே தமிழ்மக்களின் வாழ்க்கை நோக்கமும் போக்கும் நன்கு புலப்படுத்துவன என்பது, இவைகளாலெல்லாம் இனிது விளங்குகின்றதன்றோ ?

சிறந்த தொண்டு :

இன்னும், தமிழ்நாட்டில், சென்ற ஆயிரம் ஆண்டுகளாக நீதிநூல்கள் மேன்மேலும் எழுந்துள்ளன. கோட்பாடு விடாமல், அவரவர் உயிரியற்கைகள் மாட்சிமைப் படும்படி, உலகியற்கையோடு ஒட்டிப், பலர்க்கும் உதவியாய்ப், புகழ் புண்ணியங்களோடு வாழ்க்கை நடத்துவதற்கு, நாட்டில் இடையூறுகள் தோன்றுங் காலங்களிலெல்லாம், மக்கள் அம் மாட்சிமையான வாழ்க்கையில் நிலைபிறழாமல் இருந்து விளங்கும்பொருட்டு நீதிநூல்கள் அவ்வப்பொழுதும் உலகத்தில் தோன்றுவதுண்டு. தமிழ்நாடு பிறசமயத்தவர்கள் இனத்தவர்கள்வருகையினாலும், பிறநாட்டு அரசர்களின் படையெடுப்புக்களாலும் சென்ற ஆயிரம் ஆண்டுகளாக மிகவும் இடருற்று நலிந்தமையின், இக் காலத்தில் நீதி நூல்கள் மிகப் பலவாய் எழுந்து விளங்குதற்கும் இயைபிருந்தது.

அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள்களுள் பொருள் இன்ப வொழுக்கங்கள், அறத்

தோடு பொருந்தி நிகழும்பொழுதுமட்டும் மிக்க பயன் தருவனவாயும் நலமுள்ளனவாயும்இருக்கின்றன. அறத் தோடு அவை பொருந்தாதபோது அத்தகைய பொருள் இன்ப வொழுக்கங்கள், மக்கள் வாழ்க்கையை இருள் சூழ்வித்துக் கெடுத்தலின், சான்றோர்களால் அவை அந் நிலையிற் பாராட்டப்படுவதில்லை. இழித்தும் பேசப் படும். ஆதலால், வாழ்க்கைக்கு மாட்சிமைதந்து அதனை விளங்கவைப்பதெல்லாம் ஒழுங்கு முறைமையாகிய அறவொழுக்கமே யல்லதுவேறில்லை. இறைவன் அதனு லேயே 'அறவோன்' என்று அழைக்கப்படுகின்றனன்.

தெய்வப் பெரும் புலவராகிய திருவள்ளுவர், உலக மக்களின் நல்வாழ்க்கையை விரும்பி, அவ் வாழ்க்கை முறைகட்கான அமைப்புக்களோடு தாம் அருளிச் செய்த திருக்குறள் நூலில், நூலின் நோக்கம் இன்னது என்று பாயிரத்தின் இறுதியில் தெளிவுபடுத்த நினைந்து, 'அறன்வலி யுறுத்தல்' என ஓர் அதிகாரம் நிறுவி அதனை விளக்கிச் செல்வாராயினர். ஆதலால், நீதிநூலா சிரியர்கள் உலகுக்குச் செய்துவருகின்ற அரும்பெருந் தொண்டு அறன்வலி யுறுத்தலே என்பது இனிது தெளிந்துகொள்ளப்படும். இதனுல், நம் நாட்டுச் சான்றோர்களின் நல்லெண்ணத்தையும், அருளிரக் கத்தையும், அவ்வப்போதும் அற வுணர்வுகளால் நாட்டு மக்களை நன்னிலையில் நிறுத்திப் பாதுகாத்து வந்த மெய்யன்பினையும் நீதிநூல் நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

'நறுந்தொகை' என்னும் இனிய நீதிநூலை இயற்றியுதவிய அதிவீரராம பாண்டியரும் இங்ஙனம் தமிழுலகுக்கு நல்லதோர் உதவி செய்திருக்கின்றனர்.

உ. அதிவீரராம பாண்டியர்

வாழ்க்கைக் குறிப்பு :

அதிவீரராம பாண்டியர் என்னும் பெயரால், இவர் பாண்டிய மன்னர் என்பது விளங்குகின்றது. 'நறுந் தொகை' என்னும் இந் நீதி நூலின் முகப்பில்,

> " வெற்றி வேற்கை வீர ராமன்
> கொற்கை யாளி குலசே கரன்புகல்
> நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னல்
> குற்றங் களைவோர் குறைவிலா தவரே "

என நூற்பயன் கூறுஞ் செய்யுள் ஒன்று உள்ளது. இச் செய்யுளில் வருகின்ற குறிப்பினாலும் இவர் பாண்டிய மன்னர் என்பது தெரிகின்றது. மேலும், கொற்கை பாண்டியர்க்குத் தலைநகரமாயிருந்த காலத்தில் அதனை ஆண்டவர் என்பதும், குலசேகரன் என்பது இங்கே பாண்டியர் சிலரை உணர்த்தும் ஒரு பொதுப்பெயர் என்பதும், சிறந்த தமிழ் நலத்தோடு இந்நூலை அதிவீர ராமர் இயற்றியிருக்கின்றனர் என்பதும், 'நறுந் தொகை' என்பது நூலின் பெயர் என்பதும், இந் நீதி நூலைப் பயின்று தம்மிடம் குற்றம் நிகழாத படி காத்துக்கொள்வோர் ஏதுங் குறைவில்லாத நல்ல நிலையினில் வாழ்ந்து விளங்குவர் என்பதும் இதனால் அறியப்படுகின்றன. 'வெற்றி வேற்கை' என முதற்கண் சிறப்பாக வருகின்ற அடைமொழிக்குறிப்பினால், இவர் தங் காலத்திற் பகை மன்னர்க்குத் தாழாது வெற்றி யுடன் விளங்கினர் என்றும் உற்றுணரலாம். 'வெற்றி வேல்' என்னும் அடைமொழி பண்டுதொட்டே பாண்டி மன்னர்க்கு இயல்பின் உரியதாதல்,

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்"

என்னுஞ் சிலப்பதிகாரத்துத் திருமொழியினுலும் பெறப்படும்.

இனித், தென்காசியிலும் திருக்குற்ருலம் முதலிய திருப்பதிகளிலும் அதிவீரராமரைப் பற்றிக் காணப் படும் கல்வெட்டுக்களின் குறிப்புக்களிலிருந்து, [1]இவர் தென்காசியில் வீற்றிருந்து வாழ்க்கை நடத்தினவரென் பதும், [2]அங்கே 'குலசேகரமுடையா ராலயம்' என ஒரு திருக்கோயிலும் எடுப்பித்தார் என்பதும், இவர் காலம் கி. பி. 1564 முதல் 1604 வரையில் ஆகும் என்பதும் விளங்குகின்றன. [3]விசயநகரத் தரசனுக்காக நாயக்கர் மதுரையைக் கைப்பற்றியது கி. பி. 1559-ல் என்று தெரிதலின், அதிவீரராமபாண்டியர் தங் காலத்தில் ஒரு குறுநில மன்னராகவே இருந்து வாழ்ந்திருக்க வேண்டுமென்பதுந் தெரிகின்றது.

'நறுந்தொகை' என்னும் இந் நீதிநூலேயன்றி, இவ்வாசிரியர் 'நைடதம்' 'கூர்மபுராணம்' 'காசிகாண் டம்' முதலிய செந்தமிழ்ச் செறிவுடைய காப்பியங் களும், பிறவும் இயற்றியிருத்தலின், இவர் சிறந்த செந் தமிழ்ப் புலமையுடையவர் என்பதும், செந்தமிழ்ப் புலமையோடு வடமொழிப் பயிற்சியும் சமயஞானமும் உடையவர் என்பதும் விளங்குகின்றன. இவற்றுள் 'நைடதம்' என்னும் நூல் இவர்க்குச் சிறந்த புகழினை அளித்திருக்கின்றது. 'நைடதம் புலவர்க்கு ஔடதம்'

1. Epigraphia Indica Vol. VII Page 17
2. Travancore Archaelogical Series Vol I Ins. No. VII page 50.
3. Sewell's list of Antiquities II page 200

என்று கூறுப. இவர்தம் மனைவியாரும், பொருந்திய தமிழ்ப் புலமை யுடையவர் என்று இவரது வரலாறு கூறும் நூல்கள் அறிவிக்கின்றன.

இங்ஙனம் அதிவீரராம பாண்டியர் செந்தமிழ்ப் புலமையும், சிவஅன்பும், அரசத் திருவும், நற்றுணை வாழ்வும் ஒருங்கு வாய்ந்து, நூலியல் உலகியல் என்னும் இருதிறத்திலும் நெருங்கிப் பழகிய தெளிந்த அறிஞ ராய்த் தோற்றுதலின், இவர் உலகுக்கு நீதிகூறும்வாய்ப் புடையரேயாவர். இதனாலும் நூலுள்ளும் நலங்கள் பல வாய்ந்திருத்தலாலும் இவர் இயற்றியநறுந்தொகை என்னும் நீதிநூல், பலராலும் போற்றிப் பாராட்டப் பெறுவதாயிற்று. சிறுவர்களுக்கென்று இவர் இயற்றி யிருக்கும் நல்லெண்ணமும் நினைந்து மகிழ்தற்குரிய தாகும். 'நறுந்தொகை' என்னும் இந் நூலின் பெயரில், 'தொகை' என்பது, 'தொகுக்கப்பட்டநீதிகள்' என்றும், 'நறு' என்னும் அடைமொழி, 'அந் நீதிகள் நல்லவை' என்றும் பொருள் தந்து நிற்றலால், இவர், முன்னோர் நூல்களிலிருந்தும் உலகியலிலிருந்தும் அவற்றின் பிழி வாக நல்ல நீதிகளைத் திரட்டி இச் சுருக்க நூலாக உலகுக்கு வழங்கியிருக்கின்றனர் என்பது அறிந்து கொள்ளப்படும்.

கொள்கையும் நடையும் :

இனி, நூலில் வருங் குறிப்புக் கொண்டும் அதிவீரராமரைப் பற்றி அறியவேண்டிய உண்மை கள் சில உள்ளன. நறுந்தொகையிற் பெரும்பாலும் இவர் அறிவுறுத்த விரும்பும் நீதிகள் உலகியலைப் பற்றினவையேயாகும். கல்வி, செல்வம், நட்பு, உலகில் அவரவர்க்கும் உரிய ஒழுக்கம் என்பனவே பெரிது

பேசப்படுகின்றன. இவற்றில், அரசியலைப் பற்றிய நினைவுகள் உவமை முகமாகவும் பிறவாற்றாலும் ஆசிரியர்க்கு அடிக்கடி தோன்றுகின்றன.

சிறப்பாகக் கல்விக்கும் ஒழுங்குக்குமே இவர் முதன்மை கொடுக்கின்றனர். நூலின் முதலில், 'கல்விக் கழகு கசடற மொழிதல் எனக் கல்வியைப் பற்றியே துவங்கி, நூலின் இறுதியில் "வழியே ஏகுக வழியே மீளுக" என ஒழுங்கைப் பற்றியே முடித்துக் கூறியிருப்பதிலிருந்தும் இவ்வுண்மையை அறிந்துகொள்ளலாம். எழுத்து அறிவித்த ஆசிரியனை மாணக்கர் இறைவனாகக் கருதி வழிபடுதல் வேண்டும் என்பதும் இவரது கருத்தாகும். நறுந்தொகையில், செல்வத்தின் நிலையாமையையும் அதனைப் பிறர்க்குப் பொருள் உதவி செய்தலையும் பற்றி இவர் கூறுகின்றனரே யல்லாமல், பொருள் ஈட்டுக என அனைவர்க்கும் பொது நீதியாக இவர் அறிவுறுத்தவில்லை. ஆனால், 'கல்வியைக் கற்க' எனவும், 'அறிவுடையனாகுக' எனவும் அனைவர்க்கும் பொதுவாக இவர் வலியுறுத்திக் கூறுகின்றார். "அறிவு அகத்தில்லாக் கொச்சை மக்களைப் பெறுதலின் அக் குடி எச்சம் அற்று ஏமாந்திருக்கை நன்று" என மிகவும் இவர் வற்புறுத்திச் சொல்லுவதிலிருந்தும் இவ்வுண்மை அறிந்துகொள்ளப்படும். உலகத்தில் மக்கள் தம் குல இயற்கையாலோ பிற செயற்கையாலோ தாம் தாம் மேற்கொண்ட தொழிலை ஒழுங்காக நடத்தி நலம் பெற வேண்டும் என்பது இவர் நினைவாக இருக்கின்றது.

இங்ஙனம் 'நறுந்தொகை' என்னும் நீதிநூலில் இவர் கல்வியும் அறமுமே மிகுதியும் வலியுறுத்திக்கூறி

உலக வாழ்க்கையை ஒழுங்கு செய்யுங் கருத்துடையவ ராயிருத்தல் தெரிதலின், உலகத்தில் செவ்வையாக வாழ்க்கை நடத்தல் வேண்டும் என்று எண்ணியிருந்த இவரது மனவியல்பும், கல்வியிலும் நேர்மையிலும் இவர் மேற்கொண்டிருந்த அளவுபடாத வேட்கையும், நாகரிக வாழ்க்கைக்குக் கல்வியும் ஒழுங்குமே முதன்மை யானவை என்று இவர் தெரிந்து கருதியிருந்த மெய்ந் நடையும் நமக்குத் தெளிவாக விளங்குகின்றன.

அரச குலத்தில் தோன்றி அரசராய்ச் செங்கோல் ஓச்சி வந்த இவர், அவ்வரச இன்பத்திலேயே தேக்குறுமல், தம் அரசும் செல்வமும் நிதியும் மாடமும் மங்கல வாழ்வும் அன்றைப் பகலே அழியினும் அழியும் எனத் தெரிந்து, கல்வியையே அழியாத பொருளாக விரும்பிக், கலைவல்ல புலவர்களோடு அளவளாவி வாழ்ந்து, தமது குலத்துக்கேற்பத் தாம் மேற்கொண்ட அரசியல் முறையை நேர்மை வழுவாது நடத்தித், தம் வாழ்க்கை முழுமையுங் கல்வியும் கலைவல்லோர் நட்பும் நேர்மையுமே அடர்ந்து விளங்கும்படி வாழ்ந்து திகழ்ந் தமை பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

'மன்னவர்க்குச் செங்கோன் முறைமையே அழகு'

என்று நூலின் முற்பகுதியில் வருகின்றது. நூலின் இடையில், 'கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டி னும் கடும்புலி வாழும் காடு நன்று' என வற்புறுத்திக் கூறப்படுகின்றது. நூலின் இறுதியில், 'தமதுமெய்வழக் கில் அறம் இழந்துபோன மக்கள் மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர் அரசனுக்கு வழிவழி ஈர்வதோர்வாளா கும்' என உருக்கமாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இங்ஙனம் நறுந்தொகையில், முதலிலும் இடையிலும் இறுதியிலும் செங்கோன் முறைமையைப்பற்றி இவர்

கூறியிருக்கும் நேர்மையான வற்புறுத்தலுரைகளாலும் உருக்க மொழிகளாலும் இவரது அரசியலின் நேர்மை நமக்குத் திட்டமாக விளங்குகின்றது.

இன்னும், இவர் தமது காலத்தில், கல்வி யறிவு ஒழுக்கங்களிற் சிறந்த சான்றோர்கள்பால் மிக்க மதிப்பு வைத்து அவரைத் தமது நாட்டின்கண் இருத்திப் போற்றி வந்தனர் என்னுங் குறிப்பும்,

"சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே"

என்று சான்றோர் இல்லாத பதியினை வெறுத்துக் கூறுவதிலிருந்து தெற்றெனத் துணியலாம். பண்டைக் காலத்துத் தமிழரசர்களின் வழிவழி மரபினராதலாலும், தாம் கல்வி வல்ல அரசராகலின் 'பெரியாரைத் துணைக்கோடல்' முதலிய அரச முறைமைகளை நன்கறிந்து ஒழுகுதற்குரியராதலாலும், சிறந்த காப்பியங்களை இயற்றி அறிவொழுக்க நலன்களிற் சுவை பெருக்கி உணர்வு பழுத்தவராதலாலும், இவர் தமது வாழ்க்கையிற் சான்றோரை விரும்பியிருந்தமை தேற்றமேயாம்.

மேலும், உழவு தொழிலிலும் அதன் விளையுளிலும் அதிவீரராமர் மிக்க கருத்துடையுவராய்க் குடிகளை வளமுறச் செழுமைசெய்து நாடு காத்தலிலும் ஊக்கமுடையவரென்பது, நறுந்தொகையில் வருகின்ற ஒரு சிறந்த குறிப்பிலிருந்து உற்றுணரலாம். 'உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா' எனக் கூறத் துவங்கி, 'நகரம் பாழாதலுமுண்டு ; பாழ்பட்ட அந்த இடமே மீண்டும் நகரமாதலும் உண்டு' என்று விளக்கி வருகின்ற இடத்தில்,

"பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் கூடி
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்"

என்று இவர் அறிவுறுத்துகின்றனர். இதன்கண், மிகவும் வளமான பெரியநகரம் என்பதற்கு 'நெடுநகர்' எனக் கூறியவர், அத்தனை பெரிய நகரத்திற்கு மதிலும் கொடியும் முதலிய பிற பெருமைகளை யெல்லாம் சிறப்பாகக் கூறாது, 'நெல் வளத்தால் விளங்கும் நெடுநகர்' என்னும் பொருளில் 'நெற்பொலி நெடுநகர்' என, விளையுட் சிறப்பினைக் கருத்தாக நினைவுகூர்ந்து அடைமொழி புணர்த்துக் கூறியிருப்பதிலிருந்து இவ்வுண்மை நன்கு விளங்குகின்றது; பொற்றொடி மகளிரும் மைந்தரும் கூடி செய்யத் தக்க சிறந்த தொழில் அவ்வுழவு தொழிலே என்பதும் இதனுள் விளங்குதல் அறியலாம்.

புலமைச் சிறப்பு :

இனி, அதிவீரராமரின் புலமைத் திறனும் வியக்கத் தக்கவாறு அமைந்துள்ளமை மிக்க இன்பந் தருவதாயிருக்கின்றது. சங்க கால நூல்களும், தமது காலம் வரையில் எழுந்த பிற்கால நூல்களும், அதிவீரராமர் நன்கு பயின்று செந்தமிழ்ப் புலமை நிரம்பியவராவர். இவர் இயற்றிய நறுந்தொகை நூல், சிறுவர்களைக்கருதி எழுந்ததேயாயினும், அது தமிழின் செறிவும், சுவையும், நலனும்அழகுற வாய்ந்திருக்கின்றது. ஓசை, வளம் பெற்றுள்ளது. நடை, பெருமிதம் வாய்ந்து செல்கின்றது. கருத்துக்கள் அதிவீரராமரின் அரசவீறு தோன்ற உரைக்கப்படுகின்றன. தகாதாரை அஞ்சாது இவர்பதர் என்பர். இவை போல்வனவெல்லாம் இவ்வாசிரியரின்

தமிழ்க்கு மிக்க மிடுக்கேற்றியுள்ளன. தமிழ் வளம் நன்கமைந்துள்ள இந்நூலை ஒப்பவே, இவருடைய 'நைடதம்' முதலிய பிறநூல்களும் பல்வகைப் பொருட் செறிவும் மொழிச் செறிவும் இணைந்து பீடு நடை கொண்டுள்ளன. இவற்றால், இவ்வாசிரியரது தமிழ்ப் புலமையின் மாட்சி நன்கு விளங்குகின்றது.

இவ்வாசிரியரின் புலமைச் செழுமைக்கு 'நறுந் தொகை' என்னும் இச் சிறிய அரிய நூலிலேயே விளக்கமான நல்லடையாளம் ஒன்று, மிதந்து தெரி கின்றது. புலமை பெருகிய இவரது உள்ளம் ஏதேனும் ஒன்றை நினைந்தால் அது, உடனே சுரந்து சுரந்து பொங்கி, மேல் விரிந்து அகன்று, மிகப் பரவலாகப் பெருகியோடும் பெருஞ் செழுமையுடையதாய் இருக் கின்றது. அதனை, இவர் இந் நூலின்கண் வளமுற வழங்கியிருக்கின்ற அடுக்கடுக்கான நிறைந்த உவமை களிலிருந்தே எளிதின் அறிந்துகொள்ளலாம். 'பொருள் கள் தம் இயல்பு மாறா' என்று ஒரு கருத்தை விளக்கு தற்குக் காட்டுக்கள் கூறப் புகுந்தவர்,

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறா காது
அடினும் பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாதே

எனப் பல காட்டுக்களை மழைபோல நிறையப் பெய்து கொண்டு செல்கின்றார். அதில் இவர்க்கு ஏதும் தட்டுத் தடங்கல் இருப்பதாகத் தெரியவில்லை. இங்ஙனமே வேறொன்றுக்கு உவமை கூறத் தொடங்கியவர்,

யானைக் கில்லை தானமும் தருமமும்
பூனைக் கில்லை தவமும் தயையும்
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்
முதலைக் கில்லை நீத்தும் நிலையும்

என அடுக்கிக்கொண்டே போகின்றார். கருத்துக்களி லும் ஆசிரியர் இப் பெருமை உடையவரே.

பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்
பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்

என வெள்ளம்போல இவர்க்குக் கருத்துக்கள் பெருகி வருகின்றன. இவரது புலமையில் வறுமையில்லை. செல்வத்திற் செழிப்புடையரான இவர், புலமையிலும் இங்ஙனம் பெருஞ் செழுமை யுடையராய், நினைத்தால் வற்றாது வழங்கும் நீரரா யிருக்கின்றனர்.

சில உவமைகள் கூறிப் பல கருத்துக்களை அடுக்கிப்பொழிதலும், பல உவமைகளை அடுக்கிப் பொழிந்து சில கருத்துக்களை விளக்குதலும், இரண்டொரு முடிபு களைக்காட்டும்பொருட்டு அடுக்கடுக்காக எடுத்துக்காட் டுக்கள் குவித்தலும், நீதிகளைக்கூறும்போதே அவற்றிற் குரிய ஏதுக்களையும் நிறையப் பெய்தலும், ஒரு நீதியினை ஒரு வாய்பாட்டாற் கூறத்தொடங்கி அவ் வாய்பாட் டில் வந்து பொருந்துதற்குரிய பிற நீதிகளையும் ஏராள மாகத் தொடுத்துக் கூறுதலும், கருத்துக்களை உடம் பாட்டாற் கூறுமிடத்தும் அவற்றை மறித்து எதிர் மறையாற் கூறுமிடத்தும் வெள்ளம்போலப் பலப்பல ஒழுக்கிச் செல்லுதலும், பிறவும் நறுந்தொகையிற் பிரிவு பிரிவாக வளங்கொழித்து வருதலின், அதிவீர

ராமரின் புலமைச் செழுமை பெரிதும் வியக்கத் தக்க தாகத் தோற்றுகின்றது. இவ்வாசிரியரது புலமையில் இது தனிப் பெருஞ் சிறப்பென்று கருதப்படும்.

"இல்லோர் இரப்பது இயல்பே அதனால், இரந் தோர்க்கு ஈவது உடையோர் கடனே' என இரண் டொரு கருத்துக்களை முடித்துக் காட்ட எண்ணி யவர், 'உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா' என அதற்கோர் ஏதுவினைத் தலைப்பெய்து தோற்று வாய் செய்துகொண்டு, அவ்வேதுவினை வலியுறுத்தற் பொருட்டு,

"குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

"சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்"

"அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்"

"குன்றத் தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்"

"எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்"

"பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் கூடி
நெற்பொலி நெடுநக ராயினும் ஆகும்"

"மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி அணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்"

என ஏராளமான எடுத்துக்காட்டுக்களை அடுக்கிக் காட்டி, முடிவில்,

" நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்இல் லோர்க்கே "

என இவற்றின் முடிந்த முடிபாகத் தாம் அறிவுறுத்து தற்கு எடுத்துக்கொண்ட ஓர் அரும் பெறல் நீதியினை உருவி நிறுத்துதல் ஒரு பெரும் புலமை விருந்தாய்ச் செழுமை தோன்றி விளங்குகின்றது.

எடுத்துக்காட்டிய இப் பகுதியிலேயே, நீதி, கருத்து, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு முதலிய நான்முறைகள் நன்கு விளங்குதலோடு, உவமங்கள், பொருள்கள், உடன்பாட்டு எதிர்மறைகளாகிய முறை கள் முதலியனவும் வளமாக வந்திருக்கின்றன.

" காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே "

என ஒரு நீதியினை ஒருவாய்பாட்டாற் கூறத் தொடங்கி அவ் வாய்பாட்டு முறையிலேயே, பதரெனக் கழித்து ஒதுக்குதற்குரியார் பலரையும் ஒரு சேர நிறை யத் தொகுத்துக் காட்டினர். 'விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்' என ஒன்றை உவமமாகக் கருத் திற் கொண்டு,

" கல்விக் கழகு கசடற மொழிதல் "

என்பது முதலாக,

" வறியவர்க் கழகு வறுமையிற் செம்மை"

என்பது ஈறாக 'அழகு' என்னும் வாய்பாட்டில் பதி னான்கு நீதிகளை ஒருங்கு பொழிந்து தள்ளினர்.

வளம் பெருகிய இப் பேராற்றல் இவர்க்குக் கம்ப ரைப்போல் நிறைய அமைந்திருக்கின்றது என்று துணியலாம். கம்பர் ஓரிடத்தில் (கம்பராமா. உண்

டாட்டுப் படலம்) நிலவின் பொழிவினைப்பற்றி விளக்கு கின்றவர்,

"வெண்ணிற நறைநிறை வெள்ள மென்னவும்,
பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவும்,
உண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவும்,
தண்ணிறை கெடுநிலாத் தழைத்த தெங்குமே."

"கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப்,பிரிந்
துலந்தவர்க் குயிர்கடும் விடமுமாய்,உடன்
புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது கெடுநிலா மதனன் வேண்டவே."

"ஆறெலாம் கங்கையே யாய ; ஆழிதாம்
கூறுபாற் கடலையே யொத்த ; குன்றெலாம்
ஈறிலான் கயிலையை இயைந்த ; என்னினி
வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே."

எனத் தமக்கு அலையலையாக எதிர்ந்தெதிர்ந்து வரும் கருத்துக்களை வளம் மிக அடுக்கி அடுக்கிச் செல்லுதல் இங்கு நினைவுகூரற்குரியது. கம்பர்க்கு அமைந்த இவ் வளம் அதிவீரராமர்க்கும் செழித்திருந்ததனாலே தான், அவரியற்றிய நைடதத்தின் முதற்பகுதி மிகவும் விரிவாகப் பெருக்கெடுத்து வீறியோடி யிருக்கின்றது. அதனை அவர்தம் புலமைச் செழுமையின் அடையாள மாகவே வைத்து அறிந்து இன்புறுதல் நன்று.

அதிவீரராமர்க்கு அமைந்த இச் செழுமைக்குக் காரணம், அவரது இயற்கை அறிவாற்றலேயாகும். அதற்கு அவரது விரிந்த நூற்பயிற்சிகளும் அடரத் துணை செய்துள்ளன. 'நறுந்தொகை' என்று, தொகுதி யென்னும் பொருளில் வரும் பெயரமைப்பே, 'பல நூல்களிலிருந்துத் தொகுக்கப்பட்டவை' என்னும் கருத்தினைப் புலப்படுத்தி, ஆசிரியரின் நூற்பயிற்சிக்குச்

இகழ்ச்சியைப் பொருட்படுத்லாகாது

24. உண்டு குணம்இங் கொருவர்க் கெனினும்,கீழ்,
கொண்டு புகல்வதவர் குற்றமே;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்
காக்கை விரும்பும் கனி? [பன்றே

கீழோர் சேர்க்கை ஆகாது

25. கல்லா அறிவின் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணாரே;—வில்லார்
கணையின் பொலியுங் கருங்கண்ணாய்! நொய்தாம்
புணையில் புகும்ஒண் பொருள்.

உயிர்த்திறமை கருதுக

26. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்;—மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளி
விண்ணளவா யிற்றோ விளம்பு. [தான்

மெய்வருந்தியும் உதவுக

27. கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்;—அம்மா,

---

24. கீழ் - கீழோர். மலர்ச்சேக்கை - மலர் என்னும் இருக்கையை.

25. கனம் - பெருமை. புணை-தெப்பத்தில். ஒண்பொருள்-காசுகள், மணிகள்; பளுவான அப் பொருட் பேழைகள்.

26. கதிர் ஒளி - ஞாயிற்றின் ஒளி.

27. உகவாமல் - விரும்பாமல். எயிறு - பல். அம்மா: வியப்புக் குறி.

முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

வெறுப்பிலும் உதவுக

28. முனிவினும் நல்குவர் மூதறிஞர், உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் ;—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான், எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

இடுக்கண் அஞ்சாது உதவுக

29. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கும் ஒருகோடி யாக—நடுக்கமுறார் ;
பண்ணிற் புகலும் பனிமொழியாய்! அஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்?

காலத்தில் அறஞ்செய்க

30. கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகு [தன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே;—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

---

28. முனிவினும் - சினத்திலும். நனி விளைவு இல் - மிக முற்றுதல் இல்லாத. கதலி - வாழை. அறை - சொல்லு.

29. நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் - தமது நெஞ்சம் உயர்ந்த கடவுளிடத்தில் அழுந்தப்பெற்றோர். ஒரு கோடியாக என்றது, மிகுதியாக என்னும் பொருட்டு. பண்ணின் - பாட்டைப்போல. மதிமான் - நிலாவில் இருப்பதுபோலக் காணப் படும் மான்.

30. கொல்வான் - கொல்வதற்கு.

சான்றாய் உள்ளது. அல்லாமலும், 'நறுந்தொகை' நூலில், இடையே அங்கங்கும் வந்து விளங்கி யிருக்கின்ற பொருளமைப்பு சொல்லமைப்பு முதலியவைகளும், மேலுண்மைக்குத் தக்க எடுத்துக் காட்டுகளாய் நின்று மின்னிக்கொண்டிருக்கின்றன.

நூலாராய்ச்சி :

ஆசிரியர் தொல்காப்பியர், வேளாண் மாந்தரின் தொழில் முறைமைபற்றி நுவலுமிடத்தில்,

" வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி "

என ஒரு நூற்பா உரைத்து, வேளாண்மக்கட்கு உழுதூண் ஒன்றே கடமையாவது என வரையறுத்துத், தமது தொல்காப்பியத்திற் கூறியிருக்கின்றனர். அதிவீரராமரும் அக் கருத்தையே அம் மக்கட்கு இலக்கணமாக அமைத்து,

" உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல் "

எனத் தமது **நறுந்தொகையில்** வரம்பு தோன்ற ஒரு தொடர் இயற்றியிருக்கின்றனர்.

ஆசிரியர் திருவள்ளுவர், கொடுங்கோன் மன்னரைப் பற்றிக் கூறுமிடத்தில், அம் மன்னர் முறை செய்யாமையாற், குடிகள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர், முடிவில் அம் மன்னரின் செல்வத்தைத் தேய்க்குங் கருவியாதல் தெரித்து,

" அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "

என ஒரு திருக்குறள் அருளிச்செய்திருக்கின்றனர். இத் திருக்குறட் கருத்தை அதிவீரராம பாண்டியர் தெளிவாக விரித்து விளக்கி,

" இருவர்தம் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே"

எனத் தமது நறுந்தொகையில் நன்கு எடுத்துக் காட்டினர்.

இங்ஙனமே, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு முதலிய உயர்ந்த நூல்களின் மாட்சிமையான கருத்துக்களும் சொல்லமைப்புக்களும் நறுந்தொகை என்னும் இச் சுருக்க நூலுள் வல்லமையாக முடித்து விளக்கப்பட்டிருக்கின்றன. புறநானூற்றில் ஓரிடத்தில்,

" உலகுபுகத் திறந்த வாயில்
பலரோ டுண்டல் மரீஇ யோனே"

என உண்டலின் சிறப்பு, விருந்தினர் பலரோடு இருந்து ஒருங்கு உண்ணுதலே யென்பது நிறுவியுரைக்கப்படுகின்றது.

" உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்"

என நறுந்தொகையில் இக் கருத்து அவ்வாறே இலக்கணப்படுத்தி உரைக்கப்பட்டுள்ளது. முற்பகுதியிற் 'பலரோ டுண்டல்' என வந்ததற்கு 'விருந்தோ டுண்டல்' என்னும் இப் பிற்பகுதி ஓர் உரை வகுத்தாற் போலவே விளங்க வந்துள்ளமை அறிந்து இன்புறற் பாலதாகும்.

இனிக், கல்வியைப் பற்றிக் கூறுகின்ற வேறொரு புறநானூற்றுச் செய்யுள்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும் ;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோ னாறு அரசுஞ் செல்லும் ;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"

என வருகின்றது. கற்றவர்க்கு உலகத்தில் உண்டாகுஞ் சிறப்புக்களில் நேர்முகமாகக் காணக்கூடிய சில வற்றை இச் செய்யுள் தொகுப்பாக எடுத்துக்காட்டி, அதனாற் 'கற்றல் நன்றே' எனக் கற்றலின் முதன் மையை வற்புறுத்திக் கூறுகின்றது. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியைப்பற்றிப் பாடிய இச் செய்யுள் பாண்டியன் அதிவீரராமனின் உள்ளத்தை நன்கு பிணித்திருக்கின்றது. நறுந்தொகையும் உலகி யலே பெரிது தழுவிச் செல்லும் நூலாதலின், நேரிற் காணுங் கற்றோர் சிறப்புக்களையே தொகுத்துரைக்கும் இப் புறநானூற்றுச் செய்யுள் அதிவீரராமர்க்குக் கல்வியைப் பற்றிய கருத்திற் பெருவிருந்தாய் அமைந்துவிட்டது. நறுந்தொகையிற் கல்வியைப்பற் றிக் கூற நேர்ந்த பகுதியில், இச் செய்யுட் கருத்துக் களை மட்டுமே எடுத்து, ஒவ்வொரு கருத்துக்கும் ஒவ் வொரு தனி நீதி வகுத்து, இதற்கு ஓர் உரை விளக்கம் போல,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

"கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே"

"நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே"

"எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"

"அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்"

"அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே"

என விடாது கூறி அவ்வளவோடு கல்வியைப்பற்றிய பகுதியை அதிவீரராமர் முடித்துவிட்டார். கல்வியைப் பற்றி இன்னும் எத்தனையோ கருத்துக்களைக் கூறலா மாயினும், மேற்காட்டிய புறநானூற்றுச் செய்யுளின் கருத்துக்களை மட்டுமே இவர் விதந்து விளக்கிச் சென் றிருப்பது இவை தம்முள் ஒற்றுமை தோற்றிப் பெரி தும் வியத்தற்குரியதாய் விளங்குகின்றது. 'சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்' என மேற் செய்யுளில் வந்த கருத்தை அதிவீரராமர், 'அச்சமுள் ளடக்கி அறி வகத் தில்லாக் கொச்சை மக்களைப் பெறுதலின்' என் னும் பகுதியில் எதிர்மறை வகையால் விளக்கி விரித் திருக்கின்றனர். பிறப்போரன்ன ஒரு வயிற்று மக்க ளுள்ளும் அறிவகத்தில்லாக் கொச்சை மக்கள்பால் தாய் மனங்கொள்ளாமற் போதற்கு, அதிவீரராமர் இதன்கண் பொருத்தமாகக் காரணங் காட்டினர்.

இனி, நிலையாமையைப் பற்றிக் கூறநேர்ந்த இடத் தில் நாலடியார் என்னும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்

"மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலும் உண்டாம்"

என்று ஒரு செய்யுள் வெளியிடுகின்றது. நறுந்தொகை யில் இக் கருத்து,

"மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்"

எனப் பின்னும் உருக்கந் தோன்ற எடுத்து விளக்கப் படுகின்றது. இதுவும், முற்செய்யுளுக்கு ஓர் உரை விளக்கம்போ லிருத்தலை அறிந்துகொள்ளலாம்.

அதிவீரராமரின் புலமை இங்ஙனம் ஆற்றலும் அகலமும் வாய்ந்ததாயிருத்தலோடு, ஆழமும் நளினமும் வாய்ந்து திகழ்தலையும் அறிந்து இன்புறுதல் வேண்டும்.

"நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்இல் லோர்க்கே"

என நறுந்தொகையில் வருகின்ற ஓர் அரிய நன் மொழியே, புலமையின் நுட்பத்துக்கும் இனிமைக்கும் போதிய எடுத்துக் காட்டாகும். இவ்வறிவுரையில், உலகவாழ்க்கையின் பிழிசாறே, தெளிய வடித்திறக்கித் தீஞ்சுவைத் திரளாகத் திரட்டப்பட்டிருக்கின்றது. மொழித்திறத்தில் இப் பகுதி ஏனை அடிகளை யொப்பத் தமிழின் செறிவு பெறுததாயிருப்பினும், இது, தமிழின் வல்லமைப்பாடு உடையதாய் ஒழுக்கம் பெற்றிருக்கின் றது. ஆனுற், கருத்தின் பிழிவிலோ, மிக்க ஒட்பமும் நுட்பமும் வாய்ந்து மாட்சியுற்றுத் திகழ்கின்றது.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?"

எனத் திருவள்ளுவர் திருமொழியிலும் இக் கருத்துப் பெறப்படுமாயினும், அத் திருக்குறட்கும் ஒரு விளக்கங் கூறுவது போல இந் நறுந்தொகைமொழி அமைந்துள்ளது. 'இல்லதென்' 'உள்ளதென்' எனப் பெருநாவலர் வினவியிருக்குங் கருத்துக்களுக்குத் தக்க விடையளிப்பது போலவே, 'நல்ல ஞாலமும் வானமும் பெறினும் எல்லாம் இல்லை' என இதன்கண் விரித்து விளக்கப் படுவது எவ்வளவு பயனுடையதாயிருக்கின்றது! எவ்வளவு உண்மை வாய்ந்ததாயிருக்கின்றது! இல்லவள் இல்லாதபோது, விருந்தோம்பி வேளாண்மை செய்தல் வாயாமையால், இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் இல்லாமற் போதலின், நறுந்தொகை யாசிரியர் 'எல்லாம் இல்லை' எனப் பலவும் அகப்படுத்திக் கூறியது, மிக்க நளினமும் நுட்பமுங் கொண்டு திகழ்கின்றது.

தமிழ்ச் சுவை :

இனி, நறுந்தொகை நூலின் நடை நலனும், தொடை வளனும், தமிழழகும், இன்னோசையும், பயில் தொறுந் தெவிட்டாதனவேயாம். நூல் முழுமையும் இச்சுவை எதிர்ந்து திகழ்கின்றது. எடுத்துக்காட்டுக்கு, இரண்டொரு சுவையமிழ்தினை இங்கே காணலாம்.

"தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே."

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்

நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே"

என்னும் இவ்வடிகள், அதிவீரராமரின் உள்ளம் தமிழ்ச் சுவையுள் எவ்வளவு அடர ஊறிச் செறிவும் வளமும் ஆற்றலும் பெற்றுக் கொழுந்தோடி யிருக்கின்ற தென்பதை நமக்கு இனிது புலப்படுத்துகின்றன. அதிவீர ராமரின் உள்ளம் தமிழ் பழுத்த உள்ளம் என்பதிற் சற்றும் ஐயமில்லை. இன்னோசை நலங்கனிந்த இத்தனைத் தமிழ்வளம் பிற்கால நீதிநூலாசிரியர்களில் குமர குருபரர்க்கு எடுப்பாக அமைந்துள்ளது.

"நீரிற் குமிழி யிளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்;—நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள்! என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

என்னுங் குமரகுருபரரது நீதிநெறி விளக்கத்தின் முதற் செய்யுளே இங்கு முதலில் நினைவுக்கு வருகின்றது. நறுந்தொகையில்,

"ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே"

என்பதும்,

"எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே"

என்பதும் முறையே சிறந்த தமிழ்ச் செவ்வியும் சந்த வின்பமும் வாய்ந்து அதிவீரராமரின் அழகு தமிழ்க் கிழமையைப் புலப்படுத்துதலும் அறிந்து மகிழ்தல் வேண்டும். 'அறக்கூழ்ச் சாலை' 'நெற்பொலி நெடுநகர்' 'தறுகண் யானை' 'சிறுகண் மூங்கில்' புன்றலைப்

புல்வாய்' 'ஆரையாம் பள்ளம்' 'தேன்தேர் குறவர்' என இவ்வாசிரியர் தமிழ்வளம் பொதுள அங்கங்கும் யாத்துப் பெய்திருக்குஞ் செழுவிய செந்தீந் தொடர்களும் இத் தமிழ்ப்பெருங் கிழமையை இனிது வெளிப் படுத்தும்.

இந் நூலாசிரியரின் செந்தமிழ்க் கொழுமையை நோக்க, இவர் சங்க இலக்கியங்களின் முறைபற்றி இயற்கை நலந் துறும நறுநூல்கள் சில யாத்திருப்பா ராயின், இவர் இன்னும் நனிசிறந்து விளங்கியிருப்பா ரென்று தோற்றுகின்றது. ஆனால், இவர் விளங்கிய காலத்தின் நிலை, இவர் செயலை இவ்வளவின் அமைப்ப தாயிற்று என்பது.

---

௯. நறுந்தொகை

நூன் முறை :

அதிவீரராமர், 'நறுந்தொகைத்' தொடர்களை ஒரு நூன்முறையிலேயே அமைத்து யாத்திருக்கின்றார். முதலிற் காப்புச் செய்யுளும், பின்னர்க் குருவணக்கச் செய்யுளும், பின்பு நூற்பயன் கூறுஞ் செய்யுளும், அதனையடுத்து 'வாழிய நலனே வாழிய நலனே' என்னும் வாழ்த்தும் அமைத்து, மற்று அதன் பின்பே, ஆசிரியர் நூலைத் துவங்கியிருக்கின்றார். நூலுக்குரிய உறுப்புக்களுள் இச் சிலவற்றை முதலில் அமைத்திருத்தலாலும், இடையில் தாங் கூற விரும்பிய நீதி மொழிகளை நிரலே வகுத்தமைத்துக் கூறிப், பின்னர் இறுதியில்,

"வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்"

என எடுத்து முடிவுரையாகச் சிலசொல்லி, 'இவைகாண் உலகிற் கியலாமாறே' என அவர் முடித்திருத்தலாலும், நறுந்தொகையானது ஒரு நோக்கமும் முறைமையும் பற்றி நூன்முறை தழுவியே இயற்றப்பட்டிருக்கின்றதென்பது தெளிவாகும்.

'சிலப்பதிகாரம்' என்னும் அரும்பெறற் காப்பியம் இயற்றிய ஆசிரியர் இளங்கோவடிகள், தமது காப்பியத்தை இங்ஙனம் ஒரு நோக்கமும் முறைமையும் பற்றியே யாத்து, அதன் முடிவின்கண்ணும்,

"...இமையோர் இளங்கொடி
தன்திறம் உரைத்த தகைசால் நன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்"

என எடுத்துப் 'பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்' என்பது முதலாக முடிவுரையாகச் சில அறவுரை

கள் இறுத்துக் கூறி, 'மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்' என்னும் வாழ்த்து மொழியோடு முடித்திருக்கின்றார்.

நூல் நோக்கம் :

இனி, ஒரு நூலியற்றும் ஆசிரியர், நூலின் இறுதியில் இங்ஙனம் சில கருத்துக்களை முடித்துக் கூறுவராயின், அக் கருத்துக்களே முதன்மையாக அந் நூலால் அறிந்துகொள்ளுதற்குரியன என்பது தெற்றெனத் தெளியப்படும். அதிவீரராமர் நறுந்தொகையின் இறுதியில் இறுத்தும் முடித்துங் கூறும் பகுதி பின்வருமாறு:

"வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்"

"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே"

"மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே"

"இருவர்தம் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர்மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே"

"பழியா வருவது மொழியா தொழிவது"

"சுழியா வருபுனல் இழியா தொழிவது"

"துணையோ டல்லது நெடுவழி போகேல்"

"புணைமீ தல்லது நெடும்புன லேகேல்"

"எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே"

" வழியே ஏகுக வழியே மீளுக"
" இவைகாண் உலகிற் கியலா மாறே."

இந்தப் பகுதி ஓர் அரிய கட்டுரையைப் போல அமைந்துள்ளது. இதனை உரைநடைப்படுத்தி நோக்கினும் இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும். அது வருமாறு:

'வாயே பறையாகவும் நாவே குறுந்தடியாகவுங் கொண்டு நான் பறையறைந்து சாற்றுவதொன்றைக் கேண்மின்கள். சொல்லும் வல்லமையினால் பொய்யன் சொல் மெய்யைப்போலத் தோற்றும்; வல்லமையாகச் சொல்லமாட்டாமையால், மெய்யன் சொல் பொய்யைப் போலத் தோற்றும்.

'ஆதலால் அரசியலில் முறை செய்வோர், இருவரது சொல்லையும் ஏழு முறை கேட்டு இருவர் உள்ளமும் உண்மையிற் பொருந்தும்படி நடுவு அறிந்து நீதியுரைக்க வேண்டும். அங்ஙனம் உரையாராயின், அவருள், அறமுறைமையோடு ஒத்த மெய்வழக்கினை வீணே இழந்துபோனவர், அதனால் மனம் மிகவுங் கலங்கி, வருந்தி அழுது, சிந்திய கண்ணீர், தேவர் மூவர் காக்கினும் தடைப்படாததாய் அரசனது குடும்பத்தைத் தலைமுறை தலைமுறையாக இன்னலுறுத்திச் சிதைக்கவல்ல வாளாய்விடும்.

'இவ்வாற்றால், தமக்குப் பழிபாக வருவது எதுவும் நடுவு இகந்து மொழியாமல் விட்டுவிடுதற் குரியது. ஏனென்றால், சுழித்து வருகின்ற வெள்ளத்தில் ஒருவன் இறங்காமல் இருத்தலன்றோ நல்லது!

'அங்ஙனம் உண்மையறிந்து அறம் உரைப்பதற்கு நெடுந்தூரம் ஆராயவேண்டி யிருந்தால், அதற்குத்தக்க துணைவர்களையும் உடன்கொண்டு ஆராய்தல் வேண்

டும். இறைவன் திருவருளாகிய மெய்யுணர்வுத் தெப்பமும் இன்றியமையாததாகும். இந்நிலைமையிற், பெண்வழிச் சேர்ந்து நடுவு பிறழ்தல் ஆகாது. கடைசி வரையில் ஒழுங்கைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஆதலால், இக்கருத்துக்கள் உலகியலுக்கு ஏற்ற நடைமுறைகளாகும் என்று உணர்ந்துகொள்க.'

இவ்வுரைநடைப் பகுதியில் முதற் பத்தி இதன் தோற்றுவாயாக அமைந்துள்ளது. இரண்டாம் பத்தி, எடுத்துக்கொண்ட கருத்தை விளக்கி நிற்கின்றது. மூன்றும் பத்தி, அதன் முடிபுங் காரணமுங் கொண்டு மேற்கருத்தினை வலியுறுத்தி அமைகின்றது. நான்காம் பத்தி, உரிய துணைக்காரண உண்மைகளும் உவமங்கள் முகமாக வகுத்துக் கூறி அதனை அரண் செய்கின்றது.

எனவே, செய்யுட்பகுதியில், 'இருவர்தஞ்சொல்லையும் எழுதரங் கேட்டே .... வாளாகும்மே' என்னும் நீதியே கருத்தும், 'பழியா வருவது மொழியாதொழிவது' என்பது மேற்கோளும், 'சுழியா வருபுனல் இழியா தொழிவது' என்பது ஏதுவும், ஏனைய மூன்று நீதிகள் எடுத்துக் காட்டுகளுமாகும் என்க. இவ்வெடுத்துக் காட்டுகளுள், 'துணையோ டல்லது நெடுவழி போகேல்' 'புணைமீதல்லது நெடும்புன லேகேல்' என்னும் இரண்டும் பொருட்பகுதியையும், ஏனை யொன்று இன்பப் பகுதியையுஞ் சேர்ந்தனவாகலின், இப்பொருளின்பங்களின் அவாக் காரணமாக மேற்காட்டிய கருத்தாகிய அறத்தினை இழவாமல் இப்பொருளின்பங்களின் இயைபை அவ்வறத்திற்குத் துணையாகக் கொண்டு நிகழ்த்தி அதன்கண் வீறு பெறல்வேண்டும் என்பதும் நினைந்து தெளிந்துகொள்ளப்படும்.

நறுந்தொகையின் முடிப்புப் பகுதி இங்ஙனம் அறம் ஒன்றே. அஃதாவது அரசுமுறைமை ஒன்றே இறுத்துக் கூறுவதாய் இருத்தலின், இந்நூலின் நோக்கம், அரச நீதியாகிய அறமே உரைப்பதென்பது இனிது பெறப்படும். வேறு பொருளீட்டுதலும் இன்பம் பெருக்குதலும் பற்றி நான்முழுதும் யாண்டும் யாதொரு குறிப்புமில்லை. எல்லாம் அறத்திற்கே முதன்மை தந்து நிற்கின்றன. செல்வத்தைப் பற்றியும் இன்பத்தைப் பற்றியும் பேச நேர்ந்த இடங்களிலும் அவற்றின் நிலையாமை முதலிய அறமுறைமைகளே எடுத்துக் காட்டப்படுகின்றன.

சற்றுக் கூர்ந்து நோக்குவார்க்கு, மனுமுறை நூலையொப்ப இந் நறுந்தொகையும் ஒரு சட்ட நூல் போல் இயன்றிருக்கின்றதென்பது விளங்கும். 'மனு முறை நெறியின் வழக்கிழந்தவர்தாம்' என இந்நூலின் இறுதியில் 'மனுமுறை நெறி' குறிப்பிடப்பட்டிருத்தலும் இங்கு நினைவுகூரற்குரியது. மேலும், எல்லா மக்கட்கும் பொதுமையுண்டாகத் திருவள்ளுவர் அறமுரைத்ததுபோல் அன்றிக், குலங்களுக்கேற்ப நீதி வழங்கும் மனு நூலின் வழியதாய் இந் நறுந்தொகை இயற்றப்பட்டிருக்கின்றதென்பது, இந்நூலின் முதல் இடை இறுதிகளில்,

வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்
மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை
வாணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்
உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்

எனவும்,

"நாற்பாற் குலத்தின் மேற்பாலொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே"

எனவும்,

"காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தண ரென்போர் அனைவரும் பதரே"
"குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை யிறைவனு மூர்க்கனும் பதரே"
"முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே"
"வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே"

எனவும் நால்வகைக் குலங்களைப்பற்றி முறையே அடுத்தடுத்து ஆசிரியர் எடுத்தோதுதலும் அறியற்பாலது. அதிவீரராமர் அரசராதலின், தாம் ஒரு சிறிய அரசியற் சட்டநூலை அறமுறைமையின் வைத்து இங்ஙனம் இயற்ற நினைத்தனர் என்று ஒருவாறு உன்னி யறியலாம். இதனால் இந்நூல், பெரிதும் உலகியலையே தழுவி அரசியல் குடியியலின் நெறிமுறைமைகளைக் கூறுவதான ஓர் அறநூல் என்பது இனிது தெளியப்படுகின்றது.

நூல் அமைப்பு :

இனி, 'நறுந்தொகை' என்னும் இச் செறுத்த செந்தமிழ் நூலின் அமைப்பு முறையுஞ் சிறிது உற்று நோக்குதல் வேண்டும்.

"எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்"

என்னும் அறிவுரை 'குரு வணக்கம்' உரைக்கும் தனித்தொடராகத் தோற்றுகின்றது. இந்நூலின் ஆசிரியரான அதிவீரராமர் கல்வியில் ஒரு தனிப்பட்ட வேட்கையுடையவர் என்பது முன்னுங் காட்டப்பட்டிருக்கின்றது. அத்தகைய ஒள்ளியோர்,

இங்கே முதலில் குரு வணக்கம் உரைத்தல் இயல்பே யாம். 'மேலும் கல்வியைக் கற்பித்த ஆசிரியர் கடவுளே யாவர்' என்னுங் கருத்தினை அதன்கண் இவர் அமைத் திருப்பது, இவர்க்குக் கல்வியிலும் அதனைக் கற்றுக் கருத்தறிவிப்பவரிடத்திலும் உள்ள ஆராமையையும் அன்பினையும் இனிது புலப்படுத்தும். இங்ஙனம் குரு வணக்கஞ் செய்து நூலுரைக்கப் புகுந்தவிடத்து,

"கல்விக் கழகு கசடற மொழிதல்"

என முதலிற் கல்வியையே கூறித் தொடங்கியிருப்ப தும் மேலுண்மைக்கு உற்ற சான்றாய்த் தோற்ற மளித்து விளங்குகின்றது.

இங்ஙனம் கூறத் தொடங்கியவர், 'வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை' என்பது வரையில் (கஞ) பதி னுன்கு அறிவுரைகளால் இன்னின்னார்க்கு இன்னின்னவை அழகாவன என்பதும், 'தேம்படு பனையின்' என்பது முதல்'கொண்டோரெல்லாம் பெண்டிருமல்லர்'என்பது வரையில் (உஉ) பயன்படத்தக்கார் இவர் என்பதும்,'அடி னும் ஆவின்பால்' என்பது முதல் 'ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க் கும்மே' என்பதுகாறும் (ருச) இணங்குதற்குரியார் இவர் என்பதும், 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகி னுங் கற்கை நன்றே' என்பது முதல் ஆறு அறிவுரைக ளால் கல்வியின் மேன்மை இன்னது என்பதும், 'யானைக் கில்லை தானமும் தருமமும்' என்பது முதல் 'கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை' என்பது இறுதியாக (சஅ) இயற்கை யறிவின் நிலை இன்னது என்பதும்,'உடை மையும் வறுமையும் ஒரு வழி நில்லா' என்பது துவங்கி 'நல்ல ஞாலமும் வானமும் பெறினும் எல்லா

மில்லை இல்லில் லோர்க்கே' என்பதீருகச் (௫௧) செல்வப் பொருளின் இயல்பு இன்னது என்பதும், அடுத்து ஐந்து அறிவுரைகளில் வீரமாவது இது என்பதும், பின்னர்க் 'காலையும் மாலையும் நான்மறை ஓதா அந்தணர் என்போர் அனைவரும்பதரே' என்பது தொட்டுத் 'தன்னுயுதமும் தன் கையிற் பொருளும் பிறன் கையிற் கொடுக்கும்பேதையும் பதரே' என்பது வரையில் (எக) மக்களிற் பதரெனக் கருதுதற் குரியார் இவர் என்பதும் வகுத்துக் கூறி, இறுதியில் இவற்றின் பிழிவாகத் தாம் முடித்துக் கூறுவனவற்றை எக-முதல் அ௦-வரையில் இறுத்துரைத்துக் கடைசி தொடராக 'இவைகாண் உலகிற் கியலாமாறே' எனத், தாம் உலகியல் முகமாக அரசியல் நீதிகள் அறிவுறுக்கவே இந் நறுந்தொகை நூல் யாக்கப் புகுந்தமை புலப்படுத்தி, இதனை முற்றுவிப்பாராஞர். ஆதலால் அதிவீரராமர் இந்நூலின்கண் அறிவுறுத்தியுள்ளவை 'முறையே இயல்பு (அழகு), பயன், இணக்கம், கல்வி, அறிவு, செல்வம், வீரம், முறைமை, ஒழுங்கு என்னும் உலகியல் நெறிகளும், அதனுல் அந் நெறியறிந்து செங்கோல் ஓச்சும் அரசியல் முறைகளுமாம் என்பது இனிது விளங்காநிற்கும்.

இனி, இங்ஙனம் வருகின்ற நூலின் அமைப்பு முறையினுல், அதிவீரராமர், பின்வருமாறு கருத்துக் களைத் தொடர்புபடுத்தி யிருக்கின்ருர் என்று தோற்றுகின்றது. இன்னின்ஞர்க்கு இவை இயல்பென்று கூறி, அவருட் பயன்படுதற் குரியாரை நினைந்து, அவரோடு இணக்கங் கொள்ளுதல் தேற்றி, அவ்விணக்கத்தால் எய்தும் பேறு கல்வியும் அறிவும் என்பது புலப்படுத்தி, ஏனைச் செல்வம் முதலாயின ஆவதும் அழிவதுமான மாறுதலுடைமையால் அவை பிறர்க்கு அறஞ்

செய்தற்குரியன என்று அறிவுறுத்தி, இங்ஙனந் தகுதியாக நடப்பவர் வீரமுடையார், நடவாதார் பதராவர் என்பது விளக்கி, ஆதலால் முறைமையும் ஒழுங்குங் கருதி ஒழுகுதல் இன்றியமையாதது என வற்புறுத்தினர் என்பது.

நூற் பொருள் :

இவ்வாறு ஓர் அமைப்பு முறையோடு இயலும் இப் பகுதிகளிற், சிற்சில குறிப்புக்களை இனிக் கருதித் துணிதல் முதன்மையாகும்.

முதற் பகுதி, இன்னின்னர்க்கு இவ்விவை அழகு எனக் கூறுவது. அழகு என்பது இங்கே 'இலக்கணம்' அல்லது 'இயல்பு' என்னும் பொருட்டு. உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வங்களுள் கல்விச் செல்வத்தை ஆசிரியர் முதலில் நினைந்தவுடன், அதற்கு இனமான மற்றொரு செல்வமாகிய பொருட் செல்வமும் அவர்க்கு நினைவில் எழுந்தது. அருட் செல்வத்தை 'எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்' என்னுங் குரு வணக்கப் பகுதியிலேயே புலப்படுத்திக் கொண்டார். பின்னர்க், கல்வி செல்வம் என்னும் இவ்விரண்டுக்கும் உரிய மக்களை நாற்பாற் குலத்தவராக எடுத்து அவரவர் இயல்புகள் உரைத்தார். கல்வியை நாகலத்தின்கண் வைத்தும் செல்வத்தைச் சுற்றந் தழுவுதலின்கண் வைத்தும் இயல்புரைத்ததோடு, வேதியர்க்கு ஒழுக்கங் காத்துக் கல்வி கற்றலும், மன்னவர்க்கு முறைமை செய்தலும், வாணிகர்க்குச் செல்வம் ஈட்டலும், உழவர்கட்கு உணவு விளைத்தலும் உரிய முறைமைகளென்று பொருந்த எடுத்துக் காட்டினர். பின்னர் அரசியலுங் குடியியலும்பற்றி அவர்க்கு நினைவுவருதலும், முறையே

மந்திரி தந்திரிகளைப் பற்றியும், உண்டி பெண்டிரைப் பற்றியும் இயல்புரைத்தார். இறுதியாக, அறிவியலின் பெற்றி நினைந்து, அறிஞராவார்தங் கற்றுணர்ந் தடங் கலையும் வறுமையிற் செம்மையையும் வகையுறுத்துத் தேற்றினர்.

இங்ஙனம் வருகின்ற, அழகுரைக்கும் பகுதியிற், 'கசடற மொழிதல்' என்றவிடத்துக், 'கசடற' என்றது, 'கேட்போர்க்கு ஐயந் திரிபுகள் அற' என்னும் பொருட்டாகும். 'செழுங்கிளை தாங்குதல்' என்பதிற் 'செழுங்கிளை' என்றது, 'மிக்க கிளைஞரை' என்றற்கு. வேதியர்க்கு, வேதம் பயிலுதலோடு ஒழுக்கங் காத்தலையும் ஆசிரியர் நினைவாக எடுத்துக் காட்டியது பாராட்டற்பாலது. 'பொருளீட்டல்' என்றவிடத்துப் பொருளை 'வளர்பொருள்' என்றதும் அறிந்து இன்புறுதல்வேண்டும். 'பெண்டிர்க்கழகு' என்னுமிடத்துப் 'பெண்டிர்' எனப் பொதுவாக எடுத்து, அடுத்த தொடர்களில் அவரைக் 'குலமகள்' 'விலைமகள்' என ஆசிரியர் வேறு படுத்திக் கொண்டார்.

இந்தப் பகுதியில், 'விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்' என்பது, மக்கள் அறிந்து கொள்ளும்படி ஆசிரியர் புலப்படுத்துதற்குரிய நீதியன்று; மேலும், பலர்க்கும் அது முன்னரே தெரிந்த செய்தியுமாகும். ஆதலின், இப்பகுதியின்கண் வருகின்ற மற்றத்தொடர்கட்கு அது, உவமையாகக் கொள்ளப்படும். விலைமகட்குத் தன் மேனி மினுக்குதலில் மிக்க ஆர்வமும் கிளர்ச்சியும் எழுதலின், ஏனையோர்க்கும் அவரவர் செயல்களில் அத்தகைய ஊக்கமுங் கிளர்ச்சியும் இன்றியமையாதன என்று விளக்கியபடியாகும். "உயர்ந்ததன் மேற்றே

உள்ளுங்காலை" என்னுந் தொல்காப்பிய நூற்பாவினால் (உவமவியல். ரு) பொருள்களின் கருத்துயர்ச்சியை ஆசிரியர்கள் உவமமாக எடுத்துக் கூறுவர் என்று தெரிகின்றது. இங்கே உவமையின் உயர்வு, அங்ஙனம் விலைமகளின் ஆற்றலில் வந்தது; விலைமகள் என்னுந் தாழ்விலன்று. தொல்காப்பிய உரையிற் பேராசிரியர், "இழிந்த பொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப்படச் செயல் வேண்டும்" என்று இக் கருத்தினை விளக்குவர்.

இனி அடுத்த பகுதி, மக்களுட் பயன்படத் தக்காரை நினைந்து அறிவுறுத்தியதாகும். வடிவிற் பெரியதான பனையின் விதை ஒருவருக்குக் கூட நிழல் தரத்தக்க மரத்தை உண்டாக்கவில்லை. ஆனால், வடிவிற் சிறியதான ஆலின் விதை பலர்க்கும் நிழல்தரத்தக்க மரத்தை உண்டாக்குகின்றது. ஆதலாற், பெரியோ ரெல்லாம் பெரியருமல்லர்; சிறியோ ரெல்லாம் சிறியருமல்லர். பயனை அறிந்தே யாரையும் பெரியர் சிறியரென்று துணிதல்வேண்டும். இங்ஙனமே பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்; உற்றோரெல்லாம் உறவினரல்லர்; கொண்டோரெல்லாம் பெண்டிருமல்லர் என்க.

இந்தப் பகுதியில், பனையின் விதையும் ஆலின் விதையும் ஏனையவற்றிற்கு உவமைகளாகும்.

இனி, மூன்றும் பகுதி, நல்லிணக்கத்தைப் பற்றி வருவது. அதன்கண், ஆவின்பால், செம்பொன், சந்தனம், அகில், கடல் என்பன பெருந்தன்மை யுடையோர்க்கும், பேய்ச்சுரை, உள்ளி என்பன புல்லிய இயல்பினர்க்கும் எடுத்துக் காட்டுகளாகும். ஈண்டுப், பெருந்தன்மை என்பது, பிறர் இன்னல் செய்யினும் அவர்க்கு நலமே செய்யும் பெருமையாகும். புல்லிய இயல்பென்றது

பிறர் நலமே செய்யினும் அவர்க்குத் தம் தீய இயல்பி னையே புலப்படுத்தும் சிறுமையாகும்.

இப் பெருமை சிறுமைகள் அவரவர் இயல்பினல் உண்டாவன. இவற்றாலுண்டாகும் பிழைகளைச் சில நேரங்களிற் பெரியோரும் பொறுத்தலரிது. ஆதலால் மூர்க்கர் கேண்மையை விடுத்துப் பெரியோர் கேண்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இயல்பாகவே, மூர்க்கர் கேண்மை பல காலம் பழகினும் வேர் கொள்வதில்லை. பெரியோர் கேண்மையோ ஒரு நாள் பழகினும் வேர் இறங்கி வலுக்கும். இவ்வியல்புகளையே அடையாளமாகக் கொண்டு இவர் மூர்க்கர் இவர் பெரியோர் என்பதறிந்து நல்லிணக்கம் பெறுதல் முதன்மையாகும் என்பது.

இனி **நான்காம் பகுதியில்,** கல்வியைப் பற்றி ஆசிரியர் கூறியிருக்கின்றார். பிச்சை புகினும் கற்றல் நன்றென்றும், கல்விக்குமுன் குலநலம் சிறவாது என்றும், கல்வியறிவு உடையவனை அரசனும் விரும்புவான் என்றும், அத்தகைய கல்வியறிவினை உள்ளத்திற் கொள்ளாத கொச்சை மக்களைப் பெறுவதைவிடக் குழந்தைகளில்லாமலிருப்பதே மேலான தென்றும் அதன்கண் இனிது விளக்கப்பட்டிருக்கின்றது. 'கல்விக் கழகு **கசடற** மொழிதல்' என்று நூலின் முதலிற் கூறினமையால், அக் கல்வியறிவில்லாத மக்களைக் '**கொச்சை** மக்கள்' என்று இங்கும் ஆசிரியர் விதந்து கூறினர். மனத்தில் அச்சமும், உள்ளத்தில் அறியாமையும், நாவிற் கொச்சையும் உள்ள மக்கள் ஒரு குடிக்குப் புகழுண்டாக்கவல்ல மக்களாக மாட்டாரன்றே? 'அச்சம் உள்ளடக்கி, அறிவு அகத்து இல்லாக், கொச்சை மக்கள்' என்று அக் கீழ்மக்களை இங்ஙனம் உரிய விளக்

கத்துடன் ஆசிரியர் உரைத்ததும் அவரியல்பினை நன்கு புலப்படுத்துதற்கேயாம். கல்வியறிவு இக் கீழியல்புகளை யெல்லாம் அறவொழித்து மக்களை வாழ்வுடையராக்கு மாதலின், 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று அதன் முதன்மை தேற்றி அவர் வற்புறுத்துவாரா யினர்.

குல நலத்தால் உண்டாகும் அறிவின் பதத்தை விடக் கல்விப் பயிற்சியினாற் பெருகும் அறிவின் நிலை எத்தனையோ மடங்கு சிறந்ததாய், முன் அறிவு நிலையினைச் செழுமை செய்து உலகத்தையுங் கவர வல்ல தாய் விளங்குதலின், அக்கல்விக்குமுன் குல நலம் ஒரு பொருளாகக் கருதப்படாததாய் ஒழிந்தது. அதனை நன்கு வற்புறுத்துதற்கே ஆசிரியர், ஒரு முறைக்கு மும் முறை,

"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே"
"நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே"
"எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"

என்று கல்வியின் மேன்மையும் அதற்குமுன் குலத்தின் கீழ்மையுந் தோன்ற மூன்று நீதிகள் உரைத்துச் சென் றார்.

மேலும் இப்பகுதிக்கண், முதலிற் 'கற்கை நன்றே' என்று ஆசிரியர் தங் கருத்துரைத்துப், பின்னர் அக் கருத்துக்குரிய ஏதுக்கள் கூறுமிடத்துக் 'கற்றோரைப் பலர் மேல் வருக என்பர்;' 'அரசனும் விரும்புவான்;' 'பிள்ளைகளைப் பெற்றாலுங் கல்வியறிவுள்ள பிள்ளை

யாகப் பெறவேண்டும். இன்றேற், பெருமலிருத்தலே நன்று என்று தாய் முதலியோரும் மனங்கொள்ளுவர்' எனவெல்லாம் விளக்கிச் செல்லுதலால், உலகத்திற் பலருள்ளத்தையுங் கவர்தற்குப் பொதுவான இயற்கையறிவைப் பார்க்கினும் கல்விச் சிறப்பே ஏற்றதாதல் தெளியப்படும். ஆசிரியர் திருவள்ளுவப் பெருமானும்,

> "கல்லாதான் ஒட்பங் கழிய நன்றுயினுங்
> கொள்ளார் அறிவுடை யார்"

என்று இவ்வியல்பினை நன்கு புலப்படுத்தி ஓர் அரிய திருக்குறளினை அருளிச் செய்துள்ளனர். அதிவீரராம பாண்டியர் தாம் அரச குலத்திற் றோன்றி அரசத்திருவுடன் சிறக்க வீற்றிருப்பராயினும், 'உலகக் கவர்ச்சிக்கு இந்நிலைகளே போதியன அல்ல; இவற்றால் எய்தும் ஒட்பங்கள் கழியநன்றாயினும் அறிவுடையாரது உள்ளங் கவரப்படாது; ஆதலின், இந் நிலைகளினும் பார்க்கக் கல்வி நலமே உலகத்தைக் கவரவல்லது' என்று இவ்வியற்கையுண்மையைக் கூர்ந்தறிந்தவராய்ப், 'பிச்சை புகினுங் கற்கை நன்று' என்பதற்கு மேற்காட்டியவாறு உலகத்தார் விரும்பும் எடுத்துக்காட்டுகள்மேல் வைத்து ஏதுக்கள் கூறிச் சென்றமை பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்; அரசகுலம் முதலிய உயர்ந்த குலங்களிற் றோன்றி அரசத் திருவுடன் வீற்றிருக்குக் குலநலத்தை இழப்பதாயினும் அது குறைவன்று; கல்வியேமேன்மை தரும்; அஃதில்லாமையே குறைவு தரும் என்பார், 'பிச்சை புகினுங் கற்கை நன்றே' என்றார்.

அதிவீரராமர், தமது நறுந்தொகையில், செல்வப் பொருட்கு ஓரிடத்திலாவது இங்ஙனம் சிறப்புத் தந்து பேசவில்லை. ஆசிரியர் திருவள்ளுவர் தமது திருக்குறளிற்

'பொருள் செயல் வகை' எனச் செல்வத்துக்கென்று ஓர் அதிகாரமேனும் வகுத்து, அவ்வதிகாரத்திலேனுஞ் செல்வத்தின் சிறப்புக்களை எடுத்துப்பேசிக் கடைசியிற் 'செய்க பொருளை' என்று கட்டளையிட்டமையை அதிவீரராமர் அறிந்திருந்தும், தமது நீதி நூலில் இவர் அங்ஙனமொரு குறிப்புந் தாராதது பெரிதும் உற்றுநோக்குதற் குரியதாயிருக்கின்றது. 'வாணிகர்க் கழகு வளர் பொருளீட்டல், என்று கூறிய பகுதி ஈண்டைக்குப் பொருந்தாது; அது வாணிகரது இயல்பைப்பற்றி மட்டுங் கூறிச் செல்லுதலின் என்க. பொதுவாக மக்கட்குப் பொருளீட்டுதலைப் பற்றியும், ஈட்டும் முறைமை முதன்மைகளைப் பற்றியும், அதன் பயனைப் பற்றியும் இவர் யாதுங் கூறிற்றிலர். நறுந்தொகை முழுமையுஞ் சிறப்பாக உள்ள கருத்துக், கல்வியும் கொடையும் சான்றாண்மையும் செங்கோன்மையுமாகவே இருக்கின்றது. ஆதலால், இந் நீதி நூலியற்றுக் காலத்தில் ஆசிரியர் அதிவீரராமரது உள்ளம் ஒரு பற்றற்ற நிலையிலேயே பழக்கம் உள்ளதாய் இருந்திருக்கின்றதென்பது தேறப்படும். ஒரு வெறுத்த போக்கும் அறத்துக்கு அஞ்சும் போக்குமே இந் நூன் முழுமையுங் காணப்படுகின்றன. அழகு அழகு எனக் கூறிய இந்நூலின் முதற் பகுதி நீங்கலாக, ஏனையவெல்லாம் இப்போக்கின் பெருக்கிலேயே மிதக்கின்றன என்று கூறலாம்.

அவ்வப் பகுதிகளின் இறுதியில் இவர் முறையே,

பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்
பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்

என, உலகில் எதிர்பார்க்கின்றபடி மக்கள் அமையா திருக்கும் நிலையினை வெறுத்துங் கூறுவார் போலவும்,

"பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே"
"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே"
"சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே"
நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே"
"ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே"

என, எவரோ பிழை செய்து விட்டவரை நினைந்தும் பழக்கத்துக்கு ஏற்றவ ரல்லாதாரை நினைந்தும் கசந்து அவரியல்புரைப்பார் போலவும்,

"அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே"

என, எவரோ கல்வியறிவில்லாதாரை நினைந்து அவர் பிறந்ததினும் பிறவாதிருந்திருந்தால் அவர் குடிக்குப் பழியேனும் இல்லாமலிருக்கும் என்று மனம் முரிந்து பேசுவார் போலவும்,

"அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை
"நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை
"கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை"

என அறிவிலோரையும், நலிந்தோரையும், நிலை கெட்டோரையும் நினைந்து இரங்கி மொழிகுவார் போலவும்,

"இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே"

"இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே"

"நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்லில் லோர்க்கே"

என, ஈதலும் விருந்து புறந்தருதலும் இல்லாத வெற்று மாந்தர்தம் வெறித்த நிலையினை நினைந்து உள்ளங் குழைந்து அறிவுறுத்துவார் போலவும்,

"கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே"

"சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே"

எனக், கொடுங்கோல் மன்னராலும், அவர்க்குக் கெடு மதி சூழ்ந்து கிழறுக்குந் தீய அமைச்சர் முதலியோ ராலும் பேர் இன்னல்களுற்று நாடு நீங்குவோராய் வெறுத்து வைவார் போலவும்,

"தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவட் பாராப் பேதையும் பதரே"

"தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்
பிறர்மனைக் கேகும் பேதையும் பதரே"

"தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே"

என, முறையின்றி யொழுகுவோரை அருவருத்து நீக்குவார் போலவும்,

"இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்

"மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே"

... ...

"வழியே ஏகுக வழியே மீளுக"

என, ஏதோ மெய்வழக்கிழந்து தவித்துக் கதறுவார் போலவும், ஓரே குரலாக, மனமுற மறுகி நின்று உரைத்திருத்தல் கொண்டு மேலுண்மை அறிந்து கொள்ளப்படும். முதற் பகுதியின் இறுதியிற் கூட எவரோ அறிஞரல்லாதாரை நோக்கியும் வறிஞராய் நன்னிலையில் நில்லாதாரை நோக்கியும் அறமுரைப்பார் போற் கூறுஞ் சாயல் சற்றே நிழலாடுகின்றது.

இவ்வாற்றால், இந்நூலாசிரியரான அதிவீரராமர் ஏதோ செல்வப் பேற்றில் இடுக்கணுற்று நிலைகுறைந்து அதனால் உலகியலில் வெறுப்புற்றுப் பொருளென்றால் உள்ளங் கசந்தவராய், அந்நிலையிற், கல்வி, கொடை, சான்றாண்மை, முறைமை முதலிய அழியாமையும் புண்ணியமும் பெருந்தன்மையும் நடுவுநிலைமையும் வாய்ந்த உயர்ந்த போக்குகளில் தோய்ந்து, 'இவை காண் உலகிற் கியலாயாறே' என இந் நறுந்தொகை அறிவு நூலை யாத்திருக்கின்றனரென்று தோற்று கின்றது.

பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரையை நாயக்க மன்னர் கைப்பற்றிய காலம் அதிவீரராமர் காலத்துக்குச் சற்று முன்னரே எனத் தெரிதலின், அதிவீரராமர் தங்காலத்தில் நிலையிழந்து குறுநிலமன்ன ரொப்ப ஆட்சிபுரியும்படி நேர்ந்தமை துணியப்படு கின்றது. தமது செல்வாக்குக்கு நேர்ந்த இக் குறை

விஞல், மேற்காட்டியபடி உலகப் பொருளிலும் முறையிலும் ஒரு வெறித்த நோக்கும், மெய் வாழ்க்கையிலும் நீதி முறையிலும் எண்ணமும் அவர்க்கு நேர்ந்திருத்தல் இயல்பேயாகும்.

இனி ஐந்தாம் பகுதி, இயற்கையறிவின் நிலையினை இனிது புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

யானை நீண்ட கையுடையதாயிருந்தும் அது தானமும் தருமமும் செய்யும் இயல்பில் இல்லை. பூனை தன் கண்களை மூடிக்கொண்டு ஒடுக்கமும் இரக்கமும் உடையதுபோற் காணப்பட்டாலும் அதற்குத் தவமும் தயையும் இயல்பில் இல்லை. சிதல் என்னுங் கறையான் பொருள்களை மிகுதியாக அரித்தெடுத்துக் கொண்டாலும் அது செல்வம் உடையதாய்ச் செருக்குக் கொள்ளும் நிலையில் இல்லை. முதலைக்கு வெள்ளமென்றும் மேல் நீர் என்றும் இல்லை; எல்லா நீரும் அதற்கு ஒன்றேயாம். இவற்றைப் போலவும், அறிவில்லாக் கயவர்கள் மெய்ஞ்ஞானமுடைய மேன்மக்களொப்ப அச்சமும் நாணமும் இல்லாமை போலவும், நோயால் நலிந்தோரும் வறுமையாற் கெட்டோரும் நாள் கிழமைகளிடையேயும் கேள் கிளைகளினிடையேயும் இருந்தாலும் அவர்க்கு அவை இல்லாமை போலவும், ஞானிகள் இன்பதுன்பங்களை நுகர்வாரைப் போல் அவற்றினிடையே இருப்பாராயினும் அவர்க்கு அவ்வின்ப துன்பங்கள் இல்லை என்க.

யானையும் பூனையும் தான தருமமும் தவம் தயையும் மேலுக்கு உடையனபோற் றோன்றினும் உண்மையில் அவை இல்லாமை போலவும், சிதல் செல்வத்திற் செம்மாத்தலும், முதலை நீர்நிலைகளைப் பொருள்செய்தலும்

இல்லையாதல் போலவும், ஞானிகள், பயனின்றி யிருத்தலும், வஞ்சித்து ஒழுகுதலும், ஒரு பொருளிற் பற்றுக் கொள்ளுதலும் அல்லது அதற்கு அஞ்சுதலும் இல்லாதவராய், ஏனை அறிவிலோர் நலிந்தோர் கெட்டோரைப் போல், யாதுங் கொள்ளாது இன்பதுன்பமின்றி இருப்பர் என்பது இப் பகுதியின் பொருளமைப்பாக உள்ளது. 'ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்' என்பது பொருளும், ஏனைய இப் பகுதியில் உவமங் களுமாம். 'அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை' 'நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை' 'கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை' என்பன மக்கள் அறிந்து கொள்ளுதற்குரிய நீதியுரைகள் அல்லனவாதலின் அவையும் உவமமாயின. இங்ஙனம் உவமங் கூறுமுகத்தால் அவ்வுவமங்களின் கருத்துக்களும் வற்புறுத்தப் பட்டனவென்க. ஆசிரியர் திருவள்ளுவரும்,

> "தேவ ரனையர் கயவர்; அவருந்தாம்
> மேவன செய்தொழுக லான்"

என இம் முறைமையில் கருத்துக்களை எடுத்தோதி, உவமத்தினும் பொருளினும் வரும் இருவர் நிலைகளையும் நயம்பெற வற்புறுத்தியிருத்தல் இங்கே நினைவுகூரற் குரியது.

இவ்வரிய பகுதியினால், அவ்வவ் வுயிர்களின் இயற்கை யறிவு நிலைகளை எடுத்தோதி, அவ்வாற்றால் ஞானிகளின் இயற்கை மெய்யறிவு நிலையினைத் தெளிய விளக்கியிருக்கின்றமை தேறப்படும். இதற்கு முற்பகுதியிற் கல்வியறிவு நுவலப்பட்டமையால், இப்பகுதியில் விழுப்பம் மிக்க இயற்கை யறிவு நிலையினைப் பிற இயற்கையறிவு நிலைகளோடு வைத்து இனிது விளக்கப் பட்டுள்ளதென்பது.

இனி ஆறுவது பகுதியிற், செல்வப் பொருள் குறித்து வருகின்ற குறிப்புக்களுங் கருத்திருத்திக் கொள்ளல் வேண்டும். ' உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா. முடிமன்னரும் பெருஞ் செல்வரும் ஏழை யாயொழிதலும், இரப்போர் புரப்போராய் உயர்தலும், எல்லாம் சடுதியில் நிலைமாறலும், எழுநிலை மாடங்கள் கழுதைகள் மேயும் பாழ்நிலமாதலும், அப் பாழ்நிலம் மீண்டும் நெடுநகரமாய்ப் பொலிதலும், மணமக்கள் அந் நொடியே பிணமக்களாதலும் எல்லாம் உலகத்திற் கண் கூடாய்க் காணப்படுவனவாம். அதனால், பொருளில்லார், ஒருவரை ஒன்று இரத்தல் என்பது இயல்பாயிருக்கின் றது. அவ்வியற்கைநிலையை உற்றுக்கருதினால், அங்ஙனம் இரப்போர்க்கு ஒன்று ஈவது செல்வர்களின் கடமை யாகவே இருக்கின்றதென்பது நன்கு தெளிந்துகொள் ளப்படும். ஆதலால், அங்ஙனம் ஒன்று உதவுதற்கு உரிய மனைவியோடு கூடிய இல்லறவாழ்க்கை இல்லாதவர்க்கு அவர் இந்த உலகமும் அல்லது வானுலகமுமே ஒருங்கு பெற்றவராயினும், ஒரு பயனுமில்லையாய் முடிகின்றது என்று அதிவீரராமர் இப் பகுதியில் அறிவுறுத்துகின் றார். கருதவேண்டுவது, பொருள் தேடுதலன்று; கிடைத்ததைத் தகுமுறை உய்த்து வாழ்தலேயாம் என் பது அவர் கருத்தாயிருக்கின்றதென்று இதனால் தெளி யப்படும். இவ்வகையில் அதிவீரராமர் மிகு வீரராகவே விளங்கித் தோற்றமளிக்கின்றமை சற்றும் மறத்தலிய லாததாயிருக்கின்றது!

இனி ஏழாவது பகுதி, வீரக் கருத்தினை நிலையிட் டுரைப்பதாயுள்ளது.

யானை, அஞ்சாமை யுடையதாய்த் தான் பெரியதே யாயினும், தன்னை ஆட்சி செய்வதாயமைந்த மூங்கிற்

கோல் சிறியதேயாயினும், அவ்வாட்சி காரணமாக அதற்கு அது, அஞ்சும் நிலையில் இருக்கின்றது. நல் லியல்பு வாய்ந்த மான், தான் மெல் விலங்கேயாயினும், அரண் போன்ற மலைகளையுடைய பெரிய காடுகளி னுள்ளே பாதுகாப்பாக உயிர்வாழும் அமைப்பினைப் பெற்றும், அக் காட்டின் ஆட்சி விலங்காகிய புலிக்கு அஞ்சுதற்குரியதாயிருக்கின்றது. இவற்றின் நிலையே இங்ஙனமானால், யானையைப்போல் தறுகண்மையும் மானைப்போல் மென்கவர்ச்சியுமின்றிப் பொதுநிலையி லுள்ள எளிய சிற்றுயிராகிய தேரையின் நிலையை என் னென்பது ! அது, ஆரைப் பூடுகளால் மேல் மூடுண்ட ஆழ்ந்த வளையில் மறைவுண்டு, இருக்குமிடந் தெரியா திருப்பதேயாயினும், நச்சுத்தன்மை வாய்ந்த பாம்பிற்கு அது மிகவும் அஞ்சும்படி யிருக்கின்றது.

ஆதலால், யானையைப்போன்ற ஆண்மையும் பெருமையும் உடையரேயாயினும், மானைப் போன்ற மெல்லியல்பும் கவர்ச்சியுமுடையரேயாயினும், அல்லது தேரையைப் போன்ற இவ்விருவகை நலனுமில்லா எளியரே யாயினும், தாம் எத்தனைத் தன்வலியும் அரண்வலியும் மறைவும் முறையே உடையராயினும், தாம் இருக்கும் நாட்டின் ஆட்சி, சிறுமையுங், கொடு மையும், நச்சியல்பும் வாய்ந்ததாயிருப்பின், அத்தகைய கொடுங்கோன் மன்னரும் சான்றோரல்லாத் தீய அமைச்சர் முதலியோரும் வாழும் நாட்டைவிடக், கடும்புலி வாழுங் காடும் குறவர்கள் வாழும் மலைப்பாங் கருமே நல்லன என்று அஞ்சி அவர் விலகிச் செல்வது கட்டாயமாயிருக்கின்றது.

இங்ஙனம் அதிவீரராமர் இந்தப்பகுதியிற் கொடுங் கோன்மையின் கடுமையை மிக வெறுத்து அதற்கெதி

ரில் நடந்துகொள்ளுதற்குரிய வீரவொழுக்கத்தின் இயல்பை நன்கு விளக்கியிருக்கின்றனர்.

இனி, **எட்டாவது பகுதி**, முறைமையோடு ஒழுகாத பதர் மாந்தரைப் பற்றி விளக்கிப் பேசுவதாயிருக்கின்றது. தக்க அமைப்புக்களோடு பொருந்தியிருந்தும், அவற்றைச் சிறக்கப் பயன்படுத்திக்கொண்டு வாழ்தலறியாத எளிய மாந்தரையே ஆசிரியர் இப் பகுதியிற் 'பதர்' என விதந்து பேசியிருக்கின்றார். உயர்ந்த ஒழுக்கங்கட்கு இடந் தர வல்ல சிறந்த குடியிற் பிறந்தும் காலையும் மாலையும் நான்மறை யோதி ஒழுக்கங் காத்துச் சிறவாத வீணரும், முடியுடைப் பெரு மன்னராய்ச், சிறந்த செல்வங்களிற் றிகழ்ந்தும், குடியலைத்துக் கொடுங்கோல ராகித் தம் நிலை குலைந்து தாழும் மூர்க்கரும், தக்க முதலாகப் பெருந்தொகை கிடைக்கப் பெற்றும் அதனை வாணிபத்தாற் பெருக்கிக்கொள்ள மாட்டாது அம் முதலையே அழித்துக் கெடுகின்ற மாந்தரும், விதையும் ஏரும் தம்மிடம் உளவாயிருப்ப அவற்றைப் பயன்படுத்தி வாழ்தலறியாது இளைத்துச் சோர்ந்து கிடக்கும் ஏழையரும், தமக்குத் தக்க நன்மனைவியர் வாய்க்கப் பெற்றும் அவரை அவர்தம் தாய் மனைக்கு அனுப்பிவிட்டும் தம் மனையிலேயே தனியாக இருத்திவிட்டும் பின்பு அவரைக் கருதாது பிரிந்துறையும் பேதையரும், தாம் தொழில் செய்வதற்குரிய கருவிகளும் பொருளும் ஏற்றபடி தம்மிடம் இருந்தும் அவற்றிற் கருத்தில்லாமல் அவற்றைப் பிறர் எடுத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டு ஏமாந்து நிற்கும் அறிவிலாரும் மக்களிற் பதராவர் என்பது இந்தப் பகுதியின் கருத்தாகும். இதன்கண், முறையே, அந்தணர், அரசர் வணிகர், உழவர், பொதுமக்கள், தொழிலாளர் எனப்

பலதிறத்தாரிலும், தக்க மதிப்பிற்குரிய ரல்லராய்ப், பலராலும் ஒதுக்கி இகழத்தக்க பதர்போன்ற மக்களை ஆசிரியர் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர்.

இனி, ஒன்பதாவது பகுதியாகிய இறுதிப் பகுதி, இந்நூலின் முடிப்புரையாய் இவ்வெல்லாவற்றின் ஒழுங்கு முறைமையை வலியுறுத்திக் காட்டுவதாய் அமைந்துள்ளது. இதன் கருத்து விளக்கம் முன்னரே உரைக்கப்பட்டிருக்கின்றது.

இனி, இவ்வாறமைந்த இந் நூன்முறைமையில் அதிவீரராமர் அங்கங்கும் பெண்ணினத்தாரையும் அடிக்கடி நினைந்து சிலச்சில கூறிச்சொல்வது உலகுக்கு நலம் பயப்பதாய்ச் சிறந்துள்ளது.

அழகு அழகு எனக் கூறிய முதற் பகுதியில்,

"பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்"

"குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்"

எனவும், அடுத்து இரண்டாம் பகுதியில்,

"கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்"

எனவும், இங்ஙனமே அங்கங்கும் பிற பகுதிகளில்,

"மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத்தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்"

எனவும்,

"தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவட் பாராப் பேதையும் பதரே"

"தன்மனை யாளைத் தனிமனை இருத்திப்
பிறர்மனைக் கேகும் பேதையும் பதரே"

எனவும்,

"எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே"

எனவும் பல்வேறு வகையில் மாதரைப்பற்றிய உரைகள் வந்துள்ளன. ஒளவையார் 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு' என்று தாம் இயற்றிய கொன்றை வேந்தனிற் கூறுவர்; ஆனால் இவரோ 'பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாதிருத்தல்' என மாதரைப்பற்றி முதற் பகுதியிலேயே பேசியிருக்கின்றனர். இறுதிப் பகுதியிலும்'பெண்வழிச் சேறேல்' என்னுங் கருத்தினை நிறுத்தியிருக்கின்றனர். 'பெண்வழிச் செல்லலாகாது' என்றது, 'அவர் இசைவு போனபடியெல்லாம் ஆடவர் நடத்தலாகாது'என்றதற்கு.மாதர் மிக்க இரக்கமும் மென்மையும் உடையராதலின், காரியப்பாட்டிற்கு அவரியல்பு ஏலாதென்பது கருதி முதலிலும் இறுதியிலும் இவ்விரு வகை நீதிகளும் இவரால் எடுத்துரைக்கப்பட்டன. எனினும்,மாதர்கள்பால் இவர்க்குள்ள நல்லெண்ணமும் மேம்பாடும், இடையே இவர், தம் மனையாளைத் தாய் மனைக் ககற்றியும் தனிமனை யிருத்தியும் அன்பின்றி யொழுகும் ஆடவரை மறுத்துப் பேசுவதிலிருந்தும் நன்கு விளக்கமாகின்றன. நிலையாமையைப் பற்றிக் கூறிய இடத்தில், மணவணியணிந்த மணமகனைப்பற்றி ஏதும் உரையாமல் மணவணி யணிந்த மகளிர் தங் கணவரை இழந்து தவிக்க நேரும் இன்னலைமட்டும் எடுத்து விளக்குவதிலிருந்து, மாதர்பால் இவர்க்கு இயற்கையேயுள்ள இரக்கத்தின் மிகுதிப்பாடு இனிது புலப்

படுகின்றது. பொதுவாகவே, இரங்கத்தக்கவரிடம் இவர் மிக்க இரக்கமுடையவராகவே தோற்றுகின்றார். பொருளும் வலியும் இல்லாதவர் இரந்துண்ணுதலைப் பற்றிச் சற்றும் சினவாமல், 'அஃதவர்க்கு இயல்பே' என்று பரிந்து பேசுதல்கொண்டும் இது தெளியப்படும்.

"இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே"
"இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே"

என்பவை இவர் இரங்கியுரைக்கும் தொடர்களாகும். நல்வினையற்ற மணமகளிரைப்பற்றி உரைத்தவிடத்து, அதிவீரராமரை யொப்ப அவ்வளவு உருக்கந் தோன்ற உரைத்தார் இதுகாறும் எவருமிலர்.

ஆசிரியர் அதிவீரராமர்க்குக் கொழுந்தோடிய இவ் வினிய பேராற்றல் நூன் முழுமையுங் காணப்படுகின் றது. எடுப்பது எதுவாயினும் அதன்கண் இயன்றமட் டும் முடிநிலைபோன்ற கருத்துக்களையே தேர்ந்தெடுத்து அவற்றை அக் கொழுந்தோடிய முறையிலேயே சொல் லுவோராய் இவர் திகழ்கின்றார். இதனைப், 'பனையின் திரள்பழத் தொருவிதை' என்பதினும், 'வானுற ஓங்கி வளம்பெற வளரினும்' என்பதினும், 'ஒருவர்க் கிருக்க நிழலாகாதே' என்பதினும், மற்றிவற்றிற்கு நேர் எதிர்மறையில் வருகின்ற 'ஆலின் சிறுபழத் தொருவிதை' என்பதினும், 'சிறுமீன் சினையினும் நுண்ணிதே யாயினும்' என்பதினும், 'பெரும்படை யொடு மன்னர்க் கிருக்க நிழலா கும்மே' என்பதினும் வைத்தே இனிதறிந்துகொள்ளலாம். 'குன்றத்தனை இரு நிதி அன்றைப் பகலே அழியினும் அழியும்' எனப் பிறுண்டும் இங்ஙனங் கூறுவர். பெரியதை எடுத்தால்

அதனில் மிகப் பெரியதாகவும், சிறியதைப் பேசினுல் அதனில் மிகச் சிறியதாகவும், துன்பத்தை உரைத்தால் மிகப் பெரிய துன்பமாகவும், இன்பத்தை இயம்பினுல் மிகப் பெரிய இன்பமாகவும் இவ்வாறு மிக மிகுத்துப் பேசும் இயல்பு, இயற்கை நிலைக்கு இயையாதென்னும் ஏதுவினுல், மெய்வழக்கிற் கதுவப்பட்டொழுகும் பேருள்ளமுடையார்க்குச் சற்று வேறுபாடாகக்காணப் படுமாயினும், உள்ளக் கிளர்ச்சியைப் பெரிதெழுப்பி இன்பந் தந்து கருத்துக்களை உரமாக உணர்த்துவதற்கு ஒரு வகையில் இது பயன்படுவதாயிருக்கின்றது. ஆசிரியர் அதிவீரராமர்க்கு இங்ஙனம் உரமாக வலியுறுத்தியுரைக்கும் நோக்கமும் உண்டென்பது, ' வாய்ப்பறையாகவும் நாக்கடிப் பாகவும் சாற்றுவதொன்றைப் போற்றிக் கேண்மின் ' என நறுந்தொகையில் அவரே அழுத்தந்தோன்றக் கூறுவதனுலுந் தெரிகின்றது.

இனி, மேற்காட்டியவாறு மகளிரினத்தைப் பற்றி அதிவீரராமர்க்கு அங்கங்கும் நினைவெழுந்ததைவிட, அரசியல் நினைவு, இடந்தோறும் இடைவிடாமல் எழுந்தெழுந்து அவர் உள்ளத்தை மிகவுங் கவர்ந்திருக்கின்றது.

அழகியல்பு கூறும் முதற்பகுதியில் நாற்பாற் குலத்தின் இயல்பு கூறிய இடத்து, 'மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை' என்று இடையே கூறியதோடு அமையாது,

" மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல் "
" தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை "

எனப் பின்னும் அரசியல் உறுப்புக்களை நினைந்து சில தொடர்கள் உரையாநின்ருர்.

அடுத்து இரண்டாம் பகுதியிலும்,

" ...அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே"

எனவும், அதற்கடுத்த மூன்றும் பகுதியிலும் பிழை பொறுத்தலாகிய முறைமை செலுத்துதலை நினைந்து,

" சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலு மரிதே"

எனவும், நட்பென்னும் உறுப்புக்கேற்பன கருதி,

" நாருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே"

எனவும், நான்கு ஐந்தாம் பகுதிகளில் அரசியலில் அறிஞர்கள் விரும்பப்படுதலை நினைந்து,

" அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்"

எனவும், நிலை தாழும் அரசர்களின் நிலை நினைந்து,

" கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை"

எனவும், இங்ஙனமே பிற பகுதிகளிலும் முறையே

" குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர் ..."

" அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்"

" கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டின்"

" குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை இறைவனும் மூர்க்கனும்"

எனவும் உரைத்துச் செல்லுதலோடு, இறுதிப் பகுதியிலும், " இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே இருவரும் பொருந்த உரையாராயின் மனுமுறை நெறி

யின் வழக்கிழந்தவர்தாம்" என அரசன் நடுவுநின்று முறை செலுத்துதற்குரிய ஆட்சி முறையினையும் வலி யுறுத்திக் கூறிச் செல்லுதல் காண்க.

நூலின் முதலிலிருந்து இறுதி வரையிலும் இங்ஙனம் அதிவீரராமர்க்கு அரசனையும் அரசியலையும் பற்றிய நினைவுகள் அடிக்கடி தோன்றி நின்றமை நன்கு புலனாதலின், அவர்க்கு ஆட்சி முறையின்கண் உள்ளம் எத்துணை அழுந்தியிருக்கின்றதென்பது எளிதில் தேர்ந்துகொள்ளப்படும். ஆதலின் இந்நூல், உலகியல் நிலைகளைத் தெளிவாக விரித்து விளக்கி, அந்நிலைகளுக் கேற்ப அரசியல் நடைபெற வேண்டும் முறைமை களையுங் குறிக்கும், ஒரு சிறிய சட்ட அறநூலாகத் தமிழில் விளங்கி வருகின்றது என்பது.

முற்றும்.

கழக வெளியீடு: ௫௬௧

சிவப்பிரகாசர் செந்நெறி

ஆசிரியர்:

திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள்

(இளவழகனார்)

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: August, 1944.
Reprint: July, 1958.

SIVAPRAKASAR SENNERI

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200

பதிப்புரை

மக்கட்கு, நூற்பயிற்சியில் விழைவு மிகுந்து வருகின்றது. புதியபுதிய உரைநடை நூல்கள் மலர்ந்து வருகின்றன. தமிழ் மணம் நாடெங்கும் கமழ்கின்றது. முன்னோர் நூல்கள் இவ் வளர்ச்சிக்குப் பெரிதும் ஆதரவா யிருக்கின்றன.

ஆயுந்தொறும் அழகு திரளும் நறு நூல்களே தமிழிற் பெரும்பாலன. மாட்சி மிக்க அந் நூல்களை அவற்றின் அழகுள்ளந் தோன்றக் கடைந்து காட்டும் ஆராய்ச்சி விளக்க நூல்கள் இனி இன்றியமையாதன.

நமது செந்தமிழில், ஆத்திசூடி முதல் தொல்காப்பியம் வரையில், தக்க நூல்களுக்கெல்லாம் இவ்வாறு ஆய்வு நூல்கள் கட்டாயம் இருத்தல்வேண்டும். இருந்தால், மக்கள், தமிழ் நூல்களின் உள்ளமறிந்து துய்த்து இன்புறுவர்; தமிழ் மொழி அவர்கள் வாழ்க்கையூடு விரவி நெருக்கங்கொள்ளும்; கல்வி நாடெங்கும் எளிதிற் பரவி நாகரிகம் உயரும்.

கழகம் இவ் வரிசையிலும் உற்ற தொண்டு செய்ய முயன்று வருகின்றது. 'ஔவையார் திருவுள்ளம்' 'அதிவீரராமர் அற நெறி' என்னும் இரண்டு ஆய்வு நூல்கள் சென்ற ஆண்டில் வெளிவந்தன. இப்போது, சிவப்பிரகாசர் செந்நெறி என்னும் இவ் வழகிய நூலையும் கழகம் மகிழ்வுடன் வெளியிடுகின்றது. இதனை இயற்றிய ஆசிரியர் திரு. இளவழகனார் அவர்கள்.

இந் நூலில், சிவப்பிரகாச முனிவர் அருளிய நன்னெறி என்னும் நீதி நூலின் திறம், கருத்தாக ஆராயப்பெற்றுள்ளது. நூலின் முகப்பில், நன்னெறி மூலமும் சிற்சில அருஞ் சொற் களுக்கு அடிக்குறிப்பாக உரை விளக்கமும் சேர்க்கப்பட்டிருக் கின்றன. ஆராய்ச்சியிற் கருத்தூன்றிச் செல்வார்க்கு இவை உதவியாயிருக்கும். தமிழ் மக்கள், தமிழ் மொழிக்கு நாளும் வளம்மிகுத்து வருக! நம்மை உய்விக்குங் கருவி அது!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

உ

திருச்சிற்றம்பலம்

துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர்

அருளிய

நன்னெறி

கடவுள் வாழ்த்து

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

நூல்

1. கடமையின் உதவுக

முகமன் எதிர்பாராமல் உதவுக

1. என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்;—
[துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து?

(வாழ்த்து): விநாயகன் அடி - ஓவெனக் கலிக்கும் உந்துதல். 'நன்னெறி வெண்பா நாற்பதும்' என்றமையால், நூலின் பெயரும், யாப்பும், செய்யுளின் தொகையும் பெறப் பட்டன.

1. பூவின் - பூவைப்போல. பொலி - மென்மையும் மினுமினுப்புங் கொண்டு அழகு திகழ்கின்ற. பூங்கை - அழகிய கை.

வன்சொல்லும் இனிதாதல் உண்டு

2. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க ;—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ, நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு ?

இனிய நெறியறிந்து பெறுக

3. தங்கட் குதவிலர்கைத் தாமொன்றுகொள்ளினவர்
தங்கட் குரியவரால் தாங்கொள்க ;—தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையாய்! ஆவின்
கன்றினாற் கொள்ப கறந்து. [பால்

பொருள், பயன்படுத்துவார்க்குச் செல்வம்

4. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம், வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் ;—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

நட்பிற் பிரியாமை

5. நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் ;—பூக்
[குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினும் திண்மைநிலை போம்.

---

2. மாசற்ற நெஞ்சுடையார் - மனத்துக்கண் மாசில்லாதவர் (குறள், ௪ : ௪). நல்லோன் - சாக்கிய நாயனார். கருப்புவில்லோன் - காமன்.

4. வேறு - அவரன்றி ; நீர் - நீரை.

5. "பண்டு முளைப்ப தரிசியே யானாலும் விண்டுமி போனால் முளையாது" (மூதுரை, கக.)

காதலர் ஒருமை

6. காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே ;—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி யென்முகத்தாய்!நோக்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். [கல்தான்

II. செருக்கின்றி உதவுக

கல்விச்செருக்கு விடுக

7. 'கடலே அனையம்யாம் கல்வியால்' என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே ;
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்.

சினத்தைக் காத்துக்கொள்க

8. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க ;—வெள்ளந்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு.

சார்பின் வலி

9. மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவில் ;—பலியேல்
கடவுள் அவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே,
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து.

---

6. கலை எண்ணிரண்டும் - கலை பதினாறும். ஒன்றும் - பொருந்துகின்ற. மதி என் - திங்கள் என்று சொல்லப்படுகின்ற.

7. செருக்கு - செருக்கை. விடல் - விடுக. முனிக்கரசு - அகத்தியர்.

9. விரவலரை - பகைவரை. பலி ஏல் - பிச்சை ஏற்கின்ற. கட்செவி - பாம்பு. அப் புள்ளரசை - அக் கருடனை.

தன்னலங் கருதாமை

10. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் ;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

புலனின்பங்களின் புன்மை

11. பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பால் அன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் ;—துப்பின்
சுழற்றுங்கோல் கற்றூணைச் சூழா வளிபோய்ச்
சுழற்றும் சிறுபுன் துரும்பு.

உடம்பில் உயிர் அமைப்பு

12. வருந்தும் உயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துதல் தானே புதுமை ?—திருந்திழாய் !
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ, நிற்றல் வியப்பு.

III. அன்புடன் உதவுக

அன்பின் உதவுக

13. பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர் ;—சுரக்கும்
மலையளவு நின்றமுலை மாதே! மதியின்
கலையளவு நின்ற கதிர்.

---

10. நீக்குமேல் நின்று - மேல் நின்று நீக்கும்.

11. புலன்க ளைந்துநோய் - புலன்கள் ஐந்தும் நோய். நோய் - துன்பம். துப்பின் - தனது வலிமையால்.

12. பொள்ளல் - பொத்தல். வீதலோ - வீழ்தலோ?

செல்வச்செருக்கு விடுக

14. 'தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம்' [என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்;
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

அன்பின்றிச் செல்வம் பயனில்லை

15. இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்தும்அவற் கென்செய்யும்?—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்?
விழியிலார்க் கேது விளக்கு?

அதிகாரம் முதலியனவும் பயனில்லை

16. தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந் [தோர்
தம்மை மதியார்; தமையடைந்தோர்—தம்மின்
இழியினும் செல்வர், இடர்தீர்ப்பர்; அல்கு
கழியினும்செல் லாதோ கடல்?

வறுமையிலும் உதவி

17. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

---

14. இரைக்கும் - ஒலிக்கும்.

15. இல்லானுக்கு அன்பு இங்கு-இவ்வுலகத்தில், அன்பில்லாதவனுக்கு. மொழியிலார்க்கு - பேச்சில்லாதவர்க்கு; ஊமைகளுக்கு.

16. இழியினும் - இழிந்தவராயினும். செல்வர் - சென்று. அல்கு - சுருங்கிய; சிறுத்த.

இன்சொல்

18. இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும்மகிழாதே ;—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால்,
கதிர்வரவால் பொங்கும் கடல். [தண்ணென்

நற்குணம்

19. நல்லோர் வரவான் நகைமுகங்கொண் டின்
[புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர் ;
திருந்தும் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர.

பிறர் துன்பங்கண்டு உள்ளங் கசிதல்

20. பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்
[டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

---

18. இருநீர் வியன் உலகம் - கடல்சூழ்ந்த இந்தப் பெரிய உலகமானது அழல் கதிரால் - ஞாயிற்றின் கதிரால். தண் என் கதிர் - திங்களின் கதிர்.

19. அழுங்குவார் - வருந்துவார். வல்லோர் - கல்வி வல்லோர். திருந்தும் - சிறப்புறும். தேமா - 'தேமா' என்னும் சிறந்த மாமர வகை.

20. எரியின் இழுது - நெருப்பிற் பட்ட நெய். மண்டு - செறிந்த. கலுழும் - அழும்.

அன்பின்முன் செருக்கில்லை

21. எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம் ;—எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை.

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை

22. ஆக்கும் அறிவா னலது பிறப்பினுன்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க ;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

IV. ஆற்றலோடு உதவுக

உதவும் ஆற்றல் நெகிழலாகாது

23. பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம்—நெகிழ்ச்சி
பெறும்;பூரிக் கின்றமுலைப் பேதாய் ! பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

---

21. எழுத்து - நூல்கள் ; அவற்றை அறிதலாவது அவற்றின் உட்கருத்தை அறிதல். ஆயும் - ஆராயும். முன் - எதிரில். மிகை வீயும் - செருக்கு வீழும்.

22. ஆக்கும் - சிறப்பை உண்டாக்கும். மீ கொள் உயர்வு இழிவு - மேன்மையாகக் கருதும் உயர்வையும், அவ்வாறு கருதாத இழிவையும். வேண்டற்க - விரும்பவேண்டா. கடு - நஞ்சு.

23. பகர்ச்சி மடவார் - இனிப்பப் பேசுதலுடைய மடவாரோடு. நோன்பாற்றல் திகழ்ச்சிதரு - தவ ஆற்றல் விளக்கமுறுகின்ற.

இகழ்ச்சியைப் பொருட்படுத்லாகாது

24. உண்டு குணம்இங் கொருவர்க் கெனினும்,கீழ்,
கொண்டு புகல்வதவர் குற்றமே ;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்
காக்கை விரும்பும் கனி ? [பன்றே

கீழோர் சேர்க்கை ஆகாது

25. கல்லா அறிவின் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணுரே ;—வில்லார்
கணையின் பொலியுங் கருங்கண்ணுய் ! நொய்தாம்
புணையில் புகும்ஒண் பொருள்.

உயிர்த்திறமை கருதுக

26. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் ;—மடவரால் !
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளி
விண்ணளவா யிற்றே விளம்பு. [தான்

மெய்வருந்தியும் உதவுக

27. கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் ;—அம்மா,

---

24. கீழ் - கீழோர். மலர்ச்சேக்கை - மலர் என்னும் இருக்கையை.

25. கனம் - பெருமை. புணை-தெப்பத்தில். ஒண்பொருள்-காசுகள், மணிகள் ; பளுவான அப் பொருட் பேழைகள்.

26. கதிர் ஒளி - ஞாயிற்றின் ஒளி.

27. உகவாமல் - விரும்பாமல். எயிறு - பல். அம்மா : வியப்புக் குறி.

முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

வெறுப்பிலும் உதவுக

28. முனிவினும் நல்குவர் மூதறிஞர், உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் ;—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான், எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

இடுக்கண் அஞ்சாது உதவுக

29. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கும் ஒருகோடி யாக—நடுக்கமுறார் ;
பண்ணிற் புகலும் பனிமொழியாய்! அஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்?

காலத்தில் அறஞ்செய்க

30. கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகு [தன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே;—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

---

28. முனிவினும் - சினத்திலும். நனி விளைவு இல் - மிக முற்றுதல் இல்லாத. கதலி - வாழை. அறை - சொல்லு.

29. நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் - தமது நெஞ்சம் உயர்ந்த கடவுளிடத்தில் அழுந்தப்பெற்றோர். ஒரு கோடியாக என்றது, மிகுதியாக என்னும் பொருட்டு. பண்ணின் - பாட்டைப்போல. மதிமான் - நிலாவில் இருப்பதுபோலக் காணப் படும் மான்.

30. கொல்வான் - கொல்வதற்கு.

பிறர் துயரந் தாங்குக

31. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்;—நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்கும் கடிது.

மெய்யுணர்ந்து உதவுக

32. பன்னும் பனுவற் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே;—நன்னுதால் !
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான் ?

பெரியோர், போற்றுதல் வேண்டார்

33. எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்,
விள்ளா அறிஞரது வேண்டாரே;—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுளம், அன்றிக்
கரைகாப் புளதோ கடல்?

ஆனல், பழிக்கு அஞ்சுவர்

34. அறிவுடையா ரன்றி அதுபெறுர் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும்;—பிறைநுதால்!

---

31. தாக்கும் பிறர் துயரம் பேரறிஞர் தாங்கிக் காக்க விரைகுவர் என்றபடி. மெய் - உடம்பில். வியன்கோல் அடி - தடித்த கோலின் அடியை. கடிது - விரைவாக.

32. பனுவற் பயன் - நூலின் பயன். காழ் ஒன்று - வயிரம் பொருந்திய.

33. போற்றற்குரியர் - தம்மைக் காத்துக்கொள்ளுதற் குரியர். விள்ளா - நீங்காத. நீர் கட்டுகுளம் - நீரைக் கட்டி வைக்கின்ற செயற்கைக் குளம்.

34. செறிபழியை-மிகப் பொருந்தும் பழியை. வண்ணம் - அழகு. வாள் - ஒளியுடைய.

வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு? [டுக்

நல்லோரை விரும்புவர்

35. கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே; - வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்
பால்வேண்டும் வாழைப் பழம். [காடி,

V. தக்கார்க்கு உதவுக

உலகத்தில் உதவி தக்கார்க்கே

36. தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்;—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்?

சிறியோர், தாமே நிலைபெறார்

37. பெரியார்முன் தன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும்;—தெரியாய்கொல்?
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய்! விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

---

35. வேல் வேண்டும் - வேலைத் தமக்கு உவமமாக விரும்புகின்ற.

36. மிக்கார்க்கு - நெறிகடந்த தகாதவர்க்கு. காட்டு - காட்டில். முளி - உலருகின்ற. "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியும்" (மூதுரை, ௧0)

37. புனைந்துரைத்த - சிறப்பித்துப் பேசிய. தரியாது - அச் சிறப்புத் தரியாது. பொன் - பொன்னின் நிறத்தை. புணர் - நெருங்கிய. தீர்ந்தன்று - தீர்ந்தது.

தக்கார் தொடர்பு, நலம் பெருக்கும்

38. நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்,
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே;—நல்லாய்
[கேள் !
காய்முற்றின் தின்தீங் கனியாம், இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னுகிப் போம்?

தகாதார் தொடர்பில் தீமை உள்ளது

39. கற்றறியார் செய்யுங் கடுநட்பும் தாங்கூடி
உற்றுழியும் தீமைநிகழ் வுள்ளதே; - பொற்றொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூ,மலர்ந்த
அன்றே மணமுடைய தாம்.

தக்காரைப் போற்றிக்கொள்க

40. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார்;—மின்
[னுமணி
பூணும் பிறவுறுப்புப், பொன்னே!, அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண் !

---

39. கூடி உற்ற உழியும் - கூடிப் பொருந்திய அன்றேயும்.

40. பொன் - பொன் அணிகலன். புனையா - அப் பொன் அணிகலனை அணிதலில்லாத அது - அந்த மின்னும் அணிகலன்.

சிவப்பிரகாசர் செந்நெறி

க. தோற்றுவாய்

பதினேழாம் நூற்றாண்டில், தமிழ்ச் சைவ வானில், இரண்டு கவிச் சுடர்கள் திடீரெனப் பூத்துப் பொலிந்தன. செங்கதிரும் வெண்கதிரும் மாறிமாறிச் சொரிந்து உலகைப் பொன்வண்ணமும் தண்வண்ண மும் ஆக்கி உய்வித்தன. பகல் ஞாயிறும் இரவு மதிய முஞ் சேர்ந்து ஒருநாள் விளக்கம்! பதினேழாம் நூற் றாண்டின் முற்பாதியும் பிற்பாதியும் இங்ஙனங் குமர குருபர அடிகளாலும் சிவப்பிரகாச முனிவராலும் வான் விளக்கம் பெற்று விளங்கின.

செஞ்சுடர், நாட்டின் தென்கோடியிற் பாண்டி நாட்டில் தோன்றிக், கவிக்கதிர் சொரிந்துகொண்டே வடகோடியிற் சென்று காசியில் மறைந்தது. வெண் சுடர், நாட்டின் வடக்கே தொண்டைமண்டலத்தில் எழுந்து, தனது மதிக்கலையைப் பெருக்கிக்கொண்டு தென்கோடி நாட்டுக்கு ஏகி, நிறைமதியமாய் விளங்கித், தன் கவிநிலவைப் பொழிந்துகொண்டு, தான் எழுந்த பக்கமே மீண்டு, மறைவுற்றது. ஞாயிறும் திங்களும் முழுவட்டமாய் நிறைகதிர் பெற்றுப் பொலிவுறும் இடம் ஒரு பக்கமே ; குமரகுருபர அடிகளுக்கும் சிவப் பிரகாச முனிவருக்கும் 'கந்தர் கலிவெண்பா'வினாலும் 'செந்தில் நிரோட்டக யமகத்'தாலும் நிறைபொலிவு

அரும்பி அருள் விளக்கந் தொடங்கிய இடம் திருச் செந்திலே!

உலகுய்ய எழுந்த இவ்விரு பெருஞ் சுடர்களும் பொதுவில் அறவொளி வழங்கித் தமிழ்க்கு வாழ்வு பெருக்கியுள்ளன. ஒன்று 'நீதிநெறி விளக்கம்' வழங்கியது. மற்ருென்று, 'நன்னெறிக்' கதிர் உதவியது!

I. கவிதை

கவிதை ஒரு விருந்து. உள்ளுணர்ச்சியின் தாண்டவம். அழகுணர்வாகிய கலையே அது. முயற்சியற்ற எளிமையில், தானே அரும்பும் இனிமை. கவிஞனுக்கு எங்கும் எழில்; எங்கும் இன்பம். சிறிய துரும்பும் அவனிடம் பெரிய மெருகு பெறுகின்றது. அழியும் பொருள்களில் அழியாத் திரு நுகர்வோன் அவனே. எதனையும் அவன், கண்ணால் காதால் பிற பொறிகளால் மனத்தால் அறிவால் அறியாமல், உணர்ச்சியால் நுகர்ந்து பழகுவோன். உள்ளிருந்து பொங்கும் அவ் வினிமையூற்று, தானே மேல்வழிந்து ததும்பிப் பெருக்கெடுக்கின்றது.

பெருக்கெடுப்பதில் இருவகை யுண்டு. ஒன்று, காட்டாற்றுப் பெருக்கு. அது வெறி பிடித்த கவி. வழி துறை தெரியாது வழிந்து பெருகி, எதிர்ப்பட்டவற்றையும் அழித்துக் கெடுத்து, ஒன்றுக்கும் உதவாமல் இடம்பமாய், கலங்கலாய், உருண்டோடி ஒழிதல். இது கவிதையின் பயன்பட்ட நிலையன்று; பொதுநிலை. சிறப்பு நிலையன்று; அஃதாவது, உண்மை நிலையன்று.

பயன்பட்ட உண்மை நிலை, ஒழுங்குடையதாய்ப் பெருகும்; தெளிந்து தோன்றும்; அமைந்து, உள்

வீறு படைத்துத் திகழும். புவியினுக்கு அணியாய், உதவியாய், நெறி அளாவித், தண்ணென்று ஒழுகும். கவிதையின் இவ் வுண்மைநிலை,

"புவியினுக்கு அணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் ருகி,
அவிஅகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறிஅ ளாவிச்,
சவியுறத் தெளிந்து தண்ணென்
ருெழுக்கமுந் தழுவிச், சான்றேர்
கவிஎனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்."

என்னும் கம்பர் கவின்மொழியில் சுடர்விட்டுப் பொலி கின்றது. இது நல்லாற்றின் இயல்பு! கவிதையின் பொது நிலைக்கும் சிறப்பு நிலைக்கும் எவ்வளவு வேறு பாடு!

பொதுநிலையாகிய கவிவெறி பெரும்பாலும் ஒரே போக்குடையது. ஒரே சந்தை இரைச்சல்! யாழின் தீங்குரலன்று. பயன்பட்ட எழில்நிலை யன்று; கலை யன்று; ஆக்க வேலையன்று; அழிவுச் சூழல்.

அப் பொதுக் கவி, பெரும்பாலும் உருவகக் கூக் குரல்! உருவகம், உறுத்த அணி. உவமை, அதன் மெருகு உரு; மென்மை எழில்; சிறப்புக் கவியின் சிறப்பியல்பு. கம்பர், மேற்செய்யுளில், சில உருவகங் களைப் பொதுவகையாக உரைத்து, உவமைச் சிறப் பியல்பில் இயைத்து முடித்திருத்தலை உற்று நோக்குதல் வேண்டும்.

ஆசிரியர் தொல்காப்பியர் கவிதையின் உண்மை யியல்பை நினைந்து, அதன் நிலையில் இயல்பாக அது

பெற்றிருக்கும் உவமை யணியின் முடிநிலை அழகைக் கருதி, உவமை ஒன்றையே சிறப்பாகத் தமதிலக்க ணத்தில் எடுத்து ஒரு தனி இயலில் விளக்கியிருக்கும் நுட்பமும் ஒட்பமுங் கண்டுகொள்ளல் வேண்டும். சங்ககாலத்துக் கவிகள் பெரும்பான்மையும் இவ் வியல்பமைந்தவை.

இன்னும், கவியின் பொதுக் கூச்சலில், பிரிவு பட்ட அழகியல்புகள் விளங்கித் தெரியா. கவியின் பரு வடிவே அது; குழவிக்கல் போன்றது; கவியின் தொடக்கநிலை. இயற்கை முகமாகவே கூறினல், அதனை, முளைபோன்ற பொதுநிலை எனலாம். அழகிய கிளைகளும், பச்சை இலைகளும், பன்னிற மலர்களும், நறுஞ்சுவைக் கனிகளும், அக் கனிகளின் முத்து வரிசை வித்துக்களுமான இயற்கைச் சித்திரங்கள்—கலையழகு கள்—வெறிக்கவியில் இல்லை. அக்கவி புதுக்கவியன்று; பொதுக் கவியே! புதுமையில் சிலிர் சிலிர்ப்பிருக்கும்; பொதுமையில் இராது. ஒரே குளிர். தென்றலின் குளிர்ச்சியாகுமா கூதிரின் குளிர்!

11. அறன்

இனி, இயற்கையின் எழிலில், ஓர் அரிய மறை பொருள் எங்கும் மின்னிக்கொண் டிருத்தலையுங் காணலாம். அதனைக் கருத்தூன்றி எண்ணிப் பார்த் தல் வேண்டும். எங்கும் ஒழுங்கு; கண்டிப்பு; கடமை; முறை; நீதி. இவற்றை 'அறம்' என்று ஒரே மொழியால் முன்னேர் விளக்கினர். இயற்கை யின்—எழில் மலர்ச்சியின்—உள்ளுறை, அறம், இறை நிலை அது. இறைவனை 'அறவாழி அந்தணன்' என்று திருவாய்மலர்ந்தார் பெரியார் திருவள்ளுவர்! எழி

வின் மலர்ச்சி அவ் வறக்கடவுளின் ஆடை அணி கலன்கள்.

கவிதையின் உண்மைநிலை, கலைப் பிரிவுகளாகிய இயற்கைச் சித்திரங்களை இசைப்பது மட்டுமன்று. அவற்றின் உள்நுழைந்து அறத்தைத் தொட்டு, அங்கிருந்தே ஊற்றெடுத்துப் பெருகுவது. அது, கவியுண்மையின் நுண்மை நிலையாகும். அந் நிலையமைந்த உணர்வு, மேலே மோனமாயினும், அதுவே விறுவிறுத்த ஒலி நிலையம்! அதன் குரல் ஓர் ஒழுங்கான ஒலி முறையிலேயே இயல்பாக எழும்; அவ்வியல்பு முறையையே, இன்ன இன்ன ஒலியொழுங்குகள் என 'யாப்பிலக்கணங்கள்' உணர்த்துகின்றன!

இயற்கையின் இதயமாகிய அறத்தை ஆழ்ந்து தொட்டுக்கொண்டு இயல்பிலே தேங்கித் திளைத்திருக்கும் பெருங்கவிகளின் வாய்மலர்களில், அவ்வறத்தேன் அல்லது பொங்கி வழிவதற்கு, வேறு என்ன இருக்கின்றது? **தெய்வத் திருவள்ளுவர்** அங்ஙனம் அறம் உரைத்த பெருங் கவி! நமது நாடு அத்தகைய கவிமணிகளாகிய அறவோர் பற்பலரால் நெடுகச் சிறப்படைந்து விளங்கி வந்திருக்கின்றது!

துறைமங்கலப் பெருவாழ்வாகிய **சிவப்பிரகாசர்** தமது இயல்பாகிய மெய்க்கவிகளால் நமக்கு இங்ஙனம் '**நன்னெறி**' என்னும் அறநூல் வழங்கிய சான்றோர்!

உ. சிவப்பிரகாசர்

I. வாழ்க்கை

மழை வருகின்றது, போகின்றது; அமிழ்தமாகிய நீரை எவருங் கேளாமலே பொழிகின்றது. வரும் போது யாரையுங் கேட்பதில்லை; முன்னால் அறிவிப்பதுமில்லை: போகும்போது எவரோடும் சொல்வதுமில்லை; ஏதொரு கைம்மாறும் எதிர்பார்ப்பதில்லை; எவரிடத்திலும், வேற்றுமை பார்ப்பதுமில்லை. இயற்கை நிகழ்ச்சிகளில் ஒரு மறைபொருள் உண்டென்றால், அஃது, இம் மழைநீரின் வியத்தகு நிகழ்ச்சியே. உலகத்தில் மற்றொரு மறைபொருளுங் கூற வேண்டுமாயின், அது, சான்றோர்களின் தோற்றம் என்று கூறலாம். உலகியற்கையில் மழை ஓர் அருஞ் செயல்; மக்களினத்தில் சான்றோர் தோற்றம் ஓர் அரு நிகழ்ச்சி! இரண்டும், நாடு செய்த புண்ணியத்தின் அளவில், அருட்கொடையாய் இயல்பில் அமைவன!

சிவப்பிரகாசர் கருவில் திருவுடையர்; தொண்டை மண்டலத்தில் தோன்றினார்; பாண்டி மண்டலத்தில் கலைப்புலமை நிரம்பினார்; தமிழ்நாட்டின் கடற்கரையோரத்தில் பொம்மபுரத்தில் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றார்; அவ்வூர்க் கடற்கரை மணலில் நன்னெறி நாற்பது கவிகளும் வழங்கினார்; எவருங் கேளாமலே, எவரும் எதிர்பாராமலே, எவரும் ஏதுங் கவலைப் படாமலே இவ்வளவும், இயல்பாக நிகழ்ந்திருக்கின்றன. என்ன வியப்பு! இயற்கையின் நடைமுறை தான் என்ன மறைபொருள்!

சிவப்பிரகாசர், சிவநெறிச் செல்வர்; வீர சைவர்; இளமையில் துறவுடையார். எண்ணான்கு ஆண்டுகளே

நம்மிடையில் வாழ்ந்திருக்கின்றனர். இவர் தோற்ற மும் செயலும் மறைவும் ஒரு மின்வெட்டாகவே நிகழ்ந்திருக்கின்றன.

II. அருஞ்செயல்

இவர் வாழ்க்கையில், சிறந்த அருஞ்செயல்கள் இரண்டு கருத்திருத்தற்பாலன. ஒன்று: கல்வியால் தருக்கிய ஒருவரைத் திருச்செந்தூரில் செருக்கடக்கி யது; மற்ருென்று: பொம்மபுரத்தில் இயற்கை யெழிலில் தோய்ந்திருந்து 'நன்னெறிச்' செல்வம் முதலிய நறுநூல்கள் வழங்கியது. கலைப்புலமை நிரம் பிய நேரத்தில் செருக்கடக்கிஞர்; மெய்ஞ்ஞானம் கைவந்த காலத்தில் 'நன்னெறி' வழங்கிஞர்; இருவகை அருஞ்செயல்களும், தமிழகத்தின் தென்கோடி வட கோடிக் கடற்கரை நிகழ்ச்சிகளாய் இவர்க்கு நிகழ்ந் தன. சிவப்பிரகாசர் வாழ்க்கை, அக் கடலேபோல இங்ஙனம் உலகுக்கு உதவியாய் இயற்கையெழிலில் விளங்கியது.

உலகத்திற் பெரும்பாலும், அரும்பெரு நிகழ்ச்சி கள் நிகழ்வது கடற்கரை ஓரங்களிலேதாம்! சிறந்த ஊர்கள் பட்டினங்கள் தோன்றுவதும், வாணிபம் கைத்தொழில்கள் பெருகுவதும், வீரர் சான்ருேர் திறமைகள் மலர்வதும் பெரும்பாலும் கடற்கரை யோரங்களின் அருஞ்செயல்களாதல் காணலாம். சற் றேறக்குறைய ஓர் ஐம்பது கல் அகலத்திற்குக் கட லோரமே கணக்கிட்டு நோக்கிஞல், இவ்வுண்மை எளிதின் விளங்கும்.

கடலோரங்களை 'நெய்தல் நிலம்' என்ப. நிலே யாமை நினைவும் அதன் வாயிலாகத் தன்னை மறந்த

உருக்க உணர்வும் விளைப்பது அந்நிலத்தின் இயல்பு. நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்னும் ஞானப் பகுதிகளின் நிகழ்ச்சிக்குரிய இடமே அது. சிவப்பிரகாசர் தம் ஞான குரவரை எதிர்ப் பட்டு மெய்யுணர்வு பெற்றதும், பெற்று, அப் பேரா வியற்கையில் நின்று 'நன்னெறி' அருளியதும் இக் கடற்கரையோரமே என்று கருதும்போது, நன்னெறி எத்தகைய மெய்ந்நிலையில் சிவப்பிரகாசர் திருவுள் ளத்திலிருந்து எழுந்ததென்பதும், அதன் மாட்சிமை யும் இனிது புலப்படும்.

சிவப்பிரகாசர் அருளிச்செய்திருக்கும் நூல்கள் பல; அவற்றுள், 'நன்னெறி' என்பது அறநூல்; அனைவர்க்கும் பொதுநூல். திருச்செந்திற் கடற்கரை யில் கல்விச்செருக்கை அடக்கியதும், திருப்பொம்ம புரக் கடற்கரையில் மெய்ஞ்ஞான உண்மை விளக்கி யதுமான அவர்தம் வாழ்க்கை யருஞ்செயல்கள், பொது நூலாகிய இந் நன்னெறியிலும் நன்றாக இடம் பெற்றுள்ளன. செருக்கவித்தலைப்பற்றி இதன்கண் பல பாடல்கள் (எ, உக, உரு, உசா, ௩உ, ௩௪, ௩ரு, ௩எ, ச0) பற்பல வகையில் வருகின்றன. முனைப்பவிந்த நிலை பிறர்க்கு உதவியொழுக்கமான அருள்நிலையே யாதலின், மற்று நன்னெறி முழுதும், 'உதவி' என்னும் அருள் வாழ்க்கை யுண்மையே விளங்க வந்துள்ளது.

வாழ்க்கை வளர்ச்சியைச் சிறிது ஊன்றி நோக்கு தல் வேண்டும். முனைப்பவிதலும், மெய்யுணர்வு மலர்தலுமன்றி அதன் பயனைக் காணத்தகுந்தது வேறென்ன உண்டு? சிவப்பிரகாசரது வாழ்க்கையில் அமைந்த அருஞ்செயல்கள் இவையே எனின், அவரது

வாழ்க்கை, அருட்பெருக்கில் மிதந்த மெய்யுணர்வு வாழ்க்கையாம் அன்றே! மேலும், உருக்கப் பண்பை விளக்கும் கடல் நிலத்தில் இவை நிகழ்ந்தமையால், இன்னும் அவ்வாழ்க்கையின் தூய்மையும் அருளாற்றலும் மேம்பட்டே விளங்குகின்றன! கடலையும் கடல் நிகழ்ச்சிகளையும் பற்றிய நினைவுகள் நன்னெறியில் (ச, எ, கரு, கஅ, உஉ, உசு, ௩௩) மிகுதியாக வந்துள்ளன. வெள்ளத்தைப்பற்றியும் புணையைப்பற்றியும் வந்திருக்குங் குறிப்புக்களும் (அ, உரு, ௩0) இங்கு நினைவுகூரற்பாலன.

III. மின் வீழ்வு:

இடம் பொம்மபுரம்; ஒரு நாள் மாலை நேரம்; இயற்கைக் கவர்ச்சி சிவப்பிரகாசரது எழிலுள்ளத்தை ஈர்த்தது. கடற்கரையோரம் சென்றார். பரந்த கடலும் விரிந்த வானமும் நிலனும் நீரும் பொழிலும் எழிலும் அவர்க்கு ஈறிலாக் காட்சி அளித்தன. பெருமண லுலகம் அருள்மணங் கமழும் நிலையமாயிற்று. உள்ளம் இயற்கையம்மையின் அருட்செம்மையில் ஆழ அழுந்தியது. தம்மை மறந்தார்; எதிரில் விரிந்து தோன்றிய உலகையும் மறந்தார்; அதன்கண் விளங்கித் தம்மை இவ்வளவுக்கு ஈர்த்த அருளையும் மறந்தார்; உள்ளத்தே ஊற்றெடுத்த பேரின்பச் சிவப்பெருக்கு ஒன்றிலேயே உணர்விறந்த உணர்வில் தேக்கினார். இடையிடையே அவரது நினைவில் தோன்றிய கடல், மேகம், காற்று முதலிய உலகத்தின் கூறுகளும், மெய் வாய் கண் முதலிய உடம்பின் கூறுகளும், பிற பொருள்களும், உயிர்களும் எல்லாம், ஏதோ ஓர் ஒற்றுமையில் பரிவோடு விரைந்து

தத்தம் கடமைகளைச் செய்துகொண்டிருக்கக் கண்டார். பேரா வியற்கையின் பல்வேறு கருவிகளாக அவை அவர்க்கு ஒருமுகப்பட்டுத் தோன்றின. கண்டறியாதன கண்டார்; அவர் உள்ளம் புதுமை செறிந்து பூத்தது; அப்போது, இறைவன் மின்னொளி வீழ்ச்சி உடனே நிகழ, அழகிய அந் நிலையில், 'நன்னெறிக்'கவிகள் நாற்பதும் எழுந்தன.

அந்த நாள், அந்த நேரம், மீண்டும் என்று கிடைக்கும்? சிவப்பிரகாசரது உள்ளத்தை அறவிழுங்கிய ஓர் ஆணையானது, அதனையே அரங்கமாகக் கொண்டு திருநடங் கண்ட எழில் நாளன்றோ அது! உலகிற்கு அறச் செம்மையைத் தெளிவுறுத்தும் மின்வீழ்வு நேரமன்றோ அது! வட்டமாகிய உலகியற்கை யெழிலில் இரண்டறக் கலந்த சிவப்பிரகாசரது திருவுள்ள வெளியில், மின் எறிந்து ஓவெனக் கலிக்கும் உந்துதல் பரிந்து வீறுமாயின், உடனே பெருக்கெடுப்பது கவி மழையே யன்றோ? அதற்குமுன் நிற்பது யாதுளது? இன்ன இயல்பில் 'நன்னெறி'ச் செல்வம் இயல்பாகத் தோன்றிய அழகினை அடிகளே,

"மின்எறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே."

என்று கடவுள் வாழ்த்தாக எடுத்துக்காட்டி இனிதின் விளக்கினர்.

IV. இலக்கியம்

நேரமோ எட்டாத பேரின்ப நேரம்: இறைவன் திருநடம் வீறிக் கறங்குகின்றது; உண்மைகள் பொங்கிப் பொங்கிப் பெருக்கெடுக்கின்றன. சிவப்பிரகாசரது

இயல்பான கவியுள்ளம் அருட்சாறு நிரம்பிக் கனிந்து கனிந்து ததும்புகின்றது; அகங் துளும்பிப் புறம் வழி கின்றது.

இடமோ கடற்கரையோரத்தின் மணல் திட்டு. எழுத ஏடு இல்லை. எழுத்தாணி இல்லை: சட்டாம் பிள்ளையுமில்லை, திருவிளக்குமில்லை. முழு நிலா பால் போலத் தண்ணொளி பொழிகின்றது. இயற்கைக் கொடை, எதற்கேனும் எதிர்பார்க்குமோ? மணற் பரப்பில் நன்னெறி வெண்பாக்கள் நாற்பதும் உடனே பொறிக்கப்பெற்றன. உலகில் நடைபெறவேண்டிய ஒரு கடமை நிகழ்ந்து நிறைவேறியது.

எவ்வளவு அழகான இயற்கை முறையில் நன் னெறி வெண்பாக்கள் தோன்றியுள்ளன! நூல் என் பதும், இலக்கியம் என்பதும், அருட்செயல் என்பதும், அருஞ்செயல் எள்பதும், இயற்கைக் கொடை என்ப தும் இதுபோன்றவை அல்லவா! இவையன்றோ நிலைக்கும்! உலகத்தை ஆளும்; மெய்யுணர்த்தும்; உய்விக்கும்!

செய்யுட்கள், முன்பே செப்பஞ் செய்துகொண் டவை அல்ல; கருத்துக்கள் பல நாட்கள் நினைந்து ஒழுங்கு செய்யப்பெற்றவை அல்ல; ‘எப்படியும் நாம் ஒரு நூல் செய்யவேண்டும்’ என்று முனைந்து நினைந்ததும் அன்று; நூல் நிலைக்கவேண்டுமே என்று கவலைப்பட்டு, ஏடு தேடிச் சிறுகச்சிறுக எழுதிச் சேமஞ் செய்ததும் அன்று. தமிழ் நாட்டிற்குப் புண் ணியம் இருந்தது; அதன் பயன் விளக்கத் திருவுள் ளம் எழுந்தது; சிவப்பிரகாசரின் நினைவு அருளில் மலர்ந்தது. உற்ற நேரம்; அருள் நிகழ்ச்சிகள் யாரைக்

கேட்கின்றன, எவற்றை எதிர்பார்க்கின்றன? கடமை ஆற்றலோடு நிறைவேறியது.

இத்தகைய மெய் நிகழ்ச்சிகளோ பிறர் பாது காப்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்? பெருமை யுள்ளன எவையும், தமக்குப் பாதுகாப்பு நாடுவதில்லை; ஆனால், அவைதாம், உலகத்தில் அரும்பெரும் பாது காப்புடையன.

எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்,
விள்ளா அறிஞர்அது வேண்டாரே;—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுளம் அன்றிக்
கரைகாப் புளதோ கடல்?

என்று இவ்வுண்மையை உலகிற்கு அறிவுறுத்துகின் றது நன்னெறி! அந் நன்னெறியோ தனக்குப் பாது காப்பை நாடும்? எங்கோ கண்காணாத இடத்தில், மணலில், சிறிதும் பாதுகாப்பின்றி எழுதிவிடப்பட்ட நன்னெறி, இன்று எவ்வளவு பெரும் பாதுகாப்புடன் உலகில் நிலைபெற்று நம் கை மலர்களை அழகு செய் கின்றது! ஈதன்றோ உண்மை உணர்த்தும் நறுநூல்!

ந. நன்னெறி

நன்னெறி ஒரு காலத்தில் மலர்ந்து கனிந்தது; இஃது அழியாத நறுங்கனி. என்றும் இனிமை கமழ் கின்றது. புதுமை குன்றாத இவ்வருட்கனியில் மெய் யுணர்வுத் தேன் பெருகியபடியே இருக்கின்றது. தேன் பெருக்கிருக்கும் வரையில் கனிக்கு வாட்டம் ஏது? மெய்யுணர்வுத் தேன் என்றும் அழியாதது; அத் தீஞ்சாறு பிலிற்றும் நன்னெறிக் கனியும் என்றும் விளங்குவதேயாம்.

I. நூலின் உள்ளுறை :

நன்னெறி ஒரு நீதிநூல். நீதியென்பது முறைமை; நெறி. நன்னெறி நல்ல நெறியையே நமக்கு அறி வுறுத்துகின்றது; நல்ல நெறி ஒரே நெறிதான். சிவப்பிரகாசர் ஒரு நெறியாகிய அருணெறியில் தம்மை ஒப்புவித்து, எல்லாம் ஒரு நெறியின் வழியே இயங்குதல் கண்டு, அந்நிலையில் இந் நன்னெறியை அருளிச்செய் திருத்தலால், அவ்வொரு நெறியையன்றி இதன்கண் அமைதற்கு வேறு பொருளேது?

தம்மை மறந்த உணர்வு வெளியில் அடிகள் கண்ட ஒரு நெறிக் காட்சி! என்ன அது? எங்கும் உதவி! உதவி!! இவ்வருளியக்கத்தைத் தவிர, சிவப்பிரகா சர்க்கு யாண்டும் யாதும் காணப்படவில்லை. உலக இயக்கம், அருள் இயக்கம், உயிர் இயக்கம் எல்லாம், உதவி யொழுக்கமாகவே தோற்றமளிக்கின்றன. உலக வுறுப்புக்கள் உடலுறுப்புக்கள் அனைத்தும் ஒன்றுக் கொன்று உதவி செய்துகொள்ளும் ஒரு நெறியையே

கடைப்பிடித்துத் தொழிற்படுகின்றன. நன்னெறி இவ்வொரு நெறியையே முற்றும் எடுத்து, உரிய இயைபுகளுடன் விளக்குகின்றது.

அருள்வெளியில் மிதப்போர்க்கு, அங்கு விளங்கும் மெய்க்காட்சி ஈதொன்றே போலும்! சிவப்பிரகாசரது கவியுள்ளம், பழக்க வயத்தால், அந் நிலையில், கையை நினைந்தது; கண்ணை நினைந்தது; மெய்யை நினைந்தது; வாயை நினைந்தது. அன்றியும், கடலை நினைந்தது; முகிலை நினைந்தது; கதிரை நினைந்தது; நிலவை நினைந்தது. எதை நினைந்தும் என்ன? எங்கும் உதவி யியக்கமாகிய ஓரியக்கமே எல்லாவற்றினூடும் இயங்குதலை உணர்ந்தது. மழைநீர் எங்கும் பெருக்கெடுத்துப் பொழிய அதன் அடிப்படையில் முகிலுருவங்கள் மறைந்து நின்று அம் மழைப் பொழிவுக்குக் காரணமாதல்போல, உலகமெங்கும் உதவுதலாகிய அருட்செயலே பெருக்கெடுத்து நிகழ உலகப் பொருள்களும் உயிர்களுமாகிய அனைத்தும் அச்செயற்குக் காரணமான கருவிகளாய் அதனுள் இயங்கிக்கொண்டிருத்தலையே அவர் கண்டார்.

ஓர் எடுத்துக் காட்டு நினைவுகூரலாம்: நன்னெறியின் முதற் பாட்டு! கை, உடம்பின் ஓர் உறுப்பு; நாக்கும் ஓர் உறுப்பு. கையை அறியாதார் எவரும் இலர்; 'கை வீசம்மா கை வீசு' என்றால், குழந்தையும் அறிந்து கையை ஆட்டும். நன்னெறி சின்னஞ் சிறுவர்க்குப் பயன்படுஞ் சிறுவர் மலராகவுந் திகழ்கின்றது. சிவப்பிரகாசர் திருவுள்ளத்தில் கையின் செயல் நிழலாடுகின்றது. இளஞ்சிறுவரின் கை மலரே முதலில் அவர்க்குத் தோன்றுகின்றது, தொடக்கம் அதுவாத

லின். ‘பூங்கை’ என்று அதனை அதன் இளமையும் கொழுமையும் அழகுந் தோன்றப் பேரன்புடன் அவர் திருவாய் மலர்ந்தார்.

குழந்தைகளின் கை, இயல்பாகவே நாக்குடன் தொடர்புடையது. கையில் எது கிடைத்தாலும், குழந்தைகள் வாயில் வைத்துக்கொள்ளும். ஒன்றும் இல்லாதபோது, வெறுங் கையையேனும் நாவில் இட்டுக் குதப்பும். சுவை பார்த்து இன்புறுந் திறம் நாக்கிற்கு உண்டு. தின்பண்டங்கள் கிடைத்தவுடன் இளஞ்சிறுர்க்கு நாவில் நீர் ஊறும். கைக்கெட்டுவது வாய்க்கெட்டும்போதுதான் இன்பம். கை தனக்குக் கிடைத்ததை உடனே நாவிற்கு நயந்து உதவுகின்றது. அதன் இன்பத்திற்கு வழி செய்கின்றது. கை, தனது கடமையாகவே அதனைச் செய்கின்றது.

நாக்கிற்குப் பேசுந் திறமும் உண்டு. ஆனால், நாக்கு, கையை ஒன்றும் கேட்பதே இல்லை; முகமன் கூறி வேண்டுவதே இல்லை. கை தனக்குக் கிடைத்ததை உதவிய பின்பாவது, அதன் கொடைச் செயலைப் பாராட்டுவதில்லை. ஆயினும், மீண்டும் மீண்டும் கை, தானே சென்று பண்டங்களை நாவிற்கு உதவுகின்றது. ஒரு புகழையும் அது, எதிர்பார்ப்பதில்லை. களங்கமற்ற கை, அந்தப் பூங்கை. கைம்மாறு கருதி ஒருவர்க்கு ஒன்று உதவுவோரே உலகிற் பெரும்பாலார். ஆனால், இப் பூங்கை, வாயுரையாகிய புகழையும் எதிர்பாராததா யிருக்கின்றது. உதவி என்பது ஒன்றே அதன் நோக்கம்; அதுவும், கண்ணியமாய் நடைபெறுகின்றது. ‘பூங்கை புகழவோ நாவிற்கு நயந்து உதவும்?’ என்று சிவப்பிரகாசரது திருவுள்

ளம், இவ்வுண்மையைக் கண்டு மகிழ்ந்து நமக்கும் வழங்குகின்றது.

கையின் மற்றொரு காட்சி (நுக)! முன்னே சொன்ன கை, குழந்தைகளின் பூங்கை. குழந்தைகள் உணவு உண்டு பழகியபின், பள்ளிக்குச் சென்று கல்வி உண்டு பழகத் தொடங்குகின்றன. அப்போது அவர்கள் சிறுவர்களாய் வளர்ந்து விடுகின்றனர். கல்விகள் பலவும் தக்க நன்முறைகளிற் கற்பிக்கப்படும்; கல்வியில் ஒழுக்கக் கல்வியை மிகவும் முதன்மையாகக் கருதுவது முற்காலத்தின் இயல்பு. மாணவர்க்கு மிக்க கண்டிப்பு அதன்கண் உண்டு. ஒரோவொருகாற் பிரம்படி ஒறுப்பும் சிறுவர்க்குக் கிடைக்கும்.

பிரம்படி, சிறுவர் உடம்பிலும் விழும். அந்நிலையில் அச் சிறுவர்களின் கைகள் செய்யும் உதவியை என்னென்பது! உடம்பில் அடி விழுமுன் கைகள் முன்சென்று தாம் தாங்கிக்கொள்கின்றன. மாறி மாறி எந்தப் பக்கம் அடி விழுமானாலும், கைகள் அடி விழும் பக்கமெல்லாம் பரிந்து பரிந்து விரைந்து குறுக்கிட்டுத் தாமே அடிகளைத் தாங்கிக்கொண்டு உடம்பைக் காக்கின்றன. உடம்பின்மேல் ஓர் அடி விழாத படி எல்லா அடிகளையும் கைகள் தாமே தாங்கிக் கொள்ள முயல்கின்றன. தாக்கும் பிறர் துயரம் தாமே தாங்கி வீரமொடு காக்கும் இக் கைகளின் உதவிச் செயலையும் தந்நல இழப்பையும் என்னென்பது!

ஆசிரியரிடம் பிள்ளைகள் அடிபட்டு வருந்தும் போது, அதனைக் காண்போர்க்கு என்னென்னவோ நினைவு தோன்றும். சிவப்பிரகாசர்க்கு அந்நிலையிலும்

இங்ஙனம் 'உதவிச்செயல்' என்னும் அருள்தோற்றமே காட்சி யளிக்கின்றது !

குழந்தைகளின் பூங்கைகளைச் சொன்னபோது, புகழை எதிர்பாராமல் நாவிற்கு உதவுதலை ஆசிரியர் எடுத்து விளக்கினர்; இங்கே சிறுவர்களின் கைகளைச் சொல்லும்போது, அவ் வுதவுதலோடு, அதனால் வருகின்ற துன்பங்களைத் தாம் தாங்கிக்கொள்ளுதலையும் எடுத்துக் காட்டுகின்றார். புகழ் இல்லாவிட்டாலும் தமக்கு அதனால் துன்பமில்லாமலிருக்குமாயின் எவரேனுஞ் சிலர், எவையேனுஞ் சில, உலகத்தில் உதவக் கூடும். 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்னும் அருஞ்செயலிலும் கைகளுக்குத் துன்பம் இல்லை; உதவியில், விரைந்த உதவி மட்டும் அங்கே எண்ணப்படுகின்றது. ஆனால் மெய் சென்று தாக்கும் வியன்கோல் அடியைக் கை கடிது சென்று தன்மேல் தாங்கும் இவ் வீர உதவியில், அவ் விரைதலோடு துன்பமும் ஏற்றுப் பொறுக்கும் அரும்பேர் அருள்நிலை யன்றோ இனிது வெளிப்படுகின்றது! 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்னுந் தவப்பண்பன்றோ விளங்குகின்றது! தனக்கென வாழாப் பிறர்க்குரிமைப் பெருமையன்றோ பிறங்குகின்றது ! கையின் இவ் வுதவிச் செயலுக்கு இணையாக வேறு எதனை இவ்வளவு எளிமையாகக் கூறுதல் இயலும்! கை செய்யும் உதவிதான் எத்துணை வியத்தற்குரியது!

கை என்னும் உறுப்பை அனைவரும் அறிவர்; அது செயற்படுதலையும் நாளுங் கண்ணாரக் காண்பர். ஆனால் அது செய்யும் இவ் வுதவிச் செயலை உன்னுவோர் எத்தனை பேர் இருப்பர் ?

அருள்வெளிக்கண் உலவுவோர்க்கன்றோ, சிறு துரும்பின் மெருகியல்பும் இனிது விளங்கும்! அந்நிலையில் நிற்கும் சான்றோர்க்கன்றோ, இங்ஙனம் மெய்ம்மைகள் பொங்கிக் கவிகள் எழும்! உவமம் சிறக்கும்! அக்கவிகளல்லவா புதுமை மேவிய இனிமை யருவிகள்! உள்ளம் உயர்ந்து அருளில் தோய, அதனால் ஆண்டு விளங்கும் மெய்யியல்புகளை, விளங்கியவாறே எடுத்துக் காட்டும் இயல்பான சான்றோர் செய்யுட்களல்லவா கவிகள் என்பவை! இதன்கண் முயற்சி ஏது? முயற்சி இல்லாதபோது பொய்ம்மை ஏது? எல்லாம் இயல்பு வெள்ளம்!

சிவப்பிரகாசரின் மெய்க்காட்சிக்கு இங்ஙனம் உலகப் பொருள்கள் முழுதும் உதவிக் கருவிகளாகக் காட்சியளித்தன. எங்கும் ஒன்றுக்கொன்று ஒப்புரவு செய்துகொள்ளும் உதவி யியக்கமே தெரிந்தது. அவ்வொரு நெறியே நன்னெறியாக, நன்னெறிக் கவிகளாக, அவர்பால் வெளிப்பட்டது.

II. அருட் காட்சி:

நன்னெறியின் பொருட்போக்கு உதவியியக்கம்; அஃதாவது ஒப்புரவுக் கொள்கை! அருள்வெளிக்கண் மிதக்கும் சிவப்பிரகாசர், ஆண்டு விளங்கிய இம்மெய்க் காட்சியைத் தம்மை மறந்த நல்லுணர்விற் கவிகளாகப் பேசுகின்றார். கவியுள்ளம் அவரது இயற்கைத் திரு. பேசுதற்குரிய பொருளாக அங்குக் காட்சியளித்த ஒப்புரவுக் கொள்கையை அவர்யாருடன் பேசுகின்றார், யாரை அழைத்து வெளிப்படுத்துகின்றார்?

ஈதோர் அரிய மறைபொருள்! அருள் வெளிக்கண் நிற்போர்க்கு அங்கே எதிரில் விளங்குவது யாராதல்

கூடும்? அருள் என்னுந் தேவியையன்றி வேறு எவர்க் கேனும் அங்கே இடம் உண்டோ? முற்றிலும் அருளம்மை; பார்க்குமிட மெங்கும் அவளே நீக்கமறக் காட்சி யளிக்கின்றனள். சிவப்பிரகாசர்க்கு அந் நிலையில் அவ் வம்மையோடுதான் உறவு; அவளோடுதான் அவர் அளவளாவுதல் வேண்டும்; பேசி மகிழ்தல் வேண்டும். அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மாது அவள்! அவளையே விளித்து நன்னெறிக் கவிகள் ஆர்வமாய் அருளிச்செய்யப்படுகின்றன.

இதற்கொரு சிறந்த அடையாளம் நன்னெறியில் மிளிர்கின்றது. நன்னெறி நூல் முற்றும், மகடூஉ முன்னிலையாகத் திகழ்கின்றது; மொத்தம் நாற்பது பாட்டுக்களில் இருபத்துநான்கு இடங்களில் விளித்தல் வருகின்றது. விளித்தல் அத்தனையும் ஒரு மாதை விளித்தலாகவே உள்ளன. தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு தன் உள்ளும் புறம்புமாய் உலவி இன்பமளித்துவரும் மனமொத்த எழில் நங்கையை அன்பால் அழைத்து, உயர்ந்த கருத்துக்களைப் பேசி ஆராய்ந்து அளவளாவி மகிழ்தல் தமிழ்நாட்டின் வழக்கம். இதனை மகடூஉ முன்னிலை என்று ஆசிரியன்மார் கூறுவர். தமிழ்ப்பெண்கள் அத்தனை உயர்ந்த அறிவின் சிறப்புடையவர்களாக விளங்கினர். இம்முறைமையே திருவருட் காதலில் அழுந்தி, வேற்றுணர்வின்றி விளங்குஞ் சிவப்பிரகாசரது நன்னெறியிலும் தேவியை விளித்தலாக மிளிர்கின்றது.

திருவாதவூரடிகள் என்னும் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்துள்ள திருக்கோவையார் என்னும் நூலும், தேவியே காதலியாக இங்ஙனந் திருவருட்

காதலிற் பழுத்த அரிய மறைநூலாகும். இறைவன் திருவருளை வேற்றுணர்வின்றி அழுந்த நேசித்து நுகரும் அருள்நேயப் பெருஞ்செயலாகிய பேரன்பின் திறத்தைப் புலப்படுத்தும் பொருட்டு, இவ்வாறு காதற்செயலாக இவை ஆசிரியன்மாரால் உரைக்கப் படும். அம் மரபினை, அன்பின் திறமுணர்வோர் அறிவர்.

சிவப்பிரகாசர் காணும் நங்கை, அருள் என்னுந் தேவி! இளமைக்கும் எழிலுக்கும் குணத்துக்கும் எல்லையாய் விளங்கும் மாதரார்! நன்னெறியில் அச் செம்மைகள் அங்கங்கும் வரும் விளித்தொடர்களில் சிவப்பிரகாசரால் இனிது புலப்படுத்தப்பட் டிருக்கின் றன. எல்லாம் உயர் வகையான பொருட்கரு உடை யன. கூந்தல், நுதல், விழி, மொழி, முகம், மார்பு, மாலை, அணிகலன், இளமை, அழகு, குணம் என்னும் எழிற் செம்மையில் அவ் விளித்தொடர்கள் அமைந் துள்ளன. மகளிர்க்கு நன்னெறி ஒரு நல்விருந்து!

III. சுவை யூறல்:

நன்னெறி, மற்றோர் அழகிய அமைப்பையும் தனக்கொரு தனிச் சிறப்பாகப் பெற்றுள்ளது. ஆசிரி யர் சிவப்பிரகாசரின் அருட் புலமைக்கே அது தனிச் சிறப்பியல்பாக மிளிர்கின்றது. நன்னெறி வெண்பாக் கள் நாற்பதும், தக்க உவமைக் காட்சிகளைப் பெற் றிருக்கின்றன. ஒரு பாடலாவது உவமை யில்லாமல் இல்லை. வேறு எந்த நூலும் தமிழில் இம் முறைமை யில் அமையவில்லை. மேலும், வளமான பொருந்திய அழகிய எளிய உவமைகள்! இவ்வுவமைத் திறமே அத் தனிச் சிறப்பியல் பென்பது!

இனிமை யூறலே பாட்டு! கவி என்பதும் அது. உவமைத் திறம் அளிக்கும் பேரினிமையை ஒத்தது கவிகளில் வேறில்லை. கவி யுணர்வு உடையோர்க்கு ஐவகை உணர்ச்சிகள் கனிந்து சிறந்த செய்யுட்களாக ஒழுகுகின்றன. எழுத்துக்களோ, சொற்களோ, கருத்துக்களோ, செய்யுள் அமைப்புக்களோ, உவமைகளோ கவிகளாகமாட்டா. இத்தனையுஞ் சேர்ந்தும், கவிகளாகாத செய்யுட்கள் பல உண்டு. அவை, சாறு கனியாத காய்கள். சாறு கனிந்த செய்யுட்களே, கவிகள் அல்லது பாட்டுக்கள் என்பன! இனிமை நிரம்பிப் பயன்படு நிலையை அடைந்த செய்யுட்களே கவிகள்!

அந் நிலையில் 'ஐவகை யுணர்ச்சிகள் அப் பாட்டுக்களில் துளும்பி வழிகின்றன. கவிகளைச் செய்யும் கவிஞர்களை அவ் வுணர்ச்சிகள் ஆட்கொள்ளுகின்றன; கவிகள் கேட்போரையும் அவை அவ்வாறே ஒத்த உணர்வில் ஆட்கொள்ளுகின்றன. இருதிறத்தாரும் அவ் வுணர்ச்சிச் சுழலில் எஞ்ஞான்றுந் தம்மை மறந்து திளைத்தாடுகின்றனர்; செஞ்சொற் கவியின்பம், கவியின்பம் எனத் தம்மை விழுங்கிய பெரு நிலையால் இன்புறுகின்றனர். ஓசை யின்பம், சொற் சிறப்பு, பொருளழகு, ஒழுங்குநடை, அணியினிமை என்னும் ஐவகையுணர்ச்சிகளே அவை. இவற்றையே ஆசிரியன்மார் முறையே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகை இலக்கணங்களாக அமைப்புக் கோலினர். வெற்றமைப்பாக உள்ளபோது அவற்றின் கூட்டமாகிய செய்யுட்கள் காய்களைப்போல் உள்ளன. அவை ஓசையின்பம் முதலியவாகச் சாறு கனிந்து, பயன் படும் இனிமை நிலை மேவி, எல்லாரையுந் தன்

பால் ஈர்த்து ஏவல் கொள்ளுஞ் செவ்வி பெற்றன வாயின், அப்போது கவிக் கனிகளாய் இனிக்கின்றன.

ஐவகை யுணர்ச்சிகளில் 'அணியினிமை' என்பதே கவி யியல்பில் உயர்ந்த இன்பம் பயக்கவல்லது. ஏனைய நான்கும் அதனை மிகுத்து நிற்கும் இயைபுகள். அணி யினிமையாவது, உணர்ச்சியும் தெளிவுடைமையும். இவற்றுள், உணர்ச்சியைப் 'பாவம்' என்றுங் கூறுவர்; அதனைப் பயப்பது, அணிவகையில் 'மெய்ப்பாடு' என் பது. பாவத்தையுங் கடந்து ஓங்குவது, தெளி வுடைமையாகும். உணர்ச்சியினால் உண்டாகும் இன் பந்தான், இன்பங்களில் உயர்ந்த இன்பமாவது; ஆனால், தெளிவுக்குமேல் அடையத் தகுந்த தொன்று யார்க்கும் யாண்டும் எந் நிலையிலும் இல்லை. அப் பெரும் பயனைப் பயப்பது, செய்யுட்களில் ' உவமை ' என்னும் முடிநிலை அணி. அத்தகைய உவமையணி யாகிய தீஞ்சாறு மெய்ப்பாட்டு உணர்வுடன் நன் னெறியிற் பாட்டுக்கள்தோறும் நிரம்பிக் கனிந்து, படிக்கப் படிக்கப் பேரின்ப ஊறலாய்த் தெளிவு பயந்து திகழ்கின்றது.

இவ்வாறு நன்னெறி முப்பெரும் அமைப்புக்கள் உடையன. ஒன்று, நூல் முற்றும் ஒப்புரவுக் கொள் கையைக் கூறுவது; இரண்டு, நூல் முற்றும் அக் கொள்கையை மகடூஉ முன்னிலையாகக் கூறுவது; மூன்று, நூல் முற்றும் அக் கொள்கையைத் தெளி வினிமை பயத்தலாகிய உவமைத் திறம் புணர்த்துக் கூறுவது. அடிகள் சிவப்பிரகாசர் இம் முப்பெரும் அமைப்புக்களையும் முறையே அமைத்திருக்கின்றார். செய்யுளின் முதலில், கருத்தைக் கூறுவது; இடையில்

விளித்தல் இசைப்பது. கடைசியில், தெளிவினிமை புணர்ப்பது. இங்ஙனம் நன்னெறிக் கவிகள் முறையே மெய்ப்பயனும், அருட் காட்சியும், சுவையூறலுமாக வழங்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக ஒரு கவி :

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ? — பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி

௬. பொருளமைப்பு

நன்னெறியில் உணர்த்தப்படுங் கொள்கை, ஒப்புரவுக் கொள்கை என்பது பார்த்தோம். அந்த உதவியியக்கமே நல்ல நெறி; இயற்கை உணர்த்தும் வாழ்க்கைப் பாதை; சான்ருேர் சென்ற நெறி. இயற்கைப் பொருள்களில், காட்சிகளில், இந் நெறி எங்குந் தழைத்து இயங்குதலைச் சிவப்பிரகாசர் காண்கின்ருர். மக்கள் நடையில், இச் சான்ருேர் நெறி, வளமாகத் தழையவேண்டும் என்று அவர் விரும்புகின்ருர்.

சிவப்பிரகாசரது திருவுள்ளம் கனிந்த உள்ளம்; 'அருளே நம் குலம்; அருளே நம் இனம்; அருளே நாம்' என்னும் செந்தண்மை சொரியுந் திருவுள்ளம்! வாழ்க்கையில் மெய்ந்நெறி அறியாது மருளும் மாந்தர்க்கு நன்னெறி தெரிவிக்கும் இரக்கம், அவர்க்குப் பெருகுகின்றது. சிறு மகாரும் தெளிவாக அறிந்துகொள்ளும் படி அறவுரைகள் வழங்க, அவரது ஈரநெஞ்சம் குழைந்து எண்ணுகின்றது. எளிய சிறுசிறு உவமைகளை வைத்து நாற்பது அறிவுரைகள் கனிந்து வழங்குகின்ருர். குழந்தைகள் ஏற்கும் வகையில் உணவு குழைத்து ஊட்டும் தாய்மைப் பரிவு, சிவப்பிரகாசர் உரைகளில் துளும்பி வழிகின்றது. அருள் வளம் பழுத்த அவ்வுரைகள் வருமாறு:

I. அறிவுரைகள்:

(க) குழந்தையின் பூங்கை, சுவை மிக்க தின்பண்டத்தை எடுத்து நாவிற்கு உதவுகின்றது. நாக்கு பேசத் தெரிந்திருந்தும், சிறிதாவது கையின் உதவி

யைப் பாராட்டுவதில்லே. இருந்தாலும், அந்தக் கை, புகழை எதிர்பாராமல் நாக்கிற்கு நாளும் நயந்து உதவி வருகின்றது. தீதற்ற பெரியோரும் இவ்வாறே, முகம னுரை எதிர்பாராமல் தாமே அன்போடு சென்று அவ ரவர்க்கும் உதவி வருவர்.

(உ) சாக்கிய நாயனுர் கடவுள் திருவுருவின்மேல் கல் எறிந்து வழிபட்டார்; ஆனல், அன்புள்ளத் தோடு அவ்வாறு செய்தார்; ஆதலால், எறிந்தது கல் லாணுலும், அன்புள்ளத்துக்கு மகிழ்ந்து, ஆண்டவன் அவர்க்கு அருள் செய்தார். காமன், கடவுளின் தவ நிலேயைக் கெடுக்கும் உள்ளத்துடன் அவர்மேல் மல ரம்புகள் எய்தான். அவன் எய்தது மலர்தான்; ஆயினும், உள்ளம் தீயது. கடவுள் அவனே ஒறுக்கத் துணிந்து, சாம்பலாய் எரித்துவிட்டார். மனத்தில் மாசில்லாதவர்கள், சாக்கியர் கல்லேப்போல் சில நேரங் களில் வன்சொல் சொல்லும்படி நேர்தலும் உண்டு; அது, இனியதே. மனத்தில் கரவுள்ளவர்கள் காமன் மலரைப்போல் மேலே குழைவாகப் பேசும் இன் சொல், தீயது.

(௩) நமக்கு ஆவின் பால் வேண்டும்; நாம் என்ன செய்கின்ருேம்? ஆவின் அன்பிற்குரிய கன்றின் வாயிலாகக் கறந்துகொள்ள முயல்கின்ருேம். நமக்கு நேரே உதவாதவர் கையிலிருந்து நாம் ஒன்றைப் பெற வேண்டுமானுல், அப்படித்தான் அவர் அன் பிற் குரியவர் வாயிலாக முயற்சிசெய்து கொள்ளல் வேண்டும்.

(௪) கடலில் நீர் ஏராளமாக இருக்கின்றது; கடல் அவ்வளவு நீரையும் வைத்துக்கொண்டு சும்மா அலே

கின்றது. ஆனால் மேகம் அருகில் வந்து அதன் நீரை முகந்துகொண்டுபோய்ப் பிறர்க்கு மழையாக உதவு கின்றது; கடைசியில் மேகத்துக்கே பேறு கிடைத் தது. உலகத்தில் பிறர்க்கு உதவி செய்யாமல் கடலைப் போற் பெருஞ்செல்வம் உடையவர்களும் இருக்கிறார் கள்; இருந்து என்ன பயன்? அவர்கள் அச் செல்வத் தின் காவலாளிகளே; அச் செல்வம் அவர்கள் செல்வ மாகாது. அதை எடுத்துப் பிறர்க்கு வழங்கும் வேறொருவர்க்கே அதனாற் பயன் உண்டாவதனால், அது, அவர் செல்வமே ஆகின்றது.

(ரு) நெல், அரிசி வேறு உமி வேறாகப் பிரிந்து விட்டால் அதன் முளைக்கும் வன்மை கெட்டுப்போகி றது. உமி சிறிது நீங்கினாலும் அத் திண்மைநிலை போம்; சிறிது நீங்கி மீண்டும் பொருந்தினாலும் முன் இருந்த அத் திண்மைநிலை கெட்டது கெட்டதே. விதைநெல்லின் உமி அப்படிப் பிரிவற்ற தன்மை யுடையது. நட்பும் அங்ஙனம் பிரிதலற்ற நிலையிலே தான் பயன்படும். சிறிது நீங்கிப் பின் கூடினாலும், பயன்படும் ஆற்றல் மெலிந்துவிடும். ஆதலால், பிரி வரிய நண்பரிருவர் சிறிது மனம் வேறுபட்டு மீண்டுங் கூடினாலும், அவர் நட்பின் பெருமை குறைவுடை யதே; முன்போல் உறுதி வாய்ந்த தாகாது.

(சு) நமக்குக் கண்கள் இரண்டு உள்ளன. அவற் றின் தொழில் பார்ப்பது. பார்க்கத் தொடங்கினால், இரண்டும் ஒன்றுசேர்ந்து ஒரு பொருளையே நோக்கும். பிரிந்து இரு வேறு பொருள்களைப் பார்ப்பதில்லை. அன்புடைய கணவன் மனைவி என்னுங் காதலர் இரு வரும், அங்ஙனமே தமக்குள் மாறு இன்றிக் கருத்

தொருமித்து ஒவ்வொரு நற்செயலையும் ஒரே நோக்க மாகச் செய்வர்.

(எ) கடல் மிகவும் பெரியது; அலையின் ஆர வாரம் வேறு. ஆனால், மிகவுங் குட்டையராகிய அகத்தியர் கடல்நீர் முழுவதையும் உள்ளங்கையில் அடக்கி ஒரு காலத்திற் பருகினார் என்று கேட் கின்றோம். அது, ஓர் எண்ணத்தை நமக்குக் காட்டு கின்றது. யாராவது, 'எமது பெருமை கடல்போல அவ்வளவு பெரியது' என்று ஆரவாரஞ் செய்தால் அவர் செருக்கை, வல்லார் ஒருவர் தப்பாமல் அடக்கி விடுவர் என்பது. கல்விச் செருக்கும் அப்படித்தான். செருக்கென்பது, உள்ளபடியே ஒருவருக்கிருக்கும் வலிமையன்று; மனத்தின் வீறல். அது சிங்கவேறு கொள்ளும் மனச் செருக்கைப் போன்றது. சிங்கத் துக்கு உண்மையில் வலிமை குறைவு; மனத்தின் வீறு தான். செருக்கும் அத்தகையதே. உள்ளபடியே கல்வி நிறைவுடையோர் செருக்குறார்; அறிவின் நிறைவில்லா தவரே மனத்தினால் வீறல் கொள்வர். ஆதலால், 'யாம் கடலுக்கு நிகர்' என்று அத்தகைய வீண் செருக்கில் எவரும் ஆழ்ந்துவிடலாகாது.

(அ) சில நேரங்களில் ஆற்றில் வெள்ளம் பெருகி வருகின்றது. அப்போது, தக்கபடி கரை கட்டி, அது, ஊரை அழித்துவிடாதபடி தடுப்பது மக்கள் வழக்கம். அப்படிச் செய்யாமல், முன் இருக்கும் பெருங் கரை யையும் பேர்த்து, வெள்ளத்தை ஊர்மேல் விட்டு விடுவது அரிய செயலாகுமா? மக்களுக்கு ஒரோவொரு நேரத்தில் ஓங்கி வருகின்ற கோபமும், அக்கடு வெள் ளத்தை ஒத்திருக்கின்றது; உள்ளம் முழுவதையும்

தன்வண்ண மாக்கிக்கொண்டு எழுந்து பெருகி வருகின்றது. அதனை எப்படியும் காத்துக்கொள்ளுங் குணமே குணமாகும்.

(௯) பாம்புக்குக் கருடன் பகை; ஆயினும், அது சிவபிரான் சடையிலிருக்கும்போது கருடனைப் பார்த்து அஞ்சுவதில்லை. அதுபோல, தம் பகைவரை விட மிக்க வலிமை வாய்ந்தோரிடம் கலந்துகொண்டால், மெலியோர் தம் பகைவர்க்கு அஞ்சவேண்டுவதில்லை.

(௧0) திங்கள் தனது பால் நிலவைப் பொழிந்து உலகத்தின் இருளை நீக்குகின்றது; அது, தனது கறை இருளை நீக்கிக்கொள்ளக் கருதுவதே இல்லை. அதுபோல, குளிர்ந்த தன்மையுடைய பெரியோரும், தம் குறைகளை முதன்மையாகக் கருதாமல், மனம் இளகிப் பிறர் இடுக்கண்களைப் போக்கிவருகின்றனர்.

(௧௧) சுழற்காற்று தனது வலிமையால் சிறு துரும்பைச் சுழற்றிச் சுழற்றி அடிக்கிறது. ஒரு கல் தூணை அப்படிச் சுழற்றியடிக்குமா? வஞ்சனை மிக்க ஐம்புலன்களும் அங்ஙனமே, தாழ்ந்த மக்களிடம் தம் துன்பத்தை உண்டாக்குமேயல்லது மெய்யறிவாளரிடம் உண்டாக்காது.

(௧௨) உயிர் என்பது வெறுங் காற்றன்று. காற்றானால், ஒன்பது வாயில்கள் உள்ள உடம்பில் அது நிற்குமா? பல சந்துகள் உள்ள பொத்தற் குடத்தில் தண்ணீர் ஒழுகிப்போகாமல் நிற்குமானால் அது வியப்பிற்குரியதன்றோ! உயிர் இவ்வுடம்பில் நிலைத்திருப்பதும் அப்படி ஒரு புதுமையே!

(௧௩) நிலவு நமக்கு ஒளி வழங்குகின்றது. ஒளியின் அளவு, நிலவு வளர்ந்து வருகின்ற கலையின் அளவைப் பொறுத்திருக்கின்றது. அதுபோல, பெரியோர் பிறர்க்கு உதவுகின்ற உதவியின் அளவு, அவர்கள் வைத்திருக்கும் பொருளின் அளவைப் பொறுத்திருக்கின்றது; மற்று, அன்பிற் குறைவு நிறை வென்பதில்லை. அவர்கள் சிறிது உதவினாலும் அல்லது பெரிது உதவினாலும் மிக்க விருப்பத்தோடுதான் உதவுவார்கள்.

(௧௪) மேருமலை, உயர்ந்த பெரிய மலை. ஒரு காலத்தில் அதனையும் சிவபிரான் வில்லாக வளைத்து விட்டார் என்று கேட்கின்றோம். நிலையாக ஓரிடத்தில் அசையாமற் கிடந்த அதற்கும் வளைவு வந்துவிட்டது. ஆதலால், அழியாத பெரிய செல்வ நிலையிற் பிறந்திருக்கின்றோம் என்று பேரறிஞர் செருக்கடைதல் இல்லை.

(௧௫) பேச்சில்லாத ஊமைகள் அறிவு நூல்களை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? கண்ணில்லாத குருடருக்குத்தான் ஒளி விளக்கினால் யாது பயன் உண்டு? அப்படித்தான், இவ்வுலகத்தில், அன்பில்லாதவர்கள் எவ்வளவு இடம், பொருள், ஏவல் முதலிய வசதிகளை வைத்துக்கொண் டிருந்தாலும் அவர்களுக்கு அவைகளால் ஒரு பயனும் இல்லை.

(௧௬) கடல், மிகப் பெரியது. கழி, மிகச் சிறியது. ஆயினும், கடல் தனது பெருமையைக் கருதாமல், கழியினிடஞ் சென்று அதற்கு நீர் உதவுகின்றது; உயர்ந்தோரும் அவ்வாறே தமது தகுதியும் அதிகாரமுங் கருதிப் பெருமை கொள்ளாமல், ஆதரவுக்குரி

யோர் தம்மினுந் தாழ்ந்தோராயினும் அவர் இருக்குமிடம் சென்றும் இடுக்கண் களைவர்.

(கஎ) வாழைமரம் நமக்குப் பழம் கொடுக்கும்; ஒரு முறை குலை தள்ளிக் கொடுத்ததும் மரம் அழிந்து விடுகின்றது; அப்படியிருந்தும், அதன் கீழ்க் கன்றும் நமக்குக் கனி உதவுகின்றது; தனக்கு அதனால் அழிவு வருமே என்று அது கருதுவதில்லை. அப்படியே, தக்க குடும்பத்தைச் சேர்ந்த புதல்வரும், 'எங்கள் தந்தையார் பிறர்க்குக் கொடுத்து வறிஞரானார்' என்று கருதாமல், இயன்ற உதவிகளைத் தாமுஞ் செய்வர்.

(கஅ) பரந்த கடலில், ஞாயிறும் தன் கதிர்களைச் சொரிகின்றது; திங்களும் தன் கதிர்களைச் சொரிகின்றது. ஆனால், குளிர்ச்சியான நிலவின் கதிர்களுக்கு மட்டும் கடலானது பொங்கி ஆரவாரித்து மகிழ்ச்சியடைகின்றது. ஞாயிற்றின் கதிர் அழல்போலச் சுடுவதனால் அதன் வரவுக்குக் கடல் மகிழ்வதில்லை. அதுபோல, உலகத்தவரும், குளிர்ச்சியான இன்சொல்லுக்கு மகிழ்ச்சி யடைவார்களேயல்லாமல், கடுமையான வன்சொல்லுக்கு மகிழமாட்டார்கள்.

(கக) தேமா என்னும் மாமரம் இனிய காற்றாகிய தென்றல் வீசும்போது தளிர் எடுத்து அழகாகத் தோன்றும். ஆனால், தீய காற்றாகிய சுழற்காற்று அடிக்கும்போது அந்த மரம் தளிர் கருகி வருந்தும். அதுபோல உலகத்தில் அறிஞர்கள், நல்லோர் வரவால் நகைமுகங் கொண்டு இன்புறுவர்; தீயோர் வரவால் வருந்துவர்.

(உ0) நமது உடம்பில் கை கால் முதலிய பல உறுப்புக்கள் இருக்கின்றன. அவற்றுள், எதற்காவது,

மிக்க நோய் வந்தால், அதைக் கண்டு கண் அழுகின்றது. மற்ற உறுப்புக்கள் நோயினால் வருந்தும்போது, கண் தனக்கு வந்த நோய்போல உருகி அழுவது, மேன் மக்கள் செயலோடு ஒத்திருக்கின்றது. பெரியோர் அப்படித்தான் பிறர் துன்பங் கண்டு, தம் துன்பம் போலக் கருதி, தீயிடைப்பட்ட நெய்யென உள்ளம் உருகுவர்.

(உக) ஒரு காலத்தில், வான்கங்கை மிக ஆரவாரமாகப் பெருகி வந்தது. சிவபிரான் தனது விரிசடையில் அதன் பெருக்கத்தைத் தாங்கி அடக்கி, சிறிய அளவில் நிலத்தில் விட்டார். இச் செய்தியை இவ்வாறு கேட்கின்றோம். சிவபிரான், அறிஞரால் விரும்பப்படும் பேரறிவுப் பெருமான்; அவன் திருச்சடையை எதிரிற் கண்டதும் கங்கையின் செருக்கு அடங்கி விட்டது. அதுபோல, நூல்களின் உட்பொருளாகிய அன்பினை அறியாதவரின் கல்விச் செருக்கு முற்றும், அவ்வுள்ளுறை அறிந்தொழுகுவாரைக் கண்டவுடன் ஒடுங்கிவிடும்.

(உஉ) பாம்பினிடமிருந்து உண்டாகும் மாணிக்க மணி மிக்க ஒளியுடையது; அந்த மணியை எல்லாரும் விரும்புவார்கள். ஆனால், அதனை உண்டாக்கிய பாம்பை யாராவது விரும்புவார்களா? பாற்கடலிலிருந்து ஒரு காலத்தில் நஞ்சு தோன்றியதென்று கேட்கின்றோம்; நஞ்சை யாரும் விரும்பமாட்டார்கள்; ஆனால், அந்த நஞ்சின் பிறப்பிடமாகிய கடலை, அது பாற்கடலாயிருப்பதனால், எல்லாரும் விரும்புவார்கள். கெட்டதிலிருந்து நல்லது தோன்றுவதும் நல்லதிலிருந்து கெட்டது தோன்றுவதும் இங்ஙனம் இயற்

கையாயிருக்கின்றன. ஆதலால் மக்களை அவரவர் அறிவின் திறத்திற்கேற்றபடி உயர்ந்தவராகவோ அல்லது தாழ்ந்தவராகவோ மதிக்கவேண்டுமே யல்லது, அவரவர் பிறப்பிற்கேற்றபடி மதித்தலாகாது.

(உ௩) கல் மிகவும் உறுதியானது; அதிற் சிற்றெறும்பின் கால் பட்டு வடு உண்டாகாதுதான். ஆனால், எறும்பு பலகால் ஊர அக் கல்லிலும் வடு உண்டாகிக் குழி தோன்றும். அதுபோல, தவஞ் செய்வாரின் உள்ளம் மிக்க உறுதியுடையதேயானாலும், அவர், மென்மையுள்ள பொதுமகளிரோடு பேச்சளவு தானும் பழகி வரவர, அவர்தந் தவ வலிமை விளங்குகின்ற நெஞ்சத்தின் திட்பம் நெகிழ்ந்து குலைந்து விடும்.

(உ௪) சோலையில், மெத்தென்ற நறுமலர்கள் உண்டு; வேப்பம் பழம் போன்ற கசக்குங் கனிகளும் இருக்கும். சோலையில் வண்டு நுழைந்தால், சிறந்த நறுமலரையே விரும்பும்; காக்கை நுழைந்தால், கசக்கும் வேப்பங் கனியையே விரும்பும். அப்படி விரும்புவது காக்கையின் குற்றம். அதுபோல, உலகத்தில் ஒருவருக்குக் குணமும் உண்டென்றாலும் அதை எடுத்துப் பேசாமல், கீழ்மக்கள் அவரிடம் இருக்குங் குற்றத்தையே எடுத்துப் பேசுவார்கள். அது, அக் கீழ்மக்களின் தாழ்ந்த தன்மையையே காட்டுகின்றது.

(உ௫) தெப்பம் கனமில்லாதது; இலேசாய் நீரில் மிதக்கக்கூடியது. அதில் கனமும் பெருமையும் உடைய மணிக்குவியலை வைத்தால், அதுவும் இலேசாகி மிதக்கும்படி நேர்கின்றது. பெருமை வாய்ந்த

கற்றோர் சிறுமையுடைய கயவரோடு சேர்ந்தால், அக் கற்றோரும் இப்படித்தான் தம் பெருமை குறைந்து எளியராகின்றனர்.

(உசு) கண் சிறியது; ஆனால் அதன் ஒளியானது கதிரவன் முதலிய பேரொளிப் பொருள்களையும் பார்க்கத் தக்கபடி வானளாவியதா யிருக்கின்றது. அது போல, சான்றோர், உருவத்தாற் சிறியராயிருப்பினும் அவரது ஞானமானது எல்லாம் வல்ல இறைவனருளையுங் காணத்தக்கபடி பரந்து விரிந்ததாயிருக்கின்றது. ஆதலால், உடலின் சிறுமையைக் கண்டு, ஞானமும் அவ் வுடம்பளவினதே என்று அறிஞர், கருதார். மற்று, ஞானத்தின் பெருமையை அவர் மதித்தொழுகுவர்.

(உஎ) பல், நாக்குக்கு நல்ல உதவி செய்கின்றது; மிக்க சுவையுண்டாகும்படி வலிய பொருள்களை நன்றாக மென்று கொடுக்கின்றது; இளம் பற்கள் இவ் வகையில் இன்னும் நன்றாக உதவுகின்றன; தாம் கைம்மாறு எதிர்பார்ப்பதுமில்லை. அதுபோல, கற்றறிந்த பெரியோர்களும் பிறர்க்கு உதவி செய்யும் போது கைம்மாறு விரும்பாமற் செய்கின்றனர்; மேலும், உழைப்பெடுத்துச் செய்கின்றனர்; தம்மால் இயன்றவளவுஞ் செய்கின்றனர்.

(உஅ) வாழைக்காய், பிஞ்சான காய் நிலையிலும் பிறர்க்குப் பயன்படுகின்றது; எட்டிப்பழமோ பழமாகிக் கனிந்த நிலையிலும் பயன்படுவதில்லை. அறிஞர், மனவெறுப்புடைய காலத்திலும் பிறர்க்கு ஒன்று உதவுவர்; மூடர், மனமகிழ்ச்சியுடைய காலத்திலும் உதவார்.

(௨௯) நிலாவில் மான் உருவம் தெரிகின்றது; விண்ணில் உள்ள அந்த நிலா மான், மண்ணில் உள்ள புலிக்கு அஞ்சுமோ? அதுபோல, உயர்ந்தவரான ஆண்டவனிடத்தில் நெஞ்சம் பொருந்தியிருந்தால், அது, தாழ்ந்த இந்த உடலின் துன்பங்களுக்கு அஞ்சுவதில்லை.

(௩0) வெள்ளம் வருவதற்கு முன்பே அணை கோலி வைப்பது அறிவுடைமை. அங்ஙனம் வையாதவர், வெள்ளம் வரும்பொழுது, ஏமாந்தவர்போல வருந்துவர். மக்கள் வாழ்க்கையில், கூற்றுவன் கொல்ல வருவது வெள்ளத்தைப் போன்றது. அதைத் தடுப்பதற்கு, முன் விழிப்பாகவே கனிவோடு புண்ணியம் செய்துகொள்ளவேண்டும். அங்ஙனம் முன்பே செய்துகொள்ளாதவர்கள் கூற்றுவன் வரும்போது தப்பவே முடியாமல் அவன் கையிற் சிக்கி இடர்ப்படுவார்கள்.

(௩௧) உடம்பின்மேல் அடிபடும்போது கை விரைந்து சென்று தான் தாங்கிக்கொள்கின்றது. பெரியோரும், பிறர்க்கு வரும் துன்பத்தை விரைந்து தாம் ஏற்றுக்கொண்டு அவர்களை வீரமொடு காத்து வருவர்.

(௩௨) தீயவர்கள் உள்ளே புகாதபடி, வீட்டில், கதவு வலிவாயிருந்து தடுத்துவருகின்றது. ஆனால் அந்தக் கதவிற்கு உள்ள வலிவெல்லாம் அதன் தாழ்ப்பாளிலேதான் இருக்கின்றது. அதுபோல, நாம் செய்யும் புண்ணியங்கள், நமக்குத் தீமைகள் வராதபடி வலிவாய்க் காத்துவருகின்றன. ஆனால், அந்தப் புண்ணியத்திற்கு உள்ள வலிவெல்லாம் அதனை அற

நூல்களின் உட்கருத்துணர்ந்து செய்யும் நல்லுணர் விலேதான் உள்ளது. மெய்யுணர்வு இல்லாமற் செய் யும் அறங்கள், தாழ்ப்பாள் இல்லாத கதவுபோல வலி வில்லாதன.

(௩௩) மேல் நீராயிருக்கும் ஏரி குளம் முதலிய சிறிய நீர்நிலைகளுக்கு, பாதுகாப்பாகிய கரைகள் வேண்டும். ஆனால், ஆழ்நீராய்த் தனது நிலையில் நிற் கும் பெரிய கடலுக்கோ கரைகாப்பு என்பது இல்லை. உலகத்தில் அறிவு உரமில்லாத கீழ்மக்களே பிறரால் தமக்குக் குறைவு நேராதபடி தம்மைப் போற்றுதல் செய்துகொள்வர். ஆழ்ந்த பேருணர்வுடைய மேன் மக்கள் அதனை விரும்பார்; அவர்கட்கு அது தேவை யில்லை.

(௩௪) ஒளியுள்ள விழி, இருளைக் கண்டு அஞ்சும்; ஒளி மறைந்த குருட்டு விழிக்கு இருளைப்பற்றிக் கவலை இல்லை. விழிக்கு ஒளி எப்படியோ அப்படி மக்களுக்கு அறிவு. அறிவுடைய மக்கள் பழிக்கு அஞ்சி நடப்பர்; அறிவில்லாத கீழ் மக்களுக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை; அவர்கள் ஒரு நெறியுமின்றி மனம்போன போக்கில் அஞ்சாது ஒழுகுவர்.

(௩௫) உண்ணும்போது, பாலுக்கு வாழைப் பழம் வேண்டும்; புளித்த காடி நீருக்குப் பழம் எதற்கு? உலகத்தில், இனித்த உள்ளமுடைய நன் மக்களே கனிந்த பண்புடைய கற்றோரை விரும்புவர்; கீழ்மக்கள், அவரை மதியார்.

(௩௬) உலகத்தார், உயர்ந்த நெற்பயிருக்கே முயன்று நீர் இறைப்பர். காட்டில் உலரும் புல்லுக்குப்

போய் இறைப்பார்களோ? 'ஐயோ, காட்டில் புல் உலர்ந்துபோகின்றதே; நீர் இறைப்பார் இல்லையே' என்று யாராவது அதற்கு இரக்கங் காட்ட முடியுமா? எவ்வளவு புல்லுக்கென்று இரக்கங்காட்ட முடியும்? அதுபோல, பெரியோர்கள், நன்மக்களாகிய தக்கவர்களுக்கே தம் உதவிகளைச் செய்வர்; தகாதவர்களுக்கு யாரும் உதவுவார் இல்லையே என்று கருத முடிவதில்லை. உலகத்தில் உதவி ஒழுகலாறு இங்ஙனந் தக்கவர்களுக்காகவே நடைபெறுகின்றது. (நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிச் சில புல்லுக்கும் அங்கே பயன்படுவதுண்டு. அப்படி வேண்டுமானால், உலகத்தில் மேன்மக்களுக்காக நடைபெறுகின்ற உதவியொழுகலாற்ருல், அவர்களைச் சார்ந்து உறைகின்ற பொதுமக்கள் சிலரும் பயன்பெறுதல் கூடும். அவர்கள் உய்வதற்கு, அங்ஙனம் நல்லாரைச் சார்ந்திருந்தலொன்றே யல்லது வேறு வழியில்லை.)

(கஎ) அகத்திய முனிவர் தென்னுட்டுக்கு வந்தபோது இடையிலிருந்த விந்தமலை அப் பெரியார்முன் வீறு பேசி, பின்பு அவ் வீறு நிலைக்கமாட்டாமல் அவரால் அடக்கப்பட்டுத் தாழ்வடைந்துவிட்டதென்பர். ஆதலால், பெரியோர்முன் தம்மைச் சிறப்பித்துப் பேசி வீண்பெருமை கொள்ளும் பேதைகள், பின்பு அப் பெருமையை நிலைப்பித்துக்கொள்ளும் ஆற்றலின்றி, இழந்து தாழ்வடைவர்.

(கஅ) மரங்களில் காய்களும் இருக்கின்றன; இலைகளும் இருக்கின்றன. அவை நாடோறும் முற்றிக் கொண்டு வருகின்றன. காய்கள் முற்றினுல், நாம் தின்னக்கூடிய இனிய கனிகளாகும். இலைகள் முற்றி

ஞல் என்ன ஆகும்? வீணாய்ச் சருகாகி உதிர்ந்துபோம். அதுபோல, நல்லவர் செய்யும் நட்பு, நாளும் நன்மை யாய் வளர்ந்து பயன் தரும்; நல்லவரல்லாதார் செய் யும் நட்பு வீண்.

(௩௯) கொடிப் பூக்கள், தாம் மலர்ந்த நாளில் மிக்க மணம்வீசிப் பின்பு இல்லையாய்க் கருகிவிடும்; தீயோர் நட்பு, தொடக்கத்திற் கடு நட்பா யிருப்பினும் பின்பு அது மாறித் துன்பமே தரும்.

(௪0) மக்களுடம்பில் கை, கால், கண், காது முதலிய பல உறுப்புக்கள் இருக்கின்றன; இவற்றில் கண் மட்டும் நகைகள் அணிதலில்லை; கண் இயல் பாகவே ஒளி பெற்றிருக்கின்றது. பிற வுறுப்புக்கள் நகைகள் அணிந்துகொண்டாலும் அவை கண்ணுக்கு நிகராகுமோ? உலகத்தில், அரசர், பொற்பூண்கள் அணிந்து கொள்வர்; கல்வி வல்ல அறிஞர் அவை அணியாதவராஞலும், அந்த அறிஞருக்கு மன்னர் நிகராகமாட்டார்கள். அறிஞர்கள், அழியாக் கல்விச் செல்வம் படைத்தவர்கள்.

II. இணைப்பு:

கடமையின் உதவுக, செருக்கின்றி உதவுக, அன்புடன் உதவுக, ஆற்றலாக உதவுக, தக்கார்க்கு உதவுக என்பது சிவப்பிரகாசரின் குரல். அது, பின் வருமாறு நன்னெறியில் இணைந்து கசிந்து ஒழுகு கின்றது:

கடமையின் உதவுக

முகமன் எதிர்பாராது உதவுக (௧); ஏனென்ருல், மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்லும் இனியதே

(௨); ஆனால், தாம் பிறர்பால் ஒன்று எதிர்பார்க்கு மிடத்து இனிய முறையினால் நெறியறிந்து பெறுக (௩); எப்படியும், பொருள்கள், பயன்படும்போது தான் தன்னைப் பயன்படுத்துவாரின் செல்வமாகின்றது (௪); பொருளை இவ்வாறு பயன் கொள்ளல் அறியாமல், அதற்காக ஒருவரோடொருவர் மனம் வேறுகி நட்பு நீங்குதல் நன்றன்று (௫): காதலரும் அவ் வகையில் மாறுகொள்ளாமல் ஒழுகுவோரே (௬).

செருக்கின்றி உதவுக

மாறுபாட்டுக்குக் காரணம் செருக்கு; அதனை ஆழ்த்திவிடுக (௭); செருக்கு, சினத்தை எழுப்பும்; அதனைக் காத்துக்கொள்க (௮); மெலியோரும் வலியோரைச் சார்ந்து இடரின்றி யிருக்கக்கூடுமாதலின், அவரை மெலியோரென்றே கருதித் தம்மை வியந்து கொள்வலிற் பயனில்லை (௯); தற்பெருமையால் தன்னலங் கருதாது, பிறர்க்கு உதவியாயிருத்தல் ஒன்றையே கருதுக (௧௦); தன்னலத்துக்குக் காரணமான பொய்ப் புலனின்பங்களைச் சான்றோர் பொருட்படுத்தார் (௧௧); ஒன்பது அழுக்கு வாயிலுடைய உடம்பில், அறிவுப்பொருளான உயிர் பொருந்தி நிலவும் பிறவிக் குறிக்கோளை, அனைவரும் அறிந்தொழுகுதல் வேண்டும் (௧௨).

அன்புடன் உதவுக

ஆதலால், இயன்றதைப் பிறர்க்கு அன்போடு கொடுத்து உதவுக (௧௩); செல்வச் செருக்காகிய ஆடம்பரத்தைக் காட்டிக்கொள்ளலாகாது (௧௪); ஏனென்ருல், அன்பில்லாதவனுக்கு இடம் பொருள்

ஏவலாகிய எவை இருந்தும் பயனில்லை (கரு); அன்பிருந்தால், அவர், வீணே தம்மை வியந்துகொண்டிராமல், எளியவரிடமுந் தாமே சென்று அவற்றைப் பயன் வழியிற் செலுத்துவர் (கசு); எம் தந்தை பிறர்க்கு உதவியே வறிஞரானார் என்று சாக்குக் கூறார் (கஎ); உலகத்தின் மகிழ்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு இன்சொல்லோடு ஒழுகுவர் (கஅ); நல்லோராய் ஒழுகுவர் (ககூ); பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் காணும் கசிவுள்ளம் பெறுவர் (உ0); இங்ஙனம் அன்பினால் வேற்றுமையற்று அன்பு பிழம்பாய் விளங்குவாரைக் காணின், தன்முனைப்பு உடையோரும் அம் முனைப்பவிந்து அன்பராவர் (உக); அவர்க்குப் பிறப்பினால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதி வேறுபாடும் இல்லை (உஉ).

ஆற்றலோடு உதவுக

இன்னல் பொறுத்துப் பிறர்க்கு ஆதரவாய் இருத்தலாகிய இத் தவ ஆற்றலை என்றும் நெகிழாமற் காத்துவருக (உங); ஆற்றலுடையோர் பிறர் கூறும் இகழ்ச்சியைப் பொருட்படுத்தார், அஃதவர்க்கு இயல்பு என்றிருப்பர் (உச); அதற்காக, கீழோருடன் சேர்ந்து அவர் தமது பெருமையை இழவார் (உரு); உடல் வாழ்க்கைப் பெருமை முதன்மையன்று, உயிராற்றல் திறமே பெரிது (உசு); ஆதலால், மெய்வருத்தம் எடுத்தேனும் இயன்றது பிறர்க்குதவும் தவப்பணியிற் சிறந்து வருக (உஎ); வெறுப்பிலும் உதவுக (உஅ); உடலுக்கு வருந் துன்பங்களைப் பெரிதாக எண்ணவேண்டா (உகூ); காலத்திற் கனிந்து செய்தலே முதன்மை (ங0); பிறர் துயரந்

தாங்கும் வீரமும் விரைவுமே சான்ரோர் இயல்பு (ஙக); நூல்களின் உள்ளமாகிய மெய்யுணர்வே அவர்கள் குறிக்கோள் (ஙஉ); ஆதலால், பிறர் இகழா திருத்தற்காக அவர் பாதுகாப்பொன்றுந் தேடார் (ஙங); ஆனல், தமது நடத்தையிற் குற்றமில்லா திருத்தலிற் கருத்தாய், பழிக்கஞ்சி யொழுகுவர் (ஙச); நல்லோரை விரும்பி நடப்பர் (ஙரு).

தக்கார்க்கு உதவுக

தகுதியுடையோர்க்கே உலகத்தில் உதவியொழுக லாறு வேண்டும் (ஙசு); பேதையர், தக்கோரைச் சார்ந்திருந்தே உய்தல் வேண்டுமன்றித் தனித்துத் தாம் நிலைபெருர் (ஙஎ); தக்கோர் தொடர்பினுல் உலகம் நாளுக்குநாள் நலம் பெருகி வரும் (ஙஅ); தகாதார் தொடர்பில் நாளுக்கு நாள் தீமை நிகழ்வு உள்ளது (ஙகூ); ஆதலால், வளத்திற் சிறந்த மன்னனைவிடக் குணத்தில் உயர்ந்த தக்கோரை, உலகத்தார், பின்னுங் கருத்தாகப் போற்றிக்கொள்வாராக (சo)!

சிவப்பிரகாசரது திருவுள்ளச் சுனையில், தொடர்ந்து ஊறிய அமிழ்த வெள்ளம் இத்தகையது! மக்கள் வாழ்வைப் புனிதமாக்கி அவர்கட்கு அருள் வளம் ஊட்டுவது! அவர்களைப் பெருவாழ்வில் அமர்த்துவது!

III. நுட்பம் :

வாழ்க்கை, கட்டுப்பட்டதும் படாததுமென இரு வகை. கட்டுப்பட்டவர்க்கு உலகம் ஒரு வலை; படாதவர்க்கு ஓர் இன்பப் பூம்பொழில். நிலைமையின்

வளர்ச்சி புறத்தில் இல்லை. அவரவர் அகத்திலே தான் உள்ளது. உண்மையில் அவ் வளர்ச்சியை உண்டாக்கும் அழகோவியமே இவ்வுலகம். அதன் அருமையை அறியாமை எத்துணை ஏழைமை! சிவப்பிரகாசர்க்கு எங்குந் தோன்றிய உதவி யியக்கம், எத்தனையோ பலர்க்கு ஏன் தோன்றவில்லை; உள்ளத்தில் ஒளியில்லை.

உள்ளொளி, மக்களை விடுதலைப்பே றளித்து உரிமை வாழ்க்கையில் நிறுத்துகின்றது, அவ் வாழ்க்கையுடையோர் செய்வனவெல்லாம் அறச் செயலே; சொல்வனவெல்லாம் மறைமொழியே; நினைவனவெல்லாம் அருளியலே! பிறரை அவை எவ் வகையிலும் ஈர்த்து ஆட்கொள்ளுதலின், அவற்றிற் குத் தட்டுத்தடங்கல் யாதுமில்லை; யாண்டுமில்லை. தனக்கொரு செயலின்றி வெள்ளத்தின் வழி இழியும் மிதவைபோல, உலகம் அப் பெரியோர் நினைவின் வழியே ஒழுகுகின்றது. உலகம் இங்ஙனம் உள் ளொளிச் சான்றோரின் வழியது; அவர் உலகத்தின் வழியரல்லர். இத்தகைய பேருரிமை வாழ்க்கையர் அப் பெரியோர்.

பெரியோர் உள்ளத்தைத் திறந்து இவ் வொளி நெறியைத் தோற்றுவித்த திறவுகோல் எது? அத் திறவுகோலே 'ஒப்புரவு' என்னும் உதவியியல்! ஈது, உயிர் வாழ்க்கையின் திறவுகோல்; உலகியலின் திறவு கோல்! 'ஒப்புரவு வாழ்வு வாழ்பவனே வாழ்பவன்; அஃதில்லான் இறந்தவனே' என்றார் பொய்யாமொழி யார். உலக காரியங்களின் வெற்றியெல்லாம், பிறர்க்கு உதவியுந் துணையுமாயிருக்கும் இவ் வொப்புரவுப்

பண்பில் உள்ளது. உலகமெல்லாம் தன்னை அவாவ வாழும் வகை இவ் வொப்புரவின்கண் உள்ளது. ஒப் புரவின் நல்ல பிற யாண்டும் இல்லை. ஊருணி நீர் நிறைந்தாற்போலவும், பயன் மரம் ஊர் நடுவிற் பழுத் தாற்போலவும் இப் பண்பு உடையார் திகழ்கின்றனர். இவரே உண்மையிற் கடமை வீரர்; உயிர் வாழ்வோர்; நயனுடையார்; பேரறிவாளர்; பெருந்தகையார். தெய்வத் திருவள்ளுவர் இங்ஙனம் ஐவகைச் சிறப்பில் இவரை விளக்கினர். இவை முறையே கடமை வாழ்வு, முனைப்பவிந்த வாழ்வு, அன்பு வாழ்வு, ஆற்றல் வாழ்வு, பெருந்தன்மை வாழ்வு எனப்படும். இத்தகைய வாழ்க்கையியல்பே, தன்னை யுடையார்க்கு, உரிமைத் திருமாளிகை எழுப்பி அதனுள் அருள் அரியணை அமர்த்துகின்றது.

சிவப்பிரகாசர் அப் பேருரிமைத் திருவினர்; தாம் பெற்ற உரிமையைப் பிறரும் பெறும் வகை விரும் பினர். ‘கடமையின் உதவுக, முனைப்பவிந்து உதவுக, அன்பின் உதவுக, ஆற்றலின் உதவுக, பெருந்தகைக்கு உதவுக’ என அவர் திருவுள்ள மலர் அறத்தேன் சிந் திற்று. உலக நடை என்னும் இவ் வொப்புரவு நடை யின் விழுப்பம், நன்னெறியில், பாலொடு தேன் கலந் தாற்போல, தூய இன்சுவை உவமங்களும் பிறவும் பெய்து குழைத்த செந்தீந் தமிழ்ப் பேரமிழ்தாய் நமக்குக் கிடைத்தது.

கடமை செருக்கவிக்கும்; செருக்கு அவியின், அங்கு அன்பு மலரும்; அன்பு, ஆற்றல் விளைக்கும்; அது, பெருந்தன்மையைப் பெருக்கும். பின்பு, யாண் டுங் கட்டற்ற உரிமை அருள்வெளியே! உதவி யியக்

கம், இங்ஙனம் உயிர் வாழ்வை உரிமைப் பெரு வாழ் வாக்குகின்றது. நாளும் பிறர்க்கு உதவியுந் துணையு மாய் விளங்குவோரை விரும்பாதார் யார்? பின்பற் ருதவர் யார்? அந்நிலையில் அவர்க்குக் கட்டுந் தடங்க லும் ஏது? உரிமை ஒளி வாழ்வுதானே!

திருவள்ளுவர், பொருட்பாலிற் கடமைகளை விளக்கினர்; இன்பப்பாலில் முனைப்பவிந்த பண்பை உணர்த்தினர்; அறத்துப்பாலின் இல்லறவியலில் அன்பு வாழ்வை எடுத்துரைத்தார். துறவற வியலின் நோன்புப் பகுதியில் தவ ஆற்றலை அறிவுறுத்தார்; ஞானப் பகுதியில் பெருந்தன்மையைத் தெளிவித்தார். பொருட்பாலிலிருந்தே வாழ்க்கை தொடங்குகின்றது; பொருள் இன்பத்தை விளைத்து அதன் வழி அறத்தை யும் பயக்கும் என்பது தீர்ந்த கருத்து. பொருளும் இன்பமும், வாழ்க்கை மாளிகையின் படிகள்; அறத் துப்பால் வாழ்க்கை மாளிகை; இல்லறப் பகுதி, அம் மாளிகையில் வாழ்க்கையை நிறுத்தி அதன்கண் உரிமையரியணை மண்டபத்திற்குத் திறவுகோல் அளிக் கின்றது; அத் திறவுகோலே இல்லறப் பகுதியின் இறுதியில் உள்ள 'ஒப்புரவு' என்னும் அதிகாரம்!

பிறர்க்கு உதவியுந் துணையுமாயிருக்கும் உதவி யியக்கத்தை ஒப்புரவு உணர்த்தும்; அது, மக்களுள் தம்மைப்போன்றவ ரிடையே நிகழ்வது; ஏழை எளிய வர்களிடையே நிகழும் உதவி 'ஈகை' எனப்படும். இங்ஙனம் உதவி யியக்கம் இருவகைப்பட்டுப் புகழ் என்னும் ஒளி வாழ்வை உண்டாக்குதல், இல்லறப் பகுதியின் இறுதிப் பகுதி யாயிற்று. இவ்வாற்ருல், ஈகையும் புகழும் ஒப்புரவில் அடங்கி, அவ் வொப்

புரவே வாழ்க்கையின் உரிமைப் பேற்றுக்குத் திறவு கோலாதல் தெளியப்படும்.

துறவறப் பகுதி உரிமைப் பேறு (விடுதலை) வழங்குகின்றது.

இங்ஙனமெல்லாம், ஒப்புரவியக்கம் வாழ்க்கையின் திருப்புக் கருவியாய்த் திகழ்ந்து மக்கட்கு நன்னெறி திறத்தலின், சிவப்பிரகாசரின் நன்னெறிக்கு இவ் வுதவியியக்கமே உள்ளுறையாயிற்று.

௫. விளித் திறன்

ஒரு மாது! பூவைப்போல மென்மையும் மினு மினுப்புங் கொண்டு மலரணிந்து அழகு திகழும் வழு வழுப்பான கூந்தல் (க, ரு)! ஒளியும் பிறைவடிவு முடைய உணர்வு நெற்றி (உ, ௩௪)! விற்புருவம்! அம்பெனக் கடைபாயுங் கவர்ச்சியும், வேலென வெற்றிகாணும் விளக்கமும் வாய்ந்த ஒள் விழி (உரு, ௩ரு)! பண்ணிசைபோல விரும்பத் தகுந்த குளிர்ச்சி மொழி (உகூ)! முழு நிலாவை ஒத்த தண்ணிய ஒளி மிளிரும் முகம் (௬)! மென்மையும், சுரப்பும், பூரிப் பும், பொன்னிறமுங் கொண்ட மார்பு (௩, க௩, உ௩, ௩எ)! வண்டுகள் மொய்க்குங் குளிர்ந்த மலர்மாலை (க௪)! ஒலிக்கும் மெல்லிய பொன்வளையல் (௩கூ)! தெரிந்தெடுத்த திருந்திய பெருந்தன்மையான சில அணிகலன்கள் (க௨, உ0, ௩க)! அழகும் இளமையும் ஒழுகுங் குணவடிவு (உகூ, ௪0, கரு, ௩அ)!

சிவப்பிரகாசர் தமது அன்பு நெறியாகிய நன் னெறியில் அளவளாவுந் தெய்வ நங்கையார் இவர்; இத் தெய்வ மங்கையே அந் நூலில் மகடூஉ முன்னிலை யாக விளிக்கப்பட்டிருக்கின்றனர். அற நூல்களில் இங்ஙனந் தெய்வப்பெயரை விளிக்கும் இயல்பு, 'சோமேசர் முதுமொழி வெண்பா' 'சிவ சிவ வெண்பா' முதலியவற்றுனும் பெறப்படும். பேசு வதும் பேசப்படுவதும் பேசும் பொருளும் அருளே ஆகிய பெருநிலையில், இயல்பான இத் தெய்வ முன் னிலை, தானே எழுகின்றது.

நன்னெறி நங்கையார் எத்துணை அழகிய நாகரிக நங்கையார்! கூந்தல், அதிற் சில மலர்! நெற்றி, அதில்

உணர்வு! கண், அதில் கவர்ச்சி, வெற்றி! மொழி, அதில் இனிமை, தண்மை! முகம், அதில் அறிவொளி! மார்பு, அதில், பெண்மை, தாய்மை! அதாவது காதல், கற்பு! மேலும், ஒரு மலர் மாலே! இளமை, அழகு, குணம் அமைந்த இத்தகைய இயற்கை வடிவு! செயற்கையாக, கற்புக்கு அறிகுறியான வளையல்; அதனையொத்த கணையாழி போன்ற சில தெரிந் தெடுத்த பெருந்தன்மையான அணிகலன்! இங்ஙனம் திருந்திய உணர்ச்சி உரு! இயற்கை உணர்வு எழில்!

தமிழ் மாதர் எவ்வளவு இயற்கைச் செவ்வியும் எளிமையெழிலும் உடைய உணர்வு ஒளியினர்! தமிழ் ஆடவர், அவரை எவ்வளவு கண்கொள்ளாக் காட் சியிற் கண்டு, அதாவது புறக்கண் கொள்ளாத் தெய்வக் காட்சியிற் கண்டு, பெருவாழ்வு வாழ்ந்த நாக ரிகர்! நாகரிகத்தின் முடிநிலைச் செவ்வியையன்றோ சிவப்பிரகாசர் இங்கே தீட்டியுள்ளார்! 'மங்கையர்க் கரசி! வரிவளைக் கை! மட மானி! பங்கயச் செல்வி!' என இச் செவ்வியிலேயே அருட்காட்சியினரான திரு ஞானசம்பந்தரும் அருளிச்செய்யும்படி, தமிழ் நாட் டின் தெய்வ மாதரார் முன்னுந் திகழ்ந்தனர்! 'போதி லார் திரு! புகழுடை உரு! தீதிலாத் திறம்! பெருங் குணக் காதல்!' என, தெள்ளிய துறவோரான இளங் கோவடிகளாரும் இம் மங்கலச் செவ்வியிலேயே பாராட்டி மகிழும்படி சங்ககாலத்துத் தமிழ் மாதரும் பண்டு திகழ்ந்தனர். தமிழ் நாட்டின் வழி வழிப்பட்ட நாகரிகச் செவ்விதான் எவ்வளவு உணர்வுருவானது! சிவப்பிரகாசரின் இனிய பெருந்தன்மையான எழி லுள்ளமும் அருட் செவ்வியும் உரிமைப் பேறுங்

குழைந்த நன்னெறி ஒழுக்கம், தமிழ் மக்கட்குச் சிறந்த தேனருவியே!

நன்னெறியிற் பாதிக்கு மேற்பட்ட பாடல்கள் விளியுடன் வருகின்றன. எல்லாம் இடத்திற்கேற்ற பொருளியையுடைய விளிகள்! பயன் விளைக்கும் விளிகள்! வெற்றெனத் தொடுத்தது யாதுமில்லை. செய்யுளிசை முதலியவற்றிற்கும் அவை ஓரளவு பயன்படுமாயினும், பொருட்பயனே அவ் விளிகளின் பெரும்பயனும் முதல் நோக்கமு மாகும். அவ்வாறு விளி முதலியவற்றை இடையிற் கொண்டு, கருத்துக் களுக்கு மேன்மேலும் வளம் ஊட்டிச் செல்லும் நூலியல்பு, இனிமை மேவியதொரு காவிய நலமாம். மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருச் சிற்றம்பலக் கோவையாருள்ளும், தில்லைச் சிற்றம்பலம் அங்கங்கும் பற்பல வகையாக விதந்து கூறப்படுதல், இந் நலம் அமைந்ததாகும். அந்நூலின் சிறந்த உரை யாசிரியரான பேராசிரியர் இதனைத் தமதுரையில் இடமறிந்து விளக்கிச் செல்கின்றார். அகநானூறு முதலிய சங்ககாலத்துத் தொகை நூல்களிலும் இடை யிடையே வருகின்ற விளிகள் முதலியவை இங்ஙனம் ஏற்ற பொருட் குறிப்புக்கள் புலப்படுத்திச் சுவை பயந்து செல்லுதலும், அதனை அவ்வவற்றின் உரை யாசிரியர்கள் ஆண்டாண்டும் நினைவாக எடுத்துக் காட்டி இன்பம் பெருக்கி உதவுதலும் இங்கு நினைவு கூரற்பாலன. ஆசிரியர் தொல்காப்பியர் தமதிலக்க ணத்தில் எடுத்துக்காட்டிய இறைச்சி, உள்ளுறை முதலியவற்றானும், நூலின் இச் சுவை யமைதிகள் தெளியப்படும்.

நன்னெறியில் வரும் விளிகளின் பொருளியைபு கட்கு, சில எடுத்துக்காட்டுகள் இங்கே நினைவுகூர லாம். விருப்பமொடு கொடுப்பர் என்று அன்புணர்ச் சியைப் புலப்படுத்துமிடத்தில் (௧௩), விளியில், பால் சுரத்தலை ஆசிரியர் எடுத்துக் காட்டுவர். தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றம் என்றவிடத்து (௧௪), 'இரைக்கும் வண்டு ஊது மலர் ஈர்ங்கோதாய்' எனத் தோற்றப் பொலிவு தோன்ற விளித்தார். அன்பு வேண்டும், மற்றுச் செல்வம் முதலியன அன்பின்றிப் பயனில்லாதன என்று விளக்கியவிடத்தில் (௧௫), குணமாண்பு தோன்ற 'நல்லாய்' என்றார். கன்றும் உதவும் கனி என்புழி (௧௭), கரு ஈனும் வாழ்வரசிக்கு அறிகுறியான கை வளைகளைச் சுட்டிப், 'பைந்தொடீ' என்பர். பகர்ச்சி மடவார் பயில நோன்பாற்றல் நெகிழ்ச்சி பெறும் என்று விளக்கியபோது (௨௩), காதற் குறிப்புத் தோன்றப் பூரிப்பு எடுத்துக் காட் டினார். நொய்தாம் புணையிற் புகும் ஒண்பொருள் என்று அறிவுறுத்துங்கால் (௨௫), கண்களை மயக்கத் துறையிற் பயன்படுத்தும் ஒருவகைப் பெற்றி தேற்றி 'வில்லார் கணையிற் பொலியுங் கருங்கண்ணாய்' என விதந்தழைத்தார். உடலின் சிறுமையை நுவன்ற விடத்து (௨௬), விளியிலும், 'மடவரால்' என இளமை குறிப்பர். பயன்றேர் அறிவாகிய மெய்யுணர்வையும் மன்னும் அறத்தையும் பற்றிப் பேசுங்கால் (௩௨), உள்நாட்டத்தின் இடமாகிய நெற்றி யுணர்வைக் குறித்து 'நன்னுதால்' என்று சிறப்பிப்பார். இங் ஙனம் இவ் விளிகள் நன்னெறி முழுதும் பொருட் சுவை பெருக்கி இன்புறுத்துகின்றன.

௯௰. கவிச் சுவை

உலகத்தின் இயற்கை நிகழ்ச்சிகளில் கவியின் தோற்றமும் ஒன்று; ஆனால், அது, எல்லாவற்றையும் விடத் தலைசிறந்தது.

இரவைப் போழ்ந்துகொண்டு ஞாயிறு தோன்றுகின்றது. இருளை ஊடுருவிக்கொண்டு மின்னொளி மிளிர்கின்றது. பாறைகளையும் தூறுகளையும் மோதிக் கொண்டு மழையருவி ஓடிவருகின்றது. நிலத்தைப் பிளந்துகொண்டு கனி மரங்கள் வளர்ந்து விரிகின்றன. வயிற்றைக் கிழித்துக்கொண்டு மகவுகள் பிறக்கின்றன. அறியாமையை உடைத்துக்கொண்டு உணர்வுகள் வீறுகின்றன. புலனுணர்வை இகந்து கொண்டு கவிகளாகிய உள்ளுணர்வுகள் எழுகின்றன.

எல்லாம் இயற்கை நிகழ்ச்சிகளே; அவை, எதனாலும் அடக்கவோ தடைசெய்யவோ முடியாதன; காரிய வீறு படைத்தன; பயன்முகமாக நிகழ்வன. கன்றை நினைந்து கனிந்து பால் சொரிந்துகொண்டே வரும் புனிற்றாவின் வேகத்தை யார் தடைசெய்ய முடியும்? தடைசெய்தால் என்ன நேரும்? இயற்கையுலகத்தில் துன்பங்கள் இடர்கள் என்பன இத்தகைய தடைகளால் நேர்வனவே. இயற்கை நிகழ்ச்சிகளில் தடையின்றேல், உலகத்தில் இன்னலில்லை; எல்லாம் இனிமை வண்ணமே! புனிற்றா பகலெல்லாம் காடுகளிற் புன்மேய்ந்து மாலையில் தான் ஒரு பயனை நிறைவேற்றும்பொருட்டு அங்ஙனம் எவர் தடைக்கும் அடங்காமல் அவ்வளவு வேகமாய் உணர்வு வீறி ஓடி வருகின்றது!

தடைக்கடங்காத பயன்முகமான இவ் வேகம் அதற்கு ஏது? கன்றை நினைந்த உணர்வு வீறலால் உண்டாயிற்றென்பதை அனைவரும் அறிவர். வெள்ள மாக ஆறு, ஏதோ ஒரு வேலைக்காக ஓடி வருவது போல, எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு தடை யின்றிப் பெருகிவருகின்றதே, அதற்கு அப் பயன் முக மான வேகம் ஏது? அதுவும், உலகியற்கையின் ஓர் உள்ளுணர்வு வீறலே! தடை கீறி எழுகின்ற பயன்முக மான ஆற்றல் இங்ஙனம் உள்ளுணர்வாற்றலாய் முடி தலின், அவ் வுள்ளுணர்வின் தலைசிறந்த எழுச்சி வகையே கவியெழுச்சியாம் என்பது; புலனுணர்வைக் கடந்த அவ் வுள்ளுணர்வு வீறலின்றிக் கவி இல்லை.

ஆதலின், தடையின்றி எழுகின்ற பயன்முகமான உள்ளுணர்வு வீறலே, கவிக்கு நிறங்கொடுக்குஞ் சுவை யடிப்படை என்க. பூங்காவில் உரோசா, முல்லை, மரு, சாமந்தி, நீலம் முதலிய பல்வேறு மலர்களின் பல்வேறு நிறங்களுக்கும் ஒரு ஞாயிற்றின் ஒளி காரண மாதல் போல, கவிகளின் ஓசை யின்பம், சொற் சிறப்பு, பொருளழகு, ஒழுங்கு நடை, அணியினிமை என்னும் பல்வேறு சுவைகட்கும் இவ்வுள்ளுணர்வுச் சுவையே நிறங்கொடுத்து ஒளி பெருக்கி நிற்கின்றது. ஆகவே, கவிகள் என்பன வெறுஞ் சொற்பொருள் வடிவுகள் அல்ல; ஒவ்வொன்றும் ஒவ்வோர் உணர்வுத் துண்டு! அல்லது நிறமலர்! அல்லது சுவைக்கனி! அல் லது காந்தக் கட்டி! ஞானத்திரு!

இயற்கையின் உள்ளுணர்வு, எஞ்ஞான்றும் தனித் திருப்பதன்று. பொருளியற்கைகளிலும் உயிரியற்கை களிலும் கலந்தே அவற்றை ஊடுருவிக்கொண்டு மேல்

மிளிரும். கலந்திருக்கும் இயல்பு வகையிலேயே அதன் இனிமையறிந்து பேசின், அப்போது அப் பேச்சுக்கள் கவியாம். இவ்வினிமைத் திறமே, நூல்களில் 'மெய்ப் பாடு' எனப்படுவது. கவிகள் அறநூற் கவிதைகளாக வேனும் காப்பியக் கவிதைகளாகவேனும் அமையும். இயற்கைச் சுவை வாய்ந்த கவிகள் மேன்மேலும் தெளிவு திகழ விளங்குமாயின், அவை கழிபெருஞ் சுவை பயக்கும். இத்தெளிவு 'உவமைத்' திறத்தில் உள்ளது. இப் பெரும்பயன் கருதியே ஆசிரியர் தொல் காப்பியர் செய்யுளியலுக்கு வேருக 'மெய்ப்பாட்டியல்' 'உவமவியல்' என இரண்டு அரிய இயல்களை நிறுத்தி விளக்கியிருக்கின்றனர்.

கவிகள் காரியமுகமாக உலகத்தில் எழுவன என் பது மேல் நுவலப்பட்டது. தீர்ந்த தெளிவைப் பெறு மாறு, உலகத்தை இயக்குதலே அக் காரியமாகும். சான்ருேர் கவிகள், அதனை மிகு வல்லமையாகச் செய் கின்றன. திருக்குறள், சங்க இலக்கியங்கள், திருமுறை கள், அறநூல்கள் முதலிய தமிழ்க் கவிகள், தமிழ் நாட்டுக்கும் உலகுக்குஞ் செய்திருக்கும் செயற்கருஞ் செயல்களால் அவை பெற்றிருக்குந் தெளிவு மிகச் சீரிது. 'மெய்ப்பாடு' 'உவமை' என்னும் இனிமைத் திறங்கள் இக் காரியப்பாட்டிற்குப் பெருந்துணை புரி கின்றன.

காதல் நிகழ்ச்சி ஒரு கவர்ச்சித் திறம்: கற் பொழுக்கமாவது தெளிவுத் திறன்; இவற்றின் காரி யப்பாடு அருட்பேறு. செய்யுள் என்னும் நங்கைக்கு மெய்ப்பாடும் உவமையும் பொருளும் முறையே இத் தகையன. நன்னெறியின் மெய்ப்பாட்டியல்பு கருத்து

விளி, உவமை என்னும் முப்பெரும் பிரிவுகளிலும் ஊடுருவி விளங்குகின்றது. அவ்வுணர்ச்சிச் சுவையின் தெளிவு, உவமங்களில் மிக அழகாக நிழலாடுகின்றது.

அடிப்படைக் கவிச்சுவைகளாகிய 'மெய்ப்பாடு' 'உவமம்' என்பவற்றில், நன்னெறி பெருவளமுள்ள தாய்த் திகழ்கின்றது.

I. மெய்ப்பாடு :

நல்லோர் உள்ளுணர்வு புறத்தே வெளிப்படுங் கால், அது கட்டாயம் பிறர்க்குப் பயன்முகமாய்ப் பிரிவுபட்டு மிளிர்கின்றன. இயல்பாகத் தர்மை மறந்த ஒப்புரவு ஒழுக்கத்தால் தோன்றும் இவ் வுணர்வு மிளிர்வே 'மெய்ப்பாடு' எனப்படும். மக்களை நுண்ணிய ஒள்ளியராக்கும் மெய்ப்பாட்டுப் பேறு, உயர்ந்த மோன நிலைக்கண் கதிர்விடும் அருட்டிரு எனல் பொருந்தும்.

"பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்;—நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்குங் கடிது"

என்னுஞ் செய்யுளில் (௩௧) வரும் உவமையிலும் விளியிலும் பொருளிலும் 'பெருமிதம்' (வீரம்) என் னும் மெய்ப்பாடும்,

"பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க ;—தெரியிழாய் ;
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்"

என்னுஞ் செய்யுளில் (௨௦) வரும் பகுதிகளில் 'அவ லம்' (துன்பம்) என்னும் மெய்ப்பாடும் இணையற்ற

நிறைதுளும்பலாய் எதிர்ந்துள்ளன. இனைய மெய்ப் பாட்டுணர்வுடைய சான்றோர்களால், மோனமாகவே அதாவது செய்கை யுருவாகவே உலகுக்கு விளையும் நலங்கட்கும் ஓர் இணையுண்டோ ! சுவை மிக்க பாடல் என்பதற்கும் கவியின்பம் என்பதற்கும் இவை போன்ற பாடல்கள் தக்க எடுத்துக் காட்டுகள் ! இங்ஙனமே,

"நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் ;—பூக்குழலாய் !
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்"

என்பது (ரு), நகை என்னும் மெய்ப்பாட்டுணர் வுக்கும்,

"வருந்தும் உயிர்ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை !—திருந்திழாய் !
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு"

என்பது (கஉ), புதுமை என்னும் வியப்பு மெய்ப் பாட்டுக்கும் உரியன. உவகை என்னும் சுவை யுணர்வு,

"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமம் செய்பவே ;—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி யென்முகத்தாய் நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்"

என்னுங் கவியிலும் (சு), அச்சச் சுவை,

"கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே ;—பொற்றொடி !
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம்"

என்பதிலும் (௩௯), வெகுளிச் சுவையும், இழிப்பும் முறையே,

"முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் ;—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதான் எட்டிபழுத்
தாயினு மாமோ அறை"

"அறிவுடையா ரன்றி அதுபெறுர் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும் ;—பிறைநுதால் !
வெண்ணஞ்செய் வாள்விழியேயன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு"

என்பவற்றின்கண்ணும் (௨௮, ௩௪) கண்டுகொள்ளப்படும்.

ஒவ்வொரு மெய்ப்பாட்டுணர்வும் சிற்சில கருத்துக்கள் காரணமாகப் பிறக்கும். எடுத்துக் காட்டாக, வீரச் சுவை என்பது கல்வி, அஞ்சாமை, புகழ், கொடை என்பன பொருளாகத் தோன்றும் என்ப. இவ்வாறே பிறவும். சுவைக்குரிய இவ்வடிப்படைக் கருத்துக்கள் அற நூல்களிலும் வரும்; கதை பொருளான காப்பியங்களிலும் வரும். அறங் கூறுவோர் வாளா சொல்லளவிலன்றி அதற்குத் தக நிற்கு நிலையினராயின் அவரே காப்பியச் சுவையுருவினராதலின், அவர் கூறும் அறநூலுரைகள் மெய்ப்பாட்டுச் சுவை துளும்பிக் கவிதைகளாகின்றன. தெய்வத் திருவள்ளுவர் முதலிய சங்க காலச் சான்றோர் அத்தகைய செயற்கருஞ் செய்கை நிலையினராதலின், அவர் செய்யுட்களிலெல்லாம் கவிதைச் சுவை இணையற்ற நுட்பத்திற் பொங்கி வழிகின்றது.

காப்பியங்களில் மெய்ப்பாட்டுணர்வு விளங்கப் பொலியுமெனின், அறநூல்களில் அவ்வுணர்வு நுண்

ணுணர்வினுரை இன்புறுத்தத் தக்க மிகு நுட்ப நிலையில் உயர்ந்து நிழலாடு மென்க. காப்பிய ஆசிரியன் பிறர் நிகழ்ச்சியைக் கூறுவோன்; ஆதலின், அறங் கூறுவோனைப்போல் அத்துணை உயர்ந்தோன் அல்லனாதலுங் கூடும். ஆனால், பிறர்க்கு அறம் உரைப்போன் எவனும், தான் அவ் வறநிலைக்கண் நின்றொழுகுஞ் செயல் நிலையினனா என்பது யாண்டுங் கருதுதற்குரியன். ஆதலின், அறநூல் உரைக்கும் திருவள்ளுவரொத்த சான்றோரே, மிக நுண்ணிய தெள்ளிய உயர்ந்த மெய்ப்பாட்டுணர்வு ஆற்றலாய் நிழலாடுங் கவிச்சுவைப் பெரியாராவர். மேலும், மெய்ப்பாட்டுச் சுவைகள், அறநூல்களில், ஆசிரியனிடமிருந்து நேரே வெளிப்படுவன; காப்பிய நூல்களில் கதைக்குரிய உறுப்பினர் வாயிலாக, அவரவர் இயற்கைகளில் தோய்ந்து தம் இயற்கை மெலிந்து செயற்கை மலிந்து தோன்றுவன. திருக்குறளை ஒத்த சங்க காலச் செய்யுட்கள் முற்றும், ஆசிரியன் உணர்வை நேரே வெளிப்படுத்துஞ் செவ்வி பெற்று, இங்ஙனம் மெய்ப்பாட்டுச் சுவை மேன்மையாக நிழலாடும் உயர் வகைக் கவிதைகளான உணர்ச்சிப் பிழம்புகள் என்க!

கவிஞன், தன்னை மறந்த தெய்வ உணர்வினன். தெய்வ வுணர்வென்னுந் தூய்மையுணர்வு, இயற்கை யுலகில், அளவிலும் தன்மையிலும் பற்பல வகையாகத் திகழ்கின்றது. ஒரொழுக்கத்தில் தூய்மை குறைந்திருப்போர் மற்றோரொழுக்கத்தில் மேன்மை யுடையராதலுங் கூடும். கவிஞரிலும் பலர், சிற்சில வகையில் ஒழுக்கங் குன்றியிருத்தல் கூடும்; மற்றுஞ் சிற்சில வகையில் அவர் அறிஞின் அடைந்துள்ள மேன்மை காரணமாக, அவர்பாற் கவிகள் எழுதலுங் கூடும்;

ஆனால், முற்றுந் தூயோரான அறவோர் கவிதைகளை யொப்ப, அவை உயர்ந்த சுவையின ஆகா. இதனால், அறவோர் கவிதைகளை வேறு பிரித்து 'மறை நூல்' என்றும் பெரியோர் வழங்கினர்.

தன்னை மறந்த நிலையில், வெறி நிலையும் உண்டு; அதற்கு மிகச் சேய்மையில் உயர்ந்து ஒளி மிளிருந் தெய்வத் தெளிவு நிலையும் உண்டு; அன்றி, இடைப் பட்ட ஏனைப் பற்பல நிலைகளும் உண்டு. இவ்வெல்லா நிலைகளும் பொதுவில் 'தன்னை மறந்த நிலை' யென்றே கூறப்படுமாயினும், இப் பல்வேறு நிலைகளில் எழுந்த பல்வேறு தரப்பட்ட செய்யுட்களும் பொதுவிற் 'கவிதைக'ளென்றே பாராட்டப்படுமாயினும், அமைப்பு, சுவை, பயன் முதலியவற்றில் அவைதம் வேற்றுமை நன்கு பிரிந்து விளங்குவதேயாம்.

அவ் வேற்றுமையுள், அனைவர்க்கும் விளங்கத் தெரிந்ததோர் எளிய வேற்றுமை, தாழ்தரக் கவிகள் பயன்முக வரம்பு, முறை முதலியன கடந்து வழிதுறை கருதாது தெளிவின்றி வெறித்தோடுதலும், உயர்தரக் கவிகள் அப் பயன்முக வரம்பு முதலியவற்றின் அமைந்து பொருந்திய வழி துறைகளோடு அமைந் தினிது பாய்தலுமாகும். திருக்குறளும், பிற்காலத்திற் சேக்கிழார் திருத்தொண்டர் புராணமும் அங்ஙனம் உயர்ந்த தெளிவு நிலையில் வரம்பின் ஒழுகி மெய் யுணர்வுச் சுவை நனி சொட்டச் சொட்ட எல்லா வகையானும் இணையற்ற தெய்வப் பெற்றி யமைந்த அறநூலும் பெருங்காப்பியமுமாகிய மறைநூற் கவி மணிகளாகும்.

அடிகள் சிவப்பிரகாசர் இயல்பாகவே சுவை யுணர்ச்சி மிக்க கவிதையாளர்! அறநூலாகிய நன்

னெறியை அருளிச்செய்தபோது, அவர் அவ்வுணர்ச்சி யுருவாய் விளங்கியிருக்கின்ருர்! அதனுல், நுண்ணிய மெய்ப்பாட்டுணர்வுகள் அவருடைய நன்னெறிக் கவிகளில், கனிந்து திகழ்கின்றன. நன்னெறிச் செய்யுட்கள் நாற்பதும், மெய்ப்பாட்டுணர்வுகள் எழுதற்குரிய கல்வி முதலிய அடிப்படைக் கருத்துக்கள் அமைந்து உணர்ச்சியின் வீறிக் கவிச்சுவை இனிது பெற்றுள்ளன.

II. உவமை :

கவிச் சுவையின் மற்ருெரு வகைக் காரணம், உவமை. உவமை, கருத்துக்களில் தெளிவு உண்டாக்கும். அத் தெளிவிற் பிறக்கும் இன்பவுணர்வு, கவிச் சுவையின் மற்ருெரு வகைக் கொழுந்து. உருவகம் முதலிய ஏனை அணிகள் உவமையில் அடங்கும்; உவமையே, அவ்வகை யினத்தில் தலைமணி!

சிவப்பிரகாசர் இவ் வுவமைச் சுவையில் துறை போன பேருணர்வினர்! நன்னெறி இவ்வுண்மையின் அரண். ஆசிரியரின் பேருள்ளம் உவமைகளுடு மிக எளிதாக இனிதாக நடமாடிச் செல்கின்றது. சென்று, இணையற்ற வகையில் அவற்றை மெருகுறுத்துகின்றது. 'கைபட்டதெல்லாம் பொன்' என்பதுபோல் ஆசிரியர் தொட்ட தொட்ட பொருள்களெல்லாம் பொன்வண்ண உவமைகளாயின. இவ்வுவமைகளால், கருத்துக்கள் பெற்ற பேரொளி, அளவில் அடங்குவதன்று.

உவமைகள், கை, கண், பல், நாக்கு முதலிய உடம்பின் உறுப்புக்களும்; ஞாயிறு, திங்கள் முதலிய உலகின் பகுதிகளும்; வாழை, நெல், எறும்பு, காக்கை,

ஆன் முதலிய சிற்றுயிர்களின் வகைகளும்; தளிர், மலர், காய், பழம், வித்து முதலிய செடி கொடிகளின் பாகங்களும்; அணை, புணை, தாழ் முதலிய செய்கைத் திறங்களின் பொருள்களுமாக நன்னெறியில் வருகின்றன. இவற்றைக் கையாளுமிடத்து, ஆசிரியர் சில கதைகள் பழமொழிகள் தழுவி, வழக்கில் ஓர் எளிமை காண்கின்றார். சிவபிரான் சடைமேற் பாம்பமைந்தது, பாற்கடலில் நஞ்செழுந்தது, குறுமுனி கடல் உண்டது, விந்தமலை தாழ்ந்தது, காமன் மலரம்பு எய்தது முதலிய கதைகளும்; 'விழி யிலார்க்கு ஏது விளக்கு' 'கன்றும் உதவும் கனி' 'எறும்பூரக் கற்குழியும்' 'வெள்ளம் வருமுன் அணை' 'கரை காப்புளதோ கடல்' முதலிய பழமொழிகளும் நன்னெறிக்கண் வருதல் காண்க.

சிவப்பிரகாசர், பாட்டுகள்தோறும் விடாமல் உவமை பெய்திருத்தலை நோக்கினால், இவர்க்கு அங்ஙனம் உவமை யமைப்பதிற் சிறிதும் இடர்ப்பாடில்லாமையும், எளிமை இனிமை யுணர்வும், தெளிந்து புலப்படும். சில இடங்களில் (கூ, ௨௦), உவமைக்குமேல் உவமைகள் விரிந்து வருகின்றன. இவ்வுவமைகளின் பொருத்தம், எளிமை, திறமை முதலியனவெல்லாம், 'பொருளமைப்பு' என்னும் பகுதியில் 'அறவுரைகள்' என்று விளக்கியிருப்பவற்றில், ஊறிப்படிந்து திளைத்து உணர்ந்துகொள்ளலாம். இங்கே, வேறு சில அமைதிகளை நினைவுகூர்வோம்:

அன்பில்லாதவனுக்கு, இவ்வுலகத்தில் வேறு இடம் பொருள் ஏவல் எவையிருந்தாலும் பயனில்லை என்பது, 'இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்

மற்றெல்லாமிருந்தும் அவற்கென்செய்யும்' என்னும் ஒரு கவியின் (௬௫) கருத்து. இதற்கு, இரண்டு உவமைகள் வந்துள்ளன. 'மொழி இலார்க்கு ஏது முதுநூல்' 'விழியிலார்க்கு ஏது விளக்கு' என்பன அவை. இவற்றுள் ஒன்றே மேற்கூறிய கருத்தை வலியுறுத்தற்குப் போதும். ஆயினும், ஆசிரியர்க்கு அவ்வொன்றே அமைதி தரவில்லை; அதனால், அவர் வேறு சில நுட்பங்களைத் தெளிவிக்கக் கருதுகின்றார் என்பது வெளிப்படும்.

மொழி என்பது சொல்; நூல் என்பது சொல்லால் இயன்றது; இவை ஒலி வடிவு. விழி விளக்கு என்பன ஒளி வடிவு. ஒளியைவிட ஒலி, புறத்துப் பொருள்களில் மிகு நுட்பமானது. ஆதலின், இங்கே ஒலியை அடுத்து வரும் ஒளி, அதனினும் நுட்பமான அகக்கண் ஒளியைக் குறிப்பதாகும். எனவே, முன்னது இவ் வுலகியற்கும், பின்னது அருளியற்கும் உரிய உண்மைகளென்க. அன்பிருந்தால், அது, இவ்வுலகியல் வெற்றிக்கும் பயன்படும்; மறுமையில் அருளியல் விளக்கத்துக்கும் பயன்படும், இடம் பொருள் ஏவல் முதலியன அவ்வாறு தாமே யாண்டும் பயன்படுவன அல்ல என்பது இதனால் தெளிவித்தபடியாகும். இங்ஙனம் உவமைகளை ஆசிரியர் தக்க தெளிவு நலனங்களோடு பயன்படுத்திய நலங்கள் நன்னெறியில் உள்ளன.

இவ்வாறே, 'நனிவிளைவு இல் காய்' என்றது (௨௮), மூதறிஞரின் இளைய முனிவைக் குறிப்பிற் புலப்படுத்தும். 'கை தாங்கும்' என்றது (௩௧) அது பெரியோர்க்கு உவமமாதலின், அவர், செய்கையிற் பெரி

யோர் என்பது விளக்கும். அறிவென்பது மக்களின் உள்ளே இருந்து தீதொரீஇ நன்றுய்க்கும் பெருமைய தாதலின், கதவின் உட்பக்கம் இருந்து, வேண்டாரைத் தடுத்தும் வேண்டினரை விடுத்தும் அருஞ்செயல் புரி கின்ற தாழ்ப்பாள் அதற்கு உவமமாயிற்று (௯உ). பெரியோர் பெருமைக்கேற்ற போற்றுதலை எவராலுஞ் செய்ய இயலாதாகலின், எவராலுங் கரையெழுப்ப இயலாத பெரும் பெருமை யமைந்த கடல் அப் பெரி யோர்தம் இயல்பான மாட்சிமைக்கு உவமமாயிற்று (௯௯). காய் முற்றின் தின் திங் கனியாம் இளந்தளிர் நாள்போய் முற்றின் என்னுகிப்போம் என்பதில் (௯அ) 'நாள்போய் முற்றின்' என்பதன் நயமும், 'சென்று படர்ந்த செழுங்கொடி மென்பூ' என்பதில் (௯௬) சென்று படர்ந்த செழுமையும் மென்மையும் புணர்த் தோதியதன் எழிலும், அணிகள் அணிந்த பிற வுறுப் புக்களைவிட அவை யாதும் அணியாத கண் இயல்பா கவே உயர்ந்ததாக உள்ள தென்பதனுற் பெறப்படும் பொருட்பேறும் போல்வன ஆசிரியரின் பல்வகை நுண் ணறிவுகளைப் புலப்படுத்திப் பெரிதும் இன்புறுத்து கின்றன. நுட்பம், குறிப்பு, விளக்கம், பெருமை, நயம், எழில், பொருட்பேறு முதலியவற்ரேடு கூடிய இனைய உவமங்களின் உணர்வுத் தெளிவுகளால் விளையுஞ் சுவையினும், விஞ்சிய கவிச்சுவை யென்பது பிறிதி யாது!

எ. சிறுவர் மலர்

ஆசிரியர், உவமங்களை எடுத்தாண்டிருக்கும் வகைகளும் கருத்துக்களை எளிமை இனிமைகளாக்கியிருக்கும் முறைகளுமே நன்னெறி ஒரு 'சிறுவர் மலர்' என்பதைப் புலப்படுத்தும். கற்பிக்குந் திறத்தில் ஆசிரியர் தலைசிறந்தவராகத் தோற்றுகின்றார். சிறு பிள்ளைகளின் இயல்புகளையும் தேவைகளையும் வளர்ச்சி முறைகளையும் அவர் நன்குணர்ந்துள்ளார். மக்களை இளமையிலேயே திருத்துதலில் மிக்க ஊக்கங் காட்டுகின்றார். சிறு பிள்ளைகட்கு, தேவையற்ற தொன்றில் அவாச் செல்லாதவாறு, அங்கங்கும், கருத்துக்களைப் பெய்து செல்கின்றார். நகைச்சுவையான சிற்சில வேடிக்கைகளையும் இடையிடையே இணைத்து நன்னெறியை மிக்க மகிழ்வு உண்டாகுமாறு நடத்துகின்றார்.

1. கருத்தெளிமை :

'என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்' என்று தொடங்கும் முதற்செய்யுளில் குழந்தைகளின் பூங்கையை உவமை காட்டி விளக்கியதும், 'பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே' எனத் தொடங்கும் முப்பத்தோராவது செய்யுளில் பள்ளிச் சிறுவர்களின் இளங்கையை உவமமாகக்கொண்டு தீர்ந்த மெய்ம்மை தெளிவித்ததும் போல்வனவே மேலுண்மைகளை மெய்ப்படுத்தற்குப் போதும். ஆயினும், இங்கே பின்னும் இரண்டொரு குறிப்புக்கள் காணலாம் :

நன்னெறியில் கண்களின் இயல்புகளை விளக்கிக் கொண்டு, சில பாடல்கள் திகழ்கின்றன. ஒன்றில் (உ0), கை, கால் முதலிய பிற உறுப்புக்களுக்கு ஒரு வேதனை வந்தால் அவற்றிற்காகக் கண் என்னும்

உறுப்பு அழுகின்றது என்றும்; இன்னொன்றில் (௩௪), பார்வை குறைந்த கண் இருளைக் கண்டு அஞ்சுவதில்லை, ஆனால் ஒளி விளங்கும் நல்ல கண்ணே அத்தியதிற்கு அஞ்சுகின்றது என்றும், வேறொன்றில் (௪௦) கண் எவ்வகையான அணிகலனும் அணிவதில்லை, கை கால் முதலிய ஏனை உறுப்புக்கள் அணிந்துகொள்கின்றன, ஆயினும், அணிகலன் அணியாத கண்ணே மற்றவற்றினும் மதிக்கப்படுகின்றது என்றும் இங்ஙனம் கண்ணின் இயல்புகள் வருதல் காணலாம்.

வேதனைக்குக் கண்ணீர்விட்டு அழுகின்ற இயல்பு பெரும்பாலும் சிறுவர்களுக்குரியதாய் இருக்கின்றது. பிறவுறுப்புக்களில் அணிகலன் அணிதலும், ஆண்பாலாரில், சிறுவர்கட்கே மிகுதி; இருள் கண்டு அஞ்சும் இயல்பும் அவர்கட்கே மிகுந்துள்ளது. பெரியரானபின் இவையனைத்தும் குறையும். ஆதலின், இக் கருத்துக்களை எடுத்துக் கூறினால், சிறுவர்கள் தமது பழக்கத்தில் இவை இருத்தலை உடனே உணர்ந்துகொள்வர். இங்ஙனம் சிறுவர்களின் செயல் முதலியவற்றை நுனித்தறிந்தெடுத்து, கருத்துக்களைக் கற்பித்துச் செல்கின்றார். அணிகலன் அணியாத கண்களே உயர்ந்தனவாக மதிக்கப்படுகின்றன என்றெடுத்துக் காட்டுதல் கொண்டு, தேவையற்ற வீண் நிலைகளில் சிறுவர்கட்கு அவாச் செல்லாதபடி இளைய உள்ளங்களைத் திருப்பிச் செல்லும் ஆசிரியரது நோக்கமும் இனிது விளங்கக் கூடும்.

II. உரையாடல் :

மேலும், சிறுபிள்ளைகட்கு எப்போதும் உரையாடலில் மிக்க விருப்பம். பள்ளிப் பிள்ளைகளும் கல்லூரி

மாணவர்களும் தத்தமக்குள் ஏதானும் பேச்சுக் கொடுத்துக்கொண்டு இன்பங் காண்டலை இன்றுங் காணலாம். ஆதலின், கருத்துக்களை உரையாடற் போக்கில் உணர்த்துதல் ஒரு சிறந்த கற்பிக்குந் திறமாகும். நன்னெறியில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்குப் பாடல்கள், இவ் வுரையாடற் செவ்வியில் அமைந்துள்ளன. 'பூங்கை புகழவோ நாவிற்குதவும் நயந்து' 'வெள்ளந் தடுத்த லரிதோ, தடங்கரைதான் பேர்த்து விடுத் தலரிதோ விளம்பு' 'இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற் றெல்லாம் இருந்தும் அவற் கென் செய்யும்' 'வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கோலி வையார் பெருகுதற்கண் என் செய்வார் பேசு' 'எக்காலும் நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டு முளிப் புல்லுக் கிறைப்பரோ போய்' என்னுந் தொடர்கள் போல்வன, இச் செவ்வியிற் சிறந்த ஆக்கம் பெற்றுள்ளமை காண்க.

III. விளையாட்டு :

வேடிக்கைகளும் விளையாடல்களும் சிறுவர்களின் உள்ளங்களை நன்கு கொள்ளை கொள்வன. அவ்வியல்புகள் வாயிலாகக் கல்வி கற்பித்தலைக் கல்வி முறையாளர் பெரிதும் விரும்புவர். தண்டமிழ்ப் பேராசிரியர்கள் இவ்வியல்பையும் முறையையும் நன்கறிந்த பெருமையர். புலியைக் கண்டால் மானுக்கு அச்சம்; மான் பாதுகாப்பான தக்க இடத்தில் இருந்து அஞ்சாமை புலப்படுத்துமாயின், காண்பார்க்கு அது வேடிக்கையும் விளையாட்டுமாயிருக்கும்; மேலும் அந்த மான் உண்மை மான் அல்லாததாயிருப்பின் பின்னும் வேடிக்கையே. நிலாவில் மானுருவம்போல் தோற்றும்

நிழலை இராக்காலங்களிற் சிறு பிள்ளைகள் ஆவலாகக் கண்டு மகிழ்வர். இதனைச் சிவப்பிரகாசர் ஒரு பாடலில் (உசூ), 'மண்ணிற் புலியை மதிமான் அஞ்சுமோ' என்னும் விளையாட்டுணர்வோடு விளக்குகின்றார்.

IV. உற்றுநோக் கறிவு:

இவ்வாறே, நன்னெறியில், சிறுவர்களின் உற்று நோக்கறிவைச் சிவப்பிரகாசர் உலக முழுவதும் உலாப் போதரச் செய்கின்றார். பலவேறு திறமுடைய பல வேறு தொகுதிகளில் பள்ளிச் சிறுவர்கள் சிவப்பிரகாசரின் பின்னே செல்லுவதுபோலவும், அவர்களை அவர் அங்கங்கும் அழைத்துச் சென்று அவ்வவ்விடங்களின் இயற்கைகளை உற்றுநோக்கச் செய்து மெய்ம்மைகளை அறிவுறுத்திச் செல்லுவதுபோலவும் நன்னெறி சிறந்த இயற்கைக் காட்சிகளைப் பெற்றிருக்கின்றது.

ஆசிரியர், முன்னே செல்கின்றார்; குருகுல மாணவர் தொகுதி பின்னே செல்கின்றது. நெய்தல் நிலமாகிய கடற்கரைப் பாங்கரில் உலா நடைபெறுகின்றது. அதாவது, இருந்து கற்றலுக்கு வேறான நடந்து கற்றல் நிகழ்கின்றது. கழியிடங்களிற் கடல்நீர் ஏறும் இயற்கையை ஆசிரியர் உற்றுநோக்கச் செய்து, 'அல்கு கழியினுஞ் செல்லாதோ கடல்' என்று மாணவர்களை நோக்கி வினவுகின்றார் (கசூ). அவர்கள் நேருக்கு நேராக அவ்வியல்பை உற்றுநோக்கிக் கண்டு சுவையுள்ளம் பெறுகின்றனர். 'கடல் எவ்வளவு பெரியது, கழி எவ்வளவு சிறியது? ஆயினும் கடல் தனது பெருமையைப் பொருட்படுத்தாமல் தானே இச் சிறிய கழியினுள் நுழைந்து நீர் உதவுகின்றது. நாமும் இங்ஙனம் பெருமை சிறுமை கருதாமல் ஒருவருக்

கொருவர் இடுக்கண் காலங்களில் உதவி செய்து கொள்ளவேண்டும்' என்று ஆசிரியர் அப்போதே ஓர் அழகிய அறத்தையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டி விளக்கிவிடுகின்றார். 'ஒவ்வோர் இயற்கைச் செயலும் ஒவ்வோர் அறத்தையுடையது; பொதுவில் இவ்வற மெலாம் ஒன்று திரண்டால், அது, ஒப்புரவொழுகு தலாக முடியும்' என்பதையும் மாணவர்கள் தாமே தெளிந்துகொள்ளுமாறு ஆசிரியர் அங்கங்கும் அவர் களது உற்றுநோக்கறிவை எழுப்பி, அது பின்னும் ஆழ்ந்து உற்றுநோக்கிக் கொள்ளும்படி நெறி புலப் படுத்தி ஊக்கிச் செல்கின்றார்.

மாணவரும் ஆசிரியரும் பின்பு குறிஞ்சி நிலமாகிய மலைப் புறங்களிற் சென்றனர். மலைச் சரிவுகளிற் செழும் பொழில்கள் திகழ்ந்தன, ஒரு பொழிலுள் நுழைந்தனர். மலர்களும் கனிகளும் பிள்ளைகள் உள் ளத்தைக் கவர்ந்துகொண்டன. ஆசிரியர் அக் குறிப் பறிந்து அவற்றை நன்கு உற்றுநோக்கும் ஊக்கம் அவர்கட்குக் கிளர்ந்தெழும் வண்ணம் தமது உரை யாடலைத் திருப்பிக்கொண்டார். வண்டுகள் மலர்களை நாடிச் சென்று அவற்றின் மெத்தென்ற இதழ்களில் தங்கின. அக் காட்சியை ஆசிரியர் வேடிக்கையாக மாணவர்க்குக் காட்டினர். பின்பு, சோலையின் ஒதுக்க மான இடங்களில், காக்கைகள் வேப்பம் பழத்தை விரும்பித் தின்னுந் தோற்றம் தெரிந்தது. அதனையுங் காணுமாறு, அவர்கள் நினைவைத் திருப்பினர். பின்பு, வண்டின் நாட்டமும் காக்கையின் நாட்டமும், வேறு வேறு இயல்பாயிருத்தல் பற்றி உரையாடிக்கொண்டே (உச) சோலையிலிருந்து வெளியே வந்தனர்.

மலைப்பக்கத்திலிருந்து இறங்கி வரவர, முல்லை நிலமாகிய காட்டு நிலம் அங்கே பரந்து தெரிந்தது. ஆன் மந்தைகளையும் ஆயர்களையும் அவர்கள் கண்டார்கள். ஆக்களிடமிருந்து பால் கறக்குமுன், கன்றுகளுக்கு ஊட்டும் நிகழ்ச்சி, அவர்கள் உள்ளத்திற்கு விருந்தாயிருந்தது. அன்பிற்குரியவர்கள் வாயிலாகவே பொருள்கள் கிடைக்கும் இயல்பை நன்கு உற்று நோக்கினர் (ஈ).

கான் நிலத்தைத் தாண்டியதும் ஊர்க்குச் செல்லும் வழி நிலம் இடையே இருந்தது. அது, முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் நாளடைவில் மாறிய வெளி. இடையிடையே இருந்த சில குன்றுகளும் குறுங் காடுகளும் வெயில், மழை, மக்கள் நடவடிக்கை முதலிய செயல்களால் இயல்பு மாறி, எங்கோ ஓரோ வோரிடத்தில் சில பாறைகளும் சிற்சில செடிகளுமாகக் காட்சியளித்தன. சில இடங்கள் மணல் வெளியாயிருந்தன. மற்றப் பெரும்பாலான இடம், ஓரே கட்டாந் தரை. விரிந்து கரிந்த இவ் வெறு வெளியை நாற்புறமுங் கண்டு கொண்டே, ஆசிரியரும் மாணவரும் வந்துகொண்டிருந்தனர். சிறிது இளைப்பாறிக் கொள்ளும்பொருட்டு, இடையே குறுக்கிட்டுக் கிடந்த சில கற் பாறைகளின் மேல் அமர்ந்தனர். எறும்புகள் சாரைசாரையாகச் சென்றுகொண்டிருந்தன. எல்லாரும் ஒன்றுசேர்ந்து அதனை உற்று நோக்கினர். எறும்புகள் நெடுநேரம் தொடர்ந்து சென்றன. பின்பு, சிறிதுநேரம் இடைவிட்டு, மீண்டும் வேறு எறும்புகள் முன் சென்ற எறும்புகளைத் தொடர்ந்துசென்றன. இடைவிட்ட நேரங்களில், பாறையின்மேல் ஆழ்ந்து குழிந்து கோடாயிருந்த வடு அவர்கட்குத் தெரிந்தது. மிக மெல்லிய

எறும்புகள் ஊர்ந்து, கெட்டியான கருங்கற் பாறைகளில் வடுவுண்டானது மிக்க வியப்பாயிருந்தது. பலகால் எறும்பூரக் கற்குழியும் (உரு) என்னும் பழமொழி அவர்கள் நினைவில் எழுந்தது.

பின்பு, எல்லாரும் மருத நிலமாகிய ஊரின் பக்கம் உலா வந்தனர். வாழைத் தோட்டங்கள் வளமாக வளர்ந்திருந்தன. சில வாழை மரங்கள் குலைதள்ளியிருந்தன. அம் மரங்களின் கீழே, வாழைக் கன்றுகள் சூழ வளர்ந்திருந்தன. மரங்களும் கன்றுகளும் இனி என்ன ஆகும் என்பதில் மாணவர் நாட்டஞ் செலுத்துமாறு, ஆசிரியர், அங்கங்குங் காணப்படும் வெவ்வேறு காட்சிகளை உற்றுநோக்கச் செய்தார். சில இடங்களில் மரங்கள், பழக்குலை வெட்டியெடுக்கப்பட்டுச், சாய்ந்து கிடந்தன; அதன் கீழ்க்கன்றுகள் ஓங்கி வளர்ந்திருந்தன. சில இடங்களில் தந்தை மரங்கள் வெட்டியெடுக்கப்பட்ட வடு தெரிந்தது; கீழ்க்கன்றுகள் அப்போது பின்னும் ஓங்கி வளர்ந்து, அத் தந்தை மரங்கள் செய்ததுபோலவே குலைதள்ளியிருந்தன. அவற்றின் கீழும், வேறு கன்றுகள் முளைத்திருந்தன. இங்ஙனம் வாழை மரங்கள் வழி வழிக் குலை தள்ளித் தள்ளிச் சாய்ந்துவருதல், மாணவர்கள் உணர்வை மிக்க ஆராய்ச்சியிற் செலுத்தியது. தந்தை மரம் குலை ஈன்று தன் நிலை குலைந்ததே என்று, அதன் கன்றுகள் மனந்தளரவில்லை; கன்றுகளும் அவ்வாறே கனி உதவ முற்படுகின்றன; வேகமாக எழுந்து வருகின்றன (களஎ). மக்கள்மாட்டு இங்ஙனம் ஒப்புரவு ஒழுக்கம் சிறந்திருக்கவேண்டும் என்று சிவப்பிரகாசர் அவற்றின் இயல்பை முடித்துரைத்தார்.

உற்றுநோக்கறிவையும் அதிலிருந்து உண்மைகளைக் கூர்ந்துணரு முறையையும் அறிந்து பயன்படுமாறு, இவ்வாறு ஆசிரியர், கற்பிக்கும் வன்மையை நன்னெறிக்கண் மிகச் சிறப்பாகக் கையாண்டு வந்திருக்கின்றார்.

V. கல்வியில் வேட்கை:

பொதுவாக, நல்லவர்களையும் அடியார்களையும் பற்பல திறனமைந்த சான்றோர்களையும் கல்வி வல்லோர் என்றே வழங்குதலை ஆசிரியர் விரும்புகின்றார். 'கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்' (ஙடு) 'எழுத்தறிவார் ஆயும் கடவுள்' (உக), 'பொய்ப்புலன்கள் ஐந்தும் மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்' (கக) என்பன காண்க. இத்தகைய வழக்குகள், இளமையிலேயே கல்வி வேட்கையை யார்க்கும் பெருக்கிவிடும்.

இங்ஙனம் நன்னெறி ஒரு சிறந்த கல்வி மலர்! கற்பிக்கும் முறை மணக்குங் கலை மலர்! சிறார் கவிமலர்!

அ. சில குறிப்புக்கள்

சிறந்தோர் உள்ளம் ஓர் ஆழ்ந்தகன்ற கடல்; விரிந்த விண்; எல்லையற்ற தன்மையே அதன் இயற்கை. அளவற்ற பொருள் மணிக் குவியலும் திரள் ஒளிக்கோள்களும் பிறவும் இயல்பாகவே பூத்துப் பொலிந்து பயன் விளைக்கும் நிலையமே அது. தமிழ் நாடு செய்த பெருந்தவத்தின் பயனாக, தமிழ்க்கு ஆயிரக் கணக்கான சான்றோர் அவ்வப்போதுந் திகழ்ந்து, இங்ஙனம் பயன்விளைத் திருக்கின்றனர். பெருக்கெடுத்து வரும் பேராறு, அங்கங்கும் உள்ள செழும் பொருள்களையும் தன்னுட் கொண்டு பெருகி வருதலைப்போல், சான்றோர் கவிகளும் நமக்குக் கொணரும் பொருள் மணிகள் பற்பல உண்டு. நன்னெறி நமக்கு வழங்கும் வளங்களும் பல. எடுத்துக் காட்டாகச், சில கருதிச் செல்லலாம்:

I. பொருட் குறிப்பு:

சிவப்பிரகாசர், தாம் அறம் உரைத்துச் செல்லும் பெரு நெறியில், துணைக் கருத்துக்களாக, சிற்சில பொருளியல்புகளை நமக்குச் சிந்திச் செல்கின்றார். தங்கம், மற்றப் பொருள்களைவிட மிகவும் நயமான மெருகுடையது (௩); பாம்பு, கண்ணுள்ளவிடத்தே செவியும் வாய்ந்து 'கட்செவி' என்னும் பெயரோடு திகழ்வது (௯); தென்றலால் மரம் தளிர்க்கும்; மாமரம், அதனிலுந் தேமா மரம் நன்கு தளிர்க்கும் (௧௯); உண்ணும் உணவுகளை மென்று உண்ணல் வேண்டும், அதனாற் சுவையும் மிகும் (௨௭); கறி

காய்களைப், பிஞ்சாயிருக்கும் நிலையிற் பயன்படுத்துதல் நலந் தரும் (உஅ); சில கொடிப் பூக்கள், மலர்ந்த அன்றே மணம் இழந்து போகின்றன (ருகூ).

II. விளக்குந் திறம் :

தக்கோர் மிகுதியாகப் பேசார்; சுருங்கவே உரைப்பார்; ஆனால், விளக்கத்துக்கும் அது தரும் பயனுக்கும் குறைவில்லாத முறையில், ஒவ்வொன்றும் அழுத்தமாக இருக்கும். கூறும் பொருள்களின் இயல்போ, அவ்வுரைகளில் விரிந்து தெளிந்திருக்கும். சிவப்பிரகாசர் அருளிச்செய்யும் சில தொடர்கள், இத் திறனை இனிது மெய்ப்பிக்கும்.

சினம் என்று ஆசிரியர் ஓரிடத்திற் (அ) சொல்லக் கருதினார். அவரது இயல்பான பேருள்ளம் உடனே அச் சினத்தின் தன்மையை நன்கு விளக்கி, கேட்போர் உள்ளத்தில் தெளிந்து பதியுமாறு அதற்கு நிறங் கொடுத்தது. சிவப்பிரகாசரின் திருவாய்மலர், 'உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம்' எனச் சிந்திற்று. மற்றோரிடத்தில் (கஎ), வாழைக் கன்றைக் கூறக் கருதியவர், வாழையின் வாழ்க்கை முழுதையும் ஒரு சிறிய தொடரில் இனிது பிழிந்து எழுதிக் காட்டுவார்போல, 'நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்க் கன்று' என்று திறமாக எடுத்துரைத்தார். இவ்வாறே, உடம்பை 'ஒன்பான் வாயிலுடம்பு' (கஉ) என்றும், கடவுளை 'எழுத்தறிவார் ஆயுங் கடவுள்' (உக) என்றும், சான்றோரை 'மெய் வருந்தி இயலுதவி செய்வர்' (உஎ) 'நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர்' (உகூ) என்றும் இயல்பு தெளித்துப் புலப்படுத்துவர்.

III. சுவை யியல்பு:

சிலர் பேச்சு ஊக்கமாக இருக்கும்; சிலர் பேச்சு உறக்கமாக இருக்கும்; பேச்சு ஊக்கமாக இருத்தற்கு உணர்ச்சியோடு வேறு சில சுவையியல்புகளும் வேண்டும். அவை சான்றோர்பாற் பெருந்தன்மையாக நிகழும்.

"கல்லா அறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணுரே;—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணுய்! நொய்தாம்
புணையிற் புகும்ஒண் பொருள்"

"கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே;—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்"

என்னும் பாட்டுகள் (உ௫, ௬௫) ஆழ்ந்த அறிவின்பத்திற்குக் கிளர்ச்சிதரும் ஒருவகைச் சுவையியல்பு தேற்றும் எடுத்துக்காட்டுகள்! மாதர் கண்கள் இச் செய்யுட்களில் விற்கணை யென்றும் வேலென்றும் உரைக்கப்பட்டுள்ளன. வில்லும் வேலும் ஒன்ருகா. வில்லினும் வேல் வெற்றி மிக்கது. வேல், தானே பாய்வது! கணை, வில்லின் துணைகொண்டு பாய்வது. கருவியொன்றன் துணை கொண்டு பாய்தலால், அதன் வலுக்குறைவு தெரிகின்றது. இவ் வேறுபாடு தோன்ற, வேலைச் சொல்லுமிடத்தில் விழியை 'ஒளி விழி' என்ருர் ஆசிரியர்; கணையைக் கூறுமிடத்தில் அதனைக் 'கருங் கண்' என்ருர். மேலும், கற்ற அறிவினரைக் காமுறும் மேன்மக்களின் வெற்றி கூறும் பொருளில், 'வேல் விழி' வந்தது; கயவர்பாற் சென்று நல்லோர் தமது பெருமையிழக்குந் தோல்விக் கருத்தில்,

'கணையிற் பொலியுங் கருங்கண்' வந்தது, மகளிர், காமம் புலப்படுத்துமிடத்தில் அவரது கண் பிறரை மயக்குங் கருங்கண்ணாய்க் கணையிற் பொலிகின்றது. அவரே, காதல் புலப்படுத்துமிடத்தில் தக்கார்பால் வெற்றி கொள்ளும் ஒள்விழியாய் வேலின் மிளிர்கின் றது. இங்ஙனம், இவை, கற்பார் கருத்தை மேன் மேலும் ஈர்த்துச் சுவை மிகுக்கின்றது.

இனி, மனவின்பத்திற்குக் கிளர்ச்சியூட்டும் மற் றொரு வகைச் சுவையியல்புக்கு,

"எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்,
விள்ளா அறிஞர்அது வேண்டாரே ;—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்?"

"அறிவுடையா ரன்றி அதுபெறார் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும் ;—பிறைநுதால் !
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு"

என்னும் பாட்டுகள் (௬௩, ௬௪) ஒன்றையொன்று அடுத்து, தக்க எடுத்துக் காட்டுகளாய் வருகின்றன. முற்செய்யுளில், சான்றோர், தமக்குப் போற்றுத லொன்றும் வேண்டாமல் என்றும் தமதியல்பில் விளங் குவர் என்று அருளிச் செய்த ஆசிரியர், பிற்செய்யுளில் கயவர், பழிக்கொன்றும் அஞ்சாமல் என்றும் தமதியல் பில் ஒழுகுவர் என்று ஓர் ஒப்புமை தோன்றக் கூறி னார். 'தேவரனையர் கயவர்' என்று தெய்வப் புலவர் கூறியதோ டொப்ப, புகழ்மொழியிற் கவலையற்ற சான்றோரியல்பும் பழிமொழியிற் கவலையற்ற கயவ ரியல்பும் உண்மையில் ஒன்றல்லவாயினும், ஒன்று

போலத் தோன்ற வைத்துக் கிளர்ச்சி பெருக்கிய சுவைத்திறம் இங்கே நினைவுகூரற்குரியது.

IV. தமிழ் நடை:

நடை என்பது, கருதிய கருத்தைத் தெளிவாக விளங்கச்செய்தலுடன், ஆசிரியன் உணர்ச்சியிலேயே கற்போரும் ஒருமைகொள்ளச் செய்யும் இயல்பமைந் தது; வேறு வகையாகக் கூறினுல், கருத்துக்களின் எளிமை, பெருமை, அகலம், செறிவு, ஆழம், நுட்பம் முதலியவற்றிற்கேற்ற பொருந்திய சொல்லமைப்பும் தடையற்ற ஓசையொழுக்கமும் உடையது எனலாம். தமிழ்நூல்கள் இச் செவ்வியைப் பெறுதற்கு, தமி ழுள்ளமும் தமிழ்ச் சொற்களும் பெருந் துணை செய் யும். நன்னெறி அவ்வளத்திற் சிறந்து திகழுந் தீந் தமிழ் நூல்! எங்கோ அருமையாக இரண்டொரு பிற மொழிச்சொல் நீங்கலாக, நூல் முழுதும் மிகச் சிறந்த தனித்தமிழ்ச் செய்யுட்களாகவே அது தமிழ்வளஞ் செறிந்து பொலிகின்றது. 'பூங்கை புகழவோ நாவிற் குதவும் நயந்து' 'புயன்முகந்து பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு' 'பழமைபோற் புல்லினுந் திண்மைநிலை போம்' 'பிறர் நோய் கண்டுள்ளம் எரியின் இழுதாவ ரென்க' 'செழும் பொழில்வாய் வேம்பன்றே காக்கை விரும்புங் கனி' என்னுந் தொடர்கள்போல்வன கண்டு, வளமான அழகிய நடைநலன் உணர்ந்து இன்புறல் வேண்டும்.

V. நமது கடன்:

சான்ருண்மையின் உயர்வுக்குக் கருத்துக்களின் மேன்மையோடு, உணர்ச்சி நலனும் மொழிவளமுங்

கூட அறிகுறிகளா யுள்ளன. இதனை மறந்தால், நூல்களின் அருமை பெருமைகள் விளங்கா. இயல்பாகவே, இந் நலனமைந்த நூல்கள் இறப்பதில்லை; பிற இருப்பதுமில்லை.

பெருமையைப் பெருமையென்று கருதாத நினைவும் அப் பிறவற்றைப்போல் இருப்பதில்லை. நன்னெறி நலனமைந்த அறக் கவி! சிவப்பிரகாசர் செந்நெறி! எதிர்காலத்து எழுத்தாளர்களின் மெய்ந்நெறி!